

மே 2023

# அடைக்கலத்தூது

அடைக்கல அன்னை சபையின் வெளியீடு



















# என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!



**என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!**

இந்த அடைக்கலத்தூது நம் விழா நாயகிகளின் வரலாற்றைச் சுமந்து வருகிறது. பொன்விழா கொண்டாடும் நம் 10 சகோதரிகளையும் நெஞ்சார வாழ்த்துகிறோம். பல்வேறு துறைகளில் சாதனை புரிந்து வாழ்நாள் சாதனையாளர் விருதுக்குத் தகுதியுடைய நம் 10 அருட்சகோதரிகளை எண்ணி இறைவனுக்கு நெஞ்சம் நிறைந்து நன்றி கூறுகிறோம். 50 ஆண்டுகள் இறைவனுக்காக வாழ முடிவெடுத்து பல்வேறு சோதனைகளைத் தாண்டி சவால்களை வெற்றி யோடு சந்தித்து வீரமங்கையராய் வாகை சூடி நம்முன் நிற்கும் நம் சகோதரிகளை அகமும் முகமும் மலர வாழ்த்துகிறோம். ஐம்பது ஆண்டுகள் அவர்களோடு உடன் பயணித்த ஆண்டவரின் பிரமாணிக்கத்திற்காய், தொடர் வழிநடத்தலுக்காய் அவரது அரும்பெரும் செயல்களுக்காய், உருண்டு விழுந்தாலும் உடைபடாமல், சறுக்கி விட்டாலும் சரிந்துவிடாமல் கரம் பிடித்து வழிநடத்திய கருணைக்காய் கரம் கூப்பி சிரம்தாழ்த்தி நம் நன்றி மலர்களை நல்ல இறைவனின் பொற்பாதங்களுக்கு அர்ச்சனையாக்குகிறோம். நம் வெள்ளிவிழா நாயகிகள் 18 பேரும் இந்த சமூகத்தின் மனசாட்சியாய் வாழ முயன்றிருக்கிறார்கள். இன்றைய சமூகத்தில் அல்லவை பெருக, அறம் தேய, நாளும் நடக்கும் சம்பவங்களில் கலங்கரை விளக்காய் நின்று உண்மையை உரக்கப்பேசி சவால்களுக்கே சவால்விடும் வீரியமிக்க துறவுப்பண்புகளைத் தன்னில் உருவாக்கிக்கொண்டு சமூகத்தில் புளிக்காரமாயிருந்து நல்ல மதிப்பீடுகளை வளர்த்தெடுத்தவர்கள். இவர்களை நம் நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்துகிறோம். ஏழைகளுக்காய் புறக்கணிக்கப்பட்டோருக்காய் விளிம்புநிலை மாந்தருக்காய், மகளிருக்காய் பெண் குழந்தைகளுக்காய், சிறுவர் சிறுமியருக்காய் நம் வெள்ளிவிழா, பொன்விழா சகோதரிகள் ஆற்றிய பணிகள் சரித்திரம் படைத்தவை. ஆயினும் விளம்பரமில்லா அவர்கள் வாழ்வு இப்பிரபஞ்சத்தின் பஞ்சபூதங்களில் கலந்திருக்கிறது. இப்பிரபஞ்சத்திற்கு வெளிச்சம் தருகிறது. உயிராற்றல் தருகிறது. வளமும் தருகிறது. பிரபஞ்சத்தோடு ஒன்றிணைந்து நீரோடும், நிலத்தோடும், காற்றோடும், நெருப்போடும், ஆகாயவிரிவோடும் நாமும் சேர்ந்து வாழ்த்துவோம். இவர்கள் வாழட்டும், மங்களம் பெருகட்டும்.

பிரபஞ்சப் பேரன்பில்

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**

# அடைக்கல அன்னை அவையும் நானும்



"என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
என் முழு உளமே! அவரது திருப்பெயரை ஏத்திடு
என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும்
மறவாதே!" (தி.பா103:1,2).

**பிறப்பும் வளர்ப்பும்:**

தஞ்சைத் தரணியிலே, இயேசுவின் திருஇருதயப் பங்கில், முக்கனிகளைக் கொடுத்திட்ட பழமரமாகத் திகழ்ந்திட்ட அருள்சாமி - லூர்துமரி இவர்கள் தெய்வீகப் பாலை ஊட்டி வளர்த்ததன் விளைவு மூத்த மைந்தன் அருட்பணியாளர் அமலோற்பவ நாதன், இளைய மகன் ஜோசப் நாதன், கடைச் செல்வி அ. டாலர் மேரி பிலோமினா.

**கல்வியும் அழைத்தலும்:**

படிப்பு முடித்தவுடன் அம்மாப்பேட்டை பள்ளியிலே ஆசிரியப் பணியை ஆரம்பித்த எனக்கு நல் உறவுகள் கிட்டின. 5-ஆம் வகுப்பில் என் மாணவனாகத் திகழ்ந்தவர் (அம்புரோஸ்) தஞ்சை மறைமாவட்ட ஆயராக இருந்து, வெள்ளி விழா நாயகராகத் திகழ்ந்திடும் **Dr. D.DL.C.L** தேவதாஸ் அம்புரோஸ் அவர்கள். பின்னர் சில ஆண்டுகள் நான் தஞ்சையில் பயின்று, அதன்பின் பூக்காரத்தெரு இயேசுவின் திரு இருதயப் பள்ளியிலே சில ஆண்டுகள் பணிபுரிந்த வேளையில், எங்கள் வீட்டுக்கு அருகில் புனித வியாகுல அன்னை சிற்றாலயமும், நம் புனித அடைக்கல அன்னையின் இல்லமும் அமைந்திருந்ததால் அருட்சகோதரி செலஸ்டின் அவர்களின் தொடர்பு கிட்டிற்று. அதன் விளைவு இன்று நான், நமது புனித அடைக்கல அன்னை சபையின் சகோதரியாகப் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

**பணியும் பயணமும்:**

**"நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை
நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்".**

புனித அடைக்கல அன்னை சபையிலே தடம் பதிக்கும் முன்னரே, சில பக்த சபைகளில் இணைந்து பணிபுரியும் வாய்ப்பு எனக்கு கிட்டிற்று. அதில் ஒன்று நம் சபை 2 - ஆம் பாதுகாவலான புனித பிரான்சிஸ் அசிசியாரின் 3 -ஆம் சபையோடு இணைந்தது எவ்வளவு பெரிய ஆசீர். என் அம்மா தலைவி. அலங்காரம் நான் செயலர் - குயினி.

பேரன்பின் மூவொரு தேவனின் பேரருளால் திருக்குடும்பத்தின் ஆசீரால் பெற்றிட்ட பேராக 50 ஆண்டுகள் நம் சபையில் மனநிறைவுடன் இறைப்பயணம் செய்து வருகிறேன். பல கிளை இல்லங்களில் ஆசிரியையாக ஓய்வுக்குப்பின் எனது நிலையில் இருந்து என்னவருக்குரிய பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். தஞ்சை மறைமாவட்ட ஆயர் குழுவில் -

மறைப்பரப்பு பணியில் அருட்தந்தை கு. அந்தோணிசாமி (தற்சமயம் கும்பகோண ஆயர்), சேவியர், நான் மூவருமாக பல இடங்களில் பணிபுரியும் வாய்ப்பும் கிடைத்தது.

**நன்றி இறைவா! நன்றி!:**

**"உலகெங்கும் சென்று, படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."**

என்ற இறைவார்த்தைக்கேற்ப இறை தாகத்துடன் வகுப்பறை முதற்கொண்டு, வீதிவரை பல்வேறு விதங்களில் நற்செய்தியை அள்ளி வழங்கிட வாய்ப்புப் பெற்றேன். பேரன்பின் தூய ஆவியாரின் அருள் வரங்களால் நிறைக்கப்பட்டு பல நற்செயல்கள் செய்ய அருள் பெற்றேன். எத்தனை புதுமைகள் மற்றவர்களுக்கு மற்றுமல்ல, எனக்கும்கூட. அதில் ஒன்று கேன்சர். நான் இறந்துவிடுவேன் என்று பலர் நினைத்திட – பெரியவர்கள் சொற்படி அந்தந்த மருத்துவமனைகளுக்குச் சென்றும் பயனில்லை. இறுதியாக சென்னை அப்பல்லோ மருத்துவமனை சென்றேன். அதைப் பார்த்தாலே பயம் - மருத்துவரிடம் அனுமதி பெற்று தினமும் கோவிலுக்குச் செல்ல திவ்விய நற்கருணை அருந்தப் பேறுபெற்றேன். எல்லாம் முடிந்ததும் மருத்துவர் சொன்னது, "உங்களுக்கு எந்த நோயும் இல்லை. கேன்சர் இல்லை எந்த மருந்தும் தேவையில்லை, இனி ஆஸ்பத்திரிக்கு வர வேண்டாம்" என்று. **"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர்"** நான் காப்பாற்றப்பட்டது யாரால்? திவ்விய நற்கருணை நாதரால்தான். வேளை நகரிலே சுகமுடன் திரும்பியது கண்டு மகிழ்ந்தனர். தவக்காலத்தின் பெரிய வெள்ளி அன்று, கலையரங்கத்தில் சிலுவைப்பாதை நடந்தபோது 13 -ஆம் நிலையில் நம் அன்பு ஆண்டவர். உயிர்நீத்ததை அந்நிலையில் தியானிக்க, மற்ற 13 நிலைகலும் ஒலி – ஒளி மூலம் நிகழ்ந்தேறின. எனக்கு அளிக்கப்பட்டது 6-ஆம் நிலை. மேடையில் அதிபர் தந்தை மைக்கேல் அடிகளார் சொன்னது, "வெரோணிக்கா இயேசுவின் திருமுகத்தைத் துடைத்தார். இயேசு சிஸ்டர் டாலரின் முகத்தைத் துடைத்துவிட்டார்." என்று படம் வழியாகக் காட்டப்பட்டது. **திவ்விய நற்கருணை நாதரின் பேரன்பு எத்துணை மகத்தானது!**

எத்தனை எத்தனையோ அற்புதங்கள், பிறர் வாழ்விலும், என் வாழ்விலும் நடந்திருக்கின்றன. ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல.... மூச்சு உள்ளவரை, இதயத்துடிப்பு இருக்கும் வரை அவரோடு இணைந்து வாழ செபியுங்கள், செயல்படுங்கள், செயல்படுவோம். பல்வேறு விதங்களில் உதவிய அனைவருக்கும், சபையினருக்கும், குறிப்பாகத் தலைமை அன்னையர்கள், குழுவினர், பணியாளர் சகோதர சகோதரிகளுக்கும், சிறப்பாக 50 ஆண்டுகள் என்னோடு பயணித்த என் அன்பு சகோதரிகளுக்கும் என் அன்பான நன்றி கலந்த செபங்கள். பேரன்பின் மூவொரு தேவா வாழ்க! வாழ்க! வாழ்க! பேரன்பின் மூவொரு தேவா! உங்கள் தெய்வீகத் திட்டம் நிறைவேற உங்கள் அதிமிக மகிமைக்காக நீங்கள் எப்போதும் அகமகிழ்ச்சியுடன் இருக்க எங்களையும், என்னையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றேன்.

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

"ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக!" (எண் 6:24).

சகோ. டாலர் மேரி பிலோமினா (614).

## அடைக்கல அன்னை அவையும் நானும்

# இறையே சரணம்



**“ஞானத்தோடு எல்லா நலன்களும் என்னிடம் வந்து சேர்ந்தன. அளவற்ற செல்வத்தை அது ஏந்தி வந்தது”** (சா.ஞா 7:11).

எனது ஐம்பது ஆண்டு காலப் பயணத்தை பின்னோக்கிப் பார்க்கும் இந்தத் தருணத்தில் என் இறையைத் தாள் பணிந்து வணங்குகின்றேன்.

என் வாழ்வின் பிரதான கதாபாத்திரங்கள் அனைவருக்கும் என் நன்றிக்கரம் குவிக்கின்றேன். அவ்வப்போது ஒரு நொடி சந்திப்பில்கூட என் வாழ்வின் கட்டமைப்பு மாற்றம் பெற்றிருக்கிறது. முக்கியமானவர்கள், முக்கியமற்றவர்கள் என்ற வேறுபாடும் கூட இதில் நான் பார்க்க இயலாது. எனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்க்கத் தெரியாத மனம், பயணத்தின் ஒரு தொலைவில் இவர்கள் நமக்கு நெருக்கமானவர்கள், நம்மை வெறுப்பவர்கள் என்று வேறுபாடு பார்க்கத் தொடங்கியது. மீண்டும் என்னைக் கரை சேர்த்திட்ட என் குருநாதருக்கு அவரது பாதம் தொட்டு வணங்கி என் நன்றியை சமர்ப்பிக்கின்றேன். அச்சம் மற்றும் அதனின்று பிறந்திட்ட தயக்கம், எதிர்பார்ப்பு, இதனின்று உருவாகிட்ட ஏமாற்றம் போன்ற இவை அனைத்தினின்றும் எனக்கு விடுதலைத் தந்ததற்காய் நன்றி. இன்றைய நிலையில் அனைத்துப் படைப்புகளுமே எனக்குப் பிரதான கதாபாத்திரங்கள்தான்.

பாதுகாப்புக் கவசமும் சிறகுகள் விரித்தலும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் நடத்திடமுடியா இசைவுதான். இவ்விரண்டையும் ஒன்றாய் அனுபவித்தது என் குடும்பத்தில்தான். என் பெற்றோரும் உடன் பிறந்தோரும் என்று நினைக்கையில் எங்களைத் தவிர வேறு எவராலும் புரிந்துகொள்ள முடியாத புதிர்தான். இதை அனுபவித்துத்தான் உணர முடியும்.


சமூகக் கட்டமைப்பின் உள்நோக்கிய பயணத்திற்கு வழிவகுத்து என்னோடு பயணித்த என் தோழர்களுக்கு நெஞ்சார நன்றி கூறுகின்றேன். நான் சந்தித்த நபர்கள் ஏராளம். தடைகளைத் தாண்டச் சொல்லிக் கொடுத்தவர்களும் உண்டு, உதவிக்கரம் நீட்டியவர்களும் உண்டு. நான் பின்பற்றுவதற்கான மாதிரிகளைத் தந்தவர்களும் உண்டு. உயர்வு தாழ்வு என்ற நிலைகடந்தும், என் பலத்திலும் பலவீனத்திலும் ஒரே நிலையில் என்னை இனம் கண்டுகொண்டவர்களை என் கண்முன் நிறுத்தி வணங்குகின்றேன். இதன் மூலம் நான் பெற்ற அனுபவங்களுக்காய் அனைத்து நிகழ்வுகளுக்கும் நபர்களுக்கும் உயிரினங்களுக்கும் பொருள்களுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

அடைக்கல அன்னை அவை என்ற குடும்பத்தில் இணைந்திட்ட ஒரு சிறப்பான அனுபவம். ஒளியின் நகர்வோடு சேர்ந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி திரும்பும் பூவைப் போல இனிமையாக நடைபெறும் நிகழ்வாக இருந்திருக்கின்றது. நம் அடைக்கல அன்னை அவை எனக்குத் தந்த வாய்ப்புகளுக்காய் நன்றி கூறுகின்றேன். அனைத்து நலன்களையும் தந்திட்ட அடைக்கல அன்னை அவைக்கு நன்றி.

**அனைவருக்கும் நன்றி!**

**சகோ. பவுலின் ஆக்னெஸ் தெரசா மேரி (616).**

# அடைக்கல அன்னை அவையும் நானும்



"ஆண்டவர் பார்வையில் நான் மதிப்பு பெற்றவன்"
(எசாயா 49:5)

திண்டுக்கல் மறைமாவட்டம், திண்டுக்கல் மாநிலம் ஆத்தூர் என்ற ஊரில் தாய் ஜெபமாலை மேரி, தந்தை சின்னப்பன் இவர்களுக்கு பிறந்த மூன்று சகோதரர்களோடு, ஒரு சகோதரியாக பிறந்தேன். எனக்கு குழந்தை தெரசா என்ற மிகப் பெரிய புனிதையின் பெயரை சூட்டி மகிழ்ந்தனர் எனது பெற்றோர். கிறிஸ்துவ முறைப்படி ஞானம், ஒழுக்கம், பண்பு, அறிவு, செபம் போன்ற புண்ணியங்களால் வளர்க்கப்பட்டேன்.

நான் கல்வி பயில, என் கல்விக் கண் திறக்க எனது பெற்றோர் விரும்பி, மேட்டுப்பட்டியில், புனித அடைக்கல அன்னை சபையினரால் நடத்தப்படும் நடுநிலைப்பள்ளியில் சேர்க்கப்பட்டேன். இல்லத்தின் தலைமைச் சகோதரி ஜெம்மா, தலைமை ஆசிரியர் சகோ. பெட்ரோலினா. அங்குள்ள விடுதியில் தங்கிப் படித்ததால் ஞானம், படிப்பு, எனப் பல பண்புகளில் கன்னியர்களால் வழிநடத்தப்பட்டேன். எனது நடுநிலைப்பள்ளி படிப்பை முடித்து, அருகாமையில் உள்ள Our Lady Higher Secondary School -ல் விடுதி மாணவியாகச் சேர்க்கப்பட்டேன். இந்த நாட்களில் மூன்று பெரும் தலைமை ஆசிரியர்களைச் சந்தித்தேன். அவர்கள் யார் என்று கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். அன்னை மேரி டொமிட்டில்லா அவர்களின், அன்னை மேரி இன்வயலேத்தா மற்றும் அன்னை மேரி வெர்ஜினியா. இவர்களிடம் நான் கற்றுக் கொண்ட பாடங்கள் செபம், உழைப்பு, கல்வியறிவு, அன்பு, கிறிஸ்தவ புண்ணியங்களில் பயிற்சி முதலானவை. அன்னை மேரி டொமிட்டில்லா அவர்களின் ஆங்கில உச்சரிப்பு இன்றும் மறக்க முடியாது. ஏழை, எளியவர் மட்டில் இரக்கம், குழுமத்தில் உள்ள சகோதரிகளோடு அவர்கள் கொண்டிருந்த உறவு, புரிதல், நானும் இவர்களைப்போல் ஒரு துறவியாகலாம் என்ற ஈர்ப்பைக் கொடுத்தது. அன்னை மேரி இன்வயலேத்தா எப்போதும் ஆகாயத்தில் பறப்பவர்கள். புதிய சிந்தனை, புதுமை உள்ளம் படைத்தவர்கள், எப்போதும் சந்தோஷமாக இருக்கச் சொல்லிக் கொடுப்பவர்கள். புதிய நோக்கு, புதிய கருத்துக்களை வரவேற்பவர்கள்.

பள்ளி இறுதி ஆண்டு படிப்பை முடித்து, அதில் தேர்ச்சியும் பெற்ற பிறகு, அன்னை மேரி வெர்ஜினியா அவர்களிடம் நான் துறவியாக உங்கள் சபைக்கு போகிறேன் என்று சொன்னபோது, என்னை மகிழ்ச்சியாக சென்னை – மயிலாப்பூர் இல்லத்திற்கு அனுப்பி வைத்தார்கள். ஒன்றும் புரியாத உலகமாய் இருப்பினும் துறவியாக வேண்டும் என்ற ஆவல். என்னைப் போல பல ஊர்களில் இருந்தும் வந்தவர்கள் ஏறக்குறைய 25 பேர் இருந்தனர்.

மயிலை இல்லம் மறக்க முடியாது. பல வரலாற்று சிறப்புகளைக் கொண்ட இல்லம். அப்பொழுது எனக்கு அன்னை மேரி டொமிட்டில்லா சபைத் தலைமை அன்னையாக தேர்ந்தெடுக்கப்பட, தலைமை அன்னை என்னை ஏற்றுக்கொண்டார்கள். புனித பிலோமினா இல்லத்திலே நான் தங்க பல பயிற்சிகள் அங்கு எனக்குக் கொடுக்கப்பட்டது. அன்னை மேரி பெந்தகோஸ்ட் அவர்கள் தேர்வு நிலையினரைக் கவனிக்கும் சகோதரியாக நியமிக்கப்பட்டார்கள். அன்பிலும், பண்பிலும், செபத்திலும், ஒழுங்குகளைக் கடைபிடிப்பதில் கவனம் செலுத்துவது போன்றவற்றை சொல்லிக் கொடுத்து கவனித்துக் கொண்டார்கள். சபைமீது பற்றுக்கொண்ட சகோதரியாக வளர்த்தார்கள்.

ஜீன் மாதம் 13-ம் தேதி விருப்பநிலையில் சேர்க்கப்பட்டேன். Mistress சொல்லும் அனைத்துப் பணிகளையும் கற்றுக்கொண்டு செய்தேன். அவர்கள் நன்றாக சாப்பிட வேண்டும் என்று சொல்லுவார்கள். அந்த காலக் கட்டத்தில் Rich food தான். ஆன்மீகத்தில் வளர்க்கப்பட்டேன். நவம்பர் மாதத்தில் மூன்று நாட்கள் தியானம் இருக்கும், நவம்பர் 5-ம் தேதி வெள்ளைப் புடவை கொடுப்பார்கள். தியானம் முடித்து பழைய Councillors Hall -ல் வந்து கூடுவார்கள். சபைத் தலைமை அன்னையோடு, ஆலோசகச் சகோதரிகளும் உடன் இருப்பார்கள். எங்களில் நான்கு சகோதரிகளை சபைத் தலைமை அன்னை அழைத்தார்கள். நாங்கள் நால்வரும் பயத்தோடு சென்றோம். சபைத் தலைமை அன்னை மேரி டொமிட்டில்லா சொல்லியது, திருச்சபை புதிய சட்டம் கொண்டு வந்திருக்கிறது, இந்த ஆண்டிலிருந்து துறவறத்தில் நுழைபவருக்கு 18 வயது முடித்திருக்க வேண்டும், ஆனால் உங்கள் நால்வருக்கும் 6 மாதங்கள் குறைவாக இருப்பதால், உங்களை இந்த ஆண்டு சேர்த்துக்கொள்ள இயலவில்லை. எனவே அடுத்த ஜீன் மாதம் வந்து சேர்ந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். இந்த நால்வரில் நானும் ஒரு சகோதரி. இப்பொழுது நினைக்கும் போதும் அந்த வேதனை, வருத்தம் சொல்ல முடியாத வலி, இருப்பினும் அடைக்கல அன்னை எனது கண்ணீரை அறிவார்கள்.

அடைக்கல அன்னை என்னைக் கைவிடவில்லை. அடுத்த ஆண்டு மீண்டுமாக சேர்த்துக்கொள்ளப்பட்டேன். மறுபடியும் அன்னை மேரி பெந்தகோஸ்ட் அவர்கள் தேர்வு நிலையினரைக் கவனிக்கும் சகோதரியாக இருந்தார்கள். இன்னும் பல சகோதரிகளைத் தெரிந்து கொண்டேன். விருப்பநிலையில் பயிற்சி முடித்து, பூந்தமல்லி புகுமுகத்துறவு இல்லத்திற்கு அனுப்பப்பட்டேன். எனக்கு அன்னை மேரி தமியான் மற்றும் அன்னை ஜான் தெ பிரிட்டோ புகுமுகத்துறவு இல்லத்தில் பயிற்சிகள் கொடுத்தார்கள். தகப்பன் class செம Jollyதான். செபம், தியானம், தோட்ட வேலைகள், Music class, ஆர்கன் கற்றுக்கொள்வது எனப் பயிற்சி பாசறைகள் நடைபெறும். அன்னை மேரி டொமிட்டில்லா சகோதரிகளைச் சந்திக்க புகுமுகத் துறவு இல்லம் வருவார்கள். அப்போதும் ஆங்கிலப் பயிற்சி கொடுப்பார்கள்.

ஒன்றை பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று நான் இத்தாலி மண்ணிலே ஆர்கன Play பண்ணுகிறேன் என்றால் இதற்கு வித்திட்டவர்கள் விருப்ப நிலையினராக இருந்தபோது கவனித்துக் கொண்ட சகோ. பிரிடோலின் அவர்கள்தான் காரணம். ஏனென்றால் மனமகிழ்வு நேரத்தில் Board போட்டு, 5 கோடுகள் போட்டு DO, RE, MI, FA சொல்லிக் கொடுத்தார்கள். பூந்தமல்லி வந்தபோது அம்மா ஜரின் சொல்லிக் கொடுக்கும்போது இன்னும் தெளிவாகக் கற்றுக்கொண்டேன். இந்த புகுமுகத் துறவு வாழ்வை முழுமையாக வாழக் கற்றுக் கொடுத்தவர் அன்னை ஜான் தெ பிரிட்டோ அவர்கள்.

1973, மே 8-ல் முதல் வார்த்தைப்பாடு. மயிலை இல்லம் விழாக்கோலம், பெற்றோர், உடன் பிறப்புகள் மற்றும் சபைச் சகோதரிகள் முன்னிலையில் எனது முதல் வார்த்தைப்பாட்டை எடுத்தேன். சொல்ல முடியாத மகிழ்ச்சி. அடைக்கலத் தாய் என்னைத் தன் மகளாக ஏற்றுக்கொண்டார்கள். அன்பர் இயேசுவிடமும், அன்னை மரியாளிடமும் என்னையே அர்ப்பணம் செய்து கொண்டேன்.

முதல் குழுமம் பல்லாவரம். முதல் இல்லத் தலைமைச்சகோதரி Mother Emiliana. தாயுள்ளம் கொண்டவர். பக்தி, சபைப்பற்று, இரக்ககுணம், நல்ல நிர்வாகத் திறமை. ஏழைகள்மேல் கருணை, அன்பு, இவையெல்லாம் எனது துறவற அர்ப்பண வாழ்வில் உந்து சக்தியாக இருந்தது. இங்கு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தேன். நிறைய அலுவலகப் பணிகள் இவர்களிடம் கற்றுக்கொண்டேன்.

**தொடர்ந்து நான் பணியாற்றிய கல்வி நிறுவனங்கள்:**

- தஞ்சாவூர் பூக்காரத் தெரு
- அவர் லேடி மேல்நிலைப்பள்ளி
- புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி
- ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மன்னார்குடி
- மதுரை கூடல்நகர்
- திருச்சி- கைலாசபுரம்

அனைத்து இல்லத்தலைமைச் சகோதரிகள், நிறுவனத் தலைமை ஆசிரியர்கள் எனக்கு அனைத்திலும் பயிற்சி தந்து, நான் சுயமாக சிந்திப்பதற்கும், பணிகளைச் செய்வதற்கும உற்சாகப்படுத்தினார்கள். அந்தந்த இல்லங்களிலே எனக்கு கொடுக்கப்பட்ட அனைத்துப் பணிகளையும் என்னால் முடிந்தமட்டும் செய்து முடித்தேன். இந்த இடங்களில் எல்லாம் எனது துறவற அர்ப்பண வாழ்வில் என்னையே நான் செதுக்கிக் கொண்டேன். அலுவலகப் பணிகள் எவ்வளவு கொடுத்தாலும் சலிப்பில்லாமல் செய்து முடித்திருக்கிறேன். என்னால் முடிந்தவரை ஏழை, எளிய மாணவர்களைத் தலைமை ஆசிரியரிடம் கேட்டு பள்ளியில் சேர்க்க உதவி செய்துள்ளேன். ஆசிரியர்களின் பணி நியமனம், மற்றும் அவர்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளேன்.

**சமுதாய நலப்பணி:**

நான் தூத்துக்குடியில் இல்லத்தலைமைச் சகோதரியாக இருந்தபோது, நமது அடைக்கலச் செல்வம் திருமதி. லூமா ரோஸ் பெண்ணும், அதே பள்ளியில் பணிபுரிந்த அந்தோணி, அலுவலக உதவியாளர் இருவரும் விரும்பியதால், அப்போது சபைத்தலைமை அன்னையாய் இருந்த அன்னை பாத்திமா ராணி அவர்களிடம் பேசி, கலந்து ஆலோசித்து, அப்போது சபையின் பொது ஆலோசகராக இருந்த அன்னை மேரி பயஸ் திருமண ஏற்பாடெல்லாம் செய்தார்கள். அவர்களோடு நானும், குழும இல்லச் சகோதரிகளும் சேர்ந்து தூத்துக்குடி பனிமய மாதா திருத்தலத்தில், அந்த மக்கள் எப்படி திருமண சிறப்பு செய்வார்களோ, அதே மாதிரியாக சிறப்பாக நடைபெற்றது. அன்னை மேரி பயஸ் புது வீட்டிற்கு வேண்டிய சீர்வரிசை செய்து, பள்ளி ஆசிரியர்கள் அந்த நிகழ்வுக்கு வந்து, வெகுவாகப் பாராட்டிச் சென்றார்கள். இப்படியெல்லாம் உங்கள் வளர்ப்பு பிள்ளைகளுக்குச் செய்வீர்களா என்று வியந்து சென்றார்கள்.

எனது கல்விப் பணியிலிருந்து விருப்பு ஓய்வு பெற்று 2010-ஆம் ஆண்டில் இத்தாலிக்கு மறைபரப்புப் பணிக்காக அனுப்பப்பட்டேன். இத்தாலியில் Gioio என்ற இந்த பகுதிக்கு பணி செய்ய வந்தேன். மலைப்பகுதி, கொடைகானல் மலை போல் இருக்கும். நான் ஜனவரியில் இங்கு வந்தேன். பனி கொட்ட ஆரம்பித்துவிட்டது. முதல் முறையாக நேரடியாகப் பார்க்கிறேன். வெளியில் போய் நின்று ஆடி, பாடி, விளையாடி, பனியை கையில் எடுத்து ஒருவர் மேல் ஒருவர் வீசி விளையாடியதை மறக்க முடியாது. இங்கு சலேசியன் சகோதரிகள் 106 வருடங்கள் பணி செய்த இடம். அவர்களுடைய Charism Oratory நடத்துவது. இளைஞர்கள், இளம் பெண்கள் வருவார்கள் அவர்களோடு, விளையாடி அவர்களை அனைத்திலும் வழிநடத்தியது மறக்கமுடியாத அனுபவம்.

**இத்தாலில் நான் பணி செய்த மற்ற பணி இடங்கள்:**

Monteodorissio மாதா திருத்தலம். திருப்பலிக்குத் தயார் செய்வது, மக்களோடு ஜெபமாலை சொல்வது, மறைக்கல்வி பிள்ளைகளோடு இருப்பது, முதியோர் சந்திப்பு, திவ்விய நற்கருணை எடுத்துச் செல்வது போன்ற பணிகளை ஆர்வத்தோடு செய்தேன்.

Vasto - இல்லம் இந்த 2023-ஆம் ஆண்டு வரைக்கும் இந்த இல்லத்தில் தலைமைச் சகோதரியாகப் பொறுப்பில் உள்ளேன். இத்தாலியில் 1985 ஆம் ஆண்டு தொடங்கிய முதல் இல்லம். ஏறக்குறைய 38 ஆண்டுகள் கடந்து பணிசெய்து கொண்டிருக்கிற இல்லம். இங்கும் நமது பணிகளான கோவில் பணி, மறைக்கல்வி மாணவிகள் மத்தியில் பணி, Youth animation, Adult Meeting, Choir Group. இவற்றில் நம் பங்களிப்பு வெகுவாக பாராட்டப்படுகிறது. நான் இங்கு ஆர்கன் Play பண்ண பணிக்கப்பட்டுள்ளேன். எனக்கு மிகமிக சந்தோசம். அன்று ஐரின் அம்மாவிடம் நான் கற்று கொண்டது இன்று எனக்கு உதவியாக இருக்கிறது.

நான் கோர்த்தி மறைமாவட்டத்தில் உள்ள Vasto இல்லத்தில் பணி செய்கிறேன்.

பங்குக் கோவிலோடு இணைந்து மற்றும் ஒரு கோவிலில், நாள் முழுவதும் திவ்விய நற்கருணை ஸ்தாபகம் செய்து, ஆராதனை செய்வது. இதில் மக்களும் ஜெபிக்க வருவார்கள். நாம்தான் இதற்கு பொறுப்பு. எனவே அதிக நேரம் தனியாக ஜெபிக்க நல்ல வாய்ப்பினைப் பெற்றுள்ளேன். மனதிற்கு நிம்மதியாக இருக்கிறது. நோயிலும் முதுமையிலும் இருப்போருக்கு நற்கருணை எடுத்துச்செல்வது, அவர்களோடு கொஞ்ச நேரம் இருந்து பேசி, ஜெபித்து வருவது உண்மையிலேயே கல்விப் பணியில் கிடைக்காத அமைதி, நிம்மதி, சந்தோசம் இதில் எனக்கு கிடைப்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். குழந்தைகள், இளைஞர்கள், இளம்பெண்கள் மத்திலும் பணிசெய்யவது நான் பெற்ற பேறு. ஒரு Missionary -யாக வந்த நான் இங்கு சந்தோசமாக இருக்கிறேன். எனக்கு Climate, food, Culture எல்லாமே பிடித்து விட்டது.

எனது துறவற அர்ப்பணத்தில் 50-வது ஆண்டை நினைவு கூறும் இந்நாட்களில் இறைவன் எனக்கு செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நன்றி கூறுகிறேன்.

- ✔ என்னை இந்த துறவற அர்ப்பண வாழ்வில் உருவாக்கிய உருவாக்குனர்கள் அத்தனை பேருக்கும் நெஞ்சார நன்றி கூறுகிறேன். என்னை சபையில் ஏற்றுக்கொண்ட சபைத் தலைமை அன்னை டொமிட்டில்லா அவர்கள் வழிவந்த சபைத் தலைமை அன்னையர்கள் அனைவருக்கும் நன்றி பண் இசைக்கின்றேன்.
- ✔ எனது துறவற அர்ப்பணத்தில் இந்த 50 ஆண்டுகளில் எல்லா நிலைகளிலும் பயணித்த என் அருமை பெற்றோர், உடன் பிறப்புகள் அனைவருக்கும் நன்றி. என்னுடன் எனது இன்பம், துன்ப நேரங்களில் எனது அழைத்தலில் நிலைநிறுத்திய சகோதரிகளுக்கும் நன்றி.
- ✔ இறுதியாக எனது துறவற அர்ப்பணத்தின் 50-ஆம் ஆண்டின் நிறைவு நாளை நினைவு கூறும் இந்த நாட்களில், எங்களை ஒருங்கிணைத்து, நான் அயல் மண்ணில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், Jubilee சகோதரிகளின் மத்தியில் Online-ல் என்னைக் கூப்பிட்டு, உரையாடி, உறவாடி, எனக்கு பல நல்ல அறிவுரைகளைக் கூறிய, இந்நாள் நம் சபை தலைமை அன்னை பாசத்திற்குரிய அன்னை மரிய பிலோமி அவர்களுக்கு எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்காக பெரும் முயற்சிகள் எடுத்து நீங்கள் Italy-யில் உள்ள உங்கள் Bishop -ஐ கூட்டி வாருங்கள். அவர் தலைமையில் நன்றித் திருப்பலி நிறைவேற்றலாம், அவருக்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் நான் சபையிலிருந்து செய்து கொடுக்கிறேன் என்று பெருந்தன்மையோடு கூறிய, உங்களது பரந்து விரிந்த தாராள மனதைப் பாராட்டுகிறேன். நீங்களும் எனது துறவற அர்ப்பணத்தில் உடன் பயணித்தீர்கள். பல நிலைகளிலும் என்னை ஆற்றுப்படுத்தியுள்ளீர்கள். எல்லாவற்றிற்கும் நன்றி! நன்றி! என்று கரம் கூப்பி நன்றி கூறுகிறேன்.

**சகோ. குழந்தை தெரஸ் (617).**

# அடைக்கல அன்னையின் அருளாசியோடு என் அர்ப்பணம்



"கருப்பையில் இருக்கும் போது ஆண்டவர் என்னை அழைத்தார்:
என் தாய் வயிற்றில்.... உருவாக்கும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்". (எசா 49:1)

**என் வாழ்வைப் பற்றிய சமர்ப்பணம்:**

ஒளி உண்டாகும் போதே நிழலும் உண்டாகிறது.....
மனிதன் பிறக்கிறப்போதே இறைவனால் வாழ்வும் நிர்ணயிக்கப்படுகிறது
வாழ்வு எதுவென்று
வழிநடத்தும் துணை யாரென்று....
இருப்பிடம் எங்கென்று....
இயன்றவரை பணிசெய்வது எதிலென்று.....
இப்படி அழைத்தார்.
எங்கோ பிறந்த என்னையும்....
நதியென்றால் கரை உண்டு.
கீழ்க்கரை என்றால் வள்ளல்களில் கொடை உண்டு.
சின்ன ஊர்தான் சிங்கப்பூர்....
ஆனால் சிகரம் தொட்ட நாடாக விளங்குகிறது இன்று.
ஆம், சின்ன சிங்கப்பூரென பெயரெடுத்த சேதுபதி மன்னர் ஆண்ட ஊர்தான்
கீழ்க்கரை.... நான் பிறந்த மண்.... வளர்ந்ததும் அந்த மண்ணே....
திரு. அந்தோணிசாமி, திருமதி. சூசையம்மாள் இருவருக்கும் இரண்டாம் மகளாய் பிறந்தேன்.

**தேவ அழைத்தல்.....**

அர்த்தம் புரியாத பள்ளிப் பருவத்தில்.....
அர்த்தமுள்ள இறைவாழ்வை என் மனம் தேட.....
ஏதோ ஒரு உந்துதல் எனக்குள் ஏற்பட.....
பாதை மாறிய பயணமாய்.....
இறைவாழ்வு பயணத்தில் பயணிக்கலானேன்.
பயணத்தின் முதல் வார்த்தைப்பாட்டினை
அன்னை டொமிட்டில்லா கரங்களைப் பற்றி
துறவு வாழ்க்கையைத் தொடங்கினேன்.....

மேடும் பள்ளமும் கலந்த வாழ்வில், இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்வில்
என்னை சீர்மிகு வழிநடத்திக் காத்த அன்னையே....
அடைக்கல அன்னையே.....
உம்மை தினமும் நினைக்கிறேன்.....

சபையின் தனிவர வாழ்விலே
சரித்திரம் படைக்கவில்லை எனினும்
அனாதைகள், ஆதரவு இழந்தோர் வாழ்வில்
அக்கறையும் அன்பும் காட்டியுள்ளேன்.

சேரிவாழ் பகுதியில் வாழ்ந்து
கல்விப் பயில வரும் குழந்தைகளுக்கு
எத்தகைய கட்டணமுமின்றி இலவசமாய்
பயிலக்கூடிய பள்ளியில் பணியாற்றியதை
பரவசத்துடன் நினைத்துப் பார்க்கிறேன்.

சென்னைப் பட்டணத்திலே பணக்கார குழந்தைகள்
படிக்கும் பள்ளிகளின் மத்தில் இத்தகைய
இலவசப்பள்ளி, பெற்றோர்கள், குழந்தைகளின்
இன்முகத்தை கண்டு இறும்பூது அடைந்துள்ளேன்.

திருத்துறைப்பூண்டியில் பணிபுரிந்த காலத்தில்
கணவனால் கைவிடப்பட்ட திருமதி. வளர்மதி
என்ற பெண்ணுக்கு வேலை வாய்ப்புத் தந்து
அவளது மகளுக்கும் படிப்பு தந்ததை நினைத்து
வாழ்நாள் முழுவதும் அவள் நன்றிக் கரம் கூப்பியதை மறக்க இயலாது.

பல்லாவரத்தில் ஏழைப்பெண் திருமதி. சரோஜா,
கிறிஸ்துமஸ் அன்று செய்த உதவியை (சிறுதொகை)
இன்றும் ஒவ்வொரு கிறிஸ்மஸ் தினத்தன்று நினைவு கூர்வதைச் சொல்லி சொல்லி இறைவனுக்கு நன்றி பகர்கின்றாள். உண்மையான கிறிஸ்துமஸ் அதுதானே!

மன்னார்குடியிலே இல்லத்தலைவியாக இருந்தபோது
இந்து மதத்தினர் வாழும் சித்தேரி எனும் கிராமப் பகுதியிலே
திருமதி. ஆரோக்கிய மேரி என்ற பெண்ணின் வழியாகச்
சுற்றி வாழும் இந்து சகோதரர்களின் குடும்பத்தைச் சந்தித்து

அருட்சகோதரி மேரி பொலிக்கார்ப்புடன் சேர்ந்து பத்து குடும்பங்களைப் பக்குவமாய் கிறிஸ்தவ மதத்தில் சேர்த்து, அவர்களுடன் கிறிஸ்துமஸ் விழாக் கொண்டாடி விருந்து கொடுத்து மகிழ்ந்தது மனதிற்கு இன்றும் மகிழ்வூட்டுகிறது.

**இறைவனுக்கு நன்றி:**

- பட்டுக்கோட்டை இசபெல்லா மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியையாக இருந்தபோது பள்ளிக்கு விளையாட்டிடம் இல்லாத குறையைப் போக்க, தினமும் மாலை நேரத்தில் கால்நடையாக நடந்து நடந்து இடங்களைக் கண்டுப்பிடித்து வாங்க முயற்சி செய்ததில் கல்லறை எதிர் பகுதியிலே இடம் அமைந்தது. (தற்போது CBSE School) இறைவனின் கருணையை எண்ணிப் பார்க்கின்றேன்.
- தூத்துக்குடியில் பணிபுரிந்த காலத்தில் விடுதியில் படித்த மாணவி ஜெயந்தி (1123) என்ற சகோதரியின் வீட்டிற்கு இருமுறை சென்று அவளது தாயிடம் கலந்து பேசி துறவற அழைத்தலை மேற்கொள்ளவும், திருத்துறைப்பூண்டியில் படித்த மாணவிகளைச் சபைக்கு அழைத்தலை ஏற்க உறுதுணையாக இருக்க அடைக்கல அன்னை அருள் பொழிந்ததை நினைத்து நன்றி கூறுகின்றேன்.
- புதுக்கோட்டையில் திருஇருதயப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணிபுரிந்தபோது பள்ளியில் மாணவிகளுக்கு இடம் பற்றாக்குறைவினால் இரண்டு மாடிக் கட்டிடம் அமையவும், மரியா பிளாக் அமைய காரணமானேன்.
- அடைக்கல அன்னை அவையில் இருந்ததனால் புதுக்கோட்டை திரு இருதயப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 05.09.2010 அன்று மாநில நல்லாசிரியர் விருதினைப் பெறும் பேறுபெற்றதை நினைத்து அன்னைக்கு கரம் கூப்புகிறேன். கல்விப் பணியில் பல்வேறு வெற்றியும் உழைப்பிற்கு ஏற்ற பலனாய் கிடைத்த மகிழ்ச்சியும் இன்றும் என் மனதில் நிழலாடுகிறது.....
- பத்தாம் வகுப்பில், பன்னிரெண்டாம் வகுப்பில் மாவட்ட, மாநில இடங்களைப் பிடித்து, மருத்துவர்கள் பலரை உருவாக்கிய, சிறு பணி என் சிந்தனையில் இன்றும் நிற்கிறது. பல்வேறு பதக்கங்களைப் பெற மாணிக்கக் கற்களாய் உடன் உழைத்த அனைவரையும் தினமும் நினைத்துப் பார்க்கிறேன்.
- அன்னையின் திருத்தலங்களாம், மயிலையிலும், வேளை நகரிலும், பனிமய அன்னையின் நகரிலும் பணி செய்யும் பாக்கியம் பெற்றேன்.....
- ஐம்பது ஆண்டு கால துறவு வாழ்வு கனபொழுதில் கடந்து போனதாய் உணர்கிறேன். எத்தனையோ இடர்களையும், எளிதில் தாண்டி, ஏற்றத்துடன் பணி செய்யும் அருள் தந்த இறைவா! உன் கருணையை நினைத்து, மனம் குளிர்கிறேன்.
- எனக்கு இருதய அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்களையும், மருத்துவமனையில் உடன் இருந்த சகோதரிகளையும், என்பால் கருணை உள்ளம் கொண்ட அனைவரையும் அன்போடு நினைத்துப் பார்க்கிறேன்.

- அன்பின் இறைவா! நீ பிறந்த புண்ணிய பூமியைக் காணும் பாக்கியம் தந்தமைக்கு, உனக்கு கோடான கோடி நன்றி உணர்வை காணிக்கையாக்குகிறேன்.

**என் வாழ்வின் அங்கமான அன்னையர்கள்:**

❖ அன்னை மேரி டொமிட்டில்லா

❖ அன்னை மேரி எத்தல்வீனா

❖ அன்னை மேரி ஜான் டி பிரிட்டோ


❖ அன்னை பாத்திமா ராணி

❖ அன்னை லூர்து மேரி

❖ அன்னை மரிய பிலோமி

அனைத்து நல் உள்ளங்களையும், உயிர் உள்ளவரை நினைத்துப் பார்க்கும் உணர்வோடு, நன்றிக் கரம் கூப்பி நிற்கிறேன்.....

சகோ. அருளானந்தம்மாள் (618).



# அடைக்கல அன்னை அவையும் நானும்



"இறைவன் எனக்கு செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைமாறு செய்வேன்"
(தி.பா 116:12).

அகிலத்தைப் படைத்தாளும் தந்தையே போற்றி!
மனிதருக்காக மனுவுரு எடுத்த இயேசுவே போற்றி!
பாரெங்கும் பரவி இருக்கும் தூய ஆவியே போற்றி!

**உன்னைப் பெயர் சொல்லி அழைத்தது நானே:**

தரணி போற்றும் தஞ்சை மாநிலத்தில் நஞ்சையும் புஞ்சையும் விளையும் சஞ்சாய நகரிலே திரு. இஞ்ஞாசி முத்து, திருமதி. செபஸ்தியம்மாள் இவர்களுக்கு ஐந்தாவது பெண் மகளாய்ப் பிறந்தேன்.

**இளமைப் பருவமும் கல்வியும்:**

தொடக்கக் கல்வியை எங்கள் ஊரிலே 1 முதல் 5 வரை படித்தேன். அப்போது அடைக்கல மாதா சபை அருட்சகோதரிகள் பட்டுக்கோட்டையிலிருந்து வண்டியில் வருவார்கள். அவர்களைப் பார்த்தாலே எனக்கு பயம். பெலிக்ஸ் அம்மா மற்றும் மலையாள அம்மா இருவரும் எனது தொடக்கக் கல்விக்கு வித்திட்டார்கள். 6 முதல் 8 -ஆம் வகுப்பு வரை ஆலடிக்குமுளையிலும் 9 முதல் 11 -ஆம் வகுப்பு வரை பட்டுக்கோட்டை அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் படித்தேன் 3 அரை கி.மீ நடந்தே பள்ளிக்குச் செல்வேன். 11 -ஆம் வகுப்பு முடிந்ததும் ஆசிரியர் பயிற்சிக்கு மன்னார்குடி நேர்காணலுக்கு வந்தேன். அப்போது ஜோன் ஆப் ஆர்க் அம்மா இருந்தார்கள். எனக்கு இடம் கிடைக்காததால் ஒரு வருடம் Type writing class-க்கு சென்று Lower எழுதி பாஸ் பண்ணினேன். எங்கள் ஊரிலிருந்து முதன்முறையாக வெளியில் சென்று படித்தது நான்மட்டும்தான். எனக்கு மாதா மேல் பக்தி அதிகம் உண்டு. அம்மா தினமும் செபமாலை சொல்லாமல் படுக்கைக்குச் செல்ல மாட்டார்கள். நானும் அவர்களைப் போல் தனியாக செபமாலை சொல்வேன். பட்டுக்கோட்டைதான் எங்களுக்கு பங்கு. வாரம்தோறும் அம்மாவுடன் பட்டுக்கோட்டைக்குத் திருப்பலிக்குச் செல்வேன்.

**அழைத்தலுக்குக் காரணம்:**

பள்ளிப் படிப்பு காலங்களில் பெர்க்மான்ஸ் என்ற பையனுடன் சேர்ந்து படிப்பேன். அப்போது பேச்சு வாக்கில் மடத்துக்கு போயிருந்தால் இப்போது இரண்டாவது வருடமாக இருக்கும் என்று சொன்னான். அதன் பிறகு யோசித்தேன். அம்மாவிடம் சொன்னேன். உனக்கு விருப்பமானால் நீ மடத்துக்குப் போ என்று சொன்னார்கள். பிறகு

பங்குத்தந்தை அருட்தந்தை லாரன்ஸிடம் தெரிவித்தேன். ரொம்ப சந்தோஷம் என்று பட்டுக்கோட்டை convent-க்கு அனுப்பிவைத்தார்கள். அப்போது அம்மா சில்வஸ்தர் இல்லத் தலைமைச் சகோதரியாக இருந்தார்கள். பார்த்து பேசினோம் அவர்கள் வழியாக சென்னை மயிலாப்பூருக்கு சென்றேன். எங்கள் ஊருக்கு முதல் முத்தாக இறைவனால் அழைக்கப்பட்டேன். பெற்றோரை விட்டு பிரிந்தது இல்லை. கஷ்டமாக இருந்தது. வீட்டிற்குப் போய் விடலாமா என்று நினைத்தேன். முன் வைத்த காலை பின் வாங்கக் கூடாது என்று சொல்லி அனுப்பிய வார்த்தையின்படி என்னையே நான் திடப்படுத்திக் கொண்டேன். முதல் வார்த்தைப்பாடு கொடுத்து வீட்டிற்கு வந்ததும் மக்கள் எல்லாம் கூட்டமாகக் கூடி ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். ஏனென்றால் ஊருக்கு முதல் அருட்சகோதரி ஆடம்பரமாக வரவேற்பும் நடைபெற்றது. என்னைத் தொடர்ந்து எங்கள் ஊரில் நிறைய அழைத்தல் கிடைத்தது.

**எனது பணி வாழ்வு:**

நான் ஆசிரியர் பயிற்சி முடித்து நாகைக்குச் சென்றேன். அங்கு Keyboard போடுவேன். அதனால் என்னை அருட்தந்தை மரிய சூசை வேளாங்கண்ணிக்கு அழைத்துச் சென்றார். வேளாங்கண்ணிக்கே 4 முறை சென்றேன். எனது முதல் appointment, Final vows, Silver Jubilee மற்றும் பள்ளி பணி ஓய்வு எல்லாமே அன்னையின் ஆலயத்தில்தான். நான் முதல் முறையாக தலைமை ஆசிரியையாக தஞ்சை பூக்காரத் தெருவுக்குச் சென்றேன். பள்ளி ஆரம்பித்து 100 ஆண்டு நிறைவு விழா 1990 பிப்ரவரியில் கொண்டாடினேன். மூன்று நாட்கள் தொடக்க விழா, விளையாட்டு விழா, மற்றும் ஆண்டு விழா மிகவும் ஆடம்பரமாக நடைபெற்றது. குழந்தைகளுக்கு பரத நாட்டியம் வகுப்பு நடத்தி அதில் 8 குழந்தைகளுக்கு ஜலங்கை பூஜை அருட்தந்தை சம்மனசு தலைமையில் நடைபெற்றது. பெற்றோர்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஏனென்றால் யாருமே இதுவரை செய்ததில்லை என்று சொன்னார்கள். அங்கு இருந்த மடத்துப் பெண் ஆரோக்கிய மேரிக்கு பள்ளியில் சத்துணவு பணியாளராக இடம் வாங்கிக் கொடுத்து பணி செய்தாள்.

முத்துப்பேட்டையில் 6 ஆண்டுகள் இல்லத் தலைமைச் சகோதரியாக இருந்தேன். அந்த காலங்களில் மடத்துப் பெண் பாத்திமா மேரிக்கு இராமேஸ்வரத்தில் உள்ள ஒரு பையனுக்கு திருமணம் செய்ய கொரற்றி அம்மா மற்றும் மேரி பயஸ் வந்தார்கள். திருமணம் மிகவும் சிறப்பாக முத்துப்பேட்டையில் நடைப்பெற்றது. வரவேற்பு பள்ளியிலே இருந்தது. அந்தப் பையனுக்கு யாரும் இல்லை. முதல் பிரசவம் நம் மருத்துவமனையிலே இருந்தது. திருமுழுக்கு அங்குதான் நடைப்பெற்றது. இரண்டாவது குழந்தையும் அங்குதான் பிறந்தது. தற்போது முத்துப்பேட்டையிலேயே இடம் வாங்கி சந்தோஷமாக இருக்கிறார்கள். இரண்டு பையனும் படித்து வேலை செய்கிறார்கள். முத்துப்பேட்டையில் Convent, Hostel மற்றும் Hospital எல்லாம் புதிதாகக் கட்டப்பட்டது. அருட்தந்தை அமல்ராஜ் வெளிநாட்டிலிருந்து பணத்திற்கு ஏற்பாடு செய்துத்தர Bishop Edward Francis அவர்களது உதவியினால் கட்டப்பட்டது.

வேளாங்கண்ணியில் இருந்தபோது வளர்மதி மற்றும் அவரது தாயார் இவர்களுக்கு உறவு என்று சொல்ல யாருமே இல்லை. வளர்மதிக்கு அருட்தந்தை சவரிமுத்து தலைமையிடம் கேட்டு Tr. Training -க்கு இடம் வாங்கிக் கொடுத்து படித்தாள். அவளுக்கு வேலை கிடைத்தது. அவள் அம்மா முடியாமல் இருந்தப்போது வேளை நகரிலே முதியோர் இல்லத்தில் இரண்டு பேரும் தங்கி இருந்தார்கள். அவர்களுக்கு அருட்தந்தை சவரிமுத்து ஞானஸ்நானம் கொடுத்தார். எனது தங்கை மேரி ஞானத் தாயாக இருந்தார். இவளுக்கு திருமணம் வேளை நகரிலே நடைபெற்றது. அந்த பையன் post office -இல் வேலை செய்கிறான். இவர்களுக்கு குழந்தை இல்லாததால் ஒரு குழந்தை எடுத்து வளர்க்கிறார்கள் தற்போது UKG படித்து வருகிறான். வீடு புதிதாக வாங்கி இருவரும் சந்தோஷமாக இருக்கிறார்கள். எங்கள் வீட்டிற்கு வந்து போய் கொண்டிருக்கிறார்கள்.

திருத்துறைப்பூண்டியில் இருந்த போது, வளர்மதி என்ற ஆயா அம்மா, பள்ளிக் கூடத்தில் வேலை செய்து வந்தார். ஹெட்விஜ் அம்மா இருந்த போது வேளையில் சேர்ந்தார்கள். அவரது உடல் மேல்தோல் சுருங்கி பார்க்க ஒருமாதரி இருப்பதால் யாரும் அதிகம் பேச மாட்டார்கள். ஏதோ ஆயா வேலை கிடைத்துள்ளதே என்று இருந்தார்கள். வீடு, பாலம் அருகே வாய்க்கால் ஓரமாக சிறிய குடிசை வீடுதான். அவர்களுக்கு 3 பெண் குழந்தைகள், மூன்றாவது குழந்தை காவியா பிறந்ததும் கணவர் மருத்துவமனையிலே விட்டு போனவர்தான் இந்நாள்வரை வரவில்லை, 3 குழந்தைகளையும் அருட்தந்தை சவரிநாதன் திருத்துறைப்பூண்டியில் இருந்தபோது திருமுழுக்கு மற்றும் புதுநன்மை வழங்கினார். பிள்ளைகள் மாதவி மற்றும் மாலதி இருவருக்கும் திருமணம் முடிந்துவிட்டது காவியாவை அருட்தந்தை சவரிநாதன் பொறுப்பேற்று படிக்க வைத்தார். வளர்மதிக்கு உணவுப்பொருள் மற்றும் பல உதவிகளையும் செய்து வந்தேன். வீடு கூரையாக இருப்பதால் சகோ. நேச சவுந்தரம் அவர்களது பரிந்துரையாலும் சுவர் எடுத்து மேலே Sheet போட்டுக் கொடுக்க அங்கே வளர்மதி தங்கி இருந்தார். பள்ளியிலும் அவருக்கு வேலை கொடுக்கவில்லை. வளர்மதிக்கு உடல் நலம் சரியில்லாமல் மருத்துவமனைகளில் இருந்தார்கள். காவியாதான் உதவி செய்வாள். ரொம்ப முடியாமல் இறந்து விட்டாள். குழந்தைகள் அனாதையாக இருந்தார்கள். காவியாவுக்கு Fr. சவரிநாதன் மூலம் திருமணம் நடைப்பெற்றது. போன் மூலம் விசாரிப்பேன் பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

**நீ செய்த நன்மை நினைக்கின்றேன் என் நெஞ்சுருகி நன்றி கூறுக்கின்றேன் இறைவா!**

50 வருட காலமாக என்னை உமது பக்கத்திலே வைத்து பல்வேறு துன்பங்கள் மத்தியிலும் ‘அஞ்சாதே! நான் என்றும் உன்னோடு இருக்கிறேன்’ என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்து வாழ வைத்த இறைவா! உமக்கு நன்றி! நன்றி! சொல்லி வாழ்த்துகிறேன்.

சகோ. குழந்தையம்மாள் (621).

# அடைக்கல அன்னை அவையும் நானும்



"நான் உன்னோடு இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன்"
(யோவா 1:9)

ஆற்றல் தந்து ஆசீர் பொழிந்து
ஆக்கமும் ஊக்கமும் அள்ளித் தந்தாயே!
அம்மா! உம் மகள் என்ற பெருமையில்
மனம் நெகிழ்கின்றேன்!

அடைக்கலம் தந்து அர்ச்சனை மலராய் நான் நடப்பட்ட இடத்தில் பூத்துக் குழுங்க 17 ஆண்டுகள் இந்திய மண்ணிலும், 15 ஆண்டுகள் இத்தாலிய மண்ணிலும் 50 ஆண்டுகள் இறைகரம் தந்து என்னை வழிநடத்திய அவையே! உன்னோடு உளம் நிறைந்து நன்றியால் இணைகிறேன். வாழ்வுப் பாதையில் வரங்கள் பல தந்து என்னை வழிநடத்திய இறைவா! உம் சிறகுகளின் நிழலில் எந்நாளும் என்னை அரவணைத்த அடைக்கல அவையே உமக்கு நன்றிக் கரம் குவிக்கின்றேன்.

அகஒளிப் பாதையில் அருள் ஒளி காட்டி அர்ப்பண வாழ்வுக்கு அடித்தளமாகி எனக்கு பாதுகாப்பான அழைத்தழைத் தந்து "என்னைப் பின்பற்றி வா" (மத் 9.9) என்ற இறைவார்த்தையை வாழ்வாக்க என்னை சபையிலே ஏற்றுக்கொண்டு பணி செய்ய, என்னை பாசத்தோடு அழைத்த அன்னை அவர்களுக்கு என் நாவார நன்றி நவில்கின்றேன். மொழி, பண்பாடு, இனம் புரியாத சூழ்நிலையில் என்னை உருவாக்கிய புகுமுகத் துறவு இல்லத்தில், எனது முதல் அர்ப்பணத்தில் என்னோடு நின்ற அன்னை தமியான், அன்னை பிரிட்டோவின் பாசமே தனி. அன்று அவர்களிடம் கற்றுக் கொண்டதை இன்று வாழ்வாக்கி வாழ வைத்த இறைவா! நன்றி.

'நான் உன்னை வழிநடத்தும் கடவுள் என் பாதச் சுவடுகளைப் பின் தொடர்ந்து வா' என்று முதன் முதல் மல்லவாரி பாளையம் சென்று பணி செய்த அனுபவமே தனி. இறையியலில் தேர்ச்சி பெற்று பாங்குடன் பணி செய்ய அனுப்பிய அன்னை எத்தல்வீனா என் வாழ்விலே மறக்க முடியாத அனுபவம் தந்தவர்கள். திண்டிவனம் விவிலிய பணியகத்தில் 2 ஆண்டுகள் பணி செய்ய அழைப்பு விடுத்த மேதகு ஆயர் எட்வர்ட் பிரான்சிஸ், ஒளி நிலையம் பணியிலே என்னை உருவாக்கிய மேதகு ஆயர் கபிரியேல், இறையழைத்தல் பணியில் என்னை உற்சாகப்படுத்திய மேதகு ஆயர் அமலநாதர் இவர்களெல்லாம் நான் செய்த சபையின் பணியிலே மயில்கற்களாக இருந்து என்னை உருவாக்கி, எனது வளர்ச்சியில் மகிழ்ந்தவர்கள். சபையிலே விழுதாக இருந்த என்னை மரமாக்கியவர்கள். அனைவருக்கும் எனது மகிழ்வான நன்றி!

அன்று இறையழைத்தல் பணியகத்தில் பணி செய்த எனக்கு பணிவாழ்விலே சிறு மாற்றம். நான் சாந்தோம் கலைத்தொடர்பகத்தில் பணிமாற்றம். மேதகு அருளப்பா ஆண்டைகையவர்கள் அன்னை எத்தல்வீனா இசைவின் படி சபையின் வாழ்வில் மீண்டும் உயர ஒரு அரிய வாய்ப்பு. இதைக் கண்ட அன்றைய அருட்பணியாளர் சேவியர் ஜார்ஜ் (தூத்துக்குடி) கூறிய வார்த்தைகள் இன்றும் என் மனதில் ஆழப்பதிந்துள்ளது. பல பணிகளில் சபைக்கு இறையழைத்தல் பணியகம் வழியாக பெருமை சேர்த்த சகோதரி "எங்கிருந்தாலும் வாழ்க" என்று கூறி பெருமையோடு வழியனுப்பினார்கள். "சபையின் பெயரால் உற்சாகத்துடன் சுறுசுறுப்பாக பணிசெய்த சகோதரிக்கு என் வாழ்த்துக்கள்" என்று அதிகம் உற்சாகப்படுத்தினார்கள். சபையை வாயார வாழ்த்தினார்கள். இவ்வாழ்த்துச் செய்தியை அன்னை எத்தல்வீனா மயிலை இல்ல நோட்டிஸ் போர்ட்டில் போட்டு பல வழிகளில் என்னைப் பாராட்டினார்கள்.

1985 -ஆம் ஆண்டு (12.06.1985) மகிழ்வுடன் மயிலை இல்லத்திலிருந்து சாந்தோம் கலைத் தொடர்பு நிலையம் நோக்கி பணி செய்ய போய்க் கொண்டிருந்தோம். அன்னை எத்தல்வீனா என்னை அழைத்து, இத்தாலியில் துவங்க இருக்கும் முதல் இல்லம் பற்றி கூறியபின் அங்கு செல்ல வேண்டும் வீட்டில் அனைவரிடமும் கூறிவிட்டு தயாராகுங்கள் என்றார்கள். சபை மட்டும்தான் என் கண்முன் நின்றது. பதட்டத்துடன் ஆகட்டும் என்று கூறினாலும் தகுதியற்ற என்னைத் தேர்ந்து கொண்டது எப்படி? என்ற என் நினைவில் **"அஞ்சாதே நான் உன்னோடு இருக்கும் கடவுள்"** என்ற குரலைக் கேட்டேன். எத்தனையோ வல்லவர்கள், நல்லவர்கள் சபையில் இருந்தும் எனக்கு அழைப்பு கிடைத்துள்ளது நன்றியோடு ஏற்றுக்கொண்டேன்.


13.10.1985 அன்று மயிலை இல்லத்தை விட்டு வெளியேறும் எங்களைச் சுற்றி இரந்து அழுகையோடு பாசத்தோடு வழியனுப்பிய அத்தனை பேருக்கும் நன்றிக்கரம் குவித்தேன். அன்னை எத்தல்வீனா **"பயப்படாதீர்கள் நான் உங்களோடு இருக்கிறேன்"** என்று எங்களுடன் வந்து எங்களது அத்தனை சூழ்நிலைகளையும் சமாளித்து முதல் இல்லத்தை அயல்நாட்டில் துவங்கி வைத்தார்கள். இவர்களை சபை என்றுமே மறக்காது. கரம் பிடித்து சபையை வழிநடத்திய அன்னையை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். தொலைநோக்குப் பார்வையில் கண்களைப் பதித்து புயலிலே உருவாகி, கடலின் சீற்றத்தில் எதிர் நீச்சல் போட்டு நேர்ச்சையிலும், செபத்திலும் அன்று வழிநடத்திய அன்னை ஜான் டி பிரிட்டோ, அன்னை பாத்திமா ராணி மற்றும் அன்னை லூர்து மேரி மூவரும் சபையில் எனது பாறையின் மைல் கற்கள்.

உடல்நிலைக் குறைவினால் 18 ஆண்டுகள் பணிக்குப்பின் 2002 தமிழகம் திரும்பிய போது பணிவாழ்விலே என்னைப் பரிவுடன் சந்தித்து பனிபோன்று என்னைக் குணமாக்கிய, இன்றும் என்னோடு இருந்து என்னை வழிநடத்தம் அடைக்கலத் தாயே! அம்மா உனக்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகிறேன். நலிவுற்ற நிலையில் என்னை அன்போடு அரவணைத்து என்ன நேர்ந்தாலும் அஞ்சாதே! என்று கூறி, எனது சிகிச்சை நாள்களில் என்னோடு இருந்து, இறுதியாக எதுவும் இல்லை என்ற டாக்டர் சல்த்தானா குரல் கேட்டு மகிழ்ந்த அன்னை லூர்து மேரி 'எவ்வளவு செலவு ஆனாலும் பயப்படாதே

நான் உங்களைக் காப்பாற்றி விடுவேன்' என்று சவால் விட்டு சிறிய மெழுகின் ஒளியிலே இரவு முழுவதும் ஜெபித்த அன்னை பாத்திமா புதுமையாக என்னைக் காப்பாற்றிய தெய்வம் இவர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றி. அறுவை சிகிச்சைப் பெற்று 20 ஆண்டுகள் ஆனாலும் எந்த துன்பமும் இன்றி, காத்து என் சபையிலே இன்றும் வலம் வரச் செய்து, செப உதவியால் என்னைக் காத்த நம் சபையின் மூத்த சகோதரிகள் இளைய சகோதரிகளின் பாசமே தனிதான். இறையருளில் அயல்நாட்டிலே முதல் குறுவட்டாரத் தலைமைச் சகோதரியாகி பல்வேறு இல்லங்கள் துவங்க ஆசீர் அளித்து இன்றும் பக்குவமாய் பல ஆலோசனைகள் தந்து தாயாக இருந்து நம் சபையை வழிநடத்தும் இன்றைய சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி அவர்கள் மற்றும் ஆலோசகச் சகோதரியர்கள் அனைவருக்கும் எனது அன்பான நன்றியும் பாராட்டுகளும்.

நீ உயர பரந்து கொண்டு இருக்கணும் என்று எல்லா ஆசீரையும் எம் சபை வழித் தந்து 50 ஆண்டுகள் அற்புதமாய் அரவணைத்த மூவொரு இறைவா! நீவிர் வாழ்க! இந்தியாவிலும் இத்தாலியிலும் இன்முகத்துடன் பணி செய்ய துணை நின்ற அடைக்கலத் தாயே! அம்மா நீவிர் வாழ்க! 50 ஆண்டுகள் நம் அடைக்கல சபையில் ஆனந்தமாய் வலம் வர துணை நின்ற அன்னையர், சகோதரிகள் அனைவருக்கும் என் உடன் பிறப்புக்கள், உறவினர்கள், நண்பர்கள், உதவிய உள்ளங்கள் அனைவருக்கும் நன்றி.

**சகோ. ஆரோக்கிய மேரி (622).**



# அடைக்கல அன்னை அவையும் நானும்



"என் கடவுளே என் அரசே உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன். உமது பெயரை என்றும் எப்பொழுதும் போற்றுவேன்"

(தி.பா 145:1)

**எனது துறவற அழைத்தல்:**

நான் மன்னார்குடியில் உள்ள புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் 9 -ஆம் வகுப்பு படித்தபோது, உடல் நிலை சரியில்லாமல் போன சமயத்தில் மதர் மேரி கிரகோரி மாதா எண்ணெயைத் தடவி செபித்தார்கள். என் தந்தையுடன் என்னை வீட்டிற்கு அனுப்பி மருத்துவம் பார்த்தபோது வயிற்றில் சிறு கட்டி உள்ளது. எனவே அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர் கூறினார். இராமநாதபுரம், காரைக்குடி மருத்துவர்களும் இதே பதிலைக் கூறியும் என் தந்தை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்கள்.

ஒருநாள் எங்கள் வீட்டிற்கு ஒரு அம்மா வந்து என் பெற்றோரிடம் உங்கள் பிள்ளையைப் பூண்டி மாதா ஆலயத்திற்கு அழைத்துச்சென்றால் உடல்நிலை சரியாகிவிடும் என்று கூறிவிட்டு சென்றார்கள். மறுநாள் நான் தந்தையுடன் பூண்டி மாதா ஆலயம் சென்று மண்டியிட்டு இவ்வாறாக வேண்டினேன். "அம்மா எனக்கு பூரண சுகம் தாரும். திருமணம் செய்யாமல் இறை ஊழியம் செய்கிறேன்" என்று அழுது வேண்டினேன். அருட்பணியாளர் லூர்து சேவியர் அவர்களின் ஆசீர் பெற்று அவர் எனக்குக் கொடுத்த சிறிய மருந்தினை ஒரு மாதம் தினமும் காலையில் சாப்பிட்டேன். ஒரு வாரம் கழித்து பூரண சுகம் பெற்றேன். மரியன்னைக்கு நன்றி கூறி சாட்சியாக வாழ்ந்து, எனது படிப்பை மீண்டும் மன்னார்குடியில் தொடர்ந்தேன். அன்னை மேரி டொமிட்டில்லா, அன்னை பார்பரா இருவரும் என் அழைத்தலுக்கு வித்திட்டார்கள். எனது தாயின் பெயர் அடைக்கலமேரி, எனது ஊரின் பாதுகாவலி அடைக்கலமாதா, நான் சேர்ந்த சபை புனித அடைக்கல அன்னை சபை. மகிழ்ச்சியோடு என் பெற்றோரின் சம்மதத்துடன் நன்றி நிறைந்த நெஞ்சத்துடன் மே மாதம் 22 -ஆம் நாள் மைலாப்பூர் சென்றேன். என்னுடைய விசுவாசம், அன்னை மரியாள்மீது கொண்ட பக்தி, என் பெற்றோரின் ஆசீர், அன்பு அன்னை டொமிட்டில்லா, அன்னை பார்பரா இவர்களின் ஊக்குவிப்பு என் அழைத்தலுக்குக் காரணம். அவர்களுக்கு என் செபங்களை உரிதாக்குகிறேன்.

"ஆண்டவர் உன்னை எல்லாத் தீமையினின்றும் பாதுகாப்பார். அவர் உன் உயிரைக் காத்திடுவார்" (தி.பா 43:5).

**சபையில் எனக்குக் கொடுத்த பணிகள்:**

- ❖ **கைலாசபுரம்:** LKG, UKG பிள்ளைகளுக்கு பாட்டு, ஆங்கில எழுத்துக்கள் கற்றுக் கொடுத்தேன்.
- ❖ **போரூர்:** பல கிராமங்களுக்குச் சென்று சமூகப் பணி, நற்செய்திப் பணி செய்தேன்.
- ❖ **திண்டிவனம்**
- ❖ **பெரும்பண்ணையூர்:** முதியோர் இல்லப் பணிகள் செய்தேன்.
- ❖ **ராம்நகர்:** கன்னட மொழி கற்றுக் கொண்டேன் LKG, UKG பிள்ளைகளுக்கும் கற்று கொடுத்தேன்.
- ❖ **மானம்புச்சாவடி:** ஒளி நிலையம் சென்று நற்செய்திப் பணி செய்தேன். 3 ஆண்டுகள் இல்லத்தலைமைச் சகோதரியாக பணி செய்தேன்.
- ❖ **வேளாங்கண்ணி:** மூன்று ஆண்டுகள். புத்தக நிலையம். கோவில் பணி, பாட்டு பாடுவது, நற்செய்திப் பணி.
- ❖ **தூத்துக்குடி:** ஆயர் இல்ல அலுவகத்தில் மறைக்கல்வி பணி செய்தேன். மதர் ஜான் டி பிரிட்டோ, சகோ. இருதய மேரி இவர்களின் தூண்டுதலால் B.A படித்தேன். என் நெஞ்சார்ந்த நன்றி இருவருக்கும்.
- ❖ **ஆழ்வார்பேட்டை:** சாந்தோம் கலைதொடர்ப்பு நிலையத்தில் மூன்று ஆண்டுகள் நற்செய்திப் பணி செய்தேன்.
- ❖ **போரூர்:** ஆறு ஆண்டுகள் இல்லத்தலைவியாக பணி செய்தேன். மகளிர் மன்றம், மாதர் சங்கம், பக்த சபை வழி நடத்துதல், மக்களின் நல வாழ்விற்கு மருத்துவமனை கட்டிப் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்களின் நலனக்காக பணி செய்தேன். அன்னைன் ஜான் டி பிரிட்டோ, அன்னை பயஸ் இருவரும் மருத்துவமனைக் கட்ட உதவிகரம் தந்து நம்பிக்கையோடு வாழ உதவியவர்கள். நன்றாக பணி செய்ய இயேசுவும் மாதாவும் அருகில் இருந்ததை உணர்ந்தேன். என் கூட இருந்த மூன்று சகோதரிகள் அன்பாக இருந்ததால் கூட்டு வாழ்வு நன்றாக இருந்தது.
- ❖ **வேளாங்கண்ணி:** புத்தக நிலையம், ஒளி நிலையம், முதியோர் இல்லப் பணிகளை 16 ஆண்டுகள் செய்தேன். 3 ஏழைப் பிள்ளைகளுக்கு திருமணத்திற்கு நிதி உதவி பெற்றுக்கொடுத்தேன். அடைக்கல அன்னை அவை எனக்கு இந்தப் பணியை கொடுத்ததால் சிறப்பாக நன்றியோடு செய்தேன். முதியோர் இல்லத்தில் 5 ஆண்டுகள் பணி செய்தேன். எனது பெற்றோரைப் போல நினைத்து அன்பாகவும் மகிழ்ச்சியாகவும் கவனித்தேன். முதியோர் இல்லத்திற்கு வருவோருக்கும், உதவி செய்தவர்களுக்கும் செபிப்பேன். அன்னைக்கு நன்றி!
- ❖ **மன்னார்குடி ஹரித்ராநதி கிழக்கு:** ஒரு ஆண்டு பணி செய்தேன். குடில் இல்லக் குழந்தைகளைக் கவனித்தேன்.


❖ **மானம்புச்சாவடி:** 4 ஆண்டுகள் கருணைக் குடில் இல்லக் குழந்தைகளுக்கு இல்ல கண்காணிப்பாளராக பணி செய்தேன். ஏழை மக்களுக்கும், குழந்தைகளுக்கும் உதவி செய்திருக்கிறேன். செப உதவியை கேட்டவர்களுக்கு செல்போனில் செபிப்பேன். ஏழை, எளியவர், அனாதை, ஆதரவு இல்லாதவர்களுக்கு உதவி செய்ய வாய்ப்பளித்த சபைத் தலைவி மரிய பிலோமி அவர்களுக்கு நெஞ்சார நன்றி கூறுகிறேன்.

❖ **மாதாக்கோட்டை:** இல்லத்தில் கொடுக்கும் பணிகளையும், அன்பியம் மரியாவின் சேனை வழிநடத்தும் பணிகளைச் செய்கிறேன். தொடக்கத்தில் இருந்து என்னை நம் அடைக்கல அன்னை சபையில் எல்லாவற்றிலும் ஊக்குவித்த முன்னாள் சபைத் தலைமை அன்னை அவர்களுக்கும், இப்போது உள்ள சபைத் தலைமை அன்னை மரிய பிலோமினா அவர்களுக்கும், வட்டாரத் தலைமைச் சகோதரி மற்றும் மாநிலத் தலைமைச் சகோதரி அவர்களுக்கும், எனக்கு இதுவரை இல்லத் தலைமைச் சகோதரியாக இருந்த அனைவருக்கும், நான் நன்றாக பணிசெய்ய உதவிசெய்த சகோதரிகளுக்கு என் மனமார்ந்த நன்றியையும், என் செபத்தில் ஒவ்வொரு நாளும் நினைத்து செபித்து வருகிறேன். தொடர்ந்து செபிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**சகோ. செல்வ மேரி (623).**



# அடைக்கல அன்னை அவையும் நானும்



**"அஞ்சாதே! நான் என்றும் உன்னோடு இருக்கிறேன்"** (எசாயா 41:10).

தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரி என்னும் பங்கில் ஆற்றங்கரை ஓரமாய் அமைந்துள்ள பத்தூர் மேல்கரை என்னும் கிராமத்தில் அருளானந்தசாமி, ஞானம்மாள் இவர்களுக்கு 4-வது குழந்தையாக 15.06.1951 -இல் பிறந்தேன். ஆரம்பக் கல்வியை எனது சொந்த ஊரில் படித்தேன். சகோ. சார்லஸ் என்பவரிடம் 5-ஆம் வகுப்பு படிக்கும் போது எனது அழைத்தல் வாழ்வுக்கு அவர்கள் வித்திட்டார்கள். நானும் அவர்கள் வழிகாட்டுதல்படி அருட்சகோதரியாக வேண்டும் என முடிவெடுத்தேன்.

உயர்நிலைக் கல்வியை S.S.L.C வரை கொரடாச்சேரியில் உள்ள அரசினர் பள்ளியில் படித்து முடித்தேன். அதே ஆண்டு திருத்துறைப்பூண்டியில் தலைமையாசிரியராக இருந்த அன்னை எமிலியானாவைச் சந்தித்து, அருட்சகோதரியாவதற்கு வழிமுறைக் கேட்டேன். அவர்கள் என்னை மயிலாப்பூருக்கு உடனடியாக அனுப்பி வைத்தார்கள்.

துறவு பயிற்சி வாழ்வில் கால்பதித்த நாள் முதல் என்னை அன்போடும், கரிசனையோடும், இறைப்பற்றோடும் வளர்த்தெடுத்து பயிற்சி கொடுத்தவர்கள் அன்னை தமியான், அன்னை ஜான் டி பிரிட்டோ இவர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

1975 -இல் எனது ஆசிரியப் பணியைத் தொடங்கினேன். **அஞ்சாதே! நான் உன்னுடன் இருக்கிறேன். கலங்காதே! நான் உன் கடவுள்!** என்ற இறைவார்த்தையை சிரமேற்கொண்டு இல்லத்தலைமைச் சகோதரியாக, தலைமை ஆசிரியராக பணியாற்றியுள்ளேன்.

ஆசிரியராக 35 ஆண்டுகள் பணி செய்திருக்கிறேன். பத்தூர் மேற்கரையில் நான் தலைமை ஆசிரியராக பணி செய்தபோது, வெளிநாட்டு உதவி பெற்று, நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடத்தைக் கட்டுவித்தேன். மேலும் மிக்கேல்பட்டி மடம் இல்லத் தலைமைச் சகோதரியாக இருந்தபோது, மிக்கேல்பட்டி மடம் மிகவும் பலுதடைந்த நிலையில் இருந்ததால், அப்பொழுது தலைமை அன்னையாக இருந்த ஜான் டி பிரிட்டோ அவர்களிடம் கூறி, அந்த இடத்திலும் புதிய கட்டிடம் கட்டுவித்தேன்.

இவ்வாறு சபையில் எனக்குக் கொடுத்தப் பணிகளையும், தலத்திருச்சபையில் எனக்குக் கொடுத்த பணிகளையும் நான் சிறப்புடன் செய்ய ஆண்டவர் உடனிருந்து வழிநடத்தியிருக்கிறார் என்பதை நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

எனது 50 ஆண்டு கால துறவு வாழ்வில் என்னுடன் வாழ்ந்த அருட்சகோதரிகள் அனைவருக்கும் நன்றி! அனைத்து சபைத் தலைமை அன்னையர்களுக்கும், மாநிலத் தலைமை அன்னையர்களுக்கும் நன்றி! இனியும் என் வாழ்வில் எனைக் காக்கும் இறைவனுக்கும் நன்றி!!!

**சகோ. பாத்திமா மேரி (624).**

# அடைக்கல அன்னை அவையும் நானும்



"ஆண்டவர் நன்மையானதைத் தருவார்" (தி.பா 5:12).

**என் அழைத்தல்:**

கடவுள் என்னைத் தாய் வயிற்றில் இருந்தபோதே தேர்ந்தெடுத்தார். என் தாய் வயிற்றிலிருந்து வெளியில் வரும்போது சாகும் நிலையில் இருந்ததால் என் தாய் செபித்தார்களாம் "அம்மா அடைக்கலத் தாயே! என் குழந்தையைக் காணிக்கையாகக் கொடுத்துவிடுகிறேன் உயிர் கொடுங்கள் அம்மா" என்று. அவர்களின் செபத்தினால் நான் உயிர் பிழைத்து, இறுதியாக நான் அடைக்கல அன்னை சபைக்கே வந்துவிட்டேன். என் அழைத்தலுக்கு முதல் கருவி என் அம்மா.

என் ஊர்ப் பெண் புஷ்பா பல்லாவரத்தில் படித்ததால் அதனிடம் அடைக்கல அன்னை சபை விலாசம் கேட்டு அன்னை டொமிட்டில்லா அவர்களுக்கு எழுதி போட்டவுடன் பதில் வந்தது. உடனே வந்து சேர்ந்து கொண்டேன். புஷ்பா என்ற பெண் எனது அழைத்தலுக்கு இரண்டாவது கருவி.

**நான் துறவற உடை அணிந்த பின் சபையில் எனக்குக் கொடுக்கப்பட்ட பணிகள்:**

❖ **அறந்தாங்கி:** அறந்தாங்கியில் L.K.G முதல் 2-வது வகுப்பு வரை ஆங்கில வகுப்பு இருந்தது. அதில் நான் L.K.G, U.K.G க்கு வகுப்பு எடுத்தேன். எழுத. படிக்க, பேச கற்றுக்கொடுத்தேன். பின் மடத்தில் உள்ள பொது வேலைகளையும் மகிழ்ச்சியுடன் செய்தேன். ஞாயிறுதோறும் குரும்பூர் என்ற இடத்திற்கு சென்று பிள்ளைகளுக்கு மறைக்கல்வி எடுத்தேன்.

❖ **வேளாங்கண்ணி:** இங்கே கடவுளுடைய வேலையாகிய ஒஸ்தி சுட்டேன். பெரியவர்கள் வெளிவேலைக்கு கூப்பிடும்போது சந்தோசமாக சென்று செய்தேன். பாடல் கற்றுக் கொண்டு பூசைக்கு பாட்டு பாடச் செல்வேன். பாட்டுக்கு என்னை ஊக்குவித்தவர்கள் சகோ. பயஸ் அவர்கள் அவர்களுக்கு நன்றி. அன்னையின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்கிறேன்.

❖ **மள்ளவாரிபாளையம்:** இங்கு பக்கத்தில் உள்ள கிராமங்களாகிய ஆரர், ராமச்சந்திரப்புரம், பாளசுப்பிரமணிபுரம் ஆகிய இடங்களில் சென்று வீடு சந்தித்து, பிள்ளைகளை ஒரே இடத்தில் கூட்டி சேர்த்து பாடம், பாட்டு, சிறுசேமிப்பு எப்படி சேமிப்பது என்று சொல்லிக் கொடுத்தேன்.

❖ **பெருபண்ணையூர்:** இங்கு பெண்கள், ஆண்கள் இருபாலருக்கும் முதியோர் இல்லம் உண்டு. அவர்களுக்கு காலை, மதியம், மாலை, இரவு நேரங்களில் சாப்பாடு, காபி,

சிற்றுண்டி கொடுப்பது, தேவையான பொருட்களாகிய எண்ணெய், சோப்பு, சீயக்காய், விழா காலங்களில் துணிகள் எடுத்து கொடுப்பது போன்ற வேலைகளைச் செய்தேன்.

❖ **மயிலாப்பூர்:** இங்கு பால்வாடி Training படிக்கும்போது இருந்த அன்னை எத்தல்வீனா, பால்வாடி படிக்க ஊக்குவித்தவர்கள் அனனை வெர்ஜினியா. சகோ. காசியான் இவர்கள் இறந்திருந்தாலும் அவர்களின் ஆன்ம சாந்திக்காக செபிக்கிறேன்.

❖ **ராஜாவூர்:** இங்கே இல்லத்தில் பொறுப்பாளர் வேலை. பால்வாடிப் பிள்ளைகள் 50 பேரையும் படிக்க வைக்கும் வேலை. காலை 9 மணியிலிருந்து மதியம் 1 மணிவரை பிள்ளைகளுக்கு முதலில் சுத்தம், அதன்பின் பாடம், பாட்டு, விளையாட்டு, எழுத்து கற்றுக் கொடுத்தல், படிக்கக் கற்றுக் கொடுத்தல் போன்ற வேலைகளைச் செய்தேன். ஞாயிறுதோறும் திருப்பலி முடிந்து பெரிய பிள்ளைகளுக்கு மறைக்கல்வி, புதுநன்மை எடுக்கும் பிள்ளைகள், உறுதிப்பூசுதல் எடுக்கும் பிள்ளைகளுக்கு நற்செய்தி வாசித்து விளக்கம் அளித்தல், சின்னக் குறிப்பிடம் படிக்க சொல்லி கேள்வி கேட்பது போன்ற வேலைகளைச் செய்தேன். இறைவனுக்கு நன்றி!.

❖ **இருதயபுரம்:** இங்கே கருணைக் குடில் இல்லம் உண்டு. இதை சகோதரிகள் பார்த்துக் கொண்டாலும் நான் மார்க்கெட் சென்று பிள்ளைகளுக்கு வேண்டிய பொருள்கள் வாங்கிக் கொண்டு வருவேன். உதவி செய்வேன்.

❖ **வடமாநிலம்:** வடமாநிலத்திற்குப் போகும்போது என்னை ஊக்குவித்தவர்கள் அப்பொழுது பெரிய தாயாராக இருந்தவர்கள் அம்மா ஜான் டி பிரிட்டோ அவர்கள். என்னை அனுப்பும்போது, ‘எப்படி அம்மா எனக்கு இந்தி தெரியும்?’ என்றபோது உன்னால் முடியும். நீங்கள் கற்றுக்கொள்வீர்கள் என்றதும் எனக்கு தைரியம் வந்தது. மகிழ்ச்சியோடு சென்று நன்றாக எழுத, பேச, படிக்கக் கற்றுக்கொண்டேன். வடமாநிலத்தில் ஹில்சா, பெகுசராய், பட்னா போன்ற இடங்களில் பணிசெய்தேன். கடைசியில் இப்பொழுது பெரிய தாயாராக இருக்கும் அன்னை மரிய பிலோமி அவர்கள் என்னை மான்சிக்கு அனுப்பினார்கள். மான்சியில் தையல் வகுப்புகள் உள்ளன. அந்தப் பிள்ளைகள் கேட்கும் பொருள்களை வாங்கிக் கொடுத்து பார்த்துக் கொண்டேன்.

❖ **மிக்கேல் பாளையம்:** இங்கே வீடு சந்தித்தல், வீட்டில் வியாதியாக இருந்து கோவிலுக்கு வரமுடியாதவர்களுக்கு நன்மை கொண்டுபோய் கொடுப்பது, கோவில் முறை செய்வது, மாலை தினமும் கோவிலில் பிள்ளைகளுடன் சேர்ந்து பூசைக்கு முன் செபமாலை சொல்வது போன்ற பணிகளைச் செய்தேன்.

❖ **தமிழ்ப்பண்ணை:** இங்கே கோம்பையான்படி பங்கில் ஞாயிறு தோறும் மறைக்கல்வி எடுத்தேன். கோவில் பணி, அச்சகத்திற்கு சென்று பேப்பர் மடிப்பது, தையல் தைப்பவர்களுக்கு உதவிகள் செய்வது போன்றவை செய்தேன்.

❖ **சபை எனக்கு செய்த உதவி:** ஒரு ஏழை பெண், எனக்குத் தெரிந்த பெண், காலேஜ் படிக்க வசதி இல்லை என்று சொன்னபோது, அடைக்கலா உதவி

கல்வித் தொகைக்கு எழுதிப் போட்டவுடன் உதவி செய்தார்கள். வாழ்நாள் முழுவதும் நன்றி சொல்ல கடைமைப்பட்டுள்ளேன். என் தம்பிக்கு சுகமில்லை என்று சொன்னவுடன் மதர் ஜான் டி பிரிட்டோ அவர்கள் சபையிலிருந்து பண உதவி செய்தார்கள். அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி! அவர்கள் ஆன்மா சாந்தி அடைய செபிக்கிறேன்.

- **முடிச்சூர்:** இங்கு தியானம் செய்ய வசதியாக 20 அறைகள் உள்ளன. இங்கு சகோதரர்கள், மற்ற சபையினர், பொதுமக்கள் தியானம் செய்ய வரும்போது அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்து அமைதியாக தியானம் செய்ய சகோதரிகளோடு இணைந்து உதவினேன். பின்னர் நம் கோவிலில் 9 மணி முதல் 1 மணி வரை நற்கருணை எடுத்துவைத்து ஆராதனை செய்வோம். பொதுமக்களும் கலந்து கொள்வார்கள். கடவுளுக்கு நன்றி!
- **மல்லிகாபுரம்:** இங்கே தையல் மிஷின் உண்டு. பெண்கள் கற்றுக்கொள்ள வசதியான இடம், ஆனால் பண வசதி இல்லை. மத்திய அரசாங்கத்திடமிருந்து வருடத்திற்கு ஒருமுறை உதவி உண்டு. ஒரு பெண் ஆசிரியர் கற்றுக் கொடுப்பார்கள். பின் 6 மாதத்திற்கு ஒருமுறை படித்து முடித்தவுடன் Certificate கொடுப்போம். இதிலிருந்து மிஷின் வாங்கி தங்கள் வாழ்க்கையில் முன்னேறுகிறார்கள். பின் கோவில் பணி, அன்பிய கூட்டம் சகோதரிகளோடு இணைந்து செய்தேன்.
- **போரூர்:** சமூகச் சேவை செய்யும் இடம். வீடுகள் சந்திப்பது, கோவில் முறை, ஆஸ்பத்திரி பணிகள். இந்த இடத்தில் ஏழை பெண்கள் உண்டு. இந்த கிராமத்தில் உள்ள பெண்களை எப்படி முன்னேற்றலாம் என்று நினைத்து அப்போதைய சபைத் தலைமை அன்னை பாத்திமா ராணி மற்றும் மாநிலத் தலைமைச் சகோதரி ஜெயசீலி இவர்களின் அனுமதியுடன் எம்பிராய்டரிங் வேலை தொடங்கலாம் என்று நினைத்து ஆனந்த் என்பவரின் உதவி, வீடு வீடாகச் சென்று பிள்ளைகளைக் கண்டுபிடித்து 90 பிள்ளைகளைச் சேர்த்து வேலையைத் தொடங்கி பிள்ளைகளுக்கு வாழ்வு கொடுத்தோம். இந்த ஆனந்த் என்பவர் பிள்ளைகளுக்கும், டீச்சருக்கும், நம் இல்லத்தின் இடத்திற்கு வாடகைக் கொடுத்தும் எங்களை முன்னேற்றினார். நாங்களும் பிள்ளைகளுக்கு வாழ்வு கொடுத்தோம். மிக்க மகிழ்ச்சி!

தொடக்கத்திலிருந்து என்னை நம் அடைக்கல அன்னை சபையில் எல்லாவற்றிலும் ஊக்குவித்த முன்னாள் சபைத் தலைமை அன்னையர்களுக்கும், இப்பொழுதுள்ள சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி அவர்களுக்கும், மாநிலத் தலைமைச் சகோதரிகளுக்கும், வட்டாரத் தலைமைச் சகோதரி அவர்களுக்கும் எனக்கு இல்லத் தலைவிகளாக இருந்த அன்னையர்களுக்கும் என் உயிர் உள்ளவரை என் செபத்தில் நினைவு கூர்ந்து செபிப்பதோடு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உண்மையுள்ள,**

**சகோ. மரிய செல்வம் (626).**

# அடைக்கல அன்னை அவையும் நானும்

"உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன்: எனவே பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்" (எரே 33:3).



தந்தையாய் தாயாய் தனைத் தந்தான்...
அனைத்துமாய் என் வாழ்வில் உள் வந்தான்...
தகுதியைப் பாராமல் எனை அழைத்தான்...
தன் அரசின் பணிக்காய் என்னைக் குறித்தான்...

**அழைத்தல் வாழ்வில்:**

சிங்காரச் சென்னையில் உள்ள புதுக்கோட்டையில் திரு. மகிமைரெத்தினம் திருமதி. ஞான ரெத்தினம் அவர்களுக்கு 6 பெண் பிள்ளைகளின் மத்தியில் ஐந்தாவது மகளாக நான் பிறந்தேன். அன்னை அகஸ்டின் அவர்கள் வழியாக அடைக்கல அன்னை சபைக்கு அழைக்கப்பட்டு, சகோ. மேரி பீஸ் அவர்களின் கண்காணிப்பில் வளர்ந்தேன். தையல் பயிற்சி முடித்து நேர்த்தியாக தையல் கலையைக் கற்றுக்கொண்டேன். அதன்பின் துறவறத்தில் நான் சேர்ந்து அன்னை பெந்தகோஸ்த் மூலம் பக்தி, ஒழுக்கம், இவற்றில் பயிற்றுவிக்கப்பட்டு, தொடர்ந்து புகுமுகத்துறவு நிலையில் அம்மா மேரி தமியான், அம்மா ஜான் டி பிரிட்டோ இவர்கள் மூலம் நான் துறவறம் எனும் நந்தவனத்தில் ஊன்றப்பட்டு அர்ப்பண வாழ்வில் மகிழ்ந்தேன்.

**பணி வாழ்வில்:**

மைலாப்பூரில் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் தையல் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினேன். திருத்துறைப்பூண்டி, திண்டுக்கல், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, சின்னமலை, சாந்தா பாத்திமா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, அரக்கோணம், ஆகிய இடங்களில் 32 வருடங்கள் சிறப்பாகப் பணியாற்றினேன். மாணவிகளுக்கு மறைகல்வி வகுப்புகள் எடுத்தேன். மறைமாவட்ட அளவில் பரிசுகள் பெற்று பள்ளிக்கு பெருமைச் சேர்த்தேன்.

**என் வாழ்வில் தனிவரம்:**

பள்ளியில் பணி முடிவுற்றதும் சமூக சேவை பள்ளியில் என்னை ஈடுபடுத்தினேன். பெங்களூரில் விவேக் நகரில் உள்ள குழந்தை இயேசு திருத்தலத்தில் பணிசெய்தது மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. கோவிலானூரில் மூன்று ஆண்டுகள் இல்லத் தலைவியாக இருந்தபோது மக்களைச் சந்திப்பது, ஏழை மக்களுக்கு வசதி படைத்தோரிடம் இருந்து உதவிபெற்றுத் தருவது, அன்பியம் செல்வது போன்ற தனிவரப் பணியைச் செய்தேன். மல்லிகாபுரத்தில் (7 ஆண்டுகள்) இருந்தபோது பங்கு ஆலயப் பணி, பக்த சபைகளை வழிநடத்துதல், நோயாளிகளுக்கு திவ்விய நற்கருணை வழங்குதல், வீடுகளைச் சந்தித்தல், தவறு செய்யும் பெண் பிள்ளைகளைக் கண்டித்து

நல்லொழுங்குப்படுத்துதல் போன்ற பணிகளை அடைக்கல அன்னை சபையில் இருந்ததால் அன்னையின் துணையுடன் இறைவனை மகிமைப்படுத்த முடிந்தது.

**நன்றிகள் பல...**

12.07.2020 நான் உடல் நலமின்றி மிகவும் துன்புற்றபோது சபைத் தலைமை அன்னை செபத்தாலும் உதவியாலும் அன்புக்கரம் கொடுத்ததற்கும் மாநிலத் தலைமைச் சகோதரி ஜூலியட் ஆதரவு தந்ததற்கும், இறைவன் உயிர் பிச்சை தந்ததற்கும் நன்றிக் கரம் கூப்புகின்றேன். என்றும் வாழ்வில் இவர்களுக்காக செபிக்கின்றேன். நோயுற்று இருந்த போது செபித்த சகோதரிகள் அனைவருக்கும் நன்றி!

**"நீங்களே என் மகிழ்ச்சி நீங்களே என் வெற்றி வாகை"** (பிலி 4:1). அன்புக்குரியவர்களே! ஆண்டவரோடு உள்ள உறவில் நிலைத்திருங்கள். இறைவனின் உறவில் நிலைத்திருந்து ஆழப்பட தொடர்ந்து செபிக்க வேண்டுகிறேன். நன்றி! நன்றி!! இறைவா நன்றி!!!

**"எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்"** (1தெச 5:16) என்ற இறை வார்த்தைக்கேற்ப என வாழ்நாளெல்லாம் இறைவனின் அருள்நலமும் பேரன்பும் என்னைப் புடை சூழ்ந்து, என் துறவு வாழ்வில் 50 ஆண்டுகள் என்னைப் பாதுகாத்து வழிநடத்திய இறைவனுக்கு நன்றி!

**"என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவள். மதிப்புமிக்கவள்: நான் உன்மேல் அன்பு கூறுகிறேன்"** (எசா.43:4) என்ற இறைவாக்கிற்கு ஏற்ப எனக்கு உயிர் கொடுத்த கடவுளுக்கும், என் பெற்றோருக்கும், உருகொடுத்த அன்பு அன்னையர்களுக்கும் மனதார நன்றி கூறுகின்றேன்.

நன்றி!

**சகோ. நம்பிக்கை மேரி (628).**



## "எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள், இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்; எல்லா சூழ்நிலைகளிலும் நன்றி கூறுங்கள்" (1தெச 5: 16-18)



சகோதரியின் பெயர் : **சகோ. யு. அமல ராணி**
சபை எண் : 1105
பிறந்த மண் : கல்பட்டு
பங்குத்தளம : கல்பட்டு
மறைமாவட்டம் : புதுவை - கடலூர் உயர் மறைமாவட்டம்
தந்தை பெயர் : திரு. S.M. அகஸ்டின் (விண்ணில்)
தாய் பெயர் : திருமதி A. மேரி
உடன் பிறந்தோர் : சகோதரர்கள் - 2, சகோதரிகள் - 2
முதல் அர்ப்பணம் : 08.05.1998
நிரந்தர அர்ப்பணம் : 09.05.2007
வெள்ளி விழா : 04.05.2023

**பூமியில் என் சொர்க்கம்:**

**"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை" (தி.பா 23:1)**

பிரபஞ்சத்தைப் பிரமாண்டமாய் உருவாக்கி, அழகாய் அதனைப் படைத்தவனுக்கு என் சிரம் தாழ்த்தி நன்றி நவில்கின்றேன். இதில் என்னையும் ஒரு உயிராய் உருவாக்கியதற்கு கோடி நன்றிகள். என் வாழ்க்கையை சற்று பின்னோக்கிப் பார்க்கும் போது அப்பப்பா. எத்தனை அற்புதங்கள், எத்தனை அதிசயங்கள் மேலும் கணக்கிட முடியாக ஆசீர்வாதங்கள். எண்ணிப் பார்க்கையில் மகிழ்ச்சியில் மனம் துள்ளுகின்றது. நன்றியில், ஆனந்தத்தில் துளி நீர் கண்ணோரத்தில் வடிகின்றது. படைத்தவனே நன்றிகள்!!!....

**பிறந்த மண்ணில் உறவுகளோடு:**

நான் இம்மண்ணகத்தில் பிறக்க இறைவன் தேர்ந்தெடுத்த ஊர்... ஓங்கி உயர்ந்த மரங்களும், மலைகளும் சூழ்ந்தது. மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்து, தவம் பல புரிந்து, அண்டி வந்தோருக்கு அற்புதங்கள் பல புரியும் புனித வனத்து சின்னப்பர் வாசம் செய்யும் கல்பட்டு. இங்கு இறைவனில் அசைக்க முடியாத ஆழ்ந்த இறைபக்தி, விசுவாசம், நம்பிக்கை இவற்றில் ஊன்றி, **"அவனின்றி அணுவும் அசையாது"** என்ற நம்பிக்கையுடன் அன்பு, பாசம், தெய்வபயம், மற்றவர்களுக்கு உதவுதல், அனைவரையும் அரவணைத்தல் போன்ற நற்பண்புகளைத் தன்னகத்தே கொண்டு, மற்றவர்களையும் வாழ வைப்பவர்கள்தான் என் அன்பு பெற்றோர் திரு. S.M. அகஸ்டின் (விண்ணில்), திருமதி. யு. மேரி அவர்கள்.

**இறைக்கரத்திற்குள்:**

**"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்குமுன்னே அறிந்திருந்தேன்.**

நீ பிறக்குமுன்னே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்'' (எரே1:5).

எனது பெற்றோருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டது. பின் 5 வருடம் குழந்தை பாக்கியம் இல்லாமல் தவித்தனர். இப்படிப்பட்ட கடின சூழ்நிலைக்கூட அவர்களின் பக்தியைக் குறைக்கவில்லை. அன்னைமரி மீது அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டு வேண்டிக்கொண்டனர். பிச்சை எடுத்து வேளாங்கண்ணி சென்று நேர்த்திக் கடன் செய்வதாகவும், பிறக்கும் முதல் குழந்தையை கடவுளுக்கே அர்ப்பணிப்பதாகவும் வேண்டிக்கொண்டனர். இவ்வாறாக இறைவனே பிறக்கச்செய்து அவரின் சிறப்பு அழைத்தலைப் பெற்றேன்.

**ஆன்மீகப் பயிற்சியில்:**

ஆழ்ந்த இறைபக்தி கொண்ட எனது பெற்றோர் தினமும் காலை திருப்பலி, மாலை செபமாலை என்று அனைத்து பக்தி வழிபாட்டிற்கும் என்னைக் கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள். மறுபடியும் இரவு உணவுக்கு முன் அனைவரும் இணைந்து குடும்ப செபமாலை செபிப்பது வழக்கம். காலை 4 மணிக்கு மண்டியிட்டு செபிப்பதும், மாலை 3 மணி செபம் செய்வதும் எனது பெற்றோரின் வழக்கம். இவர்களின் ஆழ்ந்த பக்தியும், பக்தி முயற்சிகளும்தான் நான் ஒரு துறவி ஆகக் காரணம். எந்த விதத்திலும் தகுதியற்ற என்னை இறைவன் அழைத்தார்.

''தகுதியானதால் அழைக்கவில்லை, அழைத்ததால் தகுதி பெற்றேன்''

எனது தாயும், தந்தையும் இறைவனால் எனக்குக் கொடுக்கப்பட்ட கொடை, ஆசீர்வாதம். கடவுளிடமிருந்து எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுத் தருபவர்கள். தனது இன்பங்களைப் பிள்ளைகளுக்காக தியாகம் செய்பவர்கள். நாங்கள் கண்களால் பார்க்கும் தெய்வங்கள். எனது பெற்றோரால் எனக்குப் போடப்பட்ட அடித்தளம்தான். இன்றுவரை நான் உறுதியாக வாழ, நிலைத்திருக்கக் காரணமாய் இருக்கிறது.

பல வண்ணப் பூக்கள் மலர்ந்து சிரிக்கும் தோட்டம் போன்று அன்பும், பாசமும், சிரிப்பொலியும், துள்ளளுமாய் எனது சகோதரர்கள், சகோதரிகளுடன், இறைபக்தியிலும், ஞானத்திலும் வளர்ந்தேன். வளர்க்கப்பட்டேன். எனது அண்ணன் சேவியர் அவர்களின் அளவில்லாத அன்பும், வழிகாட்டுதலும், எனது தங்கைகள் சோனா, புனிதா, தம்பி ராஜா இவர்களின் அளவுகடந்த பாசமும் எனது வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், பணிக்கும் இன்று வரை துணையாக இருக்கின்றது. நன்றி இயேசுவே!!.... அருமையான குடும்பத்தின் மூலம் அளவுகடந்த, கணக்கிட முடியாத ஆசீர்வாதங்களைப் பொழிந்த இறைவா நன்றி, நன்றி நன்றி...

எனக்கு ஒரே ஒரு ஆசைதான். இனி எத்தனை பிறவி எடுத்தாலும் இதே ஊரில் எனது பெற்றோருக்கு மகளாய், எனது அண்ணனுக்கு தங்கையாய், எனது தங்கைகள், தம்பிக்கு அக்காவாய் மீண்டும் பிறக்க வேண்டும்.

**அர்ப்பண வாழ்வில்:**

''அஞ்சாதே நான் உன்னை மீட்டுக் கொண்டேன்.
உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்.
நீ எனக்கு உரியவன்'' (எசா 43:1).

அழைத்தல் என்பது மிக உன்னத கொடை. அந்த கொடை எனது பெற்றோரின்

ஆழமான பக்தியால் இறைவன் எனக்குக் கொடுத்தார். நான் 5 -ஆம் வகுப்பு வரை எனது சொந்த ஊரில் இருக்கும் கிறிஸ்தவ பள்ளியில் படித்தேன். 4 -ஆம் வகுப்பு படிக்கும்போது அருட்சகோதரிகளைக் கண்டு மிகவும் வியப்படைத்திருக்கிறேன். காரணம் அவர்கள் அணியும் உடையில் அவர்கள் எனக்கு வானதூதர்களைப் போன்று தோன்றுவார்கள். நான் நினைப்பதுண்டு ‘சகோதரிகள் சாதாரண மனிதர்கள் அல்ல. இவர்கள் விண்ணில் இருந்து நேராக மண்ணில் இறங்கி வந்தவர்கள் என்று, இதனை சகோதரிகளிடமே கேட்டதும் உண்டு. அதற்கு சகோதரிகள் எங்களுக்கும் அப்பா, அம்மா, குடும்பம் உண்டு என்று கூறும்போது மிகவும் வியப்பாக இருக்கும். ‘நானும் துறவியாக முடியுமா?’. என்று கேட்பேன். அவர்கள் ‘நிச்சயம் ஆகலாம்’என்று கூறுவார்கள்.

அருட்சகோதரிகள் அணியும் உடை (அங்கி) மீது எனக்கு இருந்த ஆசை என்னை கன்னியராகத் தூண்டியது. ஆனால் இறைத்திருவுளம் வேறாக இருந்தது. உடை அல்ல முக்கியப் பணியும், வாழ்வும்தான் என்று உணர்த்தி புடவை அணியச் செய்தார் இறைவன். 6 முதல் 12 -ஆம் வகுப்பு வரை சேத்துபட்டில் உள்ள புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் படித்தேன். அருட்சகோதரியாக ஆகவேண்டும் என்ற ஆசை இருந்தாலும் Sisters - யைப் பார்த்தால் பத்தடி தள்ளியே இருப்பேன், ஆனாலும் இறைவன் என்னைத் தேர்ந்தெடுத்தார்.

**“என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவள். மதிப்பு மிக்கவள்.**
**நான் உன்மேல் அன்பு கூர்கிறேன்”** (எசா 43:4).

**அடைக்கல அன்னை சபையில்:**

இறைவன் என்மீது அன்பு கூர்ந்து அடைக்கல அன்னை சபைக்கு என்னை அழைத்தார். முற்றும் புதிய இடம், புதிய மனிதர்கள், புதியச் சூழல், சாதாரணமாகவே அதிகம் பேசாத எனக்கு இந்த சூழ்நிலை கடினமாகத்தான் இருந்தது. ஆனால் இறைவனின் அன்பும், கருணையும் என்றும் என்னுடன் இருந்து என்னைத் தேற்றி வழிநடத்தியது.

**“அஞ்சாதே நான் உன்னுடன் இருக்கிறேன். கலங்காதே நான் உன் கடவுள்.**
**நான் உனக்கு வலிமை அளிப்பேன். உதவி செய்வேன்.**
**என் நீதியின் வலக்கரம் உன்னைத் தாங்கும்”** (எசா 41:10).

அருட்சகோதரியான முதல் வருடமே புதுக்கோட்டை மார்த்தாண்டபுரம் அனுப்பப்பட்டேன். ‘கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல்’ உணர்ந்தேன். குழுமத்தில் மொத்தம் 8 சகோதரிகள் மற்ற 7 பேருமே மூத்த சகோதரிகள். எப்படி இங்கு வாழப்போகிறேன் என்ற பதட்டம் மனதில் இருந்தது. பல பணிகள் கொடுக்கப்பட்டன. பல நாட்கள் இறை சன்னிதானத்தில் பல மணி நேரம் அமர்ந்து அழுதிருக்கின்றேன். **‘அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன்’** என்று கூறிய இறைவன் எனக்கு பக்கபலமாக இருந்து என்னை முற்றிலும் பாதுகாத்து வழிநடத்துகின்றார் என்பதை நான் ஆழமாக உணர்ந்தேன். எல்லா இடத்திலும், எல்லாவிதமான சூழ்நிலைகளிலும் இறைகரம் மற்றவர்கள் வழியாக என் உடன் இருந்து எனக்கு உதவியதை முழுமையாக அனுபவித்து உணர்ந்தேன். அங்கு இருந்த ஒரு வருடத்தில் நான் பலவற்றில் வளர்ந்தேன், முதிர்ச்சி அடைந்தேன், முழுமையாக என்னையே புடமிட்டுக் கொண்டேன், நிறைய கற்றுக்கொண்டேன் என்பதைத் தொடர்ந்துவந்த காலங்களில் நான் உணர்ந்தேன்.

உமது உடனிருப்பிற்கு நன்றி இயேசுவே....

**வடமாநிலத்தில் என் பணி:**

"எனக்கு வலுவூட்டுகின்றவரின் துணைக்கொண்டு
எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" (பிலி 4:13).

புதிய மாநிலம், புதிய மக்கள், கலாச்சாரம், பண்பாடு, சூழ்நிலை, பழக்க வழக்கங்கள், உணவு, போக்குவரத்து அனைத்துமே மிகக் கடினமாக இருந்தது. குளிர், வெயில் இரண்டுமே உச்சநிலை. படிப்பறிவு அதிகம் இல்லாத எளிமையான, ஏழை மக்கள் என அனைத்துமே வித்தியாசமாக இருந்தாலும், என் இறைவன் என் உடன் இருந்தார். எனவே அவரோடு, அவருக்காக என்னால் இங்கு பணி செய்ய முடிந்தது.

வடமாநிலத்தில் சபையின் தனிவரம் முழுமையாக வாழ்வாக்கப்படுவதை எண்ணி மனதுக்கு மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கின்றது. எனது எல்லாவிதமான சூழ்நிலையிலும், பணியிலும் **"அஞ்சாதே நான் உன்னோடு இருக்கின்றேன்"** என்று இறைவன் கூறுவதை உணர்கின்றேன். நான் பாட்னாவில் தாதியர் (Nursing Course) பயிற்சி முடித்தேன். எளிமையான, ஏழை மக்களாக இருந்தாலும் பாசத்தோடு பழகக் கூடியவர்கள். அவர்கள் மத்தியில் பணிசெய்ய இறைவன் கொடுத்த வாய்ப்புக்கு நன்றி.

**நன்றியில் நனைகின்றேன்:**

சபையின் வழியாக இறைவன் செய்த எல்லாவிதமான நன்மைகளுக்காகவும், இறைவனுக்கு கோடி நன்றிகளை சமர்ப்பின்றேன். இறைசித்தப்படி எனது தனிவாழ்வு, பணிவாழ்வு, செபவாழ்வு மற்றும் குழும வாழ்வில் சிறப்பாக வளர, சிறப்பாக பணி ஆற்ற பலவிதங்களில் பக்கபலமாக, உறுதுணையாக இருந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள்.

அன்பு இயேசுவே! உமது கருணைக்கும், அன்புக்கும், இரக்கத்திற்கும், ஆசீர்வாதங்களுக்கும், அற்புதங்களுக்கும் நன்றியாக இப்பாடல் வரிகளை சமர்ப்பிக்கின்றேன்.

**"ஒன்றுமில்லாமலே நின்ற என்னை கைபிடித்து நடத்தும் பேரன்பு
எந்தன் பெரும் குறைகள் கண்ட பின்னும் நெஞ்சோடு சேர்க்கும் பேரன்பு
இந்த நல்ல தெய்வத்துக்கு நான் என்ன சொல்லி நன்றி சொல்லுவேன்
எந்தன் அற்ப ஜீவியத்தை நான் உந்தன் முன்னே சமர்ப்பிக்கின்றேன்."**



# ''என் உள்ளங்கையில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்'' (எசா 49:15).



சகோதரியின் பெயர் : **சகோ. A. அமலோற்பவம்**
சபை எண் : 1106
பிறந்த மண் : மேட்டூர் ஆளிப்பட்டி
பங்குத்தளம் : கே. உடையாபட்டி
மறைமாநிலம் : திருச்சி
தந்தை பெயர் : திரு. சி. அருளானந்து
தாய் பெயர் : திருமதி. அ. அன்னம்மாள்
உடன் பிறந்தோர் : சகோதரர்கள் - 4, சகோதரிகள் - 2
முதல் அர்ப்பணம் : 08.05.1998
நிரந்தர அர்ப்பணம் : 07.05.2004
வெள்ளி விழா : 04.05.2023

**பிறப்பும் அழைப்பும்:**

இறைவனின் அருளால் திரு. அருளானந்து, திருமதி. அன்னம்மாள் தம்பதியினரின் ஏழாவது மகளாக மணப்பாறை வட்டம் மேட்டூர் ஆளிப்பட்டி என்ற பசுமையான சிறிய கிராமத்தில் பிறக்க இறைவன் திருவுளம் கொண்டார். 1 முதல் 8 -ஆம் வகுப்பு வரை அருகில் உள்ள கிறிஸ்தவ பள்ளியில் பயின்றேன். 9 முதல் 10 -ஆம் வகுப்பு வரை மணப்பாறையில் புனித வியாகுல அன்னை சபை கன்னியர்கள் நடத்தும் பள்ளியில் பயின்றேன். அதன்பின் புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் என்ற ஊரில் திருச்சி, புனித அன்னாள் சபை கன்னியர்களால் நடத்தப்படும் தொழிற்கல்வியில் (I.T.I) சேர்ந்து 2 ஆண்டுகள் பயிலும்போது எனக்குள் இறையழைத்தல் என்ற கரு உருவாக ஒரு தூண்டுதல் ஏற்பட்டது. திருச்சி அன்னாள் சபையில் சேருவதற்காக என்னுடைய முகவரியைக் கொடுத்திருந்தேன். எனது 3 -வது அண்ணன் மூலம் நமது சபையின் வளர்ப்பு மகள் திருமதி. காணிக்கை மேரி அவர்களை எங்கள் வீட்டின் மருமகளாக ஏற்றுக்கொண்டோம். இவர்களின் திருமணத்தினால் ஆண்டவர் என்னை புனித அடைக்கல அன்னை சபைக்கு தேர்ந்தெடுத்துக் கொண்டார். இவ்வாறு, எனது அண்ணியின் வழியாக நானும் எனது குடும்பத்தாரும் அவர்களின் செபத்தாலும், தவத்தாலும், ஒறுத்தல் முயற்சிகளினாலும் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். அதற்காக இறைவனுக்கு நன்றிகரம் குவிக்கின்றேன்.

**பக்குவமும் பயணமும்:**

நான் தம்புச்செட்டி பாளையம் சென்றவுடன் என் தாயை விட்டு முதன் முறையாக பிரிந்து வந்தது எனக்குள் ஒருவிதமான பயமாக இருந்தது. சகோ. எட்மண்ட் (விண்ணில்), சகோ. N. M. கிளாரா இவர்களை நினைத்து நான் நன்றி கூறுகின்றேன். ஒன்றுமே அறியாத

நான் இவர்களிடம் இருந்து அதிகமானவற்றைக் கற்றுத் தெரிந்துகொண்டேன். தலை முழுக்க அறிவோ, கை நிறைய பணமோ, வாய் நிறைய பேச்சோ தேவை இல்லை. இதயம் முழுக்க இறை அன்பு ஒன்றே போதும் என்ற மன பக்குவத்தோடு 1998 -ல் முதல் வார்த்தைப்பாடு கொடுத்தேன். திருத்துறைப்பூண்டியில் உள்ள புனித தெரசாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11 மற்றும் 12 -ஆம் வகுப்புகளை அருட்சகோதரியான பின் சக மாணவிகளோடு இணைந்து பள்ளியில் பயின்ற அனுபவம் மறக்க இயலாதது. மேலும் குழுமச் சகோதரிகள் மூலம் நல்லவைகளை நான் கற்றுக்கொள்ள துணைபுரிந்த இறைவனுக்கு என் நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

**என்னை செதுக்கிய அனுபவம்:**

எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள், இன்னல்கள், இடையூறுகள், கஷ்டங்கள், மகிழ்ச்சி, துக்கம் இவைகள் நேரிடும்போது எனக்குத் துணையாகவும், ஆறுதலாகவும் இருந்தது.

**“அஞ்சாதே நான் உன்னை மீட்டுக் கொண்டேன்.**
**உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்”** (எசா 43:1).

என்ற இறை வார்த்தையின் வழியாகவும், பல மூத்த சகோதரிகளின் வழியாகவும் நான் பெற்ற பல அனுபவங்களின் வழியாக என்னை வளர்ச்சியடையச் செய்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். மொழி தெரியாத இடத்திற்கு என் பணி தேவை என்று என்னை அனுப்பியபொழுது தெலுங்கு கற்றுக்கொண்டு எட்டு ஆண்டுகள் எனக்கென்று கொடுக்கப்பட்ட பணியினை மதனப்பள்ளியில் சிறப்பாகச் செய்தேன். அங்கு இறுதியில் எனக்கு உடல் சுகம் இல்லாமல் நான் பிழைத்தது மறுபிறவி என்று சொல்லுமளவிற்கு மோசமான உடல்நலக் குறைவில் இருந்தபோது, அங்கு எனது குழுமச் சகோதரிகள், குறிப்பாக சகோ. லூர்து ரோமி மற்றும் சகோ. ஆரோக்கிய மேரி இவர்களுக்கு எனது நன்றிக்கரம் குவிக்கின்றேன்.

**குழந்தாய், நீ நோயுற்றிருக்கும் போது கவலையின்றி இராதே**
**ஆண்டவரிடம் மன்றாடு, அவர் உனக்கு நலம் அருள்வார்...** (சீரா 38:9).

என்ற இந்த இறைவார்த்தை, நீங்கள் சரியான பாதையில் செல்லும் போது கண்ணுக்குத் தெரியாத கைகள் உங்கள் உதவிக்கு வரும் என்று ஆண்டவர் சொல்வதைப் போன்று ஆறுதலாய் இருந்தது. நோயுற்று கவலையுற்ற பொழுதெல்லாம் ஆரோக்கிய அன்னையும், ஆண்டவர் இயேசுவும் எனக்கு சுகம் தந்து என்னைக் காத்து வருகின்றதற்காக கோடான கோடி நன்றி செலுத்துகின்றேன்.

**“நொடிப்பொழுதே நான் உன்னைக் கை விட்டேன், ஆயினும்**
**பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக்கொள்வேன்”** (எசா 54:7).

என்ற இறை வார்த்தைக்கேற்ப இறைவன் என்னைக் கைவிடாது வழிநடத்துகிறார். துன்பங்களும், தோல்விகளும் துவண்டு விழுவதற்கல்ல அவைகளால் நான் கற்றுக்கொண்ட அனுபவங்கள் ஏராளம்.

**“நன்றிக் கரம் குவித்து மகிழ்கிறேன்.**
**இதன் பொருட்டு உமக்கு நன்றி கூறுவேன்”** (சீரா 51:12).

## நன்றியின் நினைவில்:

இறைவன் செய்த அளப்பறிய நன்மைகளுக்கு நன்றியினை என் வாழ்நாள் முழுவதும் கூறிடுவேன். நன்றிகள் பல நாவினிக்கக் கூறினாலும் இறைவன் செய்த கொடைகளுக்கு நன்றிகள் போதாது.

என்னை இத்தனை ஆண்டுகள் செம்மையாய் வழிநடத்திய மூவொரு கடவுளுக்கு என் முதற்கண் நன்றி. எனக்கு உருகொடுத்த என் பெற்றோருக்கும், பாசமிகு என் உடன் பிறப்புகளுக்கும், என் உறவினர்களுக்கும் எத்தனை நன்றி சொன்னாலும் போதாது.

இரத்த உறவை விட இலட்சிய உறவே மேலானது என்பதற்கேற்ப, விழும் போது தூக்கிவிட்டு, தடுமாறும் போது வழிகாட்டிய எனது நண்பர்களுக்கும், எனக்கு ஆன்மீக ஆலோசனை வழங்கி நல்வழி நடத்திட்ட எனது ஆன்ம வழிகாட்டிகளுக்கும், உடன் வாழும் சகோதரிகளுக்கும், பயிற்சிப் பாசறையிலே என்னைப் பக்குவப்படுத்தி துறவு வாழ்விற்கு வழிகாட்டிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் என் உளம் கனிந்த நன்றிகள்.

என்னோடு வார்த்தைப்பாடு கொடுத்து என் துறவு பயணத்தில் உடன் நடக்கும் என் அன்புச் சகோதரிகளுக்கும் என் நன்றிகளை உரித்தாக்குகின்றேன். என் வாழ்வில் எல்லாமுமாய் இருக்கின்ற இறைவனுக்கு எனது முழு இதயத்தின் ஆழத்தில் இருந்து கோடான கோடி நன்றி மலர்களை காணிக்கையாக்குகின்றேன்.

**என்னை உருவாக்கிய உளிகளுக்காய்**
**என்னை உருமாற்றிய உடைத்தல்களுக்காய்**
**என்னை மெருகேற்றிய துன்பங்களுக்காய்**
**எனக்குப் பாடம் கற்றுத் தந்தவர்களுக்காய்**
**என் சவால்களைச் சந்திக்க துணைநின்ற நல் உறவுகளுக்காய்**
**என்னை விழிப்படையச் செய்த தோல்விகளுக்காய்**
**என்னை சமநிலைக்கு கொண்டு வந்த அனுபவங்களுக்காய்**
**நன்றி... இறைவா... நன்றி... என மனதார கூறுகின்றேன்.**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே!**



## “பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” (லூக் 6:31).



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : **சகோ. ஆரோக்கிய அருள் ஜோதி** |
| சபை எண் | : 1107 |
| பிறந்த மண் | : திருவடிமிதியூர் (எ) தொத்தார் கோட்டை |
| பங்குத்தளம் | : கைகாட்டி (எ) சின்னகீரமங்களம் |
| மறைமாவட்டம் | : சிவகங்கை |
| தந்தை பெயர் | : திரு. செ. மாணிக்கம் |
| தாய் பெயர் | : திருமதி. மா. சவரியம்மாள் |
| உடன் பிறந்தோர் | : சகோதரி - 1, சகோதரர் - 1 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| இறுதி அர்ப்பணம் | : 09.05.2005 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

**பிறப்பின் மேன்மை:**

மூவொரு இறைவனில் நம்பிக்கைக் கொண்டு அடைக்கல அன்னையின் பாதுகாவலில் முழு ஈடுபாடு கொண்டு தன்னுடைய சுயநலமில்லா ஆன்மீக வாழ்வால் கலங்கரை தீபமெனத் துலங்கி, விண்ணில் வாழும் அருட்பணி. லூயிஸ் லெவேல் அவர்களின் மீது மிகுந்த பக்தி கொண்டு திருவடிமிதியூர் என்னும் சிற்றூரில் பொருள் தேடி வருவோர்க்கு இருப்பதை பகிர்ந்திடும் நல்லுள்ளங்களான திருவாளர். மாணிக்கம், திருமதி. சவரியம்மாள் தம்பதியினர்க்கு மூத்த மகளாகப் பிறந்தேன். ஆண்டவரின் திருவுளத்தை நிறைவேற்ற வேண்டும் எனும் தாகத்தால், என் பெற்றோர் தங்களின் முதற்கனியான என்னை ஆன்மீக வாழ்வில் அர்த்தம் கண்டிடவும், இறைவனின் அன்பை அவனியில் பகிர்ந்திடவும் தூய அடைக்கல அன்னையின் சபையில் இணைந்து பணியாற்ற அர்ப்பணித்து மகிழ்ந்தனர்.

**எனது படிப்புப் பாசறைகள்:**

திருவடிமிதியூர் என்று அழைக்கப்படும் தொத்தார்கோட்டை என்ற சிற்றூரில் அமைந்துள்ள அரசினர் தொடக்கப் பள்ளியில் தொடக்கக் கல்வி கற்ற நான் சருகனியில் உள்ள புனித வியாகுல அன்னை அருட்சகோதரிகள் நிர்வகிக்கும் புனித சூசையப்பர் நடுநிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலும் பயின்றேன். சிவகங்கையில் உள்ள புனித காணிக்கை அன்னை அருட்சகோதரிகள் நிர்வகிக்கும் புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலும் பயின்றேன். புனித வியாகுல அன்னை, புனித காணிக்கை அன்னை அருட்சகோதரிகள் என்னை இறை அழைத்தலுக்கு ஊக்குவித்தனர். ஆயினும் எம் ஊரின் பாதுகாவலியாம் புனித அடைக்கல அன்னை தன் திருப்பெயர் கொண்ட சபைக்கு என்னை அழைத்துக் கொண்டார்.

**அழைத்தலின் அடித்தளம்:**

இறை அழைத்தல் என்னும் விதையை என்னுள் விதைத்தவர் எம் மறைமாவட்டத்தில் தன்னுடைய தியாக வாழ்வாலும், சாட்சிய வாழ்வாலும், புனித வாழ்வு வாழ்ந்த அருட்தந்தை லூயிஸ் லெவேல் அவர்கள் என்றால் அது மிகையாகாது. அவர்களின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ள **"ஓ! என் இயேசுவே அன்பின் அரசே! உமது அன்புள்ள இரக்கத்தை நான் நம்புகிறேன்"** என்ற இச்செபம் என்னை இன்றளவும் பாதுகாக்கின்றது. என்னுடன் பயின்ற மாணவிகளோடு நானும் இறை அழைத்தல் முகாமிற்குச் சென்றேன். இறைவனின் அழைப்பை உணர்ந்தேன். இன்றளவும் நல்ல அருட்சகோதரியாக மனநிறைவோடு அடைக்கல அன்னை சபையில் வாழ்ந்து வருகின்றேன்.

**பயணித்த பணித்தளங்கள்:**

1998 - 1999 ஆம் ஆண்டில் என் வாழ்வில் என்றும் பசுமையான அனுபவத்தை அளித்திட்ட பணித்தளம் என் முதல் பணித்தளமான சேலம். துன்பம் என்றால் என்னவென்றே தெரியாமல் வளர்த்தெடுத்த பணித்தளம் அது. என் வாழ்வின் இறுதி வரை மறக்க முடியாத குழுமம் அதுவென்றால் மிகையாகாது. அடைக்கல அன்னை சபையில் எனக்கு முதல் தாயாக இருந்தவர் இவ்வில்லத்தின் தலைமைச் சகோதரி மேரி பீட்டர் கிரிசோலோகுஸ் (538) அவர்கள்.

1999 - 2004 வரை அருட்சகோதரியாக கல்லூரியில் பயின்ற நாட்கள் மிகவும் சவாலான நாட்கள். முயற்சி திருவினையாக்கும் என்னும் கூற்றுக்கிணங்க முயன்று முன்னேற்றம் கண்ட நாட்கள் அது.

இதற்கிடையில் என்னுடைய முதல் கல்விப் பணி 2002 -இல் ஊட்டியில் உள்ள மழலையர் பள்ளியில் உதயமானது. என் கல்விப் பணியோடு இயற்கையின் உறைவிடமான ஊட்டியில் இறைமையில் இன்புற்றிருக்க ஆன்மீக அனுபவம் பெற்றேன். இறைவனையும் இயற்கையையும் தனிமையில் கண்டு ஆனந்தம் கொண்டேன்.

2004 முதல் 2007 வரை தச்சங்குறிச்சி எனும் சிற்றூரில் பங்குப்பணி, கல்விப்பணி மற்றும் விடுதிக் காப்பாளர் பணி என்னும் பல பணிகள் வழியாக பல்வேறு அனுபவங்களைப் பெற்றேன். **"நலிவுற்றோருக்கு நன்மை செய்" (சீராக் 12:05)** என்ற இறைவாக்கின்படி பல நன்மைகளைச் செய்ய வாய்ப்பு நல்கிய இறைவனுக்கு நன்றிப் பண் பாடுகின்றேன்.

2007 முதல் 2013 வரை ஆறு ஆண்டுகள் மன்னார்குடி புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது. எனது திறமைகளை வளர்த்துக்கொள்ள தேவையான வாய்ப்புகளும், வளங்களும், சூழ்நிலைகளும் சுதந்திரமாக என்னைச் சூழ்ந்து கொண்டன.

2013 முதல் 2019 வரை ஏழு ஆண்டுகள் பல்லாவரம் புனித தெரசாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மீண்டுமாக கல்விப்பணி தொடர்ந்தது. **"உள்ள மகிழ்ச்சியே மனிதரை வாழவைக்கிறது. அகமகிழ்வே மானிடரின் வாழ்நாளை வளரச் செய்கிறது"**

(சீராக் 30:22) என்பதற்கு ஏற்ப மிகவும் மகிழ்ச்சியாக அனைவரோடும் இணைந்து பயணித்து பணி செய்த நாட்கள் நினைவில் மலர்கின்றன.

2019 முதல் திண்டுக்கல் புனித லூர்தன்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிய கொரோனா காலத்தில் மாற்றம் பெற்றேன். மறக்க முடியாத E-Pass அனுபவங்களுடன் தொடர்கின்றன எனது கல்விப் பணி.

**குழும வாழ்வின் ஆனந்தம்:**

"அன்பு பொறுமையாகவும், இரக்கமாகவும் இருக்கிறது" (1கொரி 13:4)

ஆம், விருப்பு வெறுப்பு மறுப்பு இவையனைத்தையும் கடந்து எல்லாப் பணிகளையும் பொறுப்பாக, பொறுமையாக செய்ய வேண்டும் என்று எண்ணுவேன். பணிவாழ்வு இது பகிர்ந்து வாழக் கூடியது. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். சகோதரிகள் நம் சபையின் தனிச் சொத்து என்று மதிப்பளிப்பேன்.

"அளந்து கொடுப்பது மனித இயல்பு
அள்ளிக்கொடுப்பது இறைவனின் இயல்பு"

அன்பை அள்ளிக் கொடுப்பது எனது தனிப்பண்பு. எல்லோரிடமும் அன்பாக இருப்பது எனது இயல்பு. கூட்டுக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு கூட்டமாய் குதூகலமாய் இருப்பது பிடிக்கும். அதனால்தான் என்னவோ இறைவன் என்னைக் கூட்டுக் குழுமமாகவே வாழ வழிநடத்துகிறார். மூத்தோர்களிடமும், முதியோர்களிடமும் அன்பாக இருப்பதையும் அவர்களோடு பயணிப்பதையும் நான் நிறைவாக கருதுகிறேன். **"ஒருவன் இந்த உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அதனால் வரக்கூடிய பயனென்ன?"** என்ற இறைவார்த்தைக்குரியவர் புனித சவேரியார். நான் பணி செய்யும் இடமெல்லாம் புனித சவேரியார் எனது பாதுகாவலராக இருக்கிறார். என் அம்மாவின் பாதுகாவலரும் அவரே. அவரின் அன்பும், அரவணைப்பும் நான் எதிலும் நம்பிக்கையிழந்துவிடாமல் பயணிக்க உற்ற துணையாய் இருக்கின்றன. எனவே இறைவனுக்கு நன்றிப்பா இசைக்கின்றேன்.

**நன்றியின் மழையில்:**

"எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அனைத்தையும்
ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்"
(கொலோ 3:17).

என்னை அழைத்த இறைவனுக்கு நன்றி!
எனக்கு உருக்கொடுத்த பெற்றோருக்கு நன்றி!
என் உடன் பிறப்புகளுக்கு நன்றி!
என்னை வளர்த்த தாய் சபைக்கு நன்றி!

எனக்கு அடைக்கலம் தந்து என்னை வழிநடத்திய அன்னையர் அனைவருக்கும் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். சபையில் சேர்ந்த நாளிலிருந்து இந்நாள்வரை அனுதினமும் எனக்காக இடைவிடாது செபித்து, என்னை ஆன்மீக வழியில் வழிநடத்தி

வரும் என் அன்பு சித்தப்பா அருட்பணி ஜெயராஜ் அவர்களுக்கும், என் அன்பு சகோதரிகள் 18 பேருக்கும், நண்பர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.


Thank you Lord!

for all your blessings given to me and my congregation

for the strength you are giving me each day

and for all the people around me

who make my life more meaningful.



# “கடவுளின் சொல்லொண்ணாக் கொடைக்காக அவருக்கே நன்றி உரித்தாகுக” (2 கொரி 9:15).



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : **சகோ. அருளாயி (எ) அருள்மேரி** |
| சபை எண் | : 1108 |
| பிறந்த மண் | : ஆவுடைப்பொய்கை |
| பங்குத்தளம | : ஆவுடைப்பொய்கை |
| மறைமாவட்டம் | : சிவகங்கை |
| தந்தை பெயர் | : திரு. செங்கோல் |
| தாய் பெயர் | : திருமதி. அன்னபெனடிக்டா (எ) ஆசீர்வாதம் |
| உடன் பிறந்தோர் | : சகோதரி - 3, சகோதரர் - 1 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| இறுதி அர்ப்பணம் | : 09.05.2005 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

### பிறப்பு:

சிவகங்கை மறைமாவட்டம் கீழஆவந்திப்பட்டி எனும் அழகிய சிறிய கிராமத்தில் உழைப்பினைப் பெரிதும் போற்றும் திரு. செங்கோல், கடவுளை மட்டுமே நம்பி, செபத்தின் மூலமே வாழ்வுக்கான வலிமையைப் பெற்றுக்கொள்ளும் இறை பக்தையான திரு. செங்கோல் திருமதி. அன்னபெனடிக்டா (ஆசீர்வாதம்) எனும் தம்பதியரின் ஐந்து மக்கட் செல்வங்களுள் ஒருவராய் 05.12.1976 அன்று பூமியில் பூத்திட்டேன். மரிய செல்வி என்னும் மூத்த சகோதரி, வேதபுஷ்பராணி, ஆரோக்கியமேரி எனும் தங்கையர், அந்தோணி எனும் தம்பி இவர்களோடு ஒருவராய் இரண்டாம் புதல்வியாய் பயணம் தொடர்ந்தேன். தாயின் கருவில் உருவானபோதே நான் ஆண் மகவாய் இருந்தால் அருளானந்து என்று பெயரிட வேண்டும் என ஆசைக்கொண்ட எனது ஐயாவும், அப்பாயியும் பெண்மகவாய்ப் பிறந்ததால் அருளாயி என அழகு தமிழ்ப் பெயரைச் சூட்டினர். ஆனால் பள்ளிச் சான்றிதழில் அருள் மேரி என்று சேர்த்தனர். இப்படி செல்லப் பெயர் ஒன்றும், பள்ளிச் சேர்க்கையில் பெயரொன்றுமாய் சுட்டிப் பெண்ணாய் வளர்ந்தேன்.

### அழைத்தலுக்கு அடித்தளம்:

எனது அம்மா அங்கன்வாடி அமைப்பாளராகப் பணியாற்றினார்கள். எனது தந்தையோ வெளியாத்தூர் எனும் கிராமத்தில் விவசாயம் செய்தமையால் குடும்பமாய் அங்கு சென்று வாழத்தொடங்கினோம். ஏறக்குறைய 20 ஆண்டுகள் அவ்வூரில் வாழ்ந்தோம். இதில் சிறப்பு என்னவென்றால் அங்கு நாங்கள் மட்டும்தான் கிறிஸ்தவர்கள். தினமும் எனது அம்மா மாலையில் செய்யும் குடும்ப செபம் மற்றும் அவர் பாடும் மாதா பாடல்களை பிற மத சகோதரர்கள் ஆர்வத்தோடு கேட்பார்கள். நான் சிறுமியாய் இருந்தபோது எனது ஊரில்

திருப்பலி இருக்காது. கிறிஸ்துமஸ் மற்றும் ஈஸ்டர் தினங்களில் மாலையிலே உணவினைக் கையில் எடுத்துக்கொண்டு சென்று இரவு பங்கு ஆலயத்தில் திருப்பலியில் கலந்துகொண்டு அங்கேயே உறங்கி காலையில் எழுந்து கதைபேசிக் கொண்டே நடந்துவந்த நாட்கள் இன்னும் பசுமையாய் என் நெஞ்சில் நிழலாடுகிறது.

திருப்பலி சென்றுவருதைப் பார்க்கும் பிற மதச் சகோதரர்கள் கிறிஸ்துமஸ் என்றால் என்ன? என்று கேட்பார்கள். எனது அம்மா இயேசுவைப்பற்றி அழகாகக் கூறுவார்கள். அதேபோல் யாருக்காவது உடல்நிலை சரியில்லை என்றால் தீர்த்தம் கொடுப்பது, மாதா எண்ணெய் பூசி விடுவது, செபிப்பது என, என் அம்மா செய்த மறைப்பணி இன்று நான் செய்யும் பணிகளைவிட ஆயிரம் மடங்கு மேலானது. சில நேரம் பொருத்தனை செய்து வேளைநகருக்கும் ஒரு சிலரை அழைத்துச் சென்றுள்ளார்கள். வாழ்க்கையில் பல வலிகளைச் சந்தித்த எனது அன்னையை அனைத்தையும் எதிர்கொண்டு வாழ வைத்தது அவர்களின் இறை நம்பிக்கை மட்டுமே என்பதனை அன்றும் இன்றும் ஆழமாய் உணர்ந்துள்ளேன். எனது துறவு வாழ்வில் என் அன்னையின் செபமே பல நேரங்களிலும் என்னையும் வழிநடத்தி வருகிறது என்பதும் உண்மை. என் அம்மாவின் வாழ்க்கை முறையே எனது அழைத்தலுக்கு அஸ்திவாரமானது.

என் அன்னையின் பணி ஓய்வுக்குப் பின் புனித அந்தோணியார் பங்கும், அற்புதங்கள் நிகழ்த்தும் சவேரியாயி கல்லறையும் அமைந்துள்ள ஆவுடைப்பொய்கை என்னும் என் தந்தையின் ஊரே இன்றைய எனது நிரந்தர முகவரி ஆனது.

**பள்ளிப்பருவம்:**

முதல் இரண்டு வகுப்புகளை மட்டுமே எனது ஊரில் பயின்றேன். பள்ளிக்கு நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டும் என்பதாலும், மழைக்காலத்தில் கழுத்தளவு தண்ணீரில் இறங்கிச் செல்லவேண்டி இருந்ததாலும் என்னையும், எனது மூத்த சகோதரியையும் நம் சபைச் சகோதரிகள் நடத்தும் இருதயபுரம் விடுதியில் சேர்த்துவிட்டார்கள். உள்ளே நுழைந்த உடனே, ‘உங்களில் யார் Sisiter -ராகப் போகின்றீர்கள்?’ என்று அம்மா மரிய கொரற்றி அவர்கள் கேட்டதுமே, என்னவென்று தெரியாமலேயே வேகமாய்க் கைத்தூக்கினேன்.

அம்மாவை விட்டுப் பிரிந்திருக்க முடியாமல் அழுதுகொண்டே இருந்த என்னை அமைதிப்படுத்தியது சகோதரிகள் என்னிடம் காட்டிய தனிப்பாசமே. அன்று சகோதரிகள் என்னிடம் காட்டிய அன்பில் என் அழுகை அடியோடு நின்றுவிட்டது. நம் சபைச் சகோதரிகளோடு இணைந்து நான் மேற்கொண்ட மாட்டு வண்டிப் பயணம் இன்றும் என் மனக்கண்முன் விரிகிறது. படிப்பு, செபம், பாடல், வாசகம் வாசிப்பது என என் கவனம் செல்லச் செல்ல அழகாய் நகர்ந்தது என் குழந்தைப் பருவம். அன்று என்னைக் கவர்ந்த சகோதரிகள் சகோ. மரிய கொரற்றி, சகோ. ரீட்டா, சகோ. குழந்தை, சகோ. ஜெயசீலி, சகோ. ரோசாலி, சகோ. ரோமால்டு, சகோ. ஜெர்மன், சகோ. நேசபாய் இவர்கள் காட்டிய அன்பு என் அழைத்தலுக்கு ஆரம்பப்புள்ளி என்றால் எள்ளளவும் மிகை இல்லை.

தொடர்ந்து 9 மற்றும் 10 -ஆம் வகுப்பினை புதுக்கோட்டை தூய இருதயப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பயின்றேன். இங்கும் அம்மா மரிய கொரற்றி, சகோ. இருதயமேரி,

சகோ. ஷீலா, சகோ. காணிக்கை, சகோ. சகாயம், சகோ. ஜான்தார்க் இவர்களின் அன்பினைப் பெற்று கல்வியைத் தொடர்ந்தேன். 10 -ஆம் வகுப்பு அரசுத் தேர்வு முடிவு செய்தித்தாளில் வெளியானது. தேர்வு எண்ணினைச் சரியாகப் பார்க்காத என் உறவினர் நான் தேர்வில் தோல்வியடைந்து விட்டேன் என்று தவறாகக் கூறிவிட்டார்கள். அதே சமயம் எனது சிறிய தங்கை விபத்துக்குள்ளாகி 4 மாதங்கள் மருத்துவமனையில் இருந்ததால், எனது அம்மாவும் மருத்துவமனையிலேயே தங்கவேண்டிய சூழ்நிலை. நானும் மேல்நிலைக் கல்வி பயில்வதில் ஆர்வமின்றியே இருந்தேன். சில வாரங்கள் கழித்து மருத்துவமனையிலிருந்து வந்த அம்மா, நான் நிச்சயம் தேர்வில் வெற்றி பெற்றிருப்பேன் என்று கூறி, என்னைப் பள்ளிக்கு அழைத்துச் சென்றார்கள். அம்மாவின் நம்பிக்கை வீண் போகவில்லை நான் வெற்றி பெற்றிருந்தேன். மகிழ்ந்தேன். இருந்தாலும் படிப்பதில் ஆர்வமின்றியே இருந்தேன்.

தேர்வு முடிவு தெரிந்து, பள்ளிச் சான்றிதழைப் பெற்றவுடன் எனது அம்மா என்னை வீட்டிற்குக் கூட அழைத்துச் செல்லாமல் திருத்துறைப்பூண்டி புனித தெரசா பள்ளிக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது 11 -ஆம் வகுப்பு சேர்க்கையெல்லாம் முடிவுற்றிருந்தது. ‘இனி இந்த பள்ளியில் இடம் கிடைக்காது. எனவே வீட்டிற்கே சென்றுவிடலாம்’ என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அங்கிருந்த பெரியம்மா சகோ. அந்தோணியம்மாள் அவர்களிடம் ‘எந்த பிரிவு கிடைத்தாலும் பரவாயில்லை, எனது மகள் படிக்கவேண்டும்’ என்று சொல்லி அவர்களிடம் என்னை விட்டுவிட்டு என் அம்மா வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள். இரண்டு நாள்கள் கழித்து வந்து எனது உடைகளைக் கொடுத்துவிட்டு மீண்டும் சென்றுவிட்டார்கள்.

இப்படியாக விருப்பமின்றி ஆரம்பமான எனது மேல்நிலைக் கல்வி வெற்றிகரமாக முடிந்தது. 10 -ஆம் வகுப்பு வரை படிப்பில் பின்தங்கிய மாணவியாகவே இருந்த நான், 11 மற்றும் 12 -ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் எடுக்கத் தொடங்கினேன். அரசுத் தேர்வில் எனது வகுப்பில் முதல் மாணவியாக வெற்றி பெற்றேன். மேலும் பொருளியல் பாடத்திலும் முதல் மதிப்பெண் பெற்று பாராட்டப்பெற்றேன். இது எங்ஙனம் ஆயிற்று என்பது இன்றுவரை விளங்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி, அன்று தொடங்கிய இறையாசீர் இன்றும் என்னைத் தொடர்கிறது என்பதில் கடுகளவும் ஐயமில்லை.

இங்கு என்னைக் கவர்ந்த சகோதரிகள் சகோ. நேச செளந்தரம், சகோ. அந்தோணியம்மாள், சகோ. அற்புதமேரி, சகோ. நிர்மலாதேவி, சகோ. குலோட்டில்டா, சகோ. கரோலின், சகோ. திமோத்தி, சகோ. ஜெபமாலை, சகோ. சம்மனசு, சகோ. எலிசபெத், சகோ. மெட்டில்டா, சகோ. சூசைமேரி ஆகியோரின் வழிகாட்டுதலில் பக்குவமடைந்தேன்.

### அழைப்பு என்னும் விதை:

12 -ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிந்து வீட்டிற்குக் கிளம்பிய என்னை சகோ. நிர்மலா அவர்கள் திண்டுக்கல்லில் நடைபெற்ற இறையழைத்தல் முகாமில் கலந்துகொள்ள அழைத்துச் சென்றார்கள். மூன்று நாள் இறையழைத்தல் முகாமின் முடிவில் துறவியாகலாம் என்று முடிவெடுத்தேன். சிலர் என்னை அயல் நாட்டு சபையில் சேர்த்துவிடுகிறேன் என்றனர். வேறு சிலர் ஆங்கிலம் பேசும் சபையில் சேர்த்துவிடுகிறேன் என்றனர். நானோ நான் படித்த

சபையில்தான் சேருவேன் என்று கூறி அடைக்கல அன்னை சபையின் அங்கமானேன். இந்த அழைத்தல் வாழ்வுக்கு என்னை ஊக்குவித்ததில் எனது சித்தி சகோ. சேவியர் கிளாரா மேரி அவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு என்பதால் மனமாற அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

**மகிழ்ந்திருந்த குழுமங்கள்:**

- துறவு வாழ்வின் முதல் குழுமம் என்ற பயத்தோடு சென்ற என்னை பாசத்தால் ஈர்த்தது பூக்காரத்தெரு குழுமம்.
- கல்லூரிக் காலத்தை கருத்தாய் முடித்து, முதல் மாணவியாய்த் தேர்ச்சி பெற வைத்தது சின்னமலை குழுமம்.
- கல்வியியல் கல்வியை சிறப்பாய் முடிக்கக் கரம் கொடுத்தது கூடல்நகர் குழுமம்.
- ஓராண்டே என்றாலும் ஆழமான உறவுகளோடு கலகலப்பாய் நகர்ந்தது காஞ்சிபுரம் குழுமம்.
- வானொலிப் பணியினை உத்வேகத்தோடு செய்ய உதவி புரிந்தது மயிலைக் குழுமம்.
- வளர்ச்சி, மகிழ்ச்சி, முதிர்ச்சி எனவும் பாசம், நேசம், நட்பு எனவும் சிறகின்றி பறக்க வைத்திருக்கிறது பல்லாவரக் குழுமம்.
- என் துறவு வாழ்வின் உறவுகளாய் ஒவ்வொரு குழுமத்திலும் உடன் வாழ்ந்த இல்லத் தலைமைச் சகோதரிகள் மற்றும் அனைத்துச் சகோதரிகளையும் மகிழ்வோடு நினைத்துப் பார்க்கின்றேன்.
- என் வாழ்வினை அழகாக்கியதில், அர்த்தமுள்ளதாக்கியதில் உங்கள் அனைவருக்குமே பெரும்பங்குண்டு என்பதனை உணர்ந்து ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
- உங்களின் பொற்கரங்களை எடுத்து என் கண்களில் ஒற்றிக்கொள்கிறேன்.
- நான் வாழ்ந்த இடங்களும், என்னோடு வாழ்ந்தவர்களும் என்னால் எந்நாளும் மறக்கவே இயலாதவர்கள்.
- ஒவ்வொரு குழுமத்திலும் மகிழ்ந்திருந்தேன். மகிழ்வித்திருந்தேன்.

**“எப்போதும் மகிழ்ந்திருங்கள், என்ன நேர்ந்தாலும் இறைவனுக்கு நன்றி கூறுங்கள்”** என்ற இறைவார்த்தையை நினைத்து இறைவனுக்கு நன்றிக் கரம் குவிக்கின்றேன்.

**மைசூர் - தியானவனா - ஆன்மீக மையம்:**

மைசூரில் OCD அருட்தந்தையர்களால் நடத்தப்படும் International Institute of Spirituality Course படிக்கச் சென்றேன். 9 மாத அளவிலான இப்பயிற்சியினைப் பெற விருப்பமின்மையைத் தெரிவித்தேன். காரணம் பயிற்சி, தேர்வு, Communication அனைத்துமே ஆங்கில வழி என்பதால் தயங்கினேன். ஆனால் நம் சபை பெரியோர்கள் தந்த ஊக்கத்தினால் நன்கு கற்று நல்ல மதிப்பெண்களுடனே திரும்பினேன்.

அந்த ஆன்மீக மையத்தில் ஏறக்குறைய 20க்கும் மேற்பட்ட சபைச் சகோதரிகளுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அன்பு, அரவணைப்பு, அக்கறை, நலம் பேணுதல், சுதந்திரம்,

கேட்டவற்றை வாங்கிக்கொடுத்தல் ஆகிவற்றில் வல்லவர்கள் நம் சபைப் பெரியோர்கள் என்பதை அங்கு கண்டுகொண்டேன். நமக்கு நிகர் நாமே என்பதையும் உணர்ந்தேன். அருமையான அனுபவத்தை எனக்குத் தந்த சபைக்கும் அங்கு என்னோடு பயின்ற சகோ. கலைச்செல்விக்கும் நன்றி. நம் சபையை நினைக்கும் போது காலரைத் தூக்கிவிடத்தான் தோன்றுகிறது. என்ன தவம் செய்தேன் அடைக்கல அன்னை சபையில் சேர்ந்ததற்கு....

**வேரித்தாஸ் ஆசிய வானொலி - தமிழ்ப் பணி:**

ஆசிய கிறிஸ்தவர்களின் கூட்டமைப்பால் உருவான வானொலி, ஏறக்குறைய 21 ஆசிய மொழிகள் இவ்வானொலி மூலம் இறையரசுப் பணியினைச் செய்துவருகின்றன. இவ்வானொலி தொடங்கப்பட்டு 40 ஆண்டுகளைக் கடந்தபின் இங்கு பணியாற்ற நம் சபைக்கு இவ்வாய்ப்பு வழங்கப்பட்டதால் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் உள்ள **'வேரித்தாஸ் வானொலி மையம்'** சென்று, 'உண்மை ஓங்குக' என்ற குரலில் ஒலிப்பரப்பப்பட்ட தமிழ்ப் பணியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணிபுரிய நம் சபையின் சார்பில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டமையை எண்ணி மகிழ்ந்ததை விட அன்று பெரிதும் மனப்போராட்டத்திற்கு ஆளானேன் என்பதே உண்மை. அயல்நாடு, வேற்று மொழி, நான் மட்டும் செல்ல வேண்டும் என்ற சூழ்நிலையில் பல வழிகளில் மறுப்புத் தெரிவித்த என்னை அன்பால், ஆலோசனையால், ஏற்பு தெரிவிக்க வைத்து, நம்பிக்கையூட்டி அனுப்பி வைத்த சபையின் முன்னாள் தலைமை அன்னை லூர்துமேரி அவர்களை நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

தனியாகச் செல்லத் தயங்கிய எனக்குத் துணையாக மணிலா வந்ததோடு நின்றுவிடாமல், அவ்வப்போது அலைபேசி வாயிலாக உரையாடி, துணிவோடு பணிசெய்யத் தூண்டுதல் தந்த அன்றைய சபைத் துணைத் தலைமைச் சகோதரியும் இந்நாள் தலைமை அன்னையுமான அன்னை மரிய பிலோமினா (706) அவர்களையும் மகிழ்வோடு நினைத்துப் பார்க்கின்றேன்.

''எல்லோருக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பு, உன்னால் முடியும் செல்'' என்று சொல்லியும், மணிலாவில் நான் இருந்த காலக்கட்டத்தில் என்னோடு உரையாடி, ஊக்குவித்த என் சகோதரிகளையும் (Companions) பெருமிதத்தோடு நினைத்துப் பார்க்கின்றேன். வானொலியில் பணியாற்றிய நாட்களில் பல நாட்டு மக்கள், பிற மதச் சகோதரர்கள் என, என் பணிக்கு ஊக்கமூட்டிய இனிய இதயங்களையும், தமிழ்ப்பணியின் ஒருங்கிணைப்பாளராய் இருந்த அருட்தந்தை ஜெரோம் அவர்களின் வழிகாட்டுதலையும் நன்றியோடு எண்ணிப்பார்க்கின்றேன்.

**சாந்தோம் கலைத்தொடர்பு நிலையம்:**

காலங்காலமாய் கலைப்பணி ஆற்றிவரும் சாந்தோம் கலைத்தொடர்பு நிலையத்தில் பணியாற்ற அரிய வாய்ப்பு இங்கும் சபையால் எனக்கு வழங்கப்பட்டதை நினைத்து நெகிழ்ச்சி அடைகிறேன். வேரித்தாஸ் வானொலியின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக இங்கிருந்துகொண்டு ஓராண்டு பணியாற்றினேன். மகிழ்வோடும், துடிப்போடும் பணியாற்ற உதவி புரிந்த சாந்தோம் கலைத்தொடர்பு குடும்ப உறவுகள் அனைவரையும் குறிப்பாக மேதகு ஆயர் ஆண்டனி டிவோட்டா அவர்கள், மேதகு ஆயர் லாரன்ஸ் பயஸ் அவர்கள், அருட்தந்தை டேவிட் ஆரோக்கியராஜ், அருட்தந்தை வின்சென்ட் சின்னதுரை

ஆகியோரையும் உவகையோடு நினைத்துப் பார்க்கின்றேன். வேரித்தாஸ் உறவு சங்கமத்தில் (மதுரை, சென்னை) கலந்துகொண்ட அனைவரையும் சந்தித்தது மனதிற்கு மகிழ்வையும், பணிக்கு நிறைவையும் நல்கியது.

**எல்லாப் புகழும் இறைவனுக்கே:**

ஆசிரியர் பணியில் 4 ஆண்டுகளே அனுபவம் பெற்றிருந்த நான், அப்பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுதான் சபை பணித்த பணியினை செய்தேன். மீண்டும் ஆசிரியப் பணியில் சேரவந்த எனக்கு TET தேர்வு எழுதவேண்டும் என்னும் கட்டாயம் வந்தது. மூன்று முறை எழுதினேன். முடிவில் வெற்றி கிடைத்தது. சபை கொடுத்த பணியினைச் செய்த எனக்கு இறைவன் கொடுத்த பரிசே இவ்வெற்றி என மகிழ்ந்தேன். அதோடு அன்றைய பல்லாவரக் குழுமச் சகோதரிகள் கொடுத்த உற்சாகம், நேர்மறை வார்த்தைகள் என்னை மட்டுமல்ல அன்று அக்குழுமத்தில் தேர்வு எழுதிய சகோ. லீமா, சகோ. கலா ஆகியோரையும் வெற்றிபெற வைத்தது. வார்த்தையின் வலிமையை உணர்ந்தேன் மகிழ்ந்தேன்.

TET தேர்வில் வெற்றி பெற்றாலும் பணித்தொடர்ச்சி கிடைக்கவில்லை. கஜினி முகமது 14 முறை படையெடுத்ததை படித்திருக்கிறேன். ஆனால் என் பணித் தொடர்ச்சிக்காக அன்றைய தாளாளரும், தலைமையாசியருமான இன்றைய நம் சபைத் தலைமை அன்னை மரிய பிலோமினா (706) அவர்கள் காஞ்சிபுரத்திற்கு எத்தனை முறை பயணம் செய்தார்கள் என்பதை கணக்கிட இயலாது. எனக்கு ஆசிரியப் பணியின் தொடர்ச்சியினை பெற்றுத்தந்தபின்தான் ஓய்ந்தார்கள். எத்தனை முறை நன்றி சொன்னாலும், எப்படி நன்றி சொன்னாலும் அவர்களின் முயற்சிக்கு ஏதும் ஈடாகாது. அன்னை அவர்களுக்கும், இப்பணிக்கு வேண்டிய தகவல்களைத் திரட்டித் தந்த சகோ. அந்தோணியம்மாள் அவர்களுக்கும் ஆழ்மன நன்றியினை அர்ப்பணிக்கின்றேன்.

குழும வாழ்வோடு நின்று விடாமல் பங்குத்தளத்திலே மறைக்கல்வி, முதல் திருவிருந்து மற்றும் உறுதிப்பூசுதல் தயாரிப்பு, வழிபாட்டுக் குழு, பாடகர் குழு, ஆலயப்பணி என பலப்பல பணிகளைப் பாங்காய் ஆற்ற ஆற்றல் தந்து, அதன் வழி நல்ல அனுபவங்களையும் தந்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

பல்லாவரத்திலே இரண்டு முறை கருணைக்குடில் இல்லக் கண்காணிப்பாளராக பணியாற்றிய அனுபவம் மறக்க முடியாதது. இக்கட்டான சூழலில் உடன் நின்ற சகோதரிகளின் பாசமும், பரிவும், உடன் இருப்பும் துன்பங்களைத் 'தூசி போலத் தட்டிச்செல்ல' துணிவைத் தந்தது. இரத்த உறவைப் போல் இலட்சிய உறவும் உன்னதமானது என்பதனை உணர்ந்த நாட்கள் அவை. அழைத்தவர் நம்மை ஒருபோதும் கைவிடார் என்பதனையும், அடைக்கல அன்னையின் அருள் நம்மோடு உடன் வரும் என்பதனையும் உணர்த்திய நொடிகள் அவையென்றால் அது மிகையல்ல.

**கல்விப்பணியில்:**

1998-ம் ஆண்டு துறவியான பின் என் திறமை எதுவென இனங்கண்டு தமிழ் படிக்கவைத்த முன்னாள் சபைத் தலைமை அன்னை பாத்திமாராணி அவர்களை உவகையோடு நினைவு கூர்கின்றேன். சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள கல்விப்பணியிலே பலக் கலவைகளோடும், குணாதிசயங்களோடும் வரும் குழந்தைகளைப்

பார்ப்பதும், பழகுவதும், அவர்களின் குறைகளை, கவலைகளை, குழப்பங்களை, காதுகொடுத்து கேட்பதும், அவர்களோடு உரையாடுவதும், எனக்கு மிகவும் விருப்பமான ஒன்றாகும். இதுவரை என்னிடம் கற்ற அனைத்து மாணவியருமே அரசுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர் என்பதனை நினைத்து மகிழ்வதைவிட 'எல்லாப் புகழும் இறைவன் ஒருவனுக்கே' என்று சொல்லுவதில் பூரிப்படைகிறேன்.

**கலைத்திறன்:**

''அடைக்கலா கலைக் குழு'' மூலம், போரூர், LIBA, சக்தி கலைக்குழு போன்ற குழுக்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து பல இடங்கள் சென்று பல நாட்டுப்புறக் கலைகளில் பயிற்சி பெறும் பாக்கியமும் சபையால் எனக்குக் கிடைத்தது. இப்படி நான் கற்றக் கல்வி, பெற்றக் கலைகள், சென்ற இடங்கள் என எண்ணற்ற வாய்ப்புகளை எனக்குத் தந்த சபையினைக் கரம் கூப்பி வணங்குகிறேன். மயிலை புனித அந்தோணியார் பள்ளியில் அலுவலர் பணி வாய்ப்பினை எனது உடன் பிறந்த சகோதரிக்கு வேண்டிய போது மனமுவந்து கொடுத்து என் சகோதரியின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த உதவி புரிந்த சபைத் தலைமை அன்னை மரிய பிலோமினா அவர்களுக்கு மனமாற நன்றிக்கரம் குவிக்கின்றேன்.

நான் துறவியாக விரும்பி, விருப்பநிலையில் இருந்த போது என் நினைவு வரும்போதெல்லாம் என் அம்மா அழுவார்களாம். ஒருநாள் இரவு ''மணவாட்டி மணவாளனைத் தேடிச் சென்றுவிட்டாள் கவலைப்படாதே'' என்று கனவில் ஒலி கேட்டதிலிருந்து 'உன்னைக் குறித்த கவலையை விட்டு விட்டேன்' என்று என் அம்மா இன்றும் கூறுவதுண்டு. நானும் சபையில் சேர்ந்த நாள் முதல் இந்நாள் வரை எக்கவலையும் இன்றி வாழ்ந்து வருகின்றேன்.

அனைவருக்கும் நன்றி அனைத்திற்கும் நன்றி. இந்நாள் வரை நான் பெற்ற ஆசீருக்காகவும், பெற்றுக் கொண்டிருக்கின்ற ஆசீருக்காகவும், பெறப்போகும் ஆசீருக்காகவும் மூவொரு இறைக்கும், அன்னை மரிக்கும், நான் நேசிக்கும் புனித அந்தோணியாருக்கும், அன்பு புனிதராம் சூசையப்பருக்கும், அமைதி புனிதராம் பிரான்சிஸ் அசிசிக்கும். என் ஊரில் காவல் தெய்வமான சவேரியாயிக்கும் முழுமன நன்றியினை முன்வைக்கின்றேன்.

**நிறைவாக... நினைவாக...**

கருத்தாய் வளர்த்து
கடவுள் அருள் பெற்றுத் தந்து
இன்றும் எனக்காய் செபித்து
இதயத்தில் தாங்கும் அன்பு பெற்றோருக்கு
என் நன்றி....

உடன் பிறந்ததோடு அல்லாமல்
உறவாடுவதோடு நில்லாமல்
துறவு வாழ்விலும் அகலாமல்
துணை நிற்கும் உடன்பிறப்புகளுக்கு
என் நன்றி....

அறிவொளி எனக்குத் தந்து
அறவழி நடக்க வைத்து
அகக்கண் திறந்து வைத்த
ஆசான்களுக்கு என் நன்றி...

சபையில் சேர்ந்த நாள்முதல்
சகலவற்றிலும் சிறந்திட
சக்தி கொடுத்த சபையின் அனைத்து
தலைமை அன்னையருக்கும் என் நன்றி...

மனநிறைவோடு மகிழ்வாய் பணிசெய்திட
மகத்துவமாய் வழிநடத்திய - முன்னாள்,
இந்நாள் மாநிலத்தலைமைச் சகோதரிகளுக்கும்
மனம் நிறைந்த நன்றி...

ஒன்றுமில்லாமல் வந்த என்னை
ஒப்பற்ற இறைவனுக்காய்
ஒளிரும் தீபமாய் உருமாற்றிய
உருவாக்குனர்கள் அனைவருக்கும் என் நன்றி...

வாழ்ந்த குழுமங்களில் எல்லாம்
வார்த்தெடுத்த இல்லத் தலைமைச் சகோதரிகள்
வாழ்வினை வசந்தமாக்கிய சகோதரிகள்
அனைவருக்கும் என் நன்றி...

பணியாற்றிய இடங்களில் எல்லாம்
பாங்காய் வளர்த்தெடுத்த தலைமையாசிரியர்கள்
அன்பாய் பழகிய ஆசிரியர்கள்
அக்கறைக் காட்டிய அலுவலகத் தோழர்களுக்கும் என் நன்றி...

இருபத்தைந்து ஆண்டுகளாய்
இமைக்குள் எனை வைத்து
இடர்களைக் களைந்து
இன்பம் மட்டுமே கொடுத்து
நன்மைகள் பல செய்து
நற்சுகத்தினையும் நல்கி
கனப்பொழுதும் எனைக் கைவிடாத
மணவாளனே... என் இறைவனே...
உம் தாழ்பணிந்து சமர்ப்பிக்கின்றேன் நன்றி...

**எத்தனைப் பிறவி நான் எடுப்பினும்**
**அத்தனைப் பிறவியிலும்**
**இப்பணி புரிய வைப்பாய் இறைவா!...**

# "ஆண்டவரே என் ஆயன்; எனக்கேதும் குறையில்லை" (தி.பா 23:1).



சகோதரியின் பெயர் : சகோ. கிறிஸ்டினா விமலா
சபை எண் : 1110
பிறந்த மண் : ஆலஞ்சேரி
பங்குத்தளம் : மன்னார்குடி
மறைமாவட்டம் : தஞ்சாவூர்
தந்தை பெயர் : திரு. அமலதாஸ் (விண்ணில்)
தாய் பெயர் : திருமதி. செல்வமேரி
உடன் பிறந்தோர் : சகோதரி - 2
முதல் அர்ப்பணம் : 08.05.1998
இறுதி அர்ப்பணம் : 09.05.2007
வெள்ளி விழா : 04.05.2023

**ஆண்டவருக்கு நன்றி:**

**இத்துறவு வாழ்வில் ஐந்தைந்து ஆண்டுகள் வாழ,**
**நல்ல ஆயனாய் உடன் நடந்தவா உமக்கு நன்றிகள்!**
**என் முதற்கண் நன்றி இறைவா!**

விமலாவாகிய நான் "உமது சாயல்" என்பதை நான் உணர்ந்த நாட்களுக்காய் நன்றிகள்! இறைவா! எனது உள்ளக் கிடக்கையை நன்கறிந்து என் வாழ்வில் பலவேறு ஆசீர்வாதங்களைத் தந்து என்னை மகிழ்வித்த இறைவனே என் உயிர்மூச்சு இருக்கும்வரை நன்றி! எத்தனை இடர்கள், எத்தனைத் தடைகள்... அனைத்தையும் உமதருளால் எதிர்கொள்ள வலிமைத் தந்து வழிநடத்தியவனே உமக்கு நன்றி கூறுகிறேன்.

**அகிலத்திற்கு ஒரு புதிய உயிர்:**

ஆறும், குளங்களும், நீர் நிலைகளும், நெற்கதிர்களும், நிறைய பயிர்களும் சூழ்ந்து இயற்கை அன்னையின் மடிபோல் அழகாய் காட்சித்தரும் ஆலஞ்சேரி எனும் சிறிய கிராமத்தில் திரு. அமலதாஸ், திருமதி. செல்வ மேரி ஆகியோரின் மகனாகப் பிறப்பேன் என எதிர்பார்க்கப்பட்டு, இரண்டாம் மகளாய் பிறந்தவள் நான். விவசாயியும், தையல் ஆசிரியையுமான என் பெற்றோர் கஷ்டம் என்னவென்று தெரியாமலேயே எங்களை வளர்த்தனர். கான்வென்ட் பள்ளிகளில் சேர்த்து எங்களது அறிவுக் கண்களைத் திறந்தனர். கையில் எங்களையும், பையில் சோற்று மூட்டையையும் சுமந்து வயல்வெளிகளிலும், வரப்பு வாய்க்கால்களிலும் நடத்திச்சென்று ஞாயிறு தோறும் திருப்பலிக்கு அழைத்துச் செல்வர். இவ்வாறு பங்குத்தளமான மன்னார்குடிக்கு அழைத்துச் சென்று எங்களை இறைபக்தியில் வளர்த்தவர்கள் எனது பெற்றோர்.

இறையழைத்தல் நான் பெற்றதில் அதிக மகிழ்ச்சி என் பெற்றோருக்குத்தான். எனது வளர்ச்சியை, இத்தனை வருடம் துறவறத்தில் நிலைத்திருந்ததை பெருமையுடன்

விண்ணகத்தில் காணும் என் தந்தைக்காகவும், இந்த முதிர்ந்த வயதிலும் தனது பிள்ளைகளுக்காக அதிக அக்கறைக் கொண்டு பல தியாகங்கள் செய்து துணையாய் நிற்கும் என் அன்னையைத் தந்த இறைவனுக்கும், ஆனந்தக் கண்ணீருடன் நன்றிகள் கூறுகின்றேன். என் உடன் பிறந்த அக்கா, தங்கை அவர்களின் கணவர்கள், குழந்தைகள் அனைவரும் என்னை இன்றுவரை மாறாப் பாசத்துடனும், அன்புடனும் என் உடன் நடந்து, இல்லம் செல்லும்போதெல்லாம் கரிசனையோடு கவனிக்கும் உறவுகளுக்காய் நன்றி இறைவா!

**அழைத்தல் ஒரு இறைக்கொடை:**

நான் எனது மேல்நிலைப் படிப்பை மன்னார்குடியில் உள்ள நமது பள்ளியான புனித சூசையப்பர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், விடுதியில் தங்கிப் படித்தேன். 12 -ஆம் வகுப்பின் இறுதியில் இறையழைத்தலுக்காக பல்வேறு துறவற சபையினர் வந்தனர். விளையாட்டாக வந்து சென்ற அனைத்து சபையினரிடமும் எனது பெயரைக் கொடுத்து வைத்தேன். என்ன ஆச்சர்யம்! முதல் அழைப்புக் கடிதம் நம் சபையிடமிருந்தே வந்தது. கண்டவுடன் என்னுள் ஒரு மகிழ்ச்சி. இதற்கு முன்பு துறவறத்தில் எந்த ஒரு ஆர்வமும் இல்லாதிருந்தேன். இவ்வாறு அழைத்தல் என்னும் விதையை என்னுள் விதைத்து, அடைக்கல அன்னை அவையில் ஒரு அங்கத்தினராய் எனை மாற்றிய இறைவா! அகில முடிவு வரை நன்றிகள் கூறுவேன். துறவியாக வாழ அழைத்த இறைவா! ஒரு மறைபரப்புப் பணியாளராய், வடநாட்டில் உயிர்காக்கும் ஒரு செவிலியாகவும் எனை அழைத்து உருவாக்கி, உடன் நடந்து வழிநடத்திய அனைத்திற்கும் உவப்புடன் நன்றி கூறவைக்கின்றது என் உள்ளம் இறைவா!

**அடைக்கல அன்னை சபையின் வழி இறைவன் ஆற்றிய அதிசயங்கள்:**

- ❖ சவுல் - பவுலாக, பிரான்சிஸ்கோ - பிரான்சிஸ் அசிசியாக, பேதுரு - பாறையாக அழைக்கப்பட்டது போல விமலாவாகிய நான் கிறிஸ்டினா விமலாவாக என் ஞானஸ்நான பெயரால் நம் சபையில் அழைக்கப்படுவது அதிசயமே. என் நாமநாள், பிறந்த நாள் விழாக்களை நினைவு கூர்ந்து கொண்டாடப்படுவது அதைவிட அதிசயமே!.
- ❖ ஆரோக்கிய அன்னையையும், அந்தோணியாரையும் மட்டுமே கடவுளாக நம்பியிருந்த எனக்கு, இயேசு கிறிஸ்துவே உண்மைக் கடவுள், அவரை மட்டுமே ஆராதிக்கின்றோம், புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம் எனும் மறைக்கல்வி உண்மையை என் சபை எனக்கு லாவகமாக புரியவைத்தது அதிசயமே!
- ❖ என்னில் புதைந்து கிடந்த இயல், இசை, நாடகம், நாட்டியம் போன்ற பல்வேறு திறமைகளை சாமர்த்தியமாக வெளிக்கொணர்ந்து நல்ல ஆளுமையுடன் எனை வளர்த்துவிட்டவிதம் அதிசயமே!.
- ❖ அறிவியல் என்றாலே அலறியடித்து ஓடும் என்னை அறிவியலை மட்டும் படித்து நல்ல ஒரு செவிலியாக உருவாக்கியதும், ஆங்கிலத்தில் 35 மதிப்பெண் எடுத்தால் மட்டும் போதும் என்றிருந்த எனக்கு ஆங்கில மொழிக் கல்வித் தந்து, பல் மொழிப் புலமை பெற எனக்கு வாய்ப்புத் தந்து, என் திறன் வளர்த்த விதம் அதிசயம்!.

- ❖ வடநாட்டில் சிறப்பாக பணிபுரிவேன் என நம்பி வட மாநிலத்திற்கு என்னை அனுப்பியதும், அயல்நாடு சென்றால் அன்போடு பணிபுரிவேன் என என்னை அதற்காய் தயாரித்ததும் எல்லாம் சபை என்மேல் கொண்டிருந்த நம்பிக்கை. இது மிகப்பெரும் அதிசயமே!
- ❖ என் குடும்பத்தாரையும், குடும்பச் சூழலையும் கண்டுணர்ந்து, தனதாக எண்ணி உரிய நேரத்தில் உதவிகள் செய்து, இன்றுவரை என் உடன் பயணிக்கும் சபை எட்டாத அதிசயமே!....
- ❖ சகிப்புத்தன்மை, பொறுமை, கடின உழைப்பு, மகிழ்விக்கும் திறன் போன்ற பல்வேறு புண்ணியங்களில் சிறந்து விளங்க வாய்ப்பும், வழியும் அமைத்துத் தரும் என் சபை எனக்கு என்றென்றும் அதிசயமே!.

இப்படி என் வாழ்வில் எக்கச்சக்கமான அதிசயங்களை நிகழ்த்திய இறைவனுக்கு என் மேலான நன்றிகள். இன்னும் அதிகமாய் நன்மைகளைத் தந்து நன்மைகளால் எனை நிறைத்த என் சபைக்கு சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி நன்றி நவில்கின்றேன். இந்த வாழ்க்கைக்கு எனை உருவாக்கிய உருவாக்குநர்கள், சபைத் தலைமை அன்னையர்கள், இல்லத் தலைமைச் சகோதரிகள், குழுமச் சகோதரிகள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றிகள்.

**என் உடன் பயணித்தவர்களே......**

- எனை உருவாக்கிய உருவாக்குனர்கள் நீங்கள்!.
- எனை செதுக்கிய சிற்பிகள் நீங்கள்!.
- பலவற்றை கற்றுத்தந்த ஆசான்கள் நீங்கள்!.
- தளர்ந்த நேரத்தில் தட்டிக்கொடுத்த தந்தையர் நீங்கள்!.
- அரவணைத்த அன்னையர் நீங்கள்!.
- என் உடன் நடந்த சகோதரர் நீங்கள்!.
- கரம் கொடுக்கும் தோழமை நீங்கள்!.

எல்லாம் நீங்கள் மட்டுமே என்பதை பெருமிதத்துடன் நினைத்து நன்றியோடு கரம் குவிக்கிறேன். கோடி நன்றிகள்!.

**அமைந்த குழுமங்கள் - அறம் செய்த பணித்தளங்கள்:**

1. சேலம் கொல்லப்பட்டி: ஒரு வருடம்

குடும்ப உணர்வையும், குழும வாழ்வின் மகத்துவத்தையும் உணர்ந்தேன். என் துறவற வாழ்வின் அடித்தளம் நல்ல ஒரு குழுமம் என்பதை பெருமையுடன் கூறுகிறேன்.

2. முசாப்பர்பூர் (வடமாநிலம்): ஒரு வருடம்

தனித்தீவில், தனியாய் விடப்பட்டதுபோல் இருந்தாலும், இறை அரவணைப்பையும், அருகாமையையும் உணர்ந்தேன். பொறுப்புணர்வு, புதிய மொழி, கலாச்சாரம், புதிய மனிதர்கள், தட்பவெப்ப நிலை இவைகளைக் கற்றுக்கொண்டு தனதாக்கிக் கொண்டேன்.

3 மொக்காமா (வடமாநிலம்): 5 வருடம்

**SCN** சபைக் கன்னியரின் நிறுவனத்தில் என் திறமைகளைக் காண்பிக்கவும்,

பலமொழிப் புலமைப் பெறவும், சபைப் பெயரை பெருமைப்படுத்தவும், மனிதர்களை குணமாக்கும் வித்தைகளை, சகிப்புத் தன்மையை நன்கு வளர்த்துக் கொள்ளவும், நல்ல ஒரு முழுமையான செவிலியாக மாறவும், எனக்குக் கிடைத்த மாபெரும் மேடை இக்குழுமம். இந்த பிரபஞ்சத்தைப் பார்க்கும் முன், என்னைப் பார்த்து, என் குரலை முதலில் கேட்டு, எனது கரங்களில் வந்து ஜெனித்த குழந்தைகள் ஏராளம். அதற்கு ஒரு கருவி நான் என்பதில் பெருமைப்படுகின்றேன்.

**4 பெகுசாராய் (வடமாநிலம்): 3 வருடம்**

தனியொருவளாய், மருத்துவராய், செவிலியாய், சமுதாயப் பணியாளராய், விவசாயியாய், உணவு தயாரிப்பவளாய் என பன்முகத்திறன் கொண்டு குழுமச் சகோதரிகளுடன் ஒன்றிணைந்து மகிழ்வோடு பணியாற்றக் கிடைத்த வாய்ப்பிடம். நல்ல ஒரு குடும்பம்.

**5 பாட்னா City (வடமாநிலம்): 3 வருடம்**

முதிர்ச்சியோடும், ஆர்வத்தோடும், பொறுப்போடும், இளமைத் துடிப்போடும், மகிழ்வான குழுமத்தோடு இணைந்து பணியாற்றியது எனக்குக் கிடைத்த பெறும் பேறு என்பேன். என்னை மறந்து என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களைப் பற்றியே சிந்திப்பவளாய் மாறினேன். பொறுப்புடன் அவர்களை அன்னை மரியிடம் ஒப்படைக்க கற்றுக்கொண்டேன்.

**6 பெத்தானியா: 3 வருடம்**

தந்தையை இழந்து, தாயைத் தனியே தவிக்கவிட்டு கணத்த இதயத்தோடும், கலங்கிய விழிகளோடும் கால்பதித்த என்னை தங்களது செபத்தால், பாசத்தால், செல்லமான கண்டிப்பால், பாராட்டுதல்களால், கரிசனையால் எனை நிறைத்து, திரும்ப என்னையே நான் மீட்டெடுக்க உதவிய குழுமம் பெத்தானியா. என்னுடன் பயணித்த அன்பான மூத்த சகோதரிகளுக்கு நன்றிகள்.

**7 தச்சன்குறிச்சி: ஒரு வருடம்**

தமிழச்சியாய், தமிழ் மண்ணில், தமிழ் மக்களுக்கு பணி செய்ய கிடைத்த பணித்தளம். ஒரு செவிலியாய், நல்ல துறவியாய் என் துன்பத்தில் தோள் கொடுத்து, நிலைத் தடுமாறும் போதெல்லாம் எனை தூக்கி நிறுத்தும், அன்பாய் இன்றளவும் வழிநடத்தும் நல் சகோதரிகளைப் பெற்றுக்கொள்ளும் வரம் கிடைத்த இடம்.

**8 வேளாங்கண்ணி: 2 வருடம்**

'என் குலதெய்வமான வேளாங்கண்ணித் தாய் வாழும் ஊரில் நான் குடியிருக்க வாய்ப்புக் கிடைக்குமா?' என ஏங்கிய எனக்கு அன்னை மரியே எனை அழைத்ததாய் உணர்ந்தேன். இறைக்கொடை எனவும் உணர்ந்தேன்.

**9 சபைத்தலைமையகம்: 1½ வருடம்**

ஜெர்மனி நாடு செல்ல, புதியதொரு மொழிக் கற்க வாய்ப்பு கிடைத்தது. இந்நாட்களில் சின்னமலை, பூவிருந்தவல்லி (பழையத் தலைமையகம்), எங்களை அன்போடு அரவணைத்ததும், இறைத்திட்டத்தை உணர இறைவன் கொடுத்த வாய்ப்பாக எண்ணுகிறேன்.

10 மொளச்சூர்: 3½ வருடம்

SCN Sisters மருத்துவமனையில் பணி செய்யும்போது, நம் சபையிலும் இப்படி ஒரு மருத்துவமனை இல்லையே என ஏங்கியதுண்டு, அதனால்தானோ என்னவோ மருத்துவமனையின் வளர்ச்சியின் ஒரு அங்கத்தினராய் பணிசெய்ய வாய்ப்பு கிடைத்தது. நிறைவான குழுமம். அன்பான சகோதரிகளுடன் பயணிக்க வாய்ப்புக் கிடைத்தது.

**நன்றியின் நினைவாக...**

நல்வழியில் பயணிக்க பல்வேறு வகையில் உறுதுணையாய் இருந்த என் தோழமை நெஞ்சங்களுக்கும், மேலே கூறப்பட்டுள்ள இல்லங்களில் என் 25 வருட வாழ்வில் நல்லவைகளைக் கற்றுத்தந்து, தட்டிக்கொடுத்து, பாராட்டி, மகிழ்வித்து, ஒன்றிணைந்து பயணிக்க உதவிய எல்லா இல்லத்தலைமைச் சகோதரிகள், குழுமச் சகோதரிகள், பொதுமக்கள், உதவிக்கரம் நீட்டிய அனைவரையும் நன்றியோடு நினைவுகூர்ந்து மகிழ்கின்றேன்.

**அற்புதங்களை நிகழ்த்திய இறைவன்:**

சிறு வயதில் மூன்று முறை தண்ணீரில் மூழ்கி உயிர்போக இருந்த என்னை, இத் துறவற வாழ்க்கைக்காகவே காப்பாற்றியது போல் உணர்கிறேன்.

சேலம் - பெகுசாராய் இல்லங்களில் இருந்த போது இருசக்கர வாகனம் ஓட்டிச் சென்ற போது மூன்று முறை பெரிய விபத்திலிருந்து மயிரிழையில் தப்பியது, இறைவன் என்னிடம் ‘நீ இன்னும் அதிகமாகவே சேவை செய்ய வேண்டும்’ என்று சொல்வதாய் உணர்ந்தேன்.

வெள்ள நிவாரணப் பணி செய்ய படகில் சென்ற பொழுது மூழ்கவிருந்த படகையும், அதில் இருந்த என்னையும் அற்புதமாய் காப்பாற்றியது “இதோ நான் உன்னோடு” என்று இயேசுவே கூறியதாய் உணர்கிறேன்.

நான்கு சக்கர வாகனம் ஓட்டும் போது என் கண்முன்னே விபத்து நடக்க, இறையருளால் பதட்டம் ஏதுமின்றி வாகனத்தை இயக்கி என்னுடன் இருந்தோரையும் காப்பாற்றியது இறைவன் எனக்குத் தந்த ஞானமாய், பாதுகாப்பாய் உணர்கிறேன்.

நோயாளி ஒருவரை உயர் சிகிச்சைக்காக அவசர ஊர்தியில் அழைத்துச் சென்ற போது ஏற்பட்ட விபத்தில் வாகனம் ஒருபுறம் முழுவதும் நசுங்கிவிட்டாலும், மனித உயிருக்கு எந்த ஒரு தீங்கும் ஏற்படா வண்ணம் இறைவன் என்னையும் மற்றவரையும் காப்பாற்றியது, “நான் இன்னும் இப்பூமியில் வாழ, என் கடமை இன்னும் இருக்கிறது” என்பது போல உணர்ந்தேன்.

ஆயன் இயேசு கூட நடக்க எனக்குக் கவலை இல்லை. கையப்பிடிச்சு கூட நடக்க அவர் வேண்டும் என்பதை உணர்கிறேன். இவ்வாறு என் வாழ்வில் பல அற்புதங்களை நிகழ்த்தி இன்றளவும் எனைக் காக்கும், என் குரல் கேட்கும் இறைவனுக்கு நன்றி.

பிறக்கும் எந்தக் குழந்தையாயினும், எம் மதத்தினராய் இருந்தாலும் இயேசு எனும் உனது நாமத்தை முதலில் அவர்கள் செவிகளில் ஓதியதில் பெருமையடைகிறேன்.

உம்மை மட்டும் நம்பி, நான் பிறருக்கு அளித்த சிகிச்சைகளில், குணமளிக்கும் செவிலியாய் இருந்ததில் பெருமையடைகிறேன்.

மீன் குழம்பு வைத்தாலே வீட்டில் பாத்திரம் கழுவ மறுத்த நான், சகிக்கமுடியா துர்நாற்றங்களைச் சகித்துக்கொண்டு செவிலியாய் பணி செய்வதை நினைத்து பெருமைகொள்கிறேன்.

**“என் வாழ்க்கை இறைவன் தந்தது.**
**என் துறவற அழைப்பு இறைவன் தந்தது.**
**இந்த வாழ்வில் 25 வருடத்தைக் கடக்கச் செய்தது இறைவனின் சித்தமே”.**

**“என் ஆயன் ஆண்டவர் எனக்கேதும் குறையில்லை”** என்பதை மட்டும் எந்நாளும் மறக்கவில்லை. எனக்குத் துணையாய் இருக்கும் இறைவனுடன் தொடர்ந்து பயணிக்க வாக்களித்து நிறைவு செய்கிறேன்.

**எனை மாற்றிய இறைவா நன்றி!**
**எனைத் தேற்றிய இறைவா நன்றி!.**
**நன்றி என் இறைவா!**



## "தாயின் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்: நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்" (எரேமி 1:5).



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : **சகோ. கிறிஸ்டி பிரிய சித்ரா** |
| சபை எண் | : 1111 |
| பிறந்த ஊர் | : வடகாடு |
| ஞானஸ்நானம் பெற்ற இடம் | : அறந்தாங்கி - ஏகனிவயல் |
| மறைமாவட்டம் | : தஞ்சாவூர் |
| தந்தை பெயர் | : நடேசன் |
| தாய் பெயர் | : வெரோனிக்கா |
| உடன் பிறந்தோர் | : சகோதரன் - 1 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| நிரந்தர அர்ப்பணம் | : 07.05.2004 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

### இளமைப்பருவம்:

"ஆண்டவருடைய மனதை அறிபவர் யார்?
அவருக்கு ஆலோசகராய் இருந்தவர் யார்?" (உரோ: 11:34)

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி வட்டத்தில் அமைந்துள்ள பசுமையான 18 பட்டிகளைக்கொண்ட ஒரு பெரிய ஊராட்சியான வடகாடுதான் நான் பிறந்த ஊர். பெற்றோருக்கு மூத்த மகளாகப் பிறந்த நான் செல்லமாக வளர்க்கப்பட்டேன். தீவிரமான இந்து சமய பாரம்பரியத்தைப் பின்னணியாகக் கொண்டவள் நான். அம்மாவை விட அப்பா மீது அதீத பாசம் கொண்டவளாக வளர்ந்தேன். அப்பாவுக்கும் எனக்குமான இடைவெளி கொஞ்சமும் குறையாத நேரத்தில், ஆண்டவரின் வழிநடத்துதல் வேறு விதமாக இருந்தது. என் 8 -வது வயதில் ஒரு பெரிய விபத்திலே என் தந்தையை இழந்தேன். கடவுள் என் வாழ்க்கையில், என் அழைப்பில், நல்ல தோட்டக்காரராக விளங்கினார். செடி வளரத் தேவையில்லாதக் களைகளை அவரே நீக்கிவிட்டார்.

### முதல் அழைப்பு:

தந்தையின் இறப்பிற்குப் பின் ஒருநாள் குடும்பத்தில் சொத்துத் தகறாறு ஏற்பட்ட நேரம் அது. கணவனை இழந்தவளாகத் தனிமையில் நின்ற என் தாய்க்கு உறவுகள் உதவிசெய்ய முன் வரவில்லை. எங்கள் சொத்துக்கள் மட்டும் தேவை என்ற நிலையில் உறவுகளால் என் உயிருக்கும், என் தம்பியின் உயிருக்கும் ஆபத்து என்று நினைத்து, உலக வாழ்வை வெறுத்தவளாக, ஒரு நாள் இரவு உறவினர் உறங்கிய நேரம் பார்த்து, எங்கள் இருவருக்கும் புத்தாடைகள் அணிவித்து, தானும் திருமண ஆடை அணிந்து, எங்கள் வீட்டருகில் இருந்த கிணற்றில் எங்களையும் தள்ளி, தானும் இறந்து விட நினைத்து,

உறங்கிக்கொண்டிருந்த என் தம்பியைத் தோளில் சுமந்துகொண்டு, என்னையும் கரம் பிடித்து, தோட்டத்துப் பக்கமாக அழைத்துக்கொண்டு சென்றார்கள் என் அம்மா. நானும் தாத்தா வீட்டிற்குத்தான் செல்கிறோம் என்று நினைத்துச் சென்றேன்.

கிணற்றடிக்கு வந்த பிறகுதான் சூழ்நிலை புரிந்தது. கிணற்றுத் தண்ணீரில் தெரிந்த நிலாவைப் பார்த்ததும், என் தந்தை அடிக்கடி நிலாவைக் காட்டி, ‘‘நிலாவைப் பார்க்கும் போதெல்லாம் கடவுள் உன்னைப் பார்க்கிறார் என்பதை மறவாதே. கடவுள் பார்வையில் எதுவும் தப்பாது. உன் வாழ்நாளில் தவறு செய்ய வேண்டிய சூழல் ஏற்படும் போதெல்லாம் இதை மறவாதே’’ என்று எனக்கு சொன்னது நினைவுக்கு வந்தது. அம்மாவிடம் கரம் கூப்பி கடவுளுக்காக எங்களை வாழவிடுங்கள். நாம் இதை செய்ய வேண்டாம்மா என கண்ணீரோடு கூறினேன் என்று பின்னாளில் அம்மா சொன்னது நினைவிருக்கிறது. நான் கெஞ்சி கேட்டுக்கொண்டிருந்த நேரம், ஏதோ ஒரு சக்தி தன் கரத்தால் பிடித்து இழுத்துச் சென்றது. அன்று நாங்கள் மூவரும் உயிர் தப்பினோம்.

சகோ. ரோசி அவர்களின் தந்தை எனக்கு பெரியப்பா ஆவார். இவரையும் இவருடைய குடும்பத்தாரையும் என் வாழ்நாள் முழுவதும் மறக்க இயலாது. இவர்கள் அனைவரும்தான் என் வாழ்க்கையில் மிகப்பெரிய ஊன்றுகோலாக இருந்தவர்கள். பெரியப்பா அடுத்த நாளே எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அங்கு இருந்த சூழலைப் புரிந்துகொண்ட அவர், விரும்பி கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் மூவரும் அவர் பாதுகாப்பில் இருதயபுரம் சென்றது என் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.

**பள்ளிப்பருவம்:**

இருதயபுரத்தில் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த என் ஆசிரியர்களையும், சகோதரிகளையும் என்னால் மறக்க இயலாது. அவர்களை நான் எப்போதும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். அவர்கள்தான் நான் கிறிஸ்தவளாக முதல் வித்தை விதைத்தவர்கள். திருமுழுக்குப் பெறாத அந்த நாட்களில், நான் மறைக்கல்வி கற்றுக்கொள்ள மிகவும் ஆசைப்பட்டேன். நான் இந்துவாக இருந்தேன் என்பதே அந்த பள்ளியை விட்டு நான் வெளியேறும் வரை யாருக்கும் தெரியாது என்று நினைக்கிறேன். காரணம் சகோ. ரோசி அவர்கள் குடும்பம் முழுவதும் மதமாற்றம் பெற்றவர்களாக இருந்த காரணத்தால் யாரும் என்னை மறைக்கல்வி வகுப்பிற்கு தடை சொல்லவில்லை. அங்கு நான் இயேசுவைப் பற்றி நிறைய கற்றுக்கொண்டேன். எட்டாம் வகுப்பு இறுதியிலே மறை மாவட்ட அளவில் நடைபெற்ற மறைக்கல்வித் தேர்விலே நான் முதல் தரத்தைப் பிடித்திருந்தேன்.

நான் இருதயபுரத்தில் விடுதியிலே தங்கிப் படித்துக் கொண்டிருந்த நேரம், விடுதி மாணவிகளைக் கவனித்துக் கொண்டிருந்த சகோ. ரோசாலி எங்களுக்கு நற்கருணை வீரன் புத்தகங்களைக் கொடுத்து படிக்கச் செய்து, அதை நாடகங்களாகப் போடச் சொல்வார்கள். அது எனக்கு இயேசுவைப்பற்றி மட்டுமல்லாது நிறைய புனிதர்கள் மீதும் பற்றுக்கொள்ளச் செய்தது. எட்டாம் வகுப்பிற்குப் பின் புதுக்கோட்டை என்னை மறை ஞானத்திலே வளர்த்தெடுத்தது. அங்கு விடுதி மாணவிகளைக் கவனித்துக் கொண்டிருந்த சகோ. ஜெசி அவர்கள் நான் ஆலயப் பாடற்குழுவோடு சென்று பாடல் பாடவும், நடனம் ஆடவும், நாடகங்கள் சொந்தமாக தயாரித்து நடிக்கச் செய்வதிலும் அதிக ஊக்கம் கொடுத்தார்கள்.

நான் 9-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது நான் முழுமையாக இயேசுவை ஏற்றுக்கொள்ள ஊக்குவித்ததும் அவர்கள்தான். அங்குதான் முதல் முறையாக ஞானஸ்நானமும், புதுநன்மையும் பெற வாய்ப்புக் கிடைத்தது. இதில் மறக்க முடியாத பெரிய சந்தோசம் என்னவென்றால், எல்லாரும் ஞானஸ்நானம் முதலில் பெற்று புது நன்மை இரண்டாவதாகப் பெறுவார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த பாக்கியம் முதல் வாரம் ஞாயிறன்று பாவ சங்கீர்த்தனம் செய்து நானும் என் குடும்பத்தாரும் இயேசுவை நற்கருணை வடிவில் பெற்றோம். அடுத்த வார ஞாயிறன்று எங்களுக்கு பெயர்சூட்டும் விழா (ஞானஸ்நானம்) நடைபெற்றது. இதை என் வாழ்நாளில் மறக்க இயலாது.

ஆண்டவர் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது எல்லா தேவைகளையும் ஆண்டவர் பார்த்துக்கொள்வார் என்பதற்கு முழு சாட்சி நானே. என் வாழ்க்கையில் மறக்க முடியாத மற்றொரு நபர் எங்களைப் பொறுப்பெடுத்துக்கொண்ட எங்கள் ஆன்ம குரு அருட்தந்தை சவரிமுத்து அவர்கள். எங்களுக்கு முகவரியாய் அமைந்தவர் இவர். இவரையும் இவருடைய குடும்பத்தாரையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன். எங்கள் மூவரையும் இவர்கள் குடும்பத்தோடு இணைத்துக்கொண்டு எல்லா நேரத்திலும் எங்களைத் தாங்கியவர்கள்.

**அழைத்தலுக்குள் அழைத்தல்:**

12 ஆம் வகுப்பு முடித்தவுடன் என் வாழ்க்கையைப் பற்றி முடிவெடுக்கும் நேரம் வந்தது. நான் இருதயபுரத்தில் விடுதியிலே தங்கிப் படித்துக்கொண்டிருந்த நேரத்தில் எனக்குக் கிடைத்த கனவுகளும் சில காட்சிகளும் என்னைத் துறவு வாழ்க்கைக்கு ஊக்கமூட்டியது. புனித அன்னாள் சபை, சார்லஸ் பொரோமியோ சபை போன்ற துறவற சபைகளில் நடத்தப்பட்ட இறை அழைத்தல் முகாமுக்குச் சென்று வந்தேன். இருப்பினும் முடிவெடுக்க முடியவில்லை. சகோ. அந்தோனியம்மாள், அன்னை பவுலின் இவர்கள் இருவரும்தான் அடைக்கல அன்னை சபையைத் தேர்ந்துகொள்ள உதவியவர்கள். அவர்களையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

சபைக்குள், நான் நுழைந்தபின் என்னை வளர்த்தெடுத்தவர்கள் முன்னாள் சபைத் தலைமை அன்னையர்கள் அன்னை பிரிட்டோ, அன்னை பாத்திமா ராணி, அன்னை லூர்து மேரி அவர்கள். அவர்களோடு உருவாக்கு நிலையில் எங்களைக் கவனித்துக் கொண்ட சகோ. கிளாரா, சகோ. பென்சி, சகோ. டெரன்சியா, சகோ. அருள்மேரி, சகோ. தனசீலி என நம் சபையின் இன்னாள் தலைமை அன்னை மரிய பிலோமினா வரை இவர்கள் அனைவரையும் எந்நாளும் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

**அர்ப்பணம்:**

1998 -ஆம் ஆண்டு என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஆண்டு. முதன் முதலாக என்னுடைய முதல் அர்ப்பணத்தை அளித்த நாள். இந்த ஆண்டு வார்த்தைப்பாடு கொடுத்த எங்களுக்கென்று சில மறக்க முடியாத புதிய அனுபவங்கள் உண்டு. புகுமுகத்துறவு நிலையிலே அதுவரை நைட்டி அனுமதிக்கப்படவில்லை. எங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. முதன் முதலாக எங்கள் குழுவினருக்குத்தான் புடவை அறிமுகப்படுத்தப்பட்டது. முதன் முதலாக பாக்கெட் மணி ரூ.120/- பெற்றவர்களும் நாங்கள்தான். சபையானது மூன்று மாநிலமாகப் பிரிக்கப்பட்டதும் இந்த ஆண்டில் தான்.

ஆண்டவருடைய வியத்தகு வழிநடத்துதலை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். என்னுடைய வாழ்வில் என்னைப் பொறுப்பெடுத்து வழிநடத்திய மூன்று உறவுகள் உண்டென்றால் எனது பெரியப்பா குடும்பம், என் ஆன்மீக வழிகாட்டி அருட்தந்தை சவரிமுத்து, நான் சார்ந்த இந்த அடைக்கல அன்னை சபை. இந்த மூவருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு என் பெற்றோர் சார்ந்த உற்றார், உறவினர் உண்டென்றாலும் நான் மதம் மாறிவிட்டேன் என்ற காரணத்திற்காக, அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட எல்லா இழப்புகளுக்கும் நாங்கள்தான் காரணம் என்றும், அவர்கள் குல சாமி கோபித்துக்கொண்டதால்தான் இழப்புகள் ஏற்பட்டதாகவும், என் அம்மாவின் இறப்பிற்குப் பின்பு பேசியதாக அறிந்தேன். என் இயேசுவுக்காக அனைத்தையும் குப்பை எனக் கருதியதால் உறவுகள் அனைத்தையும் உதறித்தள்ளினோம்.

என் வளர்ச்சியில் எனக்குத் துணை நின்ற, நான் கடந்து வந்த என்னுடைய குழுமங்களான முடிச்சூர், மன்னார்குடி, மாமண்டூர், ஆழ்வார்பேட்டை, கோவிலானூர், இருதயபுரம், புதுக்கோட்டை, இப்பொழுது நான் இருக்கும் தூத்துக்குடி கால்டுவெல் காலணி வரை எல்லா இல்லத் தலைமைச் சகோதரிகளையும், தலைமை ஆசிரியச் சகோதரிகளையும், என்னோடு உடனிருந்த அத்தனை சகோதரிகளையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன். மூத்த சகோதரிகள் முதல் இளைய சகோதரி வரை அனைவரும், ஒவ்வொரு வகையிலே நான் வளர உதவினார்கள்.

நான் கற்றுக்கொண்ட கலைகளைக் கல்விப் பணியோடு இணைத்து மாணவச் செல்வங்கள் வளர பணியாற்றியதில் மருத்துவர், தாதியர், கலைக்குழுவினர், துறவிகள், குருக்கள் என என்னிடம் பயின்ற மாணவர்களின் வளர்ச்சியில் இவர்களை உருவாக்க உதவிய இறைவனுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக என்னுடன் வார்த்தைப்பாடு கொடுத்த என் குழுமச் சகோதரிகளுக்காக நன்றி கூறியே ஆக வேண்டும். என்னுடைய சந்தோசங்களிலும், துன்பங்களிலும் தோள் கொடுத்தவர்கள் அவர்கள்.

**“ஆண்டவர் செய்த எல்லா நன்மைகளுக்கும் நான் என்ன கைமாறு செய்வேன்? முழு மனதோடு ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன்”.**



# "ஏழைகளுக்குத் தாராளமாய் கொடு; இதனால் இறை ஆசி முழுமையாக உனக்குக் கிடைக்கும்" (சீரா 7:32).



சகோதரியின் பெயர் : சகோ. தை. ஜென்மராக்கினி இந்திரா
சபை எண் : 1112
பிறந்த மண் : திருமலைசமுத்திரம்
பங்குத்தளம் : முன்னயம்பட்டி
மாவட்டம் : தஞ்சாவூர்
தந்தை பெயர் : திரு. ஆ. தைனீஸ் ராஜ் (எ) தருமராஜ்
தாய் பெயர் : மரியம்மாள்
ஞுவநி ஆழவாநச : ஃபிளோரன்ஸ் மேரி
உடன் பிறந்தோர் : சகோதரர்கள் - 2, சகோதரிகள் - 3
முதல் அர்ப்பணம் : 08.05.1998
நிரந்தர அர்ப்பணம் : 07.05.2004
வெள்ளி விழா : 04.05.2023

**நன்மையின் நாயகனுக்கு நன்றிகள்:**

✝ **"இயேசுவைப் பின்பற்றி வருவோர்க்கு இம்மையில் பன்மடங்கும் மறுமையில் நிலைவாழ்வும் பெறாமல் போகார்"** (கலாத்தியர் 1:15) என்ற இறைவார்த்தைக்கேற்ப தாயின் வயிற்றில் இருந்தபோதே என்னைத் தமக்கென ஒதுக்கி வைத்து உமது அருளால் என்னை அழைத்த கடவுளே உமக்கு என் நன்றி. எனக்குப் பன்மடங்கு ஆசீர்வாதங்களைக் கொடுத்து, பல அரிய வாய்ப்புகள் வழி அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளச் செய்த உம் அருளுக்கு நன்றி.

✝ **"ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண்போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்"** (1 கொரிந்தியர் 15:5) என்ற இறைவார்த்தையை வாழ்வாக்க உதவிசெய்த இறைவா! உமக்கு நன்றிகள். ஆண்டவருக்காக ஆலயப்பணியை ஆர்வமாய் செய்ய ஆக்கத்தைக் கொடுத்து வழிநடத்திட்ட இறைவா! உமக்கு நன்றி.

✝ ஆலயத்தில் யார் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஆண்டவா உம் அருகில் நான் இருக்க, உம் வார்த்தைகளை உள்வாங்க, ஆரவாரம் இல்லாமல், பங்கு ஆலயத்தில் ஒவ்வொரு வாரமும் எழுந்தேற்றம் செய்யப்படும் நேரங்களில் எல்லாம் ஆர்வமாய் உம்மை ஆராதிக்க வாய்ப்புக்கொடுத்த இறைவா! உமக்கு நன்றி.

✝ மனிதருக்காக அன்றி கடவுளுக்காகவே செய்வதுபோல் நன்மனத்தோடு கிறிஸ்துவின் பணியாளராக பணிசெய்யும் ஆர்வத்தை என்னில் ஏற்படுத்திய இறைவா! உமக்கு நன்றி.

✝ "வலுவற்றோருக்கு உதவுங்கள்." (1 தெசலோனிக்கர் 5: 4) என்ற இறைவார்த்தைக்கேற்ப என்னிடம் பயிலும் குழந்தைகளில் மெல்ல கற்போருக்கு அதிக கவனம் செலுத்தி உதவிசெய்யக்கூடிய மன வலிமையைக் கொடுத்த இறைவா! உமக்கு நன்றி.

✝ **"நாங்கள் பயனற்ற பணியாளர்கள் எங்கள் கடமையைத்தான் செய்தோம் எனச் சொல்லுங்கள்" (லூக்கா 17:10).** என்ற இறைவார்த்தையை உள்வாங்கிக்கொண்டு கடந்த 25 ஆண்டுகளும் பலனை எதிர்பார்க்காமல், பயனற்ற பணியாளனாக என்னை உருவாக்கிக் கொண்டு கடமையைச் செய்ய ஊக்கமளித்த இறைவா! உமக்கு நன்றி!

✝ **"உனக்கு நான் முடிவில்லா அன்பு காட்டியுள்ளேன். எனவே பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்" (எரே 31: 3)** இறைவா! உம் ஈர்ப்பு விசையால்தான் நான் அழைப்புப் பெற்றேன் என்பதை உறுதியாகக் கூறுவேன். 'நான் ஒரு துறவியாகத்தான் ஆவேன். அதுமட்டுமல்ல உமக்கு மட்டுமே பணி செய்வேன்' என்ற தீராத தாகம் என்னுள் இருந்து கொண்டே இருந்தது.

✝ SMMI அருட்சகோதரிகளால் ஈர்க்கப்பட்ட நான் அந்த சபையில் என்னை அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று ஆர்வமாய் சென்றேன். ஆனால் 'இங்கு உனக்கு அழைப்பு இல்லை, வேறு எங்கோ உண்டு' என்று சொல்லி அனுப்பிய அவர்கள் நான் ஆசிரியப் பயிற்சி பெற எனக்கு உதவி செய்வதாகவும் சொன்னார்கள். 'உங்களில் ஒருவராக என்னை ஏற்றுக்கொள்ளாத பொழுது உங்களிடமிருந்து எந்த உதவியும் எனக்கு வேண்டாம் என்பதை மென்மையாக மறுத்துவிட மன தைரியம் தந்தமைக்கு நன்றி இறைவா!

✝ தஞ்சை குழந்தை இயேசு ஆலயம் சென்று 'எனக்கு சிஸ்டராகத்தான் ஆசை, நான் சிஸ்டர் ஆனால் உமக்கு மட்டுமே பணி செய்வேன்' என்பதே ஒவ்வொரு வியாழக்கிழமையும் என் புலம்பலாக இருந்தது.

✝ அடைக்கல அன்னை சபையில் எனக்கென இடத்தை ஏற்பாடு செய்து, அற்புதமான சபையையும், சகோதரிகளையும் கொடுத்து இந்நாள்வரை உடன் இருந்து வழிநடத்திவரும் இறைவா! உமக்கு என் உளம் நிறைந்த நன்றி.!!!

**ஆசைகள்:**

- அருட்சகோதரியாக ஆசை. அப்படியானால் சிறந்த ஆசிரியரும், வழிகாட்டியும், ஊக்கமூட்டுபவருமான SMMI அருட்சகோதரி அடைக்கலாவைப் போல வாழ ஆசை.
- சிறிய சிறிய செயல்களால் சின்ன ராணி ஆன குழந்தை தெரசாவாக ஆசை. சிறு பிள்ளைகளை அன்பு செய்த இயேசுவாக ஆசை.
- சிறிய சகோதரர் என்றும் எளிய சகோதரர் என்றும் அழைக்கப்பட அறிவுறுத்திய பிரான்சிஸ் அசிசியாரின் வார்த்தைகளை வாழ்வாக்க ஆசை.

**என்னுள் இருக்கும் ஆசைகளை அவ்வப்போது நிறைவேற்றித் தரும் இறைவா உமக்கு நன்றி.!!!....**

**மூவொரு இறைவனின் பங்கு:**

நான் வாழ்ந்த குழுமங்களில் மூன்று நபர்கள் மட்டுமே இருக்கும் வாய்ப்பே அதிகமாக இன்று வரை இருக்கிறது. ‘உங்கள் குழுமத்தில் எத்தனை பேர்’ என்று கேட்கப்படும் பொழுதெல்லாம் ‘நாங்கள் மூவொரு இறைவனாக இருக்கிறோம்’ என்று சொல்லும் வாய்ப்பைக் கொடுத்த இறைவா! உமக்கு நன்றி. என் பெயரை மூன்று விதமாக அழைக்கப்படுவதில் கூட மூவொரு இறைவன் என்னுள் இருந்து, என்னுடன் செயல்படுகிறார் என்பதை உணர்கிறேன்.

**ஜென்மராக்கினி இந்திரா**

| | | |
|---|---|---|
| குடும்பத்தில் | - | இந்திரா |
| சபையில் | - | ஜென்மா |
| பணித்தளங்களில் | - | ராக்கினி |

**நான் பின்பற்றிய புனிதை:**

புனித குழந்தை தெரசாவைப் போன்று சின்ன சின்ன செயல்களைச் சிறப்பாகச் செய்ய, அந்த செயல்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து செய்ய, எனக்கு நல்ல சிந்தனைகளைத் தந்த இறைவா! உமக்கு நன்றி. நான் வாழ்ந்த குழுமங்களில் பெரும்பாலும் நானே சிறிய சகோதரியாக இருந்து வருகிறேன் என்பதை நினைக்கும்போது, நானும் குழந்தைத் தெரசம்மாளைப் போல ‘சின்னராணி’ யாக நான் வாழ்கிறேன் என்று பெருமை கொள்கிறேன். சின்ன வயதில் பிரான்சிஸ் அசிசியைப் பற்றிய கனவுகள் அற்புதமாக எனக்கு வந்ததுண்டு. விருப்ப நிலையினராக இருந்தபோது அசிசி பிரான்சிஸ் படத்தைப் பார்த்தபின் என் கனவும், இந்த படத்தின் காட்சிகளும் ஒன்றாக இருந்ததை நினைத்து ஆச்சர்யப்பட்டிருக்கிறேன். ‘சின்ன சிஸ்டர்’ என்று நான் அழைக்கப்பட உதவிய இறைவா உமக்கு நன்றி!!!..

**என்னைப் பக்குவப்படுத்திய பணித்தளங்கள்:**

- விவேக் நகர்
- மன்னார்குடி
- கால்டுவெல் காலணி
- சம்மனசூர்
- மிடாலம்
- திண்டுக்கல் மாநில இல்லம்
- மைக்கேல்பட்டி
- கால்டுவெல் காலணி
- தேவதானம்

**நான்கு பேர் சொன்ன நல்லவைகள்:**

ஆசிரியர் கிறிஸ்டி விக்டோரியா:

என்னை ‘ஐச்சடக்கி’ என்று அழைத்தார்கள் காரணம் கேட்டேன். ஐம்புலன்களையும் அடக்கி, யாரிடமும், யாரைப்பற்றியும் பேசமால் மௌனமாய் இருப்பதால் இந்தப் பெயர் என்று சொன்னார்கள்.

**மேரி பாட்டி:**

'ஏனோக்கு' என்று அழைத்தார்கள். மேரி பாட்டி சொல்லித்தான் தெரியும் "ஏனோக்கு கடவுளோடு நடந்து கொண்டிருந்தான்." (தொடக்க நூல் 5: 24) என்ற இறைவார்த்தை. நான் ஏனோக்கைப் போல் கடவுளோடு இருக்கிறேன் என்று வயது முதிர்ந்த பாட்டியின் வார்த்தைவழி கேட்டபோது மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்.

**பாத்திமா:**

"என் அனுபவத்தில் உணர்ந்தவரை மற்றவர்களை விட உங்கள் செபத்திற்கு வல்லமை உண்டு என்பதை உறுதியாகக் கூறுவேன்" என்று கூறுவார். என் செபத்திற்கு செவிமடுத்து அற்புதங்கள் நிகழ்த்தும் இறைவா! உமக்கு நன்றி.

**இயேசு ராஜ்:**

"மாதாவே எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். நிச்சயம் நான் சுகம் அடைவேன்." இவர் மட்டுமல்ல பல மாணவச் செல்வங்களும் அன்னை மரியின் இடத்தில் வைத்து என்னைப் பார்ப்பதை நான் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். இந்த பாக்கியத்தைத் தந்த இறைவா நன்றி.

**ஜெரால்டு - விஜி தம்பதியினர்:**

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்
மகனை சான்றோன் எனக் கேட்டத்தாய்"

என்னை சான்றோன் என்று ஜெரால்டு - விஜி தம்பதியினர் சொன்னபொழுது என்னைப் பெற்றத் தாயும், என்னை வளர்த்த தாயான என் பாட்டியும் விண்ணுலகில் இருந்து மகிழ்ச்சியடைவார்கள் என்ற நம்பிக்கை என்னில் ஏற்பட்டது. 'உங்கள் பெற்றோர் உங்களை நன்றாக வளர்த்திருக்கிறார்கள்' என்ற வார்த்தைகளில் உள்ள பெருமைகள் அனைத்தும் என் பெற்றோரையேச் சேரும்.

"ஆண்டவனை அலங்கரிப்பதில் அர்ப்பண மனப்பான்மை, ஆண்டவனை ஆராதிக்கும் ஆர்வம் நிறைந்த மனம் இவையெல்லாம் எங்கள் உள்ளத்தை கவர்ந்திழுக்கின்றது" என்ற பொதுநிலையினரின் வார்த்தைகள்வழி கேட்கும்போது உமது அன்புப் பிள்ளையாக என்னை அடையாளப்படுத்திய இறைவா உமக்கு நன்றி!!!...

**அருட்பணி. செட்ரிக் பீரிஸ்**

குழந்தை இயேசு ஆலயப்பங்கு ஒரு அருட்பணியாளரை இழக்கிறது என்று வருத்தம் அடைகிறேன் என்பதை குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்தினார்கள். என்னை ஒரு அருட்பணியாளராக அடையாளப்படுத்திய இறைவா என் இதயம் நிறைந்த நன்றி.

**உதவிய நல் உள்ளங்களுக்கு நன்றிகள்:**

- அடைக்கல அன்னை சபையில் இணைய எனக்கு வழிகாட்டிய சகோ. ரோஸ் அவர்களுக்கு நன்றிகள் பல.
- நம்பிக்கையோடு என்னை அர்ப்பண வாழ்வில் மகிழ்ச்சியோடு அர்ப்பணிக்கத் துணை

நின்ற அன்னை ஜான் தே பிரிட்டோ, அன்னை பாத்திமா ராணி, அன்னை லூர்து மேரி ஆகியோர்க்கு பணிவான நன்றிகள்.

- நோயுற்ற குழந்தையின் மீது அதிக அக்கறை காட்டும் தாயைப்போன்று நான் விருப்பநிலை, தேர்வு நிலைகளில் இருந்தபோது, நோயுற்ற நேரங்களில் எல்லாம் என் மீது அதிக அன்பும், பாசமும் கொண்டு, கருணையோடு பார்த்துக்கொண்ட சகோ. கிளாரா அவர்களுக்கு நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.
- புகுமுகத்துறவியாக இருந்த போது, நான் நலம் குன்றிய தருணங்களில் எல்லாம் அன்பும், அக்கறையும்காட்டி நலன் பெற பல வழிகளில் உதவி செய்த சகோ. பென்ஸி அவர்களுக்கு உள்ளத்துக்குள் கோடி நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.
- அறிவிலும், ஆன்மீகத்திலும் வளர உதவிய சகோ. டெரன்சியா அவர்களுக்கும், என்னுடைய உருவாக்கத்திற்கு உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.
- தனித்திறமைகள் பெற்று பல்வகையில் வளர உதவிய சபையின் முன்னாள் சபைத் தலைமை அன்னையர்கள், குறிப்பாக சபையின் இந்நாள் தலைமை அன்னை மதிப்பிற்குரிய அன்னை மரிய பிலோமி (706) அவர்களுக்கும் மாநிலத் தலைமைச் சகோதரிகள், குழுமச் சகோதரிகள் அனைவருக்கும் கரம் கூப்பி நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.
- என் வளர்ச்சியில் உதவிய நலம் விரும்பிகள், தோள் கொடுத்த தோழமை நெஞ்சங்கள், பணித்தளங்களில் பணிகளைச் சிறப்பாகச் செய்ய கிடைக்கப் பெற்ற இறைமக்கள், ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றிகள் பல.
- என்னுடன் அர்ப்பண வாழ்வை தொடங்கி எனக்கு ஆணிவேராக இருந்து ஊக்கமூட்டும் என் அன்புக்குரிய Companions அனைவருக்கும் பாசமான நன்றிகள்.

**இறைவா! இனியும் என் வாழ்வில் தொடர்ந்து பயணித்தருளும்**
**பணிவாழ்வில் சிறக்க அருள்தாரும்!!!....**



# “நீங்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்; அவரது அன்பிற்குரிய இறைமக்கள்” (கொலோ 3:12).



| | |
|---|---|
| அருட்சகோதரி | : **சகோ. சூ. ஹெய்ல்மேரி** |
| சபை எண் | : 1113 |
| ஊர் | : தினையூரணி |
| பங்கு | : சோமநாதபேரி |
| மாவட்டம் | : திருநெல்வேலி |
| மறைமாவட்டம் | : தூத்துக்குடி |
| தந்தை | : தை. சூசைமிக்கேல் |
| தாய் | : சூ. தங்கமரியாள் |
| உடன் பிறந்தோர் | : சகோதரர்கள் - 2, சகோதரிகள் - 3 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| இறுதி அர்ப்பணம் | : 07.05.2004 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

ஊற்றிலிருந்து தினை பயிர் செய்து வந்ததால் தினையூரணி என்று பெயர் தாங்கிய புனித சலேத் அன்னையை பாதுகாவலியாகக் கொண்ட ஊர்தான் நான் கருவறையிலிருந்து வெளியே வந்து கண் விழித்த ஊர். விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்த என் பெற்றோர் புனித சலேத் அன்னையின் பக்தர்கள். என்னையும் பக்தியில் வளர்தெடுத்தார்கள். என் பெற்றோருக்கு நான் 6-வது செல்ல மகளாகக் கடைக்குட்டியாக பிறந்தேன். மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டேன்.

தொடக்கக் கல்வியை என் சொந்த மண்ணில் கற்றேன். என் தந்தையை இறைவன் வெகு விரைவாக அழைத்துக் கொண்டார். எனவே என் நடுநிலைக் கல்வியை மும்பையிலும், உயர்நிலைக் கல்வியை சென்னைக் கோவளத்திலும், புனித கார்மேல் அன்னையின் அரவணைப்பிலும் பயின்றேன். தந்தையின் இழப்பு என் மனதை மிகவும் பாதித்தது. புனித கார்மேல் அன்னை என்னை கரம்பிடித்து தன்னோடு அரவணைத்துக் கொண்டார். நான் மிகவும் அமைதியானவள், மௌனத்தையே ஆடையாகக் கொண்டு எப்பொழுதும் ஆழ்நிலை தியானம் செய்தவாரே வாழ்ந்து வந்தேன். நான் விடுதியில் தங்கி படிக்கும்போது நான் யாருடனும் அதிகம் பேசாமல், என்னையே தனிமைப்படுத்திக் கொண்டு, புனித கார்மேல் அன்னையின் அருகே அமர்ந்துகொண்டு அமைதியாக இருப்பதிலே ஆனந்தம் கொள்வேன். தொடர்ந்து மேல்நிலைக் கல்வியை தூத்துக்குடி புனித பனிமய அன்னையின் பாதத்தடியில் பயின்றேன்.

என் தாயின் கருவில் நான் உருவானது முதல் ஆண்டவர் தமக்கெனத் தேர்ந்தெடுத்து தமது அன்னை வழியாக என்னைப் பாதுகாத்து வழிநடத்தி வந்ததும், அன்னையின் வழி இறைவன் என்னுடன் இருந்ததையும் உணர்ந்தேன். என் வாழ்வில் மறக்க முடியாத

மகிழ்ச்சியான நாள், நான் முதல் வார்த்தைப்பாடு கொடுத்த நாள். பல சபைகளிலிருந்து எனக்கு அழைப்பு வந்தபோதும் புனித அடைக்கல அன்னை வழியாக ஆண்டவருக்கு என்னை முழுமனதுடன் அர்ப்பணித்தேன். அன்று நான் இறைவனின் சிறப்பான அருளையும், ஆசீரையும் பெற்றதாக உணர்ந்தேன். என் மூத்த அக்கா அருட்சகோதரியாக ஆசைப்பட்டாள். ஆனால் ஆண்டவர் என்னைத்தான் தேர்ந்துக் கொண்டார்.

**பணி செய்தப் பணித்தளங்கள்:**

- முடிச்சூர்
- விவேக் நகர்
- திண்டுக்கல்
- கொடைக்கானல்
- கூடல்நகர் – மதுரை
- நடுவைக்குறிச்சி
- கால்டுவெல் காலணி
- மைலாப்பூர்
- அசோக் நகர்
- பொய்யூர்
- இராஜாவூர்
- புதுப்பட்டணம்
- தூத்துக்குடி
- திருத்துறைப்பூண்டி

நான் அருட்சகோதரியாக அர்பணிக்கப்பட்ட நாள் முதல் அனைத்து இல்லங்களிலும் மிகவும் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வருகிறேன். நான் வாழ்ந்த குழுமங்களில் பல அனுபவங்களைத் தந்து என்னுடன் பயணித்த அருட்சகோதரிகளையும், என்னை பலப்படுத்திய இல்லத் தலைமைச் சகோதரிகளையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

**நினைவில் நின்றவர்கள்:**

- எனது பள்ளிப் பருவத்தில் என்னை உற்சாகப்படுத்தி ஊக்குவித்து எனக்கு உதவி செய்த அருட்சகோ. அசும்சியா மற்றும் சகோ. பிளாசிடா அவர்களுக்கு எனது பாசமிகு நன்றிகள்.
- நான் படிக்க சிரமப்பட்டபோதெல்லாம், என் அருகில் இருந்து பாசத்தோடும், அன்போடும் எனக்கு எளிமையாகக் கற்றுக் கொடுத்த என் தோழி சவரியம்மாளுக்கு எனது நன்றிகள்.
- எப்பொழுதும், எல்லா வகையிலும் என்னைப் பாசத்தோடு வழிநடத்தி விண்ணில் வாழும் என் அன்பு அத்தை சகோ. ஹீயூபர்ட் அவர்களுக்கு எனது அன்பு கலந்த நன்றிகள்.
- நான் சோர்வுற்று தளர்ந்த நேரத்தில் பாசத்தோடும், அன்போடும் தனது செபத்தினால் என்னைத் தாங்கி வழிநடத்தியவர்கள் சகோ. அந்தோணி குருஸ், சகோ. பூங்கோதை

மற்றும் சகோ. சூசையம்மாள் இவர்கள் அனைவரையும் நன்றியோடு நினைத்து சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

❖ எனது விருப்ப நிலை, புகுமுகத் துறவு நிலைகளிலெல்லாம் பல வகுப்புகள், கருத்தரங்குகள், தியானங்கள் மூலம் பயிற்றுவித்து உருவாக்கிய அருட்சகோதரிகள் மற்றும் அருட்தந்தையர்களையும், மேலும் தொடர் உருவாக்கப் பயிற்சி அளித்தவர்களையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

❖ நான் அடைக்கல அன்னை சபைக்கு அர்பணிக்கப்பட்ட நாள் முதல் இந்நாள் வரை எனக்கு எந்தவித குறையும் இன்றி என்னைப் பாதுகாத்து வழிநடத்தி என் தேவைகளை எல்லாம் நிறைவேற்றி வரும் என் சபையையும் என் குடும்பத்தாரையும், சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி அவர்களையும் நன்றி நிறைந்த உள்ளத்தோடு நினைத்துப் பார்த்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.



# “என் பார்வையில் நீ விலையேறப்பெற்றவள்; மதிப்புமிக்கவள்; நான் உன் மேல் அன்பு கூர்கிறேன்” (எசாயா 43:4).



| | |
|---|---|
| பெயர் | : சகோ. ஜாக்குலின் கவிதா |
| சபை எண் | : 1114 |
| ஊர் | : செங்குடி |
| பங்கு | : செங்குடி |
| மறைமாவட்டம் | : சிவகங்கை |
| தந்தை | : இருதயம் |
| தாய் | : கமலமேரி |
| உடன் பிறந்தோர் | : சகோதரர்கள் - 2, சகோதரிகள் - 2 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| நிரந்தர அர்ப்பணம் | : 09.05.2005 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

என்னை அழைத்தவா போற்றி!
ஆனந்தம் தந்தவா போற்றி!
இறையருளில் நிறைந்தவா போற்றி!
ஈகையை விதைத்தவா போற்றி!
உள்ளங்கையில் பொறித்தவா போற்றி!
ஊன்றுக்கோலாய் நின்றவா போற்றி!
எண்ணத்தில் உள்ளவா போற்றி!
ஏற்றம் பெறச் செய்தவா போற்றி!
ஐயைந்து ஆண்டுகள் காத்தவா போற்றி!
ஒற்றுமை வாழ்வைத் தந்தவா போற்றி!
ஓடமாய் என்னை சுமந்தவா போற்றி!
ஔடதமாய் நின்றவா போற்றி!
அ∴தே உம் அருள் இறைவா போற்றி!

வேதத்தை வேகமாகப் போதித்து இயேசுவின் மீது கொண்ட தாகத்தால் உண்மையை உரக்கச் சொல்லி விலைமதிப்பற்ற இரத்தத்தை மண்ணில் சிந்தி தலை வெட்டுண்டு வேதசாட்சியான புனித அருளானந்தரைப் பாதுகாவலராகக் கொண்ட சிவகங்கை மறைமாவட்டத்தில், செங்கதிர்கள் தலையசைக்கும் செங்குடி மண்ணில் அருமைப் பெற்றோருக்கு ஐந்தாவது மகளாக மலர்ந்தேன். இளம் வயதில் பள்ளிக்குத் தவறாமல் செல்வது, கோவிலுக்குச் செல்வது போன்ற நற்பண்புகளால் என்னை அழகுப்படுத்தினேன்.

நான் 6 -ஆம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தபோது அடைக்கல அன்னை

அருட்சகோதரிகள் இறைப்பணி மற்றும் கல்விப்பணிக்காக செங்குடி மண்ணில் கால் பதித்தனர். சகோ. வெரோணிக்கா, சகோ. ஜில்டு, சகோ. ஜெரோம் ஆகிய மூவரின் அணுகுமுறை அவர்களோடு பேசுவதற்கு வாய்ப்பாக இருந்தது. சகோதரிகள் தங்குவதற்கு புதிய இல்லம் கட்டாததால் எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு வீட்டிலேயே அவர்கள் தங்கி இருந்ததால் அதிக நேரம் சகோதரிகள் இல்லத்திலேயே நானும் இருப்பேன். ஆலயப்பணி செய்யச் செல்லும்போது சகோதரிகள் என் போன்ற சிறார்களை அழைத்துச் செல்வார்கள். ஆர்வத்தோடு சென்று அவர்களுக்கு உதவி செய்வோம்.

**அழைத்தல்:**

ஊரில் உள்ள பெரியவர்கள் ‘12 -ஆம் வகுப்பு முடித்து என்ன செய்வாய்?’ என்று கேட்டபோதெல்லாம் அறியாத வயதில் ஆழமாக என் உதடுகள் உச்சரித்த ஒரே வார்த்தை, “நான் அருட்சகோதரியாகப் போகிறேன்” என்பதே. அருட்சகோதரிகள் என்றால் தெய்வீகமானவர்கள் என்ற மனநிலையில் இருந்ததால் அருட்சகோதரியாகத்தான் ஆக வேண்டும் என்பதில் அதிக வேட்கை கொண்டிருந்தேன். துறவறம் என்பது பற்றி அதிகம் தெரியாதிருந்தாலும் துறவறம் ஏற்பதே நல்லறம் என்று ஆழமாக உறுதிகொண்டேன்.

**துறவறம்:**

உலகில் பல்வேறு துறவற சபைகள் இருந்தாலும், பிறசபை அருட்சகோதரிகள் அழைத்தாலும், அடைக்கல அன்னை சபையில்தான் சேர வேண்டும் என்ற எண்ணத்தில் எள்ளளவும் ஐயமில்லை. 9 முதல் 12 -ஆம் வகுப்பு வரை புனித காணிக்கை அன்னை அருட்சகோதரிகள் நடத்தும் கல்வி நிறுவனத்தில் படித்தாலும் அடைக்கல அன்னை சபையில் சேருவதில் உறுதியாய் இருந்தேன். சகோ. ஹெர்மன் ஜில்டு, சகோ. மரிய பாத்திமா, சகோ. பூரண அல்போன்சா ஆகியோரிடம் கல்வி கற்றேன். இறுதியாக சகோ. பூரண அல்போன்சா அவர்கள் நான் அடைக்கல அன்னை சபையில் சேர்வதற்கு முழு முயற்சி எடுத்தார்கள். சபைக்கு ஆசையோடு வந்த எனக்கு வீட்டு ஞாபகம் வரும் பொழுதெல்லாம் அழத் தொடங்கினேன். பலருடைய அறிவுரையால் தொடர்ந்தாலும் புகுமுகத்துறவு இல்லத்தில் இருக்கும் போதும் வீட்டிற்கு சென்று விடலாம் என்ற எண்ணம் வந்தது. அனைத்தையும் கடந்து இறை உறவில் 25 ஆண்டுகள் நிறைவு செய்வதை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

**பக்குவப்படுத்திய பணித்தளங்கள்:**

1. புகுமுகத்துறவு நிலையில் 6 ஆண்டுகள் விவேக் நகர் - அற்புத குழந்தை இயேசுவின் அருளாசீர்.
2. சின்னமலை - மூன்றாண்டு கல்லூரிப் படிப்பு
3. தம்பு செட்டிப்பாளையம் - தேர்வு நிலையினருடன் அனுபவம்
4. மயிலாப்பூர் - கல்வியியல் படிப்பு

என ஆறாண்டுகளைக் கடந்து கல்விப்பணிக்காக கால்பதித்த இடங்கள்...

**பலப்படுத்திய பட்டுக்கோட்டை:**

இவ்வில்லத்தில் மூத்த சகோதரிகள் முதல் அனைத்து சகோதரிகளும் என்மீது காட்டிய அன்பும், பாசமும் 7 ஆண்டுகள் மகிழ்வோடு பணிபுரிய பேருதவி புரிந்தது. இல்லப்பணிகள், கல்விப்பணி, பங்குப்பணி என பல்வேறு பணிகளில் என்னை இணைத்துக்

கொண்டதை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். உடன் பயணித்த அருட்சகோதரிகள், அருட்தந்தையர்கள், இறைமக்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

### பணிசெய்யத் தூண்டிய தஞ்சாவூர் - பூக்காரத்தெரு:

தஞ்சை பூக்காரத்தெருவில் என்னை அடையாளப்படுத்தியது கருணைக் குடில் இல்லப் பணியே என்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். கல்விப்பணியோடு கருணைக் குடில் இல்லப்பணியை முழு ஈடுபாட்டோடு குழந்தைகளின் நலனுக்காக உழைத்ததை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். தங்களின் உடனிருப்பாலும் உயர்ந்த உள்ளத்தாலும் 4 ஆண்டுகள் இவ்வில்லத்தில் பணியாற்ற உதவிய உயர்ந்த உள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

### பண்படுத்திய மன்னார்குடி - ருக்மணிப்பாளையம்:

மன்னை மண்ணில் மகத்தான கல்விப்பணியில் என்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றியதை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இல்லப்பணிகள், விடுதி மற்றும் கருணை இல்லப்பணி, பங்குப் பணிகள் என செய்வதற்கு வாய்ப்புகள் தேடி வந்த போது, ஆம் என்ற மனநிலையோடு ஆர்வமாய் அனைத்தையும் செய்வதற்கு ஆசீர்வதித்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். ஏழை, எளியோரின் நலனில் அக்கறையோடு செயல்பட ஆற்றல் அளித்த தேவனுக்கு நன்றி கூறுகிறேன். ஏழு ஆண்டுகள் இவ்வில்லத்தில் பணிசெய்த போது என்னோடு பயணித்த அனைத்து அருட்சகோதரிகளுக்கும் நன்றி கூறுகிறேன்.

### பேருவகை செய்யச் செய்த மயிலாப்பூர்:

1995 -ஆம் ஆண்டு விருப்பநிலையினராக மயிலை மண்ணில் தொடங்கிய பயணம் 2022 - 2023 வெள்ளிவிழா ஆண்டில் இவ்வில்லத்தில் இருப்பதை எண்ணி மகிழ்வடைகிறேன். தாய் இல்லத்தில் அதிக எண்ணிக்கையிலான சகோதரிகளோடு குழுமத்தில் இருப்பதை பெரும் பேறாக கருதுகிறேன். நலமளிக்கும் வார்த்தைகளை நாளும் உச்சரித்து பயணிக்கும் பாசமுள்ள அனைத்து அருட்சகோதரிகளுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

### இதயம் நிறை நன்றிகள்:

"ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும்
நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்" (தி.பா 116:12)

அடைக்கல அன்னை சபையில் விருப்பநிலையில் சேர்ந்தபோது சபைத் தலைமை அன்னையாய், அமைதியை அணிகலனாய் பூண்டு வழிநடத்திய விண்ணில் வாழும் அன்னை ஜான் தே பிரிட்டோ அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சபையில் முதல் வார்த்தைப்பாடு கொடுத்த நாளில் என்னை அன்போடும், பாசத்தோடும் சபையில் ஏற்றுக்கொண்டு வழிநடத்திய அன்னை பாத்திமா ராணி அவர்களுக்கு நன்றிகள். சபையில் காலடி வைத்த நாள் முதல் இந்நாள் வரை என் ஆன்மீக வாழ்வுக்கும் துறவற வாழ்வுக்கும் வழிகாட்டியாய் இருந்து வரும் அன்னை லூர்து மேரி அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

துறவற வாழ்வை மகிழ்வோடு வாழ எல்லா வகையிலும் உறுதுணையாய் இருந்து சபையை வளர்ச்சியின் பாதையில் வழிநடத்தி வரும் சபைத் தலைமை அன்னை

மரிய பிலோமி அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகள். விருப்பநிலை, தேர்வுநிலையில் இருந்த ஓராண்டில் சபையை அறிமுகம் செய்து தாயுள்ளத்தோடு வழிநடத்திய சகோதரி கிளாரா அவர்களுக்கு நன்றி.

புகுமுகத்துறவு இல்லத்தில் துறவற மனப்பான்மை என்னில் வளர, ஆன்மீகம், குழும வாழ்வு, பணி வாழ்வு ஆகியவற்றில் பயிற்சியளித்த சகோதரி பென்சி, சகோதரி டெரன்சியா, சகோதரி தனசீலி ஆகியோருக்கும் நன்றிகள்.

தொடர் உருவாக்கத்தில் தொடர்ந்து துணை நின்ற முன்னாள், இந்நாள் மாநிலத் தலைமை சகோதரிகள், மைய மாநில நிர்வாகக் குழுவினர் அனைவருக்கும் நன்றிகள்.

குழும வாழ்வில் எனது வளர்ச்சியிலும், தளர்ச்சியிலும் துணை நின்ற இல்லத் தலைமைச் சகோதரிகள், நிறுவனத் தலைவர்கள், மூத்த சகோதரிகள் மற்றும் குழும சகோதரிகள் அனைவருக்கும் நன்றிகள்.

ஊனுடல் தந்த அன்புப்பெற்றோர், அனைத்திலும் உடனிருந்த உடன் பிறப்புகள், தெரியாததை சொல்லித் தந்த நட்பு வட்டங்கள், செய்வதை ஊக்கப்படுத்திய உடன் வாழும் சகோதரிகள் அனைவருக்கும் என் நன்றிகள்.

**ஐயைந்து ஆண்டுகள் கண்மணியாய் காத்து**
**வளமான வாழ்வளித்து**
**வாழ்விலும் தாழ்விலும் ஆசீர்வதித்து**
**அடைக்கல அன்னை சபையில் அற்புதமாய் வாழவைத்த**
**இறைவா! நன்றி!**



# “நான் பயணித்த பாதை”



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : **சகோ. ஜாண் சகாய இன்பெண்டா** |
| சபை எண் | : 1115 |
| ஊர் | : கூத்தென்களி |
| பங்கு | : கூத்தென்களி |
| மறைமாவட்டம் | : தூத்துக்குடி |
| தந்தை | : திரு. சூசை |
| தாய் | : திருமதி. சிலுவைமரியம்மாள் |
| உடன் பிறந்தோர் | : சகோதரிகள் - 6, சகோதரன் - 1 |
| முதல் வார்த்தைப்பாடு | : 08.05.1998 |
| இறுதி அர்ப்பணம் | : 07.05.2004 |
| வெள்ளிவிழா | : 04.05.2023 |

**“சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார், தூரம் போயினும் கண்டுகொண்டார்”**

இறைவனின் அன்பை அனுபவிக்க இறைவன் கொடுத்த அற்புதமான வாழ்வுதான் எனது துறவு வாழ்வு. நான் விரும்பி இந்த வாழ்வில் முதல் அடி எடுத்து வைக்கவில்லை. நான் வாழ்ந்து வந்த உலகப்பற்றான வாழ்வில் இறைவன் என்னைத் தடுத்தாட்கொண்டு அடைக்கல அன்னை சபைக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

**“உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்”**(தொ.நூ 12:2).

எனது குடும்பம் மிகப்பெரிய குடும்பம். ஆறு சகோதரிகள், ஒரே ஒரு சகோதரன் எனவே எட்டாவதாக கடைசியாக, செல்லப்பிள்ளையாக நான் பிறந்தேன். பிள்ளைகள் அதிகம் என்றாலும் பாசத்திற்கு பஞ்சமில்லை. சாதாரண, நடுத்தரக் குடும்பமாக இருந்தாலும் பெற்றோர்களின் ஆழமான அன்பும், அரவணைப்பும் என்னை பண்பிலும், பாசத்திலும், அறிவிலும், விசுவாசத்திலும் வளர வைத்தது. படிக்காத பெற்றோர் ஆனால் பண்படுத்தப்பட்ட, பக்குவப்பட்ட இறைவனின் பாராமரிப்பை மட்டுமே நம்பி வாழ்ந்து வந்த பாசமுள்ள பெற்றோர்.

இந்த நேரத்தில் எனது தந்தையை நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றேன். ஏழு பெண் பிள்ளைகள் என்பதனால் என்னை மிகவும் கண்டிப்பாக, அதே வேளையில் கனிவோடு வளர்த்தெடுத்தார்கள். உண்மையை உரக்கச் சொல்லவும், நேர்மைக்கும், நீதிக்கும் எப்போதும் தலைவணங்கவும், எந்த நேரத்திலும், எந்தச் சூழலிலும் யாருக்கும் பயப்படாமல், படைத்த கடவுளுக்கும் மனச்சாட்சியின் குரலுக்கு மட்டும் பிரமாணிக்கமாக வாழ என்னை பயிற்றுவித்தார்கள்.

எனது தந்தை ஆலயத்திற்கு அதிகமாக சென்று நான் பார்த்ததில்லை ஆனால் அவர்கள் பார்த்த எல்லா மனிதரிலும் கடவுளைக் கண்டதை நான் கண்கூடாக கண்டு

கொண்டேன். தேவை என்று சொல்பவர்களுக்கு 'இல்லை' என்று சொல்லாது இருப்பதை பகிர்ந்து கொண்ட தாராள உள்ளத்தை அவர்களில் கண்டேன். மதம் கடந்து மனிதர்களை அன்பு செய்ய வேண்டும் என்ற எளிமையான தத்துவத்தை அவர்களில் கண்டேன். தற்போது அவர்கள் என்னோடு இல்லாவிட்டாலும் அவர்களின் விழுமியங்கள் இன்றும் என்னை வாழ வைத்துக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு எனது முதல் நன்றி.

எத்தனை கஷ்டம் வந்தாலும் அந்தச் சூழலை எல்லாம் மறைத்து வைத்துக் கேட்டதை எல்லாம் வாங்கித்தந்து பாசமாய் வளர்த்தவர் என் அன்புத்தாய். அவர்கள்தான் எனக்கு உலகம். எனக்குக் கிடைத்த பெற்றோருக்காக இறைவனுக்கு இருகரம் குவிக்கின்றேன். இன்றும் எனக்கு பாசமாய், எனது தேவையில் எல்லாம் எனக்கு உறுதுணையாய் இருக்கின்ற எனது உடன் பிறப்புகள், உறவுகள் அனைவருக்கும் நன்றி. எனது தந்தை கற்றுத் தந்த நீதியும், உண்மையும், நேர்மையும், எனது தாயார் கற்றுத் தந்த அன்பும் பாசமும்தான் நான் துறவற வாழ்வில் துணிந்து நிமிர்ந்து பயணிக்கப் பாதை வகுத்துக் கொடுத்தது.

நான் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை எனது சொந்த ஊரான கூத்தன்களியில் உள்ள புனித தெரசாள் ஆரம்பப் பள்ளியிலும், அதனைத் தொடர்ந்து நடுநிலைப்பள்ளி, உயர்நிலை, மற்றும் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை கூட்டப்புளி புனித வளனார் மேல்நிலைப் பள்ளியிலும் பயின்றேன். அதன்பின் எனது தந்தையின் விருப்பப்படி நாகர்கோவிலிலுள்ள புனித ஸ்டீபன் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் இடைநிலை ஆசிரியைப் பயிற்சி படிப்பை முடித்து 2 ஆண்டுகள் சென்னையில் உள்ள ஒரு சில பள்ளிகளில், தற்காலிக பணியிடங்களில் பணியாற்றி வந்தேன். பின்பு சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சிவராமன் நடுநிலைப் பள்ளியில் நிரந்தரமாக பணி நியமனம்பெற்று பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில்தான் சிந்தாதரிப்பேட்டையில் உள்ள அடைக்கல அன்னை சபைச் சகோதரி லீமாரோஸ் அவர்களுடன் நட்பு ஏற்பட்டது. அவர்கள்தான் என் துறவு வாழ்விற்கு முதல் வழித்தடம் அமைத்துக் கொடுத்தவர்கள். அவர்களுக்கு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை மலர்களாக்கி அணிவிக்கின்றேன்.

**"நான் அவரைத் தேர்ந்துகொள்ளவில்லை அவர் என்னைத் தேர்ந்து கொண்டார்."**

ஆசிரியராக சென்னை மாநகரத்திலே வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்த நேரத்தில் தொலைந்து போன ஆட்டைத் தேடுவது போல கடவுள் என்னைத் தேடி வந்து கண்டுகொண்டார். இந்த முதல் அனுபவம்தான் 'உண்மையாகவே கடவுளுக்கு நான் தேவை' என்ற உள்ளுணர்வை எனக்குத் தந்தது. அந்த உணர்வு எனக்கு ஆனந்தமாகவும் இருந்தது.

துறவு வாழ்வில் 25 ஆண்டுகள் அடுத்தவர்க்காக வாழ்ந்திருக்கிறேன் என்று நினைக்கின்றபோது என் மனம் நன்றியில் நனைந்து கடவுளுக்கு இன்னிசை பாடுகின்றது. காரணம் கடந்த 25 ஆண்டுகளாக என் உயிரோடு கலந்தவராக எனக்குள் இருந்து என்னைக் கடவுள் காத்தார் என்பதை ஒவ்வொரு அசைவிலும் அனுபவித்து வாழ்ந்து வருகின்றேன். 25 ஆண்டுகள் நான் அடைக்கல அன்னை சபையில் பயணித்தேன் என்று சொல்லுவதை விட கடவுள் என்னைக் கரம் பிடித்து கூட்டி வந்தார் என்பதுதான் உண்மை.

தகுதியானதால் அவர் என்னை அழைக்கவில்லை. அழைத்ததால் நான் அடைக்கல சபையில் வாழத் தகுதி பெற்றேன். அந்த தகுதியை இந்நாள் வரையில் பொக்கிஷமாக பாதுகாத்து வருகின்றேன். என் அழைத்தலுக்கும், நான் எடுத்துக்கொண்ட வார்த்தைப்பாட்டிற்கும் பிரமாணிக்கமாக வாழ இறைவன் எனக்கு சக்தியையும், ஆற்றலையும், நல்ல சூழ்நிலையையும் ஏற்படுத்திக் கொடுத்த கடவுளுக்கு இருகரம் குவித்து நன்றிப்பண் பாடுகின்றேன்.

அடைக்கல அன்னை சபைக்குள் நுழைவதற்கு முன்பே ஆசிரியப் பணியை ஆரம்பித்துவிட்டேன். ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்விப்பணியை ஆற்ற இறைவன் என்னை ஒரு கருவியாக தேர்ந்துகொண்டார். சரிந்து கிடக்கின்ற சமுதாயத்தை சரி செய்யவும், சத்தான எதிர்கால சந்ததியினரை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வமும் எப்போதும் எனக்குள் ஊற்றெடுத்துக் கொண்டே இருக்கும். அதனால்தான் இன்றும் எனது கல்விப்பணியை ஆர்வமாக ஆற்றி வருகின்றேன். ஏழை, எளிய மாணவர்களின் வாழ்வில் ஒளிப் பிம்பமாக இறைவன் என்னை பயன்படுத்தியிருக்கிறார். சிறப்பாக கோவளம். மயிலாப்பூர், ஆழ்வார்பேட்டை, சின்னமலை, சிந்தாதிரிப்பேட்டை, பெங்களூர் போன்ற இடங்களில் மிகவும் பின்தங்கிய மாணவர்களின் கல்வியில் கருத்தாய் பணியாற்றியிருக்கின்றேன் என்று நினைக்கின்ற போது நன்றி!.... நன்றி! என்று சொல்லுவதைத் தவிர எனக்கு வேறொன்றும் தோன்றவில்லை.

இரத்த உறவுகளை விட அழைத்தல் உறவு அழகானது, ஆழமானது என்பதை ரசித்து, ருசித்து அனுபவித்து வருகின்றேன். இது எனது குடும்பம் என்று நினைக்கின்ற போது மனம் மகிழ்ச்சியில் குதூகலிக்கும். காரணம் இங்கு சில வேறுபாடுகள் உண்டு ஆனால் பல ஒற்றுமைகள் உண்டு. அதிகமாக அன்பு உண்டு, பாசம் உண்டு, பகிர்வு உண்டு, சுதந்திரம் உண்டு, சுயமரியாதை உண்டு, மனித நேயம் உண்டு எல்லாருக்கும் எல்லாம் என்ற சமதர்மம் உண்டு. இவை எல்லாவற்றையும் விட இது எங்கள் குடும்பம் என்ற உள்ளுணர்வு எல்லாருக்கும் உண்டு. எனவே எனது சபை எனது உயிர். அதை நேசிக்கின்றேன். இந்த அனுபவத்தைத் தந்த அனைத்து சகோதரிகளுக்கும் நன்றிகரம் குவித்து தலைவணங்குகின்றேன்.

**"அனுபவம் தான் சிறந்த ஆசான்"**

நான் அறிவிலும், ஆற்றலிலும், ஆன்மீகத்திலும் முதிர்ச்சி அடைய என்னை பக்குவமாய் செதுக்கிய பயிற்சியாளர்கள், சகோ.N.M.கிளாரா, சகோ. பென்சி, சகோ. டெரன்சியா, சகோ. தனசீலி, இல்லத்தலைமைச் சகோதரிகள், சகோ. அந்தோணியம்மாள், சகோ. ஜெயசீலி, சகோ. இமெல்டா, சகோ. வணக்கம், சகோ. ஜான்சிராணி, சகோ. மரிய ராஜம், மற்றும் சகோ. இம்மாகுலேட் டெய்சி இவர்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி எனது நன்றிகளைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

அடைக்கல அன்னை சபையின் மாநிலங்கள் எல்லாம் தனது வெள்ளி விழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கும் இந்த ஆண்டில் நானும் எனது துறவு வாழ்வின் வெள்ளி விழாவைக் கொண்டாடுவது மிகப்பெரிய ஆனந்தம். யாருக்கும் எளிதாக கிடைக்காக பேரின்பம். அதுவும் இந்த 25 ஆண்டுகளும் நான் சென்னை மாநிலத்திலேயே வாழ்ந்து

வந்திருக்கின்றேன் என்றால் இது மகா பேரின்பம். எனது வாழ்வின் எல்லா நிலைகளிலும் என்னை நிறைவான மனநிலையுடன் என்னைப் புரிந்து கொண்டு பாசத்தோடு என்னைப் பராமரித்து வந்த சென்னை மாநிலத் தலைமைச் சகோதரிகள், சகோ. ஜெயசீலி, சகோ. அந்தோணியம்மாள், சகோ. ஆஞ்சலின், சகோ. நேச சௌந்திரம் தற்போதுள்ள மாநிலத் தலைமைச் சகோதரி ஜூலியட் மற்றுமுள்ள எல்லா மாநிலங்களின் தலைமைச் சகோதரிகளுக்கும் எனது பாசத்தால் பாமாலைப் பாடுகின்றேன்.

**'Beloved -98'** இது எங்கள் குழுவின் பெயர். இதில் நாங்கள் 18 அருட்சகோதரிகள். அனைவரும் எனது உடன் பிறவாச் சகோதரிகள். இந்த அடைக்கல அன்னை சபையில் முதல் சொந்தம் இவர்கள். நான் துறவு வாழ்வில் கம்பீரமாய் மிளிர எனக்கு பக்கபலமாய் இருந்தவர்கள். பக்குவமாய் வாழ துணை நின்றவர்கள். இவர்களால் நான் வளர்ந்திருக்கிறேன். வாழ்ந்திருக்கின்றேன். வாழ்வின் எல்லா காலங்களிலும் இவர்களுக்கு எனது நன்றி.

எனது தற்போதைய குழுமம் பெங்களூர், அசோக்நகர் இல்லம். இந்த இல்லத்தில்தான் முதன் முதலாக இல்லத்தலைமைச் சகோதரியாகப் பொறுப்பேற்று வழிநடத்திக் கொண்டிருக்கின்றேன். அருமையான, பாசமான குழுமம். எப்போதும் இளமைத் துடிப்புடன் பாங்குடன் பணியாற்றிவரும் அனைத்து சகோதரிகளுக்கும் எனது நன்றிகள்.

நான் சபையில் சேர்ந்த நாள் முதல் என் வாழ்வின் வளர்ச்சிக்கு துணைநின்ற சபைத் தலைமை அன்னையர்கள், அன்னை ஜான் டி பிரிட்டோ, அன்னை பாத்திமா ராணி, அன்னை லூர்து மேரி மற்றும் சபையின் இந்நாள் தலைமை அன்னை மரிய பிலோமி அனைவருக்கும் தலைவணங்கி நன்றிக்கரம் குவிக்கின்றேன்.

சிறப்பாக இன்றைய சபைத் தலைமை அன்னை மரிய பிலோமினா அவர்களின் துணிச்சலும், சகோதரிகள் மீது கொண்டுள்ள அளவற்ற அக்கறையும், கேட்பதற்கு மேலாக அதிகமாகக் கொடுக்கும் தாராள உள்ளமும், சபையை வெற்றியின் பாதையில் முன்னெடுத்துச் செல்லும் முற்போக்கு சிந்தனையும், என்னையும் வாழ வழிகாட்டியிருக்கிறது. இவர்களின் தலைமைப் பொறுப்பில் இருக்கின்றபோது நாங்கள் வெள்ளிவிழா கொண்டாடுகின்றோம் என்று நினைத்து பேரானந்தம் அடைகின்றோம். அவர்களுக்காக செபிக்கின்றேன். அவர்கள் பணி சிறக்க வாழ்த்துகின்றேன், ஜெபிக்கின்றேன். நன்றிக்கரம் குவிக்கின்றேன். சிறப்பாக இந்த ஆண்டு எங்களுக்கு Holy Land செல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக எங்கள் 18 பேரின் சார்பாகவும் கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி உள்ளத்தின் உயரத்திலிருந்து உரக்க நன்றி நவில்கின்றேன்.

**அண்ணல் அசிசிக்கும்,**
**கருணைக்கண் பார்வையால் காத்து வரும்**
**அடைக்கல அன்னைக்கும்,**
**என்னையே முழுமையாக அர்ப்பணம் செய்து**
**நன்றி நவில்கின்றேன்.**

# "என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவள்; மதிப்புமிக்கவள்; நான் உன்மேல் அன்பு கூர்கிறேன்" (எசாயா 43:4).



சகோதரியின் பெயர் : சகோ. ஜோஸ்பின் மேரி
சபை எண் : 1116
பிறந்த இடம் : சவேரியார்பட்டி
பங்குத்தளம் : தச்சங்குறிச்சி
மாறைமாவட்டம் : தஞ்சாவூர்
தந்தை பெயர் : திரு. பிலோமின் ராஜ் (எ) தனுசு
தாய் பெயர் : திருமதி. த. அருள்மேரி
உடன் பிறந்தோர் : அண்ணன் - 1,
அண்ணன் - 2 (விண்ணில்)
அக்கா - 1 தங்கை - 1
முதல் அர்ப்பணம் : 08.05.1998
நிரந்தர அர்ப்பணம் : 07.05.2004
வெள்ளி விழா : 04.05.2023

**பிறப்பும் பேரன்பும்:**

நீரும், நிலமும், வயலும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திப் பிடித்து ஆனந்த கூத்தாடுவதோடு 1000 ஆண்டுகளைக் கடந்து, ஓங்கி உயர்ந்து நிற்கும் வரலாற்று சிற்பங்களையும் தன்னகத்தேக் கொண்டு சமயம், பக்தி, கலை, ஓவியம், நடனம், சங்கீதம், வீரம் என அத்தனைக்கும் பெருமை சேர்க்கும் தஞ்சாவூர் மறைமாவட்டத்தில், சின்னமாய் கல்லறை என்னும் சீர்மிகு சிறப்புப் பெற்று அனைவரையும் இறைவன்பால் ஈர்க்கும் சக்திப் பெற்ற தச்சங்குறிச்சி பங்கு, சவேரியார்பட்டியில் திருவாளர் பிலோமின் ராஜ் என்கிற தனுசு, திருமதி அருள்மேரி தம்பதியினரின் நான்காவது பிள்ளையாக என் தாயின் கருவில் உருகொடுக்க வைத்த ஆண்டவனை நினைத்து என் ஆயுள் உள்ளளவும் நன்றி சொன்னாலும் போதாது.

**இளமையும் இனிமையும்:**

ஆண்டவனின் பராமரிப்பில், பெற்றோரின் அரவணைப்பில், உடன்பிறந்தோரின் உந்துதலில், உடன் படிப்போரின் உரையாடலில், காலத்தைத் துவங்கிய நான் என் இளமையை, இனிமையாக ரசித்து நினைத்துப் பார்க்கின்றேன். நான்காம் வகுப்பு வரை ஓராசிரியர் அரசு பள்ளியான என் சொந்த மண்ணில் ஆரம்பக் கல்வியைத் துவங்கினேன். ஆரம்பக் கல்வியை முடிக்கும் முன்னே ஆண்டவன் அடைக்கல அன்னை சபைக்கு அடியெடுத்து வைக்க அன்றே என் மனதில் அழைத்தல் என்னும் விதையை விதைத்துவிட்டார் என்றுதான் உணர்கின்றேன். ஐந்தாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தஞ்சாவூர் வடக்கு வாசல் புனித ஜான் தே பிரிட்டோ நடுநிலைப் பள்ளியில் படித்தேன்.

அங்குதான் நான் உருவாக்கப்பட்டேன். நான் கல்வி பயில எண்ணற்ற சகோதரிகள் என்னைக் கருத்தில் கொண்டார்கள். சகோ. ஜோசப்பா, சகோ. அல்பேயா, சகோ. பீட்டர் கிளாவர், சகோ. சந்தனமேரி, சகோ. உபகாரி, சகோ. பேசில் ரோக், சகோ. இருதய மேரி இன்னும் எண்ணற்றவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றேன்.

9-ஆம் வகுப்பு முதல் 12 -ஆம் வகுப்பு வரை மன்னார்குடி புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளியில் கல்வியைத் தொடர என்னை செதுக்கி சிற்பமாக்கியவர்கள் ஏராளம். சகோதரி அன்னாள் ரீட்டா ராணி எனது ஒன்பதாம் வகுப்பு ஆசிரியை. அடைக்கல அன்னை சபையில் நான் துறவியாய் காலடி எடுத்து வைக்க என்னை பண்படுத்தியவர்கள் அவர்கள். மேலும் சகோ. புரடன்சியானா, சகோ. மோட்சம், சகோ. அம்புரோஸ், சகோ. ஸ்டெல்லா, சகோ. லீலா ஜோஸ்பின், சகோ. ஜோஸ்பின் இவர்கள் அனைவரும் படிப்போடு, பக்தியிலும் பண்பிலும் வளர்த்துவிட்ட ஆசான்கள். இவர்கள் அனைவரையும் நினைத்து ஆண்டவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

**அழைப்பும் அரவணைப்பும்:**

**“நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை,**
**நான்தான் உங்களைத் தெரிந்துகொண்டேன்”** (யோவான் 15:16).

பன்னிரெண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது நம் சபையின் முன்னாள் சபைத் தலைமை அன்னை மதிப்பிற்குறிய அன்னை லூர்து மேரி அவர்கள் பள்ளிக்கு வருகைப் புரிந்து இறையழைத்தல் பற்றிய கருத்துப் பகிர்வை துவங்கி தன்வாழ்க்கைப் பயணத்தோடு கூடிய அழைப்பை எங்களோடு பகிர்ந்து கொண்டபோது என் மனதில் ஏற்கனவே துறவியாக வேண்டும் என்ற எண்ணம் இன்னும் என்னை ஆழப்படுத்தியது.

1994 - 1995 ஆம் ஆண்டு இறையழைத்தல் பாசறையில் கலந்து கொண்டு வீடு திரும்பிய நான் சபையிலிருந்து வரும் கடிதத்திற்காக காத்திருந்தபோது, கல்லூரியிலிருந்து மருத்துவப் படிப்புக்கான கடிதமும், சபையிலிருந்து துறவியாவதற்கான அழைப்புக் கடிதமும் ஒரே நேரத்தில் வந்து சேர, வீட்டிலோ சலசலப்பு, எனக்கோ திகைப்பு. இறுதியில், உறுதியாய் துறவியாகவே ஆவேன் என முடிவெடுத்து வந்த என்னை, இறைவன் அரவணைத்து அன்பு செய்த தருணங்கள் சொல்லில் அடங்கா. எனவே என்னை அழைத்த ஆண்டவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

**பயிற்சியும் முயற்சியும்:**

புதிய இடம், புதிய சூழல், புதிய மனிதர்கள் என எல்லாமே புதிதாக தோன்றினாலும் ஒவ்வொரு நாளையும் இறைவன் புதிது புதிதான அனுபவங்களால் அழகுச் செய்தார். என்னை வடிவமைத்து உருவாக்கினவர்களை அன்போடு நினைத்துப் பார்க்கின்றேன்.

**இறைவனின் அன்பை சுவைக்க செபத்தையும்,**
**மனதினை அமைதியாக்க தியானத்தையும்,**
**உடலினை உறுதி செய்ய உடற்பயிற்சிகளையும்,**
**வலிமையை வலுவாக்க பல்வேறு பணிகளையும்,**
**அறிவைக் கூர்மையாக்க பல வகுப்புகளையும்,**
**திறமைகளை வளர்க்க பல கலைகளையும்,**

அளித்து துறவியாய் உருவாக்கியவர்கள் இவர்கள். நன்றியின் கரம் குவிக்கின்றேன்.

**துறவும் - உறவும்:**

நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பதற்கு இனங்கவே எனது மனதில் எங்கெல்லாம் செல்லக்கூடாது என்று நினைத்தேனோ அங்கேயே ஆழமாக நடப்பட்டேன். முதல் வார்த்தைப்பாடு கொடுத்து விடுமுறை முடிந்து மீண்டும் இல்லம் வந்ததும் உடனே வேளைநகர் செல்ல வேண்டும் என்று பணித்தார்கள். எல்லோரும் ஒன்றாக இருக்கிறார்களே! நான் மட்டும் செல்லவேண்டும் என்ற வருத்தத்துடனே சென்றேன். ஆனால் ஆரோக்கியத்தாய் அற்புத விதமாய் ஆசீர்வதித்தாள். அந்த ஆரோக்கியத் தாய்க்கு நான் நன்றிப்பண் பாடுகின்றேன்.

மீண்டும் ஒரு மாதம் கழித்து அனைவரும் ஒன்றாக முடிச்சூர் சென்றார்கள். ஒரு வருடம் தலைமையத்தில் பணிசெய்ய பணிக்கப்பட்டேன். அன்னையர்கள் அனைவரும் என்னை அக்கறையோடும், அன்போடும், பாசத்தோடும் அவர்கள் வீட்டு செல்லப் பிள்ளையாக அரவணைத்து, துறவு வாழ்வைத் தொடர துணை நின்றார்கள். அத்துணை தாய் நெஞ்சங்களுக்கும் எனது நன்றியை இருகரம் கூப்பி வணங்கி மகிழ்கின்றேன்.

1999 ஆம் ஆண்டு மன்னார்குடி ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தில் படிக்க படிவம் நிரப்பிவிட்டேன். நான் மேல்நிலைக் கல்விப் படிப்பை முடித்த இடத்திற்கே மீண்டும் செல்கிறேன் என்ற மகிழ்வில் இருந்தேன். ஏனோ திண்டுக்கல் செல்ல வேண்டும் என்று பணித்தார்கள். இறைவன் ஒவ்வொன்றையும் யார்? எங்கு? எப்பொழுது? எப்படி? என்பதை ஆய்து அறிந்து செயலாற்றுபவர். என்னை அற்புதமாய் அந்த இயற்கை சூழ்ந்த இடத்தில் படிப்பைத் தொடர பக்குவப்படுத்தினார். மேலும் என்னை மெருகேற்றி அடுத்த கட்டத்திற்கு அழைத்து வந்த சகோதரிகள், பேராசிரியர்கள், உடன் பயின்ற உறவுகள் அனைவரையும் நினைத்துப் பார்க்கின்றேன். இப்பொழுது கூட என் இதயத்தில் நன்றியின் பெருக்கால் இன்பராகம் மீட்டுகின்றேன்.

2001 -ஆம் ஆண்டு மீண்டும் ஒரு திருப்பம். படிப்பை முடித்துவிட்டு பணித்தளத்திற்கு அனைவரையும் அனுப்பினார்கள். என் மனதில் சலனம். மாமண்டூர் இல்லம் செல்லாமல் வேறு எங்கு அனுப்பினாலும் பரவாயில்லை என்று நினைத்தேன். ஆனால் ஆண்டவன் திட்டப்படி அதே இடம். பயத்தோடு பயணித்தேன். அங்கு அந்த இடம், நிலம், பயிர்கள் என அனைத்திலும் பிரிஜிட் அம்மா அவர்களின் உழைப்பைக் கண்டு வியந்து போனேன். நானும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அவ்வளவாக அனுபவம் இல்லை. ஆனால் அங்கு அனைத்து வேலைகளையும் கற்றுக்கொண்டேன். உழைப்பின் உயர்வை உணர்ந்து கொண்டேன். இயற்கையை நேசிக்கக் கற்றுக்கொண்டேன். இறைவனை மனதார அன்பு செய்து பல அனுபவங்கள் வழியாக அவரைக் கண்டுகொண்டேன். என்னை வழிநடத்தி, வாழ்த்தி, அனுபவங்கள் வழியாய் என் மனதில் ஆசானாய் உயர்ந்து நின்ற உறவுகளை நினைத்து நன்றி கூறுகின்றேன்.

நாளைய தலைமுறைகளை உருவாக்க ஆசிரியப் பணியில் என்னை சிறுகச் சிறுக செதுக்கி, என்னில் உள்ள திறமைகளைப் பாராட்டி, உற்சாகப்படுத்தி ஊக்கமூட்டியவர்கள் முன்னாள் சென்னை மாநிலத் தலைமைச் சகோதரி சகோ. அந்தோணியம்மாள் அவர்கள். 'முடியும் அது உன்னால் மட்டுமே முடியும்' என உத்வேகம் தந்து ஆசிரியப் பணியை

அர்ப்பணத்தோடு செய்ய என்னை வழிநடத்திய அவர்களையும், உடன் நின்ற அனைவரையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றேன். இருகரம் கூப்பி வணங்குகின்றேன்.

வங்கக் கடல் தாலாட்டும்
மயிலை இல்லம் தன்னில்
லாசரஸ் பள்ளியில்
கல்விப் பணியில் கால் பதித்து
கல்பட்டில் வேரூன்றி
பூவையில் பூத்து
ஆழ்வார் பேட்டையில் விருட்சமாகி
பல்லாவரத்தில் பணியைப் பரவலாக்கி
சிங்காரச் சென்னை என்னும் சின்னமலையில்
சீர்மிகு பணியாற்ற சிறப்பு செய்து
பணியைப் பாங்குடனே ஆற்ற
துணையாய் இணையாய் பயணித்த
ஆண்டவனையும் அருட்சகோதரிகளையும்
உள்ளம் தன்னில் பூசித்து
மனம் தன்னில் வாழ்த்துகின்றேன்

**நன்மையும் நன்றியும்:**

நான் 25 ஆண்டுகளாக இச்சபையில் வாழ அருள் ஆசி பொழிந்து என்னை அரவணைத்துக் காத்து வழிநடத்தும் எம் சபையின் பாதுகாவலி அடைக்கல அன்னைக்கு நன்றி!

பிரபஞ்சப் பேரன்பில் இறைவனைக் கண்டு அதில் ஒவ்வொரு நாளும் பயணிக்க பாதை காட்டிய அண்ணல் அசிசிக்கு நன்றி!

தன் பாதுகாப்பில் என்னை மறவாமல் காத்து வருகின்ற எனது பாதுகாவலர் புனித சூசையப்பருக்கு நன்றி!

எனது வளர்ச்சிக்கும், எனது முயற்சிக்கும் வழிவகுத்த சபையின் முன்னாள் தலைமை அன்னை ஜான் தே பிரிட்டோ, மற்றும் அன்னை பாத்திமா ராணி இவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றி!

இறைவன் அருளாலும் ஆசீராலும் தனது வாழ்வாலும் எண்ணற்ற குருக்களையும், சகோதரிகளையும் இந்நாள்வரை வழிநடத்தி, எனது மனதில் இறை அழைத்தலை ஆழமாகப் பதிய வைத்த சபையின் முன்னாள் தலைமை அன்னை லூர்து மேரி அவர்களுக்கும் அவர்களோடு தோள்கொடுத்து உடன் பயணித்த ஆலோசக அன்னையர்கள் அனைவருக்கும் நன்றிக்கரம் கூப்பி நன்றி கூறுகின்றேன்.

எச்சூழலிலும் சகோதரிகளை விட்டுக்கொடுக்காது சகோதரிகளின் பலத்தை ஊக்குவித்து, பலவீனத்தைப் புறம் தள்ளி புன்னகையால் பல்வேறு புரட்சிகரமான பணிகளைச் செய்து சபையை வளர்ச்சியின் பாதையில் வழிநடத்திவரும் இந்நாள் சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி மற்றும் அவர்தம் ஆலோசகச் சகோதரிகள்

அனைவருக்கும் பணிவான நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

நான் சின்ன செயல்களால் முதிர்ச்சியடைந்து மாநிலத்திற்கு பலன்தரும் சகோதரியாக வாழ உதவிய மாநிலத்தின் முன்னாள், இந்நாள் மாநிலத்தலைமைச் சகோதரிகளுக்கு பணிவான நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பல்வேறு இல்லங்களில் பக்குவமாய் என்னை வளர்த்தெடுத்த இல்லத்தலைமைச் சகோதரிகள், உடன் பயணித்த சகோதரிகள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தோள்கொடுத்த ஆசிரியச் சொந்தங்கள், மாணவச் செல்வங்கள் தற்பொழுது நான் பயணித்துக் கொண்டிருக்கும் சின்னமலை இல்லத்தலைவி மற்றும் சகோதரிகள், பங்கு பணியாளர்கள், இறைமக்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

உருகொடுத்து உடனிருந்து வாழ்வுக்கு அர்த்தம் சேர்த்த என் தாய்க்கு நன்றி!

உழைப்பின்வழி உறவுகளைத் தாங்கி நின்று விண்ணில் எனக்காய் செபித்துக் கொண்டிருக்கின்ற என் தந்தைக்கு நன்றி!

என் தந்தையின் இடத்தில் இருந்து என்னை அன்பு செய்து அரவணைத்து வருகின்ற அண்ணன், அண்ணி இருவருக்கும் நன்றி!

இன்னொரு பெற்றோராய் என்னோடு பயணித்து, பாசத்தை பரந்துபட்டு அள்ளித் தருகின்ற எனது அக்கா, மாமா இவர்களுக்கு நன்றி!

எனது இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி என எப்பொழுதும் என்னோடு இருந்து இடைவிடாது பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கும் என் பாசமிகு தங்கை அருட்சகோதரி அமலோற்பவ தீபாவுக்கு நன்றி!

என்னை உற்சாகப்படுத்தி வாழ்வுக்கு உரமாய் தன் செபத்தில் தாங்கிய என் குடும்ப உறவுகள், சொந்த பந்தங்கள். நண்பர்கள், ஞானப் பெற்றோர் அனைவருக்கும் நன்றி!

எனது துறவு வாழ்வில் பாலமாய் நின்ற எம் சவேரியார்பட்டி மண்ணின் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், பங்குத் தந்தையர்கள், பங்கு மக்கள் அத்தனை பேரையும் நினைத்துப் பார்க்கின்றேன். நன்றி கூறுகின்றேன்.

ஊர் சிறியதாக இருந்தாலும் ஐந்து குருக்களையும் பத்து அருட்சகோதரிகளையும் உருவாக்கக் காரணமாய் இருந்து இந்த பத்து பேரிலும் நான் முதல் அருட்சகோதரி என்ற பெருமையைப் பெறச்செய்து என்னை உற்சாகப்படுத்தி சிறிய வயதிலிருந்தே பக்தியிலும், பண்பிலும் என்னை வளர்த்தெடுத்த என் ஊர் இறைமக்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

கடமை தவறியபோது சுட்டிக்காட்டி, நிலை தடுமாறிய போது பலம் தந்து, சோர்ந்த போது துணை நின்று, வீழ்ந்த போது கரம் கொடுத்த அனைத்து அன்பு பாச நெஞ்சங்களுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

**“ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர். என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு”** (திருப்பாடல் 118:1).

# “ஆண்டவரே! உம் கிருபை எனக்குப் போதும், என் வலுவின்மையில் என் வலிமை நீரே, என் பலவீனத்தில் என் பலம் நீரே” (2கொரி 12:9).



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : **சகோ. ஜோஸ்பின் தியாசெல்வி** |
| சபைஎண் | : 1117 |
| ஊர் | : தூத்துக்குடி |
| பங்கு | : புனித தோமையார் ஆலயம், தூத்துக்குடி |
| தந்தைபெயர் | : திரு. அந்தோணி குரூஸ் |
| தாய் பெயர் | : திருமதி. நெவி |
| உடன் பிறந்தோர் | : சகோதரர்கள் - 3, சகோதரி - 1 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| நிரந்தர அர்ப்பணம் | : 07.05.2004 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

**கருவிலே கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டது:**

**“உன்னை நான் இன்னும் நினைவில் கொண்டிருக்கிறேன்.**
**உனக்காக என் இதயம் ஏங்கித் தவிக்கின்றது.**
**திண்ணமாய் உனக்கு நான் இரக்கம் காட்டுவேன்”** (எரே 31:20).

இந்த இறைவார்த்தைக்கு ஏற்ப இறைவன் என் மேல் பேரிரக்கம் கொண்டு என்னை வாழ வைக்கின்றார். என்னை நினைவில் கொண்டிருக்கின்றார். எனக்காக ஏங்கித் தவிக்கின்றார். தாயின் கருவிலுள்ளபோதே இறைவன் நம் ஒவ்வொருவரையும் தேர்ந்துகொண்டார் என்பதை நாம் அனைவருமே நம்புகிறோம். ஆனால் என் வாழ்விலே இறைவன் அதை எனக்கு உணர்த்தி இருக்கிறார். தமிழகத்தின் தென் கோடியான, லெமூரியா கண்டத்தின் ஓரப் புள்ளியாய், 1000 ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டிய மன்னர்களின் ஓபீர் துறைமுகமாய்த் திகழ்ந்த உவரியில் புனித வியாகுல அன்னை கன்னியர் சபையினரால் 1978ல் முதன் முதலாய் கட்டப்பட்ட புனித வளனார் மருத்துவமனையில், முன்கூட்டியே நாள் குறிக்கப்பட்ட மூவரை முந்திக் கொண்டு முதல் குழந்தையாய்ப் பிறந்தேன். அரை பவுன் தங்கமும் வென்றேன்.

எனது அன்னைக்குப் பிரசவம் பார்த்த டாக்டர் சகோதரி எனக்கு ஞானத்தாய் ஆனார். வளனார் மருத்துவமனையில் பிறந்ததால் ஜோஸ்பின் என்ற பெயரைப் பெற்றேன். அப்போது உவரியில் பங்குத் தந்தையாக இருந்தவர் எனக்கு ஞானத்தந்தையானார். ‘தியோ ஃபிளஸ்’ என்ற அவரின் பெயரில் இருந்து ‘தியா’ என்ற பெயரைப் பெற்றேன். கருவிலே கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட கதை இதுவே.

**இளமைப் பருவம்:**

இரண்டு அண்ணன்கள், ஒரு அக்கா, ஒரு தம்பி என உறவுகளின் உபசரிப்பில்

அமோகமாக வளர்க்கப்பட்டேன். என் தந்தையைப் பொறுத்தவரையில் நான் மிகுந்த அதிர்ஷ்டம் கொண்டவள். பிறக்கும் போதே தங்கம் வென்றவள் என்பார். எனது 12 -ஆம் வகுப்பு வரை எங்கள் தொழிலுக்கான எரிபொருளை வாங்கிட என்னை மட்டுமே அனுமதிப்பார். என்னை அடைக்கல அன்னை சபைக்கு அவர் அனுப்பி வைத்தது உண்மையிலேயே ஆண்டவருக்கான மிகப்பெரிய அர்ப்பணமே.

**அடைக்கல அன்னையின் அடைக்கலத்தில்:**

அடைக்கல அன்னை சபைக்கு வந்தது தனி ஒரு கதை. Vocation Camp-ல் கலந்துகொண்ட ஒரு மாணவி தூத்துக்குடியிலிருந்து கிளம்பாததால் Extra இருந்த டிக்கெட்டில் பயணித்தவள் நான், வந்த இடத்திலேயே தங்கிவிட்டேன். இறைவனின் விளையாட்டு வியப்பானது. இது வேண்டும் எனக்கு, இது கிடைத்தால் நன்றாய் இருக்கும், இது எனக்கு தேவைப்படுகிறது என்று நினைக்கக் கூடாத அளவிற்கு இறைவன் என்னைப் பராமரிக்கிறார். என் சபை என்னைத் தாங்குகிறது. நான் என் குடும்பத்தினரிடமும், நண்பர்களிடமும் அடிக்கடி சொல்வதுண்டு. **“என் சபை என்னை ஒரு ‘மகாராணி’ போல் வைத்திருக்கின்றது”** என்று. வார்த்தைப்பாடு முதல் வெள்ளி விழா வரை பல வாசல்களை எனக்காகத் திறந்தவர் இறைவன்.

**தடம் பதிக்க இடம் தந்து, பலம் தந்து, புலம் தந்து,**
**வளம் தந்த என் தாய் சபைக்கு நன்றி!**
**கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடவுளின் கால் தடங்கள்**
**தோளில் என்னைத் தூக்கிச் சென்ற தொலை எண்ணி**
**உளமார உவப்படைகிறேன்.**

**பணி செய்த இடங்கள்:**

- 1998 மே 8 -ஆம் தேதி முதல் வார்த்தைப்பாடு
- அதன்பின் ஒரு வருடம் முடிச்சூர் இல்லத்தில் வாசம்
- 1999 – 2001 வரை மன்னார்குடியில் ஆசிரியப் பயிற்சி அங்கு அறிவு விருத்தி.
- அதன் பின் மாமண்டூரில் மகத்தான அனுபவம். அன்றைய அனுபவ ஆசான் மூத்த சகோதரி பிரிஜிட் அம்மா அவர்களுக்கு என் ஆத்மார்த்தமான நன்றிகள்.
- 2002 – 2004 வரை காஞ்சிபுரத்தில் கல்விப்பணி
- கல்விப் பணியில் முதல் காலடி. பின் ஒரு வருடம் செல்லம்பட்டிடையின் செல்லப் பிள்ளை ஆனேன்.
- 2005 - 2006 வரை பூந்தமல்லியில் என் கல்விப்பணி
- அதன்பின் சென்னை மாநிலத் தலைமையகத்தில் ஓராண்டுபணி
- 2008 - 2009 வரை உளவியல் பயிற்சி
- உளவியலில், மனதளவில், அனுபத்தில், கண்ணோட்டத்தில், அறிவில் மாற்றங்கள் தந்த மைசூர் பயணம்.
- மாற்றம், மலர்ச்சி, முதிர்ச்சி, பக்குவம், பட்டறிவு எனப் பலவகையான அனுபவங்கள்.
- அதன் பின் 3 மாதங்கள் “பிரெஞ்சு மொழி” பயில பாண்டிச்சேரி வாசம்.

- 2010 - 2015 வரை மயிலைத் தாய் வீட்டில் மறு பிரவேசம்.
- 2015 - 2017 வரை Nadu street -ல் இருந்து Lazarus பள்ளியில் தொடர்ந்த கல்விப்பணி
- 2018 முதல் பல்லாவரம் பணியரங்கில் எனது பயணம் தொடர்கிறது.

**நன்றி இறைவா!**

கடந்து வந்த தொலைவுகளில், பணி செய்த இடங்களில் கடவுளின் கிருபையை எண்ணி வியக்கிறேன்...

எத்தனை மனிதர்கள் நான் சந்தித்திட....
எத்தனை உறவுகள் என்னைத் தாங்கிட....
எத்தனை அன்பர்கள் என்னை நேசிக்க...

நான் நன்றாக இருந்தால் போதும் என்று மட்டுமே எண்ணும் பல நபர்கள் எனது வாழ்வில் எனக்குக் கிடைத்த பொக்கிஷங்கள். மறக்க முடியாத நபர்கள் என நான் நினைத்து நன்றி சொல்லப்பட வேண்டியவர்கள் ஏராளமானோர். எனது 23 -ஆம் வயதிலேயே இறந்துபோன எனது தாயின் இழப்பிலிருந்து என்னைத் தேற்ற இன்னொரு தாயாகவே மாறிப்போன சகோ. விக்டோரியா அமலோற்பவம் அவர்களுக்கு எத்தனை நன்றி சொன்னாலும் போதாது. என் முகம் பார்த்தே என் எண்ணங்களைப் புரிந்துகொள்ளும் அன்பிற்கினியவர்களுக்காய் இறைவனுக்கு எப்போதும் நன்றி கூறுவேன்.

**என்னை எனக்காய் நேசிக்கும்**
**என் அப்பாவுக்கு நன்றி!**
**என்னை வளர்த்து விட்டவர்கள்**
**எனக்கு தோள் கொடுத்தவர்கள்**
**என்னைச் செதுக்கியவர்கள்**
**என்னைத் தாங்கிக் கொண்டவர்கள்**
**உண்மையான அன்பை உணர வைத்தவர்கள்**
**அனைவருக்காகவும் இறைவனுக்கு நன்றி!**



# “இனி வாழ்பவன் நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்” (கலா 21:20).



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : **சகோ. கலாமேரி** |
| சபை எண் | : 1118 |
| பிறந்த மண் | : புலியடித்தம்மம் |
| பங்குத் தளம் | : போஸ்கோ மையம் |
| மறை மாநிலம் | : சிவகங்கை |
| தந்தை பெயர் | : திரு. அருள் (விண்ணில்) |
| தாய் பெயர் | : திருமதி. காணிக்கைமேரி |
| உடன் பிறந்தோர் | : சகோதரன் - 1 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| நிரந்தர அர்ப்பணம் | : 07.05.2004 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

**எனது அழைப்பு:**

“நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்” (எரே 1:5).

சிவகங்கை மறை மாவட்டத்தில் உள்ள போஸ்கோ மையம் பங்குத்தளத்தில் புலியடித்தம்மம் என்ற சிற்றூரில் 7 -வது குழந்தையாகப் பிறந்தேன். எனக்கு முன்னும், எனக்குப் பிறகும் பிறந்த குழந்தைகள் எல்லோரும் சில நோயினால் இயற்கை எய்தினர். கடவுளின் அருளால் தப்பிப்பிழைத்து உயிர் வாழ்பவர்கள் நானும் என் தம்பியும்தான். தம்பி 9 -வது குழந்தை.

சிறு வயதில் இருந்தே எனக்கு அதீத விருப்பம், ஆசையெல்லாம் துறவியாக பணி செய்ய வேண்டும். ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே. எனது பெற்றோருக்கு என்னை துறவற பணிக்கு அனுப்ப விருப்பம் இல்லை. எனது தீராத ஆசையினால் இவ்வாழ்வை விரும்பி தேர்ந்தெடுத்தேன். ஆனால் இறுதியாக ‘உன் விருப்பம் போல் செல். ஆனால் முன் வைத்த காலை பின் வைக்காதே’ என்று கண்டிப்புடன் கூறினார்கள். அவர்களது வார்த்தைகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு இன்று வரை வாழ்கிறேன்.

**இளமையும் இறைவனும்:**

இளமையில் இறை பக்தியில் என்னை ஆழப்படுத்திய என் பெற்றோர் உரிய காலம் வந்தபோது இறைவனின் அழைத்தல் எனக்கு உண்டென்று அறிந்ததும் துறவறத்திற்கு என்னை அனுப்ப மிகவும் இடர்பாடுற்றபோது நான் உறுதியாக இருந்ததையும், கடவுள்

அழைத்ததை தடைபோட முடியாத உறுதியான மனநிலையில் இருந்ததையும் என் பெற்றோர் உணர்ந்து கொண்டனர். நிலையற்ற உலகை விடுத்து நிலையானவனைப் பற்றிக்கொள்ள நிரந்தரமானவரின் அழைப்பை நிராகரிக்க முடியாதவளாய் படைத்தனின் பாதம் பணிய வெற்றி நடை போட்டுக்கொண்டு அடைக்கல அன்னை சபையில் பெருமகிழ்ச்சியோடு சேர்ந்தேன். கடவுளின் அளப்பறிய கருணையை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். ஆம்...

**இறைவன் என் வாழ்வை வழிநடத்தினார்.**
**வாழ்வுக்கு வழி தந்தார். ஒளியாய் இருந்தார்,**
**என் வாழ்வை ஒளிபெறச் செய்தார்.**
**அவரின் அருகில், அரவணைப்பில் வாழ அழைத்தார்.**
**காலை நேர தென்றல் போலும், மாலை நேர வெயில் போலும்**
**மாசற்ற வாழ்வு வாழ மாறாத இறைவன் துணைநின்றார்.**

**பணியாற்றிய இடங்கள்:**

- முடிச்சூர்
- திண்டுக்கல் - சாந்தா பாத்திமா பயிற்சி நிறுவனம்
- மைலாப்பூர்
- ஆதிச்சபுரம்
- பூக்காரத்தெரு
- மைக்கேல்பட்டி
- கொடைக்கானல்
- மிடாலம்

“கடவுள் தாம் விடுத்த அழைப்பையும், கொடுத்த அருட்கொடைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்வதில்லை” (உரோ 11:29).

**எனது துறவுப் பயணத்தில்:**

**“ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு”**
**(தி.பா 117:11).**

➢ மகிழ்வோடு தொடங்கிய என் துறவற வாழ்வுப் பயணத்தில் துணைநின்ற சொந்தங்களுக்கும், மனம் தொட்ட நண்பர்களுக்கும், மலர்தூவி பாதம் தொட்டு பணிவோடு நன்றி சொல்கிறேன்.

➢ மரமானது மண்ணுக்கு மேலே தழைத்து செழித்து, கிளைகள் விட மண்ணுக்குள் புதையுண்டு கிடக்கும் வேர்கள் காரணமாவது போல், நான் எனது அர்ப்பணத்தில் வளர்ந்திட, ஆன்ம வாழ்வில் நிலைத்திட எனக்கு உறுதுணையாய் இருந்து வழிநடத்திய முன்னாள், இந்நாள் சபைத் தலைமை அன்னையர்கள், மாநிலத் தலைமைச் சகோதரிகள், விருப்பநிலை, தேர்வுநிலை, நிரந்தர அர்ப்பணம் இவைகளில் எனக்கு வழிகாட்டியவர்கள் அனைவருக்கும் என் நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

- கடந்த 25 ஆண்டு கால துறவற வாழ்வில் என்னோடு பயணித்து, என் மகிழ்ச்சியில் திளைத்து, தளர்ச்சியில் தாங்கி, வெற்றியில் மகிழ்ந்து, நம்பிக்கையில் ஆழம் கண்டிட உதவி செய்த அத்தனை உள்ளங்களையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.
- என்னுடன் வார்த்தைப்பாடு கொடுத்த என் அன்புச் சகோதரிகள், இல்லத் தலைமைச் சகோதரிகள், உடன் வாழ்ந்த சகோதரிகள், உடன் பணியாற்றிய ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**“நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி தம் தூதருக்கு**
**அவர் கட்டளையிடுவார்”** (தி.பா. 91:11)

என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப ஒரு நொடிப் பொழுதும் என்னைவிட்டு விலகாமல் காத்து வரும் என் இயேசுவுக்கும், எனது வாழ்வை மகிமைப்படுத்திக் கொண்டே இருக்கும் புனித அடைக்கல அன்னை சபைக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் பல கூறி நிறைவு கொள்கிறேன்.

**இறுதியாக...**

**“எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைக்கொண்டு**
**எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு”** (பிலி 4:13)

என்ற புனித பவுலடியாரின் வார்த்தைக்கு இணங்க ஆண்டவர் என்னைத் தம் கருவியாகத் தேர்ந்தெடுத்து வலுவூட்டி அடைக்கலத் தாயின் அரவணைப்பிலும், புனித அசிசியாரின் பாதுகாவலிலும் துணையிருந்து வழிகாட்டிய பேரன்பிற்கு நன்றி.

**தொடர்ந்து உம் திருவுளம் அறிந்து செயல்பட...**
**என்னைப் பலப்படுத்தும்**
**என்னைப் பக்குவப்படுத்தும்**
**என்னை பண்படுத்தும்**
**என்னை பயன்படுத்தும் இறைவா...**

**Lord You are my Strength!**



# "துறவு என்னும் உறவு பயணத்தில் 25 ஆண்டுகள் நன்றியோடு நினைக்கிறேன்... நன்றிக்கரம் குவிக்கிறேன்".



| | |
|---|---|
| பெயர் | : சகோ. மார்கரெட் |
| சபை எண் | : 1119 |
| பிறந்த ஊர் | : வைரப்பெருமாள் பட்டி |
| பங்குத் தளம் | : பூதலூர் |
| மறை மாவட்டம் | : தஞ்சாவூர் |
| தந்தை பெயர் | : ச. சந்தனமுத்து |
| தாய் பெயர் | : ச. அல்போன்ஸ் மேரி |
| உடன் பிறந்தோர் | : சகோதரிகள் - 2, சகோதரர்கள் - 3 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| இறுதி அர்ப்பணம் | : 07.05.2004 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

**பிறப்பும் வளர்ப்பும்:**

**விதையாக நானிருந்தேன் மழையாக நீ இருந்தாய்**
**மலர்ந்தேன் மண்ணுலகில் மகிழ்ந்தேன் பணி வாழ்வில்**
**மலர்ந்தேன் இறை உறவில், மகிழ்ந்தேன் இறை உறவில்.**

தஞ்சை மறைமாவட்டம் பூதலூர் பங்கைச் சார்ந்த வைரபெருமாள்பட்டி என்னும் சிறு கிராமமே எனது ஊர். சிற்றூர் எனினும் மருதம் காணும் வளம் யாவும் நிரம்பப் பெற்ற அழகிய ஊர். நாற்புறமும் நீர் நிலைகளால் சூழப்பட்ட அழகிய சோலை. பருவக் காலங்களில் சாலையில் நடந்தால் அதன் அழகை ரசிக்க இரு கண்கள் போதாது என்றே தோன்றும். இத்தகைய அழகு மிகுந்த சோலையின் நடுவே கோவிலாக சிறு குடில் அதன் தலைவர்களான திருவாளர். சந்தனமுத்து, திருமதி. அல்போன்ஸ் மேரி இவர்களின் இரண்டாவது மகளாகப் பிறந்தவள்தான் நான்.

என் தந்தையோடு பிறந்தவர்கள் 5 சகோதரர்கள் மற்றவர் இல்லத்தில் பெண் பிள்ளைகள் இல்லாததால் 5 தந்தையர்களும் என்னை ஊட்டி வளர்த்தார்கள். அன்பை கூட்டி வளர்த்தார்கள். சுட்டிக்காட்டி வளர்த்தார்கள். அதே நேரத்தில் எனக்கு முழு சுதந்திரமும் இருந்தது. எது கேட்டாலும் கிடைத்தது. 5 குடும்பத்தில் மட்டுமல்ல என் உறவுகள் சுற்றத்தாரிடமும் நான் மிகவும் செல்லப் பிள்ளையாகவே வளர்ந்து வந்தேன்.

**படிப்பும் அழைப்பும்:**

தொடக்கக் கல்வியை நான் எங்கள் ஊரிலேயே ஆரம்பித்தாலும் அதை நான் முடிக்கவில்லை. மூன்றாம் வகுப்பு முடித்தவுடன் பக்கத்து ஊருக்கு சென்று படிக்க நான் விரும்பினேன். என்ன கேட்டாலும் கிடைக்கும் என்ற சூழல் இருந்ததால் என் விருப்பத்தைச்

சொன்னவுடன் தாய் மறுத்தார். தந்தையோ படிப்பில் நான் காட்டும் ஆர்வம் கண்டு, 3 கி.மீ தொலைவு என்னால் சென்று வர இயலாது என்று உணர்ந்தும் சம்மதம் தெரிவித்தார். சித்திரக்குடி மாதா கோயிலுக்கு அருகில் உள்ள தொடக்கப் பள்ளியில் 4 -ஆம் வகுப்பில் சேர்ந்தேன். அங்குதான் என் அறிவு பசிக்கு மிகச் சிறந்த விருந்து அளிக்கப்பட்டது. என் 4 -ஆம் வகுப்பு ஆசிரியர் திருவாளர் துரை ராஜ் அவர்கள் என் சிறந்த ஆசிரியர்களுள் ஒருவர். என் ஆரம்பக் கல்விக்கு அடித்தளமிட்டவரும் இவரே. படிப்பின் மீது நான் காட்டும் ஆர்வத்தையும் அதன் பொருட்டு நான் தொடுக்கும் வினாவையும் என் சுட்டித்தனத்தையும் கண்ணுற்ற ஆசிரியர், இந்தக் குழந்தையை Convent school-லில் சேர்த்து படிக்க வைக்க வேண்டும் என்று தன் சக ஆசிரியர்களோடு அதிகமாக என்னைப் பற்றியே உரையாடியிருக்கிறார். நண்பகல் உணவு இடைவேளையிலும் பல நாட்கள் என்னை அழைத்து உரையாடுவார். இறுதியில் அந்தப் பள்ளியை விட்டு நான் வரும்போது அதே ஆசிரியர் என் தந்தையிடம் குழந்தை நன்றாகப் படிக்கிறாள், அய்யம்பேட்டையில் உள்ள Convent school-லில் சேர்த்துவிடுங்கள் என்றார். அவ்வளவு தொலைவு அனுப்ப பெற்றோருக்கு மனமில்லாததால் பூதலூரில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 6 -ஆம் வகுப்பு சேர்ந்தேன்.

இங்கு நான் படிக்கின்ற காலத்தில் என் தாய்மாமா திருவாளர் செல்வராஜ் அவர்கள் என் படிப்பிற்கு வழிகாட்டியாகவும், ஊக்குநராகவும் இருந்தார். நான் நன்கு படிக்க அவர்கள் மிகுந்த சிரத்தை எடுத்தார்கள். அங்கும் நான் வகுப்பில் சிறந்து விளங்கினேன். 8 -ஆம் வகுப்பு முடிக்கின்ற போது மீண்டும் Convent school கனவு எனக்குள் உண்டாயிற்று. பெற்றோர் மறுத்ததால் சித்தப்பாவின் உதவியுடன் பள்ளியிலும், விடுதியிலும் சேர்ந்தேன். இவ்வாறு Convent school கனவு ஒரு நாள் நனவானது.

பூங்காரத் தெருவில் உள்ள நமது தூய வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியே என் இறை அழைத்தலுக்கான வாயில். 9 -ஆம் வகுப்பு முதல் தஞ்சை தூய வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நான் படித்த 4 ஆண்டுகளும் எனக்கொரு வசந்த காலமாகவே அமைந்தது. எந்த நேரமும் புத்தகமும், கையுமாக இருப்பேன். ஆதலால் விடுதி மாணவிகளின் மத்தியில் "புத்தகப் புழு" என்ற பெயரும் எனக்கு உண்டு. எம் பள்ளியில் 12 -ஆம் வகுப்பு இறுதி ஆண்டில் தேவ அழைத்தல் முகாம் நடைபெற்றது. அதனைத் தலைமை ஏற்று நடத்தியவர் நம் முன்னாள் சபைத் தலைமை அன்னை லூர்து மேரி அவர்கள். அவர்களின் அழைத்தல் பற்றிய பகிர்வு என் அழைத்தலுக்கு தூண்டுகோலாய் அமைந்தது.

நான் துறவியாக வேண்டும் என்ற என் ஆசையை பெற்றோரிடம் சொன்னபோது என் தந்தை கூடாது என்று போர்க்கொடி உயர்த்தினார். அவர் மட்டுமல்ல அவரோடு பிறந்த அத்துணை பேருமே வேண்டாம் என்றார்கள். ஆனால் என் தாயின் ஒற்றை மௌனம் மட்டுமே எனக்கு ஆறுதலைத் தந்தது. துணிவைத் தந்தது. நான் சென்னை செல்வதற்கு மாமாவின் உதவியை நாடினேன். அறைகுறை மனதுடன் அவர்கள் ஒப்புக்கொண்டாலும் பயணம் முழுவதும் பாங்குடன் எனக்குப் போதித்தார்.

**உருவாக்கமும் ஊக்குநர்களும்:**

○ மைலாப்பூர் இல்லத்தில் அடியெடுத்து வைத்து 6 மாதங்கள் அற்புதமாய் கழிந்தது. அன்னை லூர்து மேரி அவர்கள் ஆங்கிலம் உச்சரிப்பதிலும், பாடல்கள் பாடுவதிலும்

சிறந்த பயிற்சிகளை அளித்து எங்களை மெருகேற்றினார்கள். அன்னை லூர்துமேரி அவர்கள் இல்லை என்றால் அழைத்தல் வாழ்வு பற்றி அறியாதிருந்திருப்பேன். அன்னைக்கு என் உளம் நிறைந்த நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

- பெங்களூர் தயாநிவாஸ் இல்லத்தில் சகோதரி கிளாரா அவர்களால் புடவை உடுத்துவது முதல் பூ கட்டுவது வரை, திருப்பலிக்கு தயாரிப்பது முதல் தீக்குச்சியை கொளுத்துவது வரை அனைத்திலும் மிக நேர்த்தியாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. அன்புச் சகோதரி கிளாரா அவர்களை நன்றியோடு நினைக்கிறேன்.
- சென்னை பூவிருந்தவல்லியில் இரண்டு வருட பயிற்சியில் என்னை செதுக்கி வடிவமைப்பதில் அன்னை பென்சி, சகோ. டெரன்சியா, சகோ. தனசீலி, சகோ. அருள் இவர்களின் பங்கு மிகப்பெரியது. போற்றுதற்கு உரியது. இவர்களை வணங்குகிறேன். உள்ளன்போடு நன்றிகரம் குவிக்கிறேன்.
- வார்த்தைப்பாட்டுக்குப்பின் முதல் குழுமமாக அமைந்தது மைலாப்பூர் இல்லம். அங்கு செல்ல நான் மிகவும் பயந்தேன். அழுதேன். என் மனம் புரிந்து அன்னை சுகந்தா அவர்களும், சகோ. டெரன்சியா அவர்களும் என்னை ஆறுதல்படுத்தினார்கள். ஒவ்வொரு மாதமும் ஒப்புரவு அருட்சாதனத்திற்கு வரும்போது என்னையும் வந்து அழைத்துச் செல்வார்கள். அந்த நாள் முழுவதும் மிகுந்த சந்தோஷமாக இருப்பேன். என்னை ஸ்திரப்படுத்தினார்கள் என்றே சொல்வேன். இவர்களை அன்போடு நினைவு கூர்கின்றேன். மயிலையில் நான் ஆங்கிலப் பள்ளியில் பணிபுரிந்தேன். அப்பள்ளியின் தலைவர் அன்னை ரபேக்காள் அவர்களிடம்தான் நுணுக்கமான கைவேலைப்பாடுகளையும், பணத்தின் மட்டில் பற்றில்லா மனநிலையையும் கற்றுக் கொண்டேன். வளர்த்துக் கொண்டேன். பணி வாழ்வில் சிறக்க அடிப்படையான தகவல்களைக் கொடுத்து ஊக்குவித்த அன்னை அவர்களை நன்றியோடு நினைக்கிறேன். விண்ணகமிருந்து அவரின் ஆசீரை வேண்டுகிறேன்.

**பணிவாழ்வும் குழு வாழ்வும்:**

நாகப்பட்டினம் (2002 - 2004):

பணிவாழ்வும், குழும வாழ்வும் ஒருங்கே அமையப் பெற்ற முதல் இடம் நாகை. இங்கு பணி வாழ்வில் நான் காலூன்றிய விதம், குழந்தைகளோடு என்னை கரைத்துக் கொண்ட பாங்கு, ஆசிரியப் பெருமக்களோடு நான் உறவாடிய முறை, அனைத்தும் அனைவரையும் கவர்ந்தது. என்னையே எனக்கு மிகவும் பிடித்தது. குழந்தைகளின் அன்பை மொத்தமாக அதுவும் முத்தமாக பெற்ற இடமும் அதுவே. பணிவாழ்வின் ஆரம்பம் அதுதான் என்றாலும் அற்புதமாக செயல்படுகிறேன் என்றே அனைவரும் பாராட்டினார்கள். முதல் ஆண்டிலேயே பல பொறுப்பான பணிகள் எனக்கு கொடுக்கப்பட்டன. இல்லச் செயலர் பணி, விடுதி பொறுப்பாளர் பணி, பங்கு ஆலயப் பணி, அன்பியப் பணி என பல பணிகளை எனக்கு கொடுத்து என்னை ஊக்குவித்து வளர்த்துவிட்ட பெருமை அன்னை ரோஸ்மீனா அவர்கள் மற்றும் நாகை குழுமச் சகோதரிகளையேச் சாரும்.

சகோ. ஜோஸ்பின், சகோ. கஸ்பார், சகோ. சோபியா இவர்கள் மிகச் சிறப்பாக என்னை செதுக்கினார்கள். அன்பும் அரவணைப்பும் மிகுதி. கண்டிப்புக்கும் குறைவிருக்காது. குழும உறவில் இவர்களைத்தான் நான் முதன் முதலில் அக்கா என அழைத்தேன். அம்மா

பெஞ்சமீன் அவர்கள் ஒருநாள் நான் இல்லத்தில் இல்லை என்றால் தேடுவார்கள். என் வருகைக்காய் காத்திருப்பார்கள். இன்று வரையில் மகிழ்வான நிறைவான குழும வாழ்விற்கு உதாரணமாக நான் கூறுவதும் இந்த என் முதல் குழுமத்தையே. என் முதல் குழும சகோதரிகளை நன்றி நிறைந்த உள்ளத்தோடு இன்று நினைத்துப் பார்க்கிறேன் நன்றிக்கரம் குவிக்கிறேன்.

**வேளை நகர் (2004 – 2005):**

பாட்டுக்காக பல வருடங்கள் நான் அங்கு சென்றாலும் குழுமச் சகோதரியாக ஒரு வருடம் மட்டுமே அங்கு இருந்தேன். அன்னை செபஸ்தி அவர்கள் தலைமையில் அமைந்திருந்த குழுமம் மிகச் சிறப்பானது. அன்னை என்னை ஊட்டி வளர்த்தார்கள் என்பதே உண்மை. எதைக் கேட்டாலும் செய்தார்கள். என் செயல்களில் பிழை ஏதும் நிகழ்ந்துவிடா வண்ணம் இரு புறமும் என் காவல் தூதர்களைப் போல நின்று என்னை வழிநடத்தியவர்கள் சகோ. சித்ரா, சகோ. கேத்ரின் இசைப் பற்றிய பல புதிய விஷயங்களையும், அதன் நுணுக்கங்களையும் இந்த சகோதரிகளிடமிருந்தே அறிந்து கொண்டேன். வேளை நகர் குழுமச் சகோதரிகளை உள்ளன்போடு நினைத்து நன்றிக்கரம் குவிக்கிறேன்.

**திருவாரூர் - (2005 - 2006, 2014 - 2017):**

அமைதியான அழகான மலர்வனம் போன்ற குழுமச் சூழலில் நான் வாழ்ந்தது ஒரு வருடம் மட்டுமே. சகோ. ரீட்டா அவர்களின் தலைமையில் அமைந்திருந்த குழுமம் பாசம் மிகுந்தது. பரிவு நிறைந்தது, புரிதல் கொண்டது. இல்லத்தில் மட்டுமல்ல பள்ளியிலும் இறைவனுக்கே சிறப்பிடம் அளிக்கப்பட்டது. பள்ளியின் காலை வழிபாட்டில் விவிலியம் தொடர்பாக புதுமைகளைச் செய்ய முழுச்சுதந்திரம் அளிக்கப்பட்டது சிறப்பான செயலாகும்.

சகோ. ஜோஸ்பின் இவர்களின் தலைமையில் அமைந்த இந்தக் குழுமத்தில் அலுவலகப் பணிகளை இவர்களைப் பார்த்தும், இவர்களிடமிருந்தும்தான் கற்றுக் கொண்டேன். இளைய சகோதரிகள் அதிகம் என்பதால் உண்மையான அன்பும், பாசப் பிணைப்பும் மிகுந்திருந்தது. இந்த என் குழுமச் சகோதரிகள் அனைவரையும் நன்றியோடு நினைக்கிறேன். நன்றிக்கரம் குவிக்கிறேன்.

**தஞ்சை பூக்காரத் தெரு (2006 - 2009):**

தஞ்சை என்பது எனக்குத் தாய் வீடு போன்றது. பூக்காரத் தெரு என் அகம் என்பதால் எதுவும் குறைவின்றி அனைத்து நிலைகளிலும் நான் வளர்ச்சி பெற என் குழுமச் சகோதரிகள் உறுதுணையாய் இருந்தார்கள். அன்னை இன்வயலேத்தா முதல் கடைக்குட்டி சகோ. எடல் குயின் வரை அனைவரையும் நன்றியோடு நினைக்கிறேன். நன்றிக் கரம் குவிக்கிறேன்.

**ஆத்துக்குடி (2009 - 2014):**

“சுகராகம் நீயே இயேசுவே உன் நாமம் போற்றுவேன்
தெவிட்டாத நீர்சுனையாகவே கவினூறு பாடுவேன்”

இந்த பாடல் வரிகளை அதிகமாக அசைபோட்ட காலம், இயற்கையையும், இறைவனையும் மிக அதிகமாக அன்பு செய்த காலம் அது. 4 பேர் உள்ள குழுமம்.

நான்தான் இளையவள். அனைத்துப் பொறுப்புகளையும் நான் ஏற்று செய்யக் கூடியச் சூழல் அமைந்தது, விருப்பத்தோடு அனைத்தையும் செய்தேன்.

இரவு பகல் என்று பாராமல் பணி செய்த இடம்...
பல திறமைகளை வளர்த்துக்கொண்ட இடம்...
மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்ற இடம்...
நிறைவாக நான் மகிழ்வாக கல்விப் பணி ஆற்றிய இடம்...
என்னை நானே கண்டுகொண்ட இடம்...

மனச் சோர்வுகள் ஏற்படுகிற போது சுகமான சூழலாக நான் தேர்வு செய்வது இயற்கையைத்தான். தோட்டத்திற்குள் சென்று அது தரும் கனிகளைச் சுவைத்து இன்புற்று இல்லத்திற்கு நான் திரும்ப குறைந்தது 2 மணி நேரமாவது எடுத்துக்கொள்வேன். அவ்வாறு திரும்புகின்ற பொழுது என் மனது இலேசாகி இருக்கும். புது ஆற்றலைப் பெற்றது போல் மகிழ்ந்து இருப்பேன். அதே வேளையில் நற்கருணை ஆண்டவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டே உறங்கியதும் இங்குதான். இயற்கையோடு நான் கொண்ட உறவு எனக்குப் புத்துணர்ச்சியை, மகிழ்ச்சியை அளித்து என் உடலையும் உள்ளத்தையும் குளிர்வித்தது என்றால், இறைவனோடு நான் கொண்ட உறவு என் ஆன்மாவுக்கு பெலத்தையும், வலிமையையும், பொறுமையையும் இடைவிடா முயற்சியையும், உற்றுநோக்கும் திறனையும், ஆண்டவரை மட்டுமே நம்பியிருக்கும் எண்ணத்தையும், பிறரை ஆற்றுப்படுத்தும் திறனையும், ஆறுதலையும் எனக்கு அளித்தது என்றால் அது மிகையாகாது. பங்கிலும் சரி, பள்ளியிலும் சரி மக்களின் ஒத்துழைப்பு அற்புதமானது. மிகுந்த உரிமையோடு நடந்து கொள்வார்கள். அதிகமான கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்தித்து பணி செய்திருக்கிறேன். பொன்னுக்குடி, கஞ்சாநகரம் போன்ற கிராமங்களை என் சொந்த ஊராகவே நினைக்கிறேன். இப்படிப்பட்ட அழகான சூழலில் வாழ வாய்ப்பளித்தது என் சபை. நான் வாழ்ந்த 5 ஆண்டுகளில் என்னோடு பயணித்த குழுமச் சகோதரிகள் அனைவரையும் நன்றியோடு நினைக்கிறேன். நன்றிக் கரம் குவிக்கிறேன்.

**திருத்துறைப்பூண்டி (2017 – 2022):**

அழகான குடும்பம், பாசமான சகோதரிகள், கடலாக பள்ளி, அலையாக மாணவர்கள், நதியாக நான் அதில் கலந்து இன்புற்றேன் என்பதே பெருமை. வேறு என்ன வேண்டும் எனக்கு. அனைத்து வசதிகளும் இருந்த அழகான இடம் இது. இந்த குழுமத்தில் என்னோடு பயணித்த அன்புச் சகோதரிகள் அனைவரையும் நன்றியோடு நினைக்கிறேன். நன்றிக்கரம் குவிக்கிறேன்.

**காஞ்சிபுரம் (2022):**

காஞ்சி மாநகர் என்னை வாஞ்சையோடு அழைத்ததாகவே உணர்கிறேன். அமைதியான சூழல் பாசமான சகோதரிகள். பக்குவமடைந்த, புரிதல் மிகுந்த சகோதரிகள். இதைவிட வேறு என்ன வேண்டும் எனக்கு. பள்ளியிலும் ஆசிரிய சகோதரிகள் அதிகம் என்பதால் அனைத்துப் பணிகளையும் கற்றுக்கொள்ள சிறந்த வாய்ப்பாக அமைந்திருக்கிறது. அனைத்துப் பணிகளிலும் சகோதரிகள் உறுதுணையாக இருக்கிறார்கள். இந்தக் குழுமத்தில் இந்த வருடம் நான் வாழ வாய்ப்பளித்த இறைவனுக்கும் என் உடன் பயணிக்கின்ற காஞ்சி மாநகர் குழுமச் சகோதரிகளுக்கும் உளமார்ந்த நன்றியை சமர்பிக்கிறேன்.

**நன்றியோடு நினைக்கிறேன்:**

✳ எனக்கு உரு கொடுத்து அன்பையும் கரிசனையும் ஊட்டி வளர்த்த என் பெற்றோருக்கும் என் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த உடன் பிறந்தோர்களுக்கும் நன்றிகரம் குவிக்கிறேன்.

✳ நான் துறவியாக வேண்டும் என்று ஆசித்த என் பாசத்திற்குரிய தாத்தா பிரான்சிஸ் அவர்களுக்கும், தொடக்கப் பள்ளியிலேயே துறவுக்கு வித்திட்ட தொடக்கப்பள்ளி ஆசிரியர் துரைராஜ் அவர்களுக்கும் நன்றிக்கரம் குவிக்கிறேன்.

✳ உண்மையான அன்பால் உதவிட்ட உறவுகளுக்கும், நேசமுடன் நட்பை பகிர்ந்திட்ட நண்பர்களுக்கும் நன்றிகரம் குவிக்கிறேன்.

✳ இந்நாள் வரை ஆன்மீகத்தில் நான் வளர்ந்தோங்க என் திறன் அறிந்து, மனம் புரிந்து, பல்வேறு வாய்ப்புகளை எனக்கு வழங்கி, பணி வாழ்வில் செழித்தோங்கச் செய்த நம் சபை முன்னாள் தலைமை அன்னையர்கள் அன்னை ஜான் தி பிரிட்டோ, அன்னை பாத்திமா ராணி, அன்னை லூர்து மேரி ஆகியோரையும் நன்றியோடு நினைக்கிறேன். நன்றிக்கரம் குவிக்கிறேன்.

✳ தாய் பறவை தன் குஞ்சுகளை இறக்கைக்குள் கூட்டிக்காப்பது போல், கரிசனையும், கருணையும் மிகுந்த பல வாய்ப்புகளைச் சகோதரிகளின் மனம் புரிந்து... வழங்கி... வாழ்விக்கின்ற எம் சபையின் தற்போதைய தலைமை அன்னை மதிப்பிற்குரிய அன்னை மரிய பிலோமி அவர்களையும் நன்றியோடு நினைக்கிறேன். நன்றிக்கரம் குவிக்கிறேன்.

நன்றி!!!



# “எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள்”
## (1தெச 5:16).



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : சகோ. மெல்கிசா மேரி |
| சபை எண் | : 1121 |
| பிறந்த மண் | : குளப்பெண்பட்டி |
| பங்குத் தளம் | : கோட்டைக்காடு |
| மறை மாநிலம் | : தஞ்சாவூர் |
| தந்தை பெயர் | : திரு. ஆரோக்கிய சாமி |
| தாய் பெயர் | : திருமதி. சலேத்மேரி |
| உடன் பிறந்தோர் | : மூத்த சகோதரிகள் - 3, இளைய சகோதரிகள் - 3 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| நிரந்தர அர்ப்பணம் | : 09.05.2005 |
| வெள்ளி விழா | : 04.05.2023 |

**பிறப்பும் குடும்ப வளர்ப்பும்:**

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்,
பிறந்துபாரென இறைவன் பணித்தான்.
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்,
அறிந்துபாரென இறைவன் பணித்தான்.
அன்பெனப்படுவது என்னெனக் கேட்டேன்,
அளித்துப்பாரென இறைவன் பணித்தான்.
துறவு என்பது யாதெனக் கேட்டேன்,
துறந்து பாரென இறைவன் பணித்தான்.
அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனெக் கேட்டேன்...
ஆண்டவன் சற்று அருகே நெருங்கி,
அனுபவம் என்பதே நான்தான் என்றான்.

- கவிஞர் கண்ணதாசன்

வாழ்க்கையில் அனுபவம் மூலம் இறைவனைக் கண்டிட குளப்பெண்பட்டியில் நல் முத்தாய் பிறந்து புனித அடைக்கல அன்னையின் பாதுகாப்பில் நாளும் வளர்ந்தேன். துருதுருவென்று துள்ளித்திரிந்த நான், அன்பும், பாசமும் நிறைந்த தாத்தா, பாட்டியால் வளர்க்கப்பட்டேன். கண்டிப்பு நிறைந்த பெற்றோரால் பலவற்றை அறிந்து கொண்டேன்.

**என் தந்தையின் ஆன்மீக ஆசை:**

சிறுவன் சாமுவேலை கடவுள் அழைத்து தன்னை யாரென உணரச் செய்தது போல் என் தந்தை புனித அடைக்கல அன்னையின் ஆலயமணி அடித்தவுடன் கோவிலுக்குச்

சென்று செபமாலை, திருப்பலி ஆகியவற்றில் முழுமையாகப் பங்கெடுக்க என்னை ஊக்கப்படுத்தினார், உற்சாகப்படுத்தினார். எனக்கு ஒரு முன்மாதிரி உள்ள தந்தையாகவும் வாழ்ந்து காட்டினார்கள். அவர்கள் இட்ட அடித்தளம்தான் எனது அர்ப்பணத்திற்கு வழிவகை செய்தது என்பதை நான் அனுபவப்பூர்வமாக உணர்ந்தேன்.

**ஆன்மீக அழைப்பு:**

"அழைப்பு என்பது பிழைப்பு அல்ல மாறாக அது ஒரு கொடை"

தஞ்சை பூக்காரத் தெருவில் உள்ள புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1995 -ஆம் ஆண்டு 12 -ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுக்கு ஆங்கிலப் பாடத்தை நான் படித்து கொண்டிருக்கும் போது, 12 -ஆம் வகுப்பு ஆங்கில ஆசிரியை திருமதி. இருதய மேரி அவர்கள் ஒரு நாள் காலை வழிபாட்டிற்கு முன் என்னை அழைத்து "மெல்கி நீ ஒரு அருட்சகோதரியாக மாறுவாய் என்று என் மனம் சொல்கிறது" என்று கூறிய பிறகு எனக்குள் அழைப்பு இருக்கின்றது என்பதை அன்றுதான் நான் உணர்ந்தேன். எனது அழைத்தலுக்கு ஆணிவேராக இருந்த ஆசிரியை திருமதி. இருதய மேரி அவர்களை நன்றியோடு இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

**பணி வாழ்வில்:**

"தடம் பார்த்து நடப்பவர்கள் மனிதர்கள்,
தடம் பதிப்பவர்கள் மாமனிதர்கள்"

என்கிறார் பிடல்காஸ்ட்ரோ. நான் யார்? நான் ஏன் பிறந்தேன்? எதற்காக இந்த துறவு வாழ்வுக்கு வந்தேன் என்பதை 2011 -ஆம் ஆண்டு திருத்துறைப்பூண்டி கிளை இல்லத்திற்கு மாற்றம் பெற்று சென்ற பின் உணர இறைவன் அருள் செய்தார். ஒரு நாள் அங்கு உள்ள சிற்றாலயத்தில் ஆண்டவன் முன் அமர்ந்து எனக்குள்ளே கேள்வி எழுப்பினேன். நான் நன்கு ஆடுவேன். ஓரளவு பாடுவேன். என்னை சந்திப்பவர்களிடம் புன்னகையை உதிர்ப்பேன். மனித நேயத்துடன் நடந்துகொள்வேன். மகிழ்ச்சியாக இருப்பேன். கடினமாக உழைப்பேன். நன்கு பாடம் கற்பிப்பேன். குழந்தைகள் மனதில் இடம் பிடித்தேன். பங்குப் பணியை முழு ஈடுபாட்டுடன் செய்வேன். ஆனால் இவை எதிலும் எனக்கு நிறைவு இல்லை. என்னில் ஒரு நிறைவற்றத்தன்மை இருப்பதைக் கண்டுகொண்டேன். இந்த உலகில் ஒவ்வொரு உயிரும் ஏதோ ஒரு வகையில் மற்ற உயிருக்கு உதவுகிறது, அப்படியெனில் நான் எந்தவகையில் மற்றவருக்கு உதவியாக இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொண்டேன். விடை தெரிந்து கொண்டேன்.

**சிறைப்பணி:**

"சிறையில் இருந்தேன் என்னைத் தேடிவந்தீர்கள்" (மத் 25:36)

திருத்துறைப்பூண்டி குழுமத்தில் பணி செய்யும் போது சிறைப்பணி செய்ய சென்னை உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த சிறைப்பணி ஒருங்கிணைப்பாளர் அருட்பணி. அந்தோணிசாமி மற்றும் தமிழ்நாடு சிறைப்பணி செயலாளர் திருவாளர் இயேசுராஜ் அவர்கள் வழியாக அழைப்பு வந்தபோது மிகுந்த மகிழ்ச்சியோடு நானே முன்வந்து ஏற்றுக் கொண்டேன். இந்த இயேசுவின் பணியினை சகோ. மாசிலா அவர்களோடு இணைந்து மாதம் இருமுறை திருத்துறைப்பூண்டி கிளைச் சிறைச்சாலைக்கு சென்று அங்குள்ள சிறைவாசிகளைச் சந்தித்து சிறைப்பணி செய்ய வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி

கூறுகிறேன். என்மீது முழு நம்பிக்கை வைத்து இந்தப் பொறுப்பினைச் செய்ய ஒத்துழைப்பு வழங்கிட்ட இல்லத்தலைமைச் சகோதரி சந்திரா அவர்களுக்கும் அருட்பணி அந்தோணிசாமி, திரு. இயேசு ராஜ் மற்றும் சகோ. மாசிலாமணி ஆகியோர்க்கும் என் மனம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். சிறைப்பணிக்கு உதவிக்கரம் கொடுத்த நல் உள்ளங்கள் அருட்பணி. சவரிமுத்து, திரு. மார்டின் (திருவாரூர்) சகோ. பௌலின் மற்றும் திருவாரூர் உடன் உழைப்பாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

**பணி வாழ்வு:**

**“நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனதில் வைத்து செய்.**
**அவர் உன் பாதைகளை செம்மையாக்குவார்” (நீ.மொ 3:6)**

திண்டுக்கல் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற சிறைப்பணி மாநாடுகளில் கலந்து கொண்டு தஞ்சை மறைமாவட்ட ஆண்டறிக்கையை வாசித்தளிக்கும் வாய்ப்பு தந்த தஞ்சை சிறைப்பணி ஒருங்கிணைப்பாளர் அருட்பணி. அருளாந்து அவர்களுக்கு எனது நன்றி.

**“என் கடன் பணி செய்து கிடப்பதே” - திருநாவுக்கரசர்**

என்பதற்கேற்ப வருத்தம், கவலை, விரக்தி, மன அமைதி இழந்து இருக்கும் இல்லவாசிகளைச் சந்தித்து உரையாடி, பாடல்பாடி, நடனமாடி, நீதிக் கதைகள் கூறி, விழாக்களின் போது உணவு வழங்கிய நேரங்களில் அவர்களின் முகத்தில் அளவில்லாத மகிழ்ச்சியைப் பார்த்தபோதெல்லாம் நம் சபையின் தனிவரப் பணியை செய்த திருப்தி எனக்குள் எழுந்தது. உள்ளம் பூரிப்படைந்து மனம் நிறைந்து காணப்பட்டது. **“பிறருக்காக வாழ்வதே வாழ்க்கையின் அழகு”** என்பதையும் என்னுள் உணர்ந்தேன்.

**நன்றியின் மழையில்:**

**“கூடாரங்கள் வேறாக இருந்தாலும்**
**இதயங்கள் மட்டும் எப்போதும் இணைந்தே இருக்கட்டும்” - நபிகள் நாயகம்**

- என் துறவற வாழ்வின் 25 ஆண்டுகளில் கொடைக்கானல், நல்லமநாயக்கன்பட்டி, சின்னமலை, பூக்காரத்தெரு, கருங்கண்ணி, சேலம், திருத்துறைப்பூண்டி, ஆத்துக்குடி, மன்னார்குடி, திருவாரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய இல்லங்களில் பாசமான சகோதரிகளோடு பணியமர்த்திய இறைவனுக்கு நன்றி!
- நான் பண்புள்ள, பயன்தரும் நிலமாக மாற காரணமாக இருந்த இல்லத்தலைமைச் சகோதரிகள் அனைவரும் எனது துறவுப் பயண வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய வரங்கள். இவர்கள் அனைவருக்கும் நன்றி!
- உலகில் உயர்ந்த செல்வமாகிய கல்வி செல்வத்தை நான் பெற M.Phil., வரை உயர்கல்வி பயில உதவிய முன்னாள் தஞ்சை மாநிலத் தலைமைச் சகோதரிகள் அனைவருக்கும் எனது நன்றி!

இதயம் துடிக்க மறந்தாலும்...
இமைகள் இமைக்க மறந்தாலும்...
உள்ளம் நினைப்பதை மறந்தாலும்...

உயிர் உடலை மறந்தாலும்...
கண்கள் காட்சியை மறந்தாலும்...
கரங்கள் கலையை மறந்தாலும்...
நெஞ்சம் நன்றியை மறந்தாலும் - இறைவா!
நான் என்றும் உன்னை மறக்கமாட்டேன்.
நன்றி! இறைவா நன்றி!! நன்றி!!!
துறவு வாழ்வு தந்தாய் நன்றி!
நல்வழி காட்டினாய் நன்றி!
நண்பனாய் நின்றாய் நன்றி!
நன்றி... நன்றி... இறைவா!
வாழ்க! உம் புகழ்...!



# “எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைக்கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு” (பிலி 4:13).



சகோதரியின் பெயர் : **சகோ. புதுமை ஜூலியட் ராணி**

சபை எண் : 1122

பிறந்த மண் : தடுத்தாட்கொண்டூர்

பங்குத் தளம் : மாதம்பட்டு

மறை மாநிலம் : புதுவை - கடலூர் உயர் மறைமாவட்டம்

தந்தை பெயர் : திரு. ஆரோக்கியசாமி

தாய் பெயர் : திருமதி. ரோஸ்மேரி

உடன் பிறந்தோர் : சகோதரர்கள் - 2, சகோதரிகள் - 2

முதல் அர்ப்பணம் : 08.05.1998

நிரந்தரஅர்ப்பணம் : 07.05.2004

வெள்ளி விழா : 04.05.2023

**புதுமையாய் பிறந்தது:**

திரு. ஆரோக்கியசாமி, திருமதி. ரோஸ்மேரி தம்பதியரின் இரண்டாவது குழந்தையாக பிறந்தேன். அண்ணன் வேளாங்கண்ணி செல்வம், தம்பி விமல் ஆனந்த சர்தேவ், அதற்கு பின் தங்கைகள் மார்கிரேட் ரூபி, தேவப்பிரியா இவர்களோடு பிறந்தது எனக்குக் கிடைத்த வரமாக நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் என் உடன் பிறந்தவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் எப்போதும் எனக்கு Guardian Fathers and Guardian Mothers ஆகவே இருக்கிறார்கள்.

என் மகிழ்ச்சிக்காக அனைத்தையும் விட்டுக்கொடுத்து,
உங்களைக் கரைத்துக் கொண்ட என் உடன் பிறப்புகளே...
உங்களைப் பணிந்து மகிழ்ந்து நன்றி கூறுகிறேன்.

**“தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்”** (எரே 1:5)

இந்த இறைவார்த்தை எனக்கு அப்படியே பொருந்தும் என்று நம்புகிறேன். அப்பா அடிக்கடி இப்படி என்னிடம் கூறுவார். “உனது பிறப்பு ஒரு அதிசயம்” என்று. துணிச்சலும், திறமையும், அன்பும் ஒருங்கே பெற்ற என் தந்தை வழி பாட்டி புதுமை அந்தோணியம்மாள் அவர்கள் இளம் வயதில் காலரா நோயால் இறந்த பின் அவரின் நினைவாக, அவர்களைப் போல் இருக்கவேண்டும் என்பதற்காக அவரின் பெயரில் இருந்த புதுமை எனக்கும் ஒட்டப்பட்டது. ஆக, புதுமையாய் பிறந்ததாலும், புதுமைப் பாட்டியின் பெயராலும் இப்படித்தான் நான் புதுமை ஜூலியட் ராணி ஆனேன்.

நான் கருவான போதே உரு கொடுத்து,
உயிர் கொடுத்த இறைவா!
உயிர் உள்ளவரை நன்றி கூறிக்கொண்டேயிருப்பேன்...

**குடும்பத்தில்:**

எனது அப்பா ஒரு தனியார் குழுமத்தில் இணைந்து வேலை செய்து கொண்டிருந்ததால் எனது குழந்தைப் பருவத்தில் செஞ்சி வட்டம் அனந்தபுரம் அருகில் இருந்த வெள்ளாழம்பட்டு என்னும் மலைசூழ்ந்த அந்த அழகான ஊரில் வாழ்ந்தோம். அங்குதான் மூன்றாம் வகுப்புவரை பயின்றேன். அங்கு எங்கள் இல்லத்தின் பெயர் 'கணக்குப்பிள்ளை வீடு'. காரணம் Contract வேலையிலும் சரி, கணக்கு வேலையிலும் சரி என் அப்பாதான் King. ஆகவே அப்பா அந்த ஊரின் கணக்குப்பிள்ளை. தணிக்கை நடக்கும் நேரங்களில், Tally போடும் சமயங்களில், குழுமத்தில் சில நேரங்களில் யாருக்காவது கணக்கு Solve பண்ணும் போதெல்லாம், 'உனக்கு கணக்கு நன்றாக வருகிறது' என்று மற்றவர்கள் சொல்லும் போதெல்லாம் என் அப்பாவை நன்றியோடு நினைத்துக்கொள்வேன். அப்பாவின் Jene. நன்றி அப்பா!.

**வளர்ப்பு:**

அம்மாவின் இரண்டாவது அக்கா (பெரியம்மா) வின் ஒரே மகள் இறப்புக்குப் பின் அவரின் வீட்டில் தங்கி 4 -ஆம் வகுப்பு முதல் 8 -ஆம் வகுப்பு வரை நமது புனித லாசரஸ் பள்ளியில் பயின்றேன். இவ்வாறு எனது பெரியம்மாவின் பாதுகாவலில் வளர்ந்தேன். அவரின் வளர்ப்பில் அனைத்து நற்குணங்களையும், நல் படிப்பினைகளையும் கற்றுக்கொண்டேன். மேலும் நான் நற்பண்பில் வளர ஊக்கமூட்டி வளர்த்த பெரியம்மாவின் குடும்பத்தினருக்கு கோடி நன்றிகளை சிரம் தாழ்த்தி தெரிவிக்கிறேன்.

**உறவுகளோடு:**

கொஞ்ச ஆண்டுகளுக்குப் பிறகு அப்பா வேலை செய்ய முடியாத சூழல் ஏற்பட்ட போது ஒட்டு மொத்த குடும்பத்தையும் தாங்கிப் பிடித்தவர் என் அம்மாதான். எங்கள் ஊரில் நாங்கள் 'ஒரு குடும்பம் மட்டுமே கிறிஸ்தவர்கள்'. தங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவ நெறியில் வளர வேண்டும், படிப்போடு நற்பண்பும், ஒழுக்கமும் பெற்று நகரத்தின் வாசத்தில் வசதியாய் வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து போராடியவர்கள் என் பெற்றோர். குறிப்பாக என் அம்மா அதற்காக ஓயாமல் உழைத்தவர். தன்னையே கரைத்து எங்களை உயர்த்தியவர். மகளிர் சுய உதவிக்குழு ஊக்குநராக சேர்ந்து, தன் கடின உழைப்பால், வட்டாரச் செயலாளர், அதன்பின் ஒன்றிய மேற்பார்வையாளராக உயர்ந்தவர். தொடர்ந்து பாரா மெடிக்கல் கல்லூரியின் மேலாளராகவும் பணி செய்தார். பார்வைக்கு மிகவும் எளிய தோற்றத்தில் இருந்தாலும் அம்மா ஏற்ற பொறுப்புக்கள், செய்த பணிகள் மிக உயர்ந்தவை. அதுமட்டுமல்ல மரியாயின் சேனைத்தலைவி, பங்குப்பேரவை உறுப்பினர் என்று பங்கிலும் பல பணிகள். இன்னும் ஓயாமல் ஓடி ஓடி செய்யும் அம்மாவின் கடவுள் பக்தி, பணி செய்வதில் ஆர்வம், கடின உழைப்பைப் பார்த்து வியக்கிறேன். பங்கின் முக்கிய நிகழ்வுகளிலும் சரி, திருப்பலிக்கும் சரி ஒருபோதும் தவறியதே இல்லை. அதோடு எங்களின் பள்ளிப்பருவ காலங்களில் எங்களின் மாலை வகுப்பு ஆசிரியர்கள் அம்மாவும் அப்பாவுமே. அம்மா ஆன்மீக வாழ்வை ஊட்டி வளர்த்தார் என்றால் அப்பா அறிவியல், அரசியல் என்று சமூகச் சூழலை சொல்லிக்கொடுத்து இந்த சமூக அமைப்பில் ஒரு பெண் எப்படி

துணிச்சலோடு வாழ வேண்டும் என்று கற்றுத்தந்தவர் என் அப்பா என்றால் அது மிகையாகாது. அடிக்கடி அப்பா சொல்லும் “நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை, ஜெகத்தினில்….” என்ற பாரதியின் பாடலை அழகான தோரணையில் சொல்லிக்காட்டி எனக்கு தைரியத்தையும், எந்த இக்கட்டான சூழலையும் நேர்கொண்டு எதிர்கொள்ளவும் கற்றுத்தந்தவர் அப்பா. அந்தளவுக்கு பெண்நலக்கொள்கை கொண்டவர் அப்பா. அப்பா வடிவில் உயர்ந்த சிந்தனையுள்ள மனிதன் எனக்குக் கிடைத்தது கடவுள் எனக்குத் தந்த வரம்.

எனக்குக் கிடைத்த உன்னதமான பெற்றோருக்கும், பாசமுள்ள உடன் பிறந்தவர்களுக்கும் பாதம் தொட்டு நன்றி கூறுகிறேன். என் அம்மாவின் உடன் பிறந்தவர்கள் 6 அக்காக்கள் அம்மா ஏழாவது கடைக்குட்டி. ஆக என் குடும்பத்தில் நிறைய அண்ணன்கள், நிறைய அக்காக்கள் எனக்கு உண்டு என்று சொல்வதில் அத்தனை மகிழ்ச்சி. என் உடன் பிறந்தவர்கள் மட்டுமல்லாது, பெரியம்மாக்கள், அண்ணன்களின் கவனிப்பு, அண்ணிகளின் அன்பு, அக்காக்களின் பாசம், இவர்கள் பிள்ளைகளின் கரிசனை என ஒட்டுமொத்த குடும்பத்தின் சிறப்பிடத்தில் இருக்கிறேன் என்ற மகிழ்ச்சியும், இவர்களின் ஜெபமுமே நான் துறவறத்தில் ஊன்றி வாழ துணையாய் இருக்கிறது. ஒட்டுமொத்தத்தில் இவர்கள் என்மீது காட்டிய பாசத்திற்கு அளவே இல்லை. மிகுந்த அன்புகாட்டி, மரியாதையோடு நடத்தி, அவர்கள் என்னை ஊக்கப்படுத்தி, என் வளர்ச்சியில் உதவியிருக்கிறார்கள். குறிப்பாக என் உடல் நலக்குறைவில் உடன் இருந்து குழந்தையைப் போல் கவனித்துக்கொண்ட அவர்களின் பாசத்தை நினைத்து உள்ளம் நினைந்து மகிழ்கிறேன். இத்தகைய சிறந்த குடும்பத்தில் பிறக்கச் செய்த கடவுளுக்கு காலம் முழுதும் நன்றி சொல்வேன். இப்பிறப்பில் அளவில்லாத பாசம் தந்த அத்துனை சொந்தங்களுக்கும் உளம் நிறைந்த நன்றி!

**அழைத்தலுக்கான விதை:**

“உலகின் எல்லைகளினின்று உன்னை அழைத்து வந்தேன்.
நீ என் அடியவன் நான் உன்னைத் தெரிந்தெடுத்தேன்” (எசா 41:9)

தென்னூரில் உள்ள மாதா இருதய சபைச் சகோதரிகளால் நடத்தப்பட்ட புனித லூர்தன்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12 -ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போது மறைக்கல்வி ஆசிரியரான எங்கள் தலைமை ஆசிரியர் சகோதரி லூர்து மேரி அவர்கள் எப்போதும் இறை அழைத்தலைப் பற்றியே வகுப்பு எடுத்து, கற்பனை செய்து பார்க்கச் சொல்லுவார். இதுவே என் அர்ப்பண வாழ்வுக்கான விதை. சகோ. லூர்து மேரி அவர்களை நன்றியோடு நினைக்கிறேன்.

**தடுத்து ஆட்கொண்ட ஊர்:**

எனது ஊரின் பெயர் காரணத்தைப்போலவே என் அழைத்தலும் இருந்தது என்று உறுதியாக நம்புகிறேன். நான் பிறந்த ஊர் தமிழ் வரலாற்றில் புகழ்பெற்றது. ‘தேவர பதிகம்’ பாடிய, நாயன்மார்கள் வாழ்ந்த, தமிழ்நூல்கள் புகழும் திருவெண்ணெய் நல்லூர் அருகில் உள்ள, சிறிய கிராமம் ‘தடுத்தாட்கொண்டூர்’ என்பது என் ஊர். சுந்தர மூர்த்தி நாயனார் திருமணக்கோலத்தில் மணமகன் ஊர்வலமாக வந்துகொண்டிருக்கும் போது சிவபெருமான் முதியவர் தோற்றத்தில் வந்து ‘நீ என் வாழ்நாள் அடிமை’ என்றுக் கூறி திருமணத்தை நிறுத்தி சுந்தரரை ஆட்கொண்ட இடம் தான் பின்னாளில் ‘தடுத்து

ஆண்டகொண்ட ஊர்' என்று வழங்கலாயிற்று. எனது அழைத்தலும் இப்படித்தான், ஆசிரியர் பயிற்சிக்கான தயாரிப்போடும், பல கனவுகளோடும் வாழ்ந்து கொண்டிருந்த என்னை, நானே நினையாத நேரத்தில் ஒரு அருட்சகோதரி வழியாக கடவுள் தடுத்து ஆட்கொண்டார். என்னை அழைத்த இறைவா! நன்றி!

## அடைக்கல அன்னையின் அழைப்பு:

"இயேசு மலைமேல் ஏறி தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர்களும் அவரிடம் வந்தார்கள்" (மாற்கு 3:13)

"ஆண்டவன் திட்டம் நிறைவேறியேத் தீரும்" என்பதற்கு நான் பெற்ற அழைத்தலே மிகச்சிறந்த உதாரணம். என் அப்பா, அம்மாவை விட்டுப் பிரிந்திருந்த ஏக்கம் எப்போதும் எனக்குள் உண்டு. எனவே அப்பா அம்மாவோடு ஆசை தீர வாழ வேண்டும். அதுவும் ஆசிரியராவதற்கு படித்துவிட்டு, வேலை செய்து, நிறைய சம்பாதிக்கிறவளாக வாழ வேண்டும் என்ற அழகழகான கனவுகளோடு வாழ்ந்து கொண்டிருந்தேன். அந்தக் கனவுச்சாலையில் எனக்கான ஒரு வளைவு இருந்தது. அது கடவுள் வைத்தது. 12 -ஆம் வகுப்பு படிக்கும் போது வெவ்வேறு சபைகளிலிருந்து சகோதரிகள் வந்து அழைத்தல் பற்றி பேசுவார்கள். நான் யாரிடமும் பெயர் கொடுக்காமல் கவனமாக இருப்பேன். ஆனாலும் உள்ளுக்குள் ஒரு பயம் உண்டு. எனவே விடுதியில் தங்கி படிக்கும்போதெல்லாம் மாதாவிடம் போய் 'நான் Sister -ஆவது பற்றி நினைக்கக் கூடாது, அப்படி எதுவும் நடந்துவிடக்கூடாது, என் அப்பா கூடவே கடைசிவரை இருக்கவேண்டும்' என்று தினமும் வேண்டிக்கொள்வேன். ஆண்டவனின் அழைத்தலும், அவரின் அருளும் என்னை விடாமல் துரத்திக் கொண்டிருந்தது. 12 -ஆம் வகுப்பு முடித்தபின் ஒருமுறை, ஒரு தமிழ் தெரியாத அருட்சகோதரியும், தமிழ் தெரிந்த அருட்சகோதரியும் வந்து இப்படி சொன்னார்கள். "நான் மாணவிகளின் பெயர் மற்றும் விவரம் அடங்கிய பேப்பரைத் தொலைத்துவிட்டேன். மிகவும் வருத்தமாக இருந்தது. எனவே நற்கருணை ஆண்டவர் முன் அமர்ந்து வேண்டிக்கொண்டே விவிலியத்தைத் திறந்தேன் உன் பெயர், விலாசம் எழுதப்பட்ட பேப்பர் இருந்தது. எனவேதான் வந்தேன்" என்றார்கள். எனது வகுப்பு தோழி எனக்கே தெரியாமல் விளையாட்டாக எழுதிக்கொடுத்தது அது என்பதை அந்தத் துண்டுச் சீட்டைப் பார்த்து தெரிந்து கொண்டேன். எனக்கு அழுகைதான் வந்தது. இது என் கையெழுத்தே இல்லை. Sisters Life எனக்கு பிடிக்கவும் இல்லை என்று கூறிக்கொண்டிருந்தேன். என் பெற்றோருக்கும் என்னை அனுப்புவதில் துளியும் விருப்பமில்லை. அந்த சகோதரிகள் "நீ Sister ஆக வேண்டாம். ஆங்கிலம் கற்றுக்கொள்," என்று சொல்லி அழைத்துச் சென்றார்கள். கொஞ்ச நாட்கள் கழித்து எனக்கு துறவியாக வாழ்வதில் விருப்பமில்லை என்று உறுதியாக கூறிவிட்டு மீண்டும் வீட்டிற்கு வந்துவிட்டேன். என்னை வீட்டில் விட்டுவிட்டு சகோ. பெனட் அவர்கள் கூறியது என்னை சிந்திக்க வைத்தது. "உங்கள் மகளுக்கு அழைத்தல் இருக்கிறது. எங்கள் சபையில் இல்லாவிட்டாலும் ஏதாவது ஒரு சபையில் கண்டிப்பாகத் துறவியாக இருப்பாள்" என்று சொல்லிச் சென்ற அந்தத் தீர்க்க தரிசியை வணங்கி நன்றி கூறுகிறேன்.

**"உன்னை பெயர் சொல்லி அழைத்ததும் நானே" (எசா 43:1)**

ஆம். அதற்குப் பின் மனதில் மாற்றங்கள் ஏற்பட்டது. நம் சபைச் சகோதரி ஸ்டெல்லா ரூபி அவர்கள் என்னை அணுகி கேட்டபோது முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு மயிலை வந்த நான்தான் விருப்பநிலையின் கடைசியில் சேர்க்கப்பட்ட மாணவி. யோனாவைப் போல் கடவுள் என்னை அழைத்தார், பத்திரமாய் காத்தார், கருத்தாய் கரைசேர்த்தார் அடைக்கல அன்னை அவையில் இணைத்தார்.

**தடம் பதித்த குழுமங்கள்:**

எனது முதல் குழுமம், திருத்துறைப்பூண்டி. புனித தெரசாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தேன். பங்கிலும் செய்த பணிகள் மனதுக்கு நிறைவைத் தருபவை. இரயில் பயணம் செய்து கிளை பங்குகளில் மறைக்கல்வி போதித்தது, வீடுகளைச் சந்தித்தது, திருப்பலிக்கு தயார் செய்தது என்று மகிழ்ச்சியோடு பணி செய்த அனுபவங்களை மறக்க முடியாது. நான் செய்யும் சின்ன சின்ன வேலைகளைக் கூட பாராட்டி, உற்சாகப்படுத்தி இன்னும் வளரச் செய்த திருத்துறைபூண்டி குழுமத்தை மறக்க இயலாது. இல்லத்தலைமைச் சகோதரி அன்னை நேச சௌந்தரம் அவர்கள் என்னை மிகுந்த பாசத்தோடு நடத்திய விதம், பள்ளித்தலைமை ஆசிரியை சகோ. பாத்திமா எலிசபெத் ராணி அவர்களின் தோழமையான பேச்சு, அலுவலகப் பணிகள் அனைத்தையும் கண்டிப்போடும், கருத்தாயும் கற்றுத்தந்த சகோ. அந்தோணியம்மாள் என்று எல்லோரும் மதிப்பிற்குரிய ஆசிரியர்களாய் மனதில் இன்றும் வாழ்கிறார்கள். அங்கு, தட்டச்சு கற்றுக்கொள்ள அனுமதித்தந்து தேர்வெழுதி ஆங்கிலத்தில் Lower, Higher இரண்டிலும் முதலிடத்தில் வெற்றிபெற வாழ்த்தி ஊக்கப்படுத்திய அந்நாள் சபைத் தலைமை அன்னை பாத்திமா ராணி அவர்களுக்கும், உற்சாகப்படுத்தி, சுதந்திரம் தந்து கற்றுக்கொள்ள உதவிய சகோ. நேசசௌந்தரம், சகோ. பாத்திமா எலிபெத் ராணி அனைவருக்கும் கரம் கூப்பி உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியினை சமர்ப்பிக்கின்றேன். சஞ்சாய நகர் எனது இரண்டாவது குழுமம் என்றாலும் பல நாட்கள் பகல் பொழுதெல்லாம் பட்டுக்கோட்டை இல்லத்தில்தான் கழித்திருக்கிறேன். அலுவலகப் பணிகளில் எந்த சந்தேகம் இருந்தாலும் அங்கு சென்றுவிடுவேன். அங்கு அப்போது தலைமையாசிரியராக இருந்த, இப்போதைய மையக் கல்வி ஒருங்கிணைப்பாளர் சகோதரி மரியம்மாள் அவர்கள் எப்போது சென்றாலும் மகிழ்ச்சியோடு வரவேற்று ‘Sister என்ன கேட்டாலும் செய்து கொடுங்கள்’ என்று சொல்லி ஊக்கப்படுத்திய விதம், சகோ. செபஸ்டி அவர்கள் அலுவலக வேலைகளை, குறிப்பாக பணிப்பதிவேட்டை எப்படி கையாள வேண்டும் என்பதை எல்லாம் நுணுக்கமாக, எளிமையாக, அழகாக கற்றுத்தந்தவையெல்லாம் காலம் எனக்குத் தந்த நல்வாய்ப்புகள். என் வாழ்வின் வளர்ச்சிக்கு விதையிட்டு வளரச் செய்த இவர்களுக்கு எத்தனை நன்றி சொன்னாலும் பத்தாது. சஞ்சாய நகர் குழுத்தில் என் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கிய சகோ. கயத்தான், சகோ. சகாய கிளாரா, சகோ. ரோஸ்லின், சகோ. சாந்தி லில்லி, சகோ. பெர்னி அத்துணை பேரும் மறக்க முடியாதவர்கள். என் வாழ்விற்கு மகிழ்ச்சியையும், வளர்ச்சியையும் கொடுத்த இவர்களுக்கு இருகரம் கூப்பி நன்றி கூறுகிறேன்.

“காலத்திற்கேற்ப மாற்றம் பெறுவதே ஏற்றம் தரும்”

எல்லாச் சூழல்களிலும் சகோதரிகளைத், தாங்கிபிடித்து தன் கரிசனையான வார்த்தைகளால் அவர்களை வாழ்வின் உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அழகு பார்க்கும் சபையின் இந்நாள் சபைத் தலைமை அன்னை மதிப்பிற்குரிய அன்னை மரிய

பிலோமினா அவர்கள் எப்போதும் சிறப்பிடம் பெற்றவர். தஞ்சை மாநிலத்தின் அப்போதைய மாநிலத் தலைமைச் சகோதரியாக இருந்தபோது, காலத்திற்கேற்ப கனிணியைக் கற்றுக்கொள்ள, என்னை அழைத்து, அனுமதி தந்த அன்னை அவர்களின் தொலைநோக்கு சிந்தனையால்தான் இன்று கனிணி இயக்கக் கற்றுக்கொண்டேன் என்பதை உரக்கச் சொல்லுவேன். சஞ்சாய நகரிலிருந்து பட்டுக்கோட்டை சென்று படிக்க வேண்டும் அதுவும் தினமும் மாலை வேளைகளில். இவ்வளவு தூரம் தினமும் செல்ல வேண்டுமே என்று பயந்தபோது, தைரியம் தந்து படிக்கச் செய்தவர் அன்னை அவர்கள். அவர் என்மீது வைத்த நம்பிக்கையும், என் வளர்ச்சியில் காட்டிய கனிவும்தான் நான் கண்ணியமாக நடந்துகொண்டு கருத்தாய் படிக்க உதவியது. மாநிலத்தலைவியாக பலமுறை நிறைய பாராட்டி, ஊக்கப்படுத்திய அன்னை அவர்களின் வழிநடத்துதலை நன்றியோடு நினைக்கிறேன். இன்றும் யாராவது உனக்கு நல்லா Computer தெரிகிறது என்று பாராட்டும் போதெல்லாம் அன்னை பிலோ அவர்கள் என் முன்னே தெரிவார்கள். மேலும் அன்னை அவர்களின் தாய்மை பண்பில் பல்லாவரம் குழுமத்தில் குழுமச் சகோதரியாக வாழ்ந்த அனுபவம் அத்துணை அழகானது. தொலைநோக்குப் பார்வையோடு என்னை வளர்த்துவிட்ட அன்னை அவர்களுக்கு தலை வணங்கி கோடி நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

காஞ்சி கலெட்ரேட், மௌளச்சூர், ஆழ்வார்பேட்டை, மயிலை ஆகிய குழுமங்களில் வாழ வாய்ப்புத் தந்த இறைவனுக்கும், வாழும் போது என் மகிழ்வை இரட்டிப்பாக்கி பணிகளில் உடன் இருந்த குழுமச் சகோதரிகளுக்கும், இல்லத்தலைவியர்கள், தலைமை ஆசிரியச் சகோதரிகள் அத்துணை பேருக்கும் உள்ளன்போடு நன்றி நவில்கிறேன். இப்போது இந்த வெள்ளிவிழா ஆண்டில் மீண்டும் பல்லாவரத்தில் வாழ அருள் செய்த ஆண்டவனுக்கு நன்றி. இந்த என் பல்லாவரம் குழுமம் இளைய சகோதரிகளால் நிறைந்து இளமையோடு திகழ்கிறது என்பதே உண்மை. இங்கு பாசம் இருப்பதைப் போலவே பணிகளில் பகிர்வும் நிறைந்திருக்கிறது. மூத்த சகோதரிகளின் அன்பும் அக்கறையும் நாங்கள் பணிவாழ்விலும், அருள் வாழ்விலும் முன்னேற உந்து சக்தியாய் மிளிர்கிறது. எல்லாம் நிறைவாக, எப்போதும் மகிழ்வாக நிறைந்திருக்கும் பல்லாவரம் குழுமத்திற்கு நிறைந்த நன்றிகள். என் குழும வாழ்விலும் பணி வாழ்விலும் அக்கறை காட்டி, அன்போடு நடத்திய அத்துணை பேரையும் நன்றியோடு நினைத்துப்பார்க்கிறேன்.

**நன்றிகள்...**

என் அடைக்கல அன்னை சபையில் நான் சேர வழிகாட்டிய பங்குத் தந்தையர்கள் அருட்பணி ஜோஷ்வா, அருட்பணி பிலமின்தாஸ் மற்றும் சகோ. ஸ்டெல்லா ரூபி அனைவருக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன். எனது பயிற்சி நிலையில் பக்குவப்படுத்தி, வளரச்செய்த உருவாக்குநர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்து நன்றி கூறுகிறேன்.

ஆன்மீக வாழ்வில் என்னை வளர்த்தெடுத்த என் பங்கு மக்கள், பங்குத் தந்தையர்கள், ஊக்கப்படுத்திய ஊர் பெரியர்வர்கள் அத்துணை பேருக்கும் நன்றி!

என் அர்ப்பண வாழ்விற்கு மெருகேற்றும் வகையில் தங்கள் அழைத்தல் வாழ்வால் சிறந்து விளங்கி என்னை சிறப்புறச் செய்கிற எங்கள் பங்கின் அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் அனைவருக்கும் நன்றி!

என் அழைத்தலுக்காக உழைத்தவர்கள், அழைத்தலில் ஆழப்பட உடன் நடந்து ஊக்கப்படுத்தியவர்கள் அனைவருக்கும் நன்றி!

தலைவராய் இருந்து வாய்ப்புத் தந்து வழிகாட்டிய, முன்னாள் சபைத்தலைமை அன்னையர்கள் மற்றும் மாநிலத் தலைமைச் சகோதரிகள் அனைவருக்கும் நன்றி!

சென்னை மாநிலத் தலைவியாக இருந்தபோதும் சரி, மயிலை இல்லத் தலைமைச் சகோதரியாக இருந்தபோதும் சரி அக்கறையோடு அறிவுரை கூறி, எனக்காக பரிந்துபேசி, அன்பு செலுத்திய சகோதரி ஆஞ்சலின் அவர்களின் அன்புக்கு நன்றி!

குழும வாழ்வில் வழிகாட்டிய இல்லத் தலைமைச் சகோதரிகளுக்கு நன்றி!

அலுவலகப் பணிகளில் வாய்ப்புத் தந்து வளர்த்துவிட்ட தலைமை ஆசிரியச் சகோதரிகளுக்கு நன்றி!

என்னை அப்படியே ஏற்றுக்கொண்டு, குறைகளை சுட்டிக்காட்டி நிறைகளில் வளர வழிகாட்டி உடன் பயணித்த குழுமச் சகோதரிகளுக்கு நன்றி!

உடன் இருப்பதை எப்போதும் நான் உணரச்செய்து, எனக்கு மன பலம் தந்து, பக்குவமாய் வாழ, வழிநடத்திய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றி!

என் மீது அக்கறையாய் இருந்து, அக்கரையில் நின்று கை கொடுத்த பாசமான தோழமை நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றி!

கடினமான சூழல்களில் நம்பிக்கைக் கொடுத்து, அழைத்தலில் ஆழப்பட வழிகாட்டிய சகோ. நம்பிக்கை மேரி, அன்னை பெர்னதெத் நீதிக்காகவே குரல் கொடுத்த சகோ. தனசீலி இவர்களுக்கு சிரம் பணிந்து நன்றி!

ஆழ்வார்பேட்டையில் இருந்த போது மட்டுமல்ல, இன்றுவரை என் வளர்ச்சியில் அக்கறை காட்டி வழிநடத்தி வரும் சகோ. ஜெபமாலை அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்து நன்றி!

பணித்தளங்களில் உடன் பயணித்த அனைத்து ஆசிரியப் பெருமக்கள், அலுவலக அன்பர்கள் அனைவருக்கும் நன்றி. குறிப்பாக தெரசாள் பள்ளியின் அலுவலக நட்பு நெஞ்சங்களுக்கு நன்றி!

**இவர்கள் அனைவரும்தான் நான் வெள்ளியாய் மின்னும் என் வாழ்வின் வெளிச்சங்கள். இவர்களுக்கு காலம் முழுவதும் நன்றி சொல்வேன். அனைவருக்கும் அளவில்லாத நன்றி!... நன்றி!... என்று நெகிழ்ந்து... மகிழ்ந்து நன்றி கூறுகிறேன்.**

இப் பிறப்பின் பெருமை உணர
எல்லையில்லா இன்பம் தந்தாய்
எக்கனமாயினும் நன்றியுரைப்பேன்
நன்றி இறைவா!

அன்பான அன்னை
அறிவார்ந்த தந்தை தந்தாய்

அளவில்லா பாசம் தந்தாய்
அனைத்திற்கும் நன்றி இறைவா!

என் வாழ்வில் சிறப்புற
சிரமம் பாராது உழைத்து,
என்னை உயர்த்திட, உயிரான
உடன் பிறப்புக்கள் தந்தாய், நன்றி இறைவா!

இப்பிறவியில் அளவில்லா பாசம் தந்து,
எப்போதும் கரம் நீட்டி அரவணைக்கும்
சொந்தங்கள் தந்தாய் நன்றி இறைவா!

என்னைத் துரத்திப் பிடித்து
கால் நூற்றாண்டாய்
கரத்திற்குள் வைத்து காக்கிறாய்...
கரம் பிடித்து வழி நடக்கிறாய்...
நான் சாய்ந்து விடாமல் இருக்க - நல்
தந்தையாய் தாங்கிப் பிடிக்கிறாய்...

இந்த உம் கிருபைக்காக
இந்த ஜென்மம் முழுதும்
தாள்பணிந்து சொல்வேன் நன்றி இறைவா...

அழகாய், அம்சமாய், அற்புதமாய்,
அடைக்கல அன்னை அவையில்
நான் வாழ அடைக்கலத் தாயாய்
வழிநடக்கிறாய் நன்றி இறைவா!...

**என் வாழ்நாளெல்லாம் சொல்வேன்... நன்றி...**
**என்னை முழுதும் சமர்ப்பித்தளித்து சொல்கிறேன்... நன்றி...**
**நன்றி!... இறைவா!... கோடி நன்றி!**



# "உன் செயல்களை ஆண்டவரிடம் ஒப்படை, அவரே அவற்றை வெற்றியுடன் நிறைவேற்றுவார்'' (நீமொ 16:3).



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : **சகோ. சகாய ஆரோக்கிய ஜெயந்தி** |
| சபை எண் | : 1123 |
| பிறந்த மண் | : கூத்தென்குழி |
| பங்குத் தளம் | : கூத்தென்குழி |
| மறை மாநிலம் | : தூத்துக்குடி |
| தந்தை பெயர் | : திரு. இருதயம் |
| தாய் பெயர் | : திருமதி. இஞ்ஞாசியம்மாள் |
| உடன் பிறந்தோர் | : சகோதரர்கள் - 2, சகோதரிகள் - 3 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| நிரந்தர அர்ப்பணம் | : 09.05.2006 |
| வெள்ளிவிழா | : 04.05.2023 |

### பூமியில் கடவுள் எனக்களித்த சொர்க்கம்தான் என் குடும்பம்...

அதிர்ந்து கூட பேசத் தெரியாத, உலகமே அறியாத வெகுளியாக வாழ்ந்து, சுயநலமற்ற அன்பை மட்டுமே காட்டி என்னை வளர்ந்த என் அன்புத் தாய் இஞ்ஞாசியம்மாள் அவர்களுக்கும், ஆண்டவனை நம்பியவனுக்கு "அச்சம்'' என்ற வார்த்தையே அகராதியில் இல்லை என வாழ்ந்து காட்டிய எம் பாசமிகு தந்தை இருதயம் அவர்களுக்கும் 5 -வது செல்ல மகளாகப் பிறந்தவள்தான் நான். எனது குழந்தைப் பருவத்தில், என் தந்தையை இழந்து தவித்த நேரத்தில், என் தாயும், மூத்த சகோதரிகளும் எத்தனையோ கஷ்டங்களை, இடர்களை சந்தித்தபோதும் எனக்கு அவர்களிடமிருந்து கிடைத்தது, அன்பும், பாசமும், அரவணைப்பும், சுதந்திரமும்தான். நான் எவ்வளவு சுட்டித்தனம், குறும்புகள் செய்தாலும் அதட்டிக்கூட பேசத்தெரியாத என் தாய் என்னிடம் காட்டியது அன்பு மட்டுமே. உள்ளம் சோர்வடையாது, கடின தங்கள் உடல் உழைப்பினால் என் குடும்பத்தை கட்டிக்காத்த கண்மணிகள் என் தாயும், சகோதர, சகோதரிகளும்தான் என்றால் மிகையாகாது. அத்தகைய நல்ல பண்புகளை என்னில் வளர்த்துவிட்டு, என் வாழ்விலும் இன்றுவரை இறைவனின் ஆசீரோடு பணிபுரிய வழிகாட்டிய என் தாய் - தந்தைக்கும், சகோதர - சகோதரிகளுக்கும் என் மனதார நன்றி கூற விரும்புகிறேன்.

### கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட பொக்கிஷம் நான்...

எனது அழைத்தலுக்கு முதற்தளமே தூத்துக்குடி தஸ்நேவிஸ் பள்ளிதான். அழைத்தல் வாழ்வு வேண்டாமென்று விலகிச்சென்ற போதெல்லாம், அடைக்கல அன்னை சகோதரிகள் என்னை விடுவதாய் இல்லை. ஏனென்றால் அதுதான் கடவுளின் திருவுளமும்,

அடைக்கல அன்னையின் ஆசையுமாய் இருந்தது என்பதை என் அழைத்தல் மூலம் நான் உணர்ந்து கொண்டேன். முன்னாள் சபைத் தலைமை அன்னையாக இருந்த அன்னை லூர்துமேரி அவர்களின் இறையழைத்தல் முகாமுக்குப் பிறகு, சபையில் சேர எனக்குக் கடிதம் வந்தபோதிலும் சகோ. அருளானந்தம்மாள் அவர்களின் அயராத அழைப்புக் குரல்தான் என் அழைத்தலுக்கு உந்து சக்தியாக இருந்தது, அவர்கள்தான் அடைக்கல அன்னை சபைக்குள் நான் நுழைவதற்கு வழிகாட்டியாகவும் இருந்தார்கள் என்பதை நான் பெருமையாகக் கூறமுடியும். எனது பயிற்சி காலத்தின் போது பலரின் வழியாக புதிய புதிய மாற்றங்களை, திருப்பங்களைக்கொடுத்து இறைவன் என்னை பக்குவப்படுத்தி, பண்படுத்தி அடைக்கல அன்னை சபைக்கு ஏற்ற அருட்சகோதரியாக மாற்றினார்.

**வாழ்வை வளமாக்குவது நம் கையில், அதற்குத் தேவை தளராத இதயம்...**

எங்கோ பள்ளியில் பணியாற்றவேண்டிய சந்தர்ப்பத்தை சபை அளித்தபோது, ‘‘இல்லை, இல்லை, உனக்குத் தகுந்த பணி, நான் செய்த மகத்துவமான மருத்துவப்பணிதான்’’ என்று இறைவன் என் வாழ்க்கையின் பக்கத்தையே மாற்றி அமைத்த தருணம் மறக்க முடியாதவை. அவர் சென்ற இடமெல்லாம் இறைவார்த்தையாலும், வல்லமையுள்ள கரத்தினாலும் பல மக்களைக் குணமாக்கியது போல என்னையும், ஊர்விட்டு ஊர், மாநிலம் விட்டு மாநிலம், நாடு விட்டு நாடு என்று காடு, மலை, கடல் கடந்து எல்லா திசைகளுக்கும் சென்று பற்பல மொழிகளைக் கற்று பலதரப்பட்ட மக்களின் உள்ளங்களில் இடம் பெற வாய்ப்பளித்த எம் அடைக்கல அன்னை சபைக்கு மிகவும் நன்றிக்கடன்பட்டவள் நான்.

நான் இன்று என் உடல், உள்ள, ஆன்ம நலத்தோடும், பற்பல திறமைகளோடும், அறிவாற்றலோடும் எப்பணி கொடுத்தாலும் என்னால் சிறப்புற செய்யமுடிகிறதென்றால் எல்லா புகழும் எம் அடைக்கல அன்னை சபைக்கேச் சேரும். ஒன்றுமறியாத ஒரு வெகுளி குழந்தையாக சபையில் நுழைந்த என்னை தளரும் போதெல்லாம் தாங்கிப்பிடித்து, பதறும் போதெல்லாம் பக்குவமாய் சொல்லிக் கொடுத்து, என்னை நன்றாகப் பயிற்றுவித்து, இன்பத்திலும், துன்பத்திலும், உடல் நலத்திலும், நோயிலும் என்னோடிருந்து அரவணைத்து, ஊக்கமூட்டி வழிகாட்டியவர்கள் எம் அடைக்கல அன்னை அன்புச் சகோதரிகள். என்னை ஆளாக்கிய எம் அடைக்கல அன்னை சபைக்கும், அரவணைப்போடு பக்குவப்படுத்திய என் ஆருயிர் அருட்சகோதரிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

**ஆனந்தமான வாழ்வு வாழ ஆடம்பரம் தேவையில்லை...**
**அன்பானவர்கள் அருகிலிருந்தாலே போதும்...**

என் வாழ்க்கை பயணத்திலே பள்ளிப்பருவம் முதல் இன்றுவரை உடனிருந்து என்னை பாராட்டி, பக்குவமாய் கற்றுக்கொடுத்து என்னை ஆளாக்கிய அனைத்து ஆசான்களுக்கும் நன்றி கூறுகிறேன். சோதனைகளிலே சோர்வடைய விடாது, வேதனைகளிலே வேர்களைப் போல தாங்கிப் பிடிப்பவர்களாக தங்களது ஆறுதல் வார்த்தைகளாலும், உறவினர்களைப் போல உடனிருந்தும், அன்பும் பாசமும் காட்டி என் வாழ்வை வளமாக்கி, ஊக்கப்படுத்திவரும் என் நண்பர்கள் அனைவருக்கும் மனதார நன்றி கூறுகின்றேன். என் அழைத்தல் வாழ்விலே அடிக்கல்லாகவும், ஆணிவேராகவும் இருந்து இறைவனின் பராமரிப்போடும், அடைக்கல அன்னையின் ஆசீரோடும் 25 ஆண்டு வெள்ளி விழாவைக்

காணும் பாக்கியத்தைக் கொடுத்த என் அன்பார்ந்த உள்ளங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன். உங்கள் உள்ளங்களையும், இல்லங்களையும் இறைவனின், அருளாசீராலும் வரங்களாலும் நிரம்பிட தொடர்ந்து எம் அடைக்கல அன்னையின் வழியாக பரிந்து செபிக்கிறேன்.

**பிறப்பு சம்பவமாக இருப்பினும் இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும்...**

என் வாழ்விலே எனது பிறப்பு ஒரு சரித்திரம்தான் தொடரும் என் பயணத்தையும் சாதித்து சரித்திரமாக்க விரும்புகிறேன். சபையிலே நான் ஒருபோதும் வாய்ப்புக்காக காத்திருப்பதில்லை. கிடைக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, பணியிலே வெற்றிபெற முழு ஈடுபாட்டோடு சூரியனைப்போல பிரகாசிக்க விரும்புகிறேன். இன்று 25 ஆண்டுகளை வெற்றிகரமாக எட்டிப்பிடித்திருக்கிறேனென்றால் உறங்காமல் நான் கண்ட கனவுகளேக் காரணம். “கரைகளைக் கடக்கும் துணிவிருந்தால், புதிய கடல்களைக் கண்டுபிடிக்கலாம்.” ஆம், என்னை அழைத்த ஆண்டவனே தஞ்சமென துணிவோடும், அன்னையின் துணையோடும், அர்ப்பணிப்பு உணர்வுடன், அற்புதமாக அகிலமெங்கும் பணிபுரிந்து எனக்கு உருக்கொடுத்த என் சபையை உருவாக்க, அயராது ஆண்டவன் துணையோடு பணிபுரிவேன்.

**“இறைவா உம்மை நம்புகிறேன் எனக்கு இரங்கிடும்”**



# “எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைக்கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு” (பிலி 4:13).



| | |
|---|---|
| சகோதரியின் பெயர் | : **சகோ. வசந்தாமேரி** |
| சபை எண் | : 1124 |
| பிறந்த மண் | : வேங்காகுடி |
| பங்குத் தளம் | : பாதிரக்குடி |
| மறை மாநிலம் | : தஞ்சாவூர் |
| தந்தை பெயர் | : திரு. சவரிமுத்து |
| தாய் பெயர் | : திருமதி. கிறிஸ்டினம்மாள் |
| உடன் பிறந்தோர் | : சகோதரர்கள் - 2,சகோதரி - 1 |
| முதல் அர்ப்பணம் | : 08.05.1998 |
| நிரந்தர அர்ப்பணம் | : 07.05.2004 |
| வெள்ளிவிழா | : 04.05.2023 |

“மானிடனாய் இவ்வுலகில் பிறந்து - அதிலும்
பெண்ணாய் இவ்வுலகில் படைத்து,
உம் புகழை பறைசாற்ற
இறை அழைத்தல் எனும் கொடையைக் கொடுத்து,
இம்மட்டும் கரம் பிடித்து வழிநடத்தி வரும்
இறைவா! உமக்கு என் நன்றி!”

## இப்பயணத்தில் என் தொடக்கம்:

“நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்” (எபே 1:4)

என் புனிதத்தை நோக்கிய பயணம் பிறக்க ஆண்டவர் தேர்ந்து கொண்ட கருவிகள்தான் திரு. சவரிமுத்து, திருமதி. கிறிஸ்டினம்மாள் என்கிற என் பெற்றோர். இவர்களின் நான்காவது மகளாக இம்மண்ணில் விதைக்கப்பட்டேன். அண்ணன் அருளானந்து, அருட்பணி ஆரோக்கியதாஸ், அக்கா சந்தனமேரி இவர்கள் இறைவன் என் உடன் பிறக்கவைத்த வரங்கள். ஆழ்ந்த இறை நம்பிக்கை, இறை பராமரிப்பு, கடின உழைப்பு, தியாக வாழ்வு, அனைத்தையும் கற்றுக் கொடுத்தது என் எளிய குடும்பம்.

## இப்பயணத்தின் அழைத்தல் வாழ்வு:

கடைசிப் பிள்ளையாக, செல்ல மகளாக வளர்க்கப்பட்ட எனக்கு, என் சிறு வயதிலிருந்தே என் தாயும், பெரியம்மாவும் கூறிய வார்த்தைகள், “நீ கடவுளுக்காகப் பணி செய்தால் உன் வாழ்வு நன்றாக இருக்கும், எனினும் உனக்கு இல்லற வாழ்வில் கிடைக்கும் மகிழ்ச்சியை விட கடவுளுக்காக பணி செய்து வாழும் வாழ்க்கையில் மேலும் மகிழ்ச்சி

கிடைக்கும்'' என்று தினந்தோறும் என்னிடம் கூறிய அறிவுரைகள் என் மனதில் ஆழப் பதிந்தது. அதன் விளைவு அந்த அறியாத வயதில் நண்பர்களுடன் என் பள்ளி பருவத்தில் 8 -ஆம் வகுப்பில் விளையாட்டாக உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது, நீ வருங்காலத்தில் என்னவாகப் போகிறாய் எனக் கேட்டபொழுது என்னையறியாமல் நான் கூறிய வார்த்தை Sister -ஆகப் போகிறேன் என்று, அப்பொழுது என்னுள் வேறு எந்த சிந்தனையும் எழவில்லை, என்னுள் எழுந்த முதல் சிந்தனை என அன்றே உணர்ந்தேன் இதுவே என் இறை அழைத்தலுக்கான முதல் வர்த்தை என்று. இவ்வாறு இறையன்பையும், இறை அழைத்தலையும், பண்பையும், பாசத்தையும், ஊட்டி வளர்த்த என் தாயின் வளர்ப்புதான் இம்மட்டும் என்னில் நிலைத்து நிற்கிறது. மேலும், சிறுவயதில் இருந்து அறந்தாங்கியில் உள்ள அடைக்கல மாதா மடத்தில், கருணை இல்லத்தில் தங்கி பயின்று வந்தேன், மேலும் தஞ்சை பூக்காரத்தெருவில் உள்ள புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 9 -ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு படித்தேன். அப்பொழுது எனக்கு ஆசானாக இருந்த அருட்சகோதரிகள் சகோ. ஜெயராணி, சகோ. நேசசௌந்தரம், சகோ. ஜாக்குலின் இவர்களின் அன்பாலும், கனிவாலும் கவரப்பட்டு, இறையழைத்தல் என்னும் சிறுவிதை செடியாக, மரமாக வளர்ந்து நமது அடைக்கல அன்னை சபையில் சேர வித்திட்டது. அதன்பிறகு பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த பிறகு என் உடன் பிறந்தோர் மறுப்பு தெரிவித்தப் போதிலும், என் தாயாரின் விருப்பத்தோடு நான் என் இறை அழைத்தலை உணர்ந்த காரணத்தினாலும் அடைக்கல அன்னை அருட்சகோதரிகள் ஆலோசனைப்படி மயிலை வந்தடைந்தேன்.

**பணிவாழ்வில் என் பயணம்:**

> "எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைக்கொண்டு
> எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு'' (பிலி 4:13)

என்ற இறைவார்த்தையின்படி எனக்குக் கிடைத்த பணிகளில் எல்லாம் என்னை வலுவூட்டுகிறவரின் துணைக்கொண்டு, நல் ஆற்றலோடு சிறந்த பணியாம் கல்விப் பணியை மேற்கொண்டு இம்மட்டும் சிறப்பாக, சிறு பிள்ளைகளுக்கு சிறந்த சிற்பியாக திகழ்வதில் பெருமிதம் கொள்கிறேன். அது மட்டுமல்லாது சமூகப்பணி, ஆலயப்பணி, அன்பியம், பக்த சபைகள், பாடகற் குழுக்கள், ஏழை எளியோரைக் கவனித்தல் என்று ஆர்வத்தோடும், ஆசையோடும், மகிழ்வோடும், மனநிறைவோடும் கடமையைப் புனிதமாக எண்ணி பணி செய்ததை நினைத்து மகிழ்கிறேன். சிட்டுக்குருவிகளைப் போல் பறந்து திரிந்து, அன்போடும், ஒற்றுமையோடும், ஏழை எளியோரின் உள்ளம் அறிந்து அவர்களுக்குப் பயன் தரும் வகையில் வாழ விருப்புகிறேன்.

**இப்பயணத்தில் குழுமவாழ்வு:**

அடைக்கல சபையில் கால் பதித்த நாள் முதல் இன்று வரை குழுமத்தில் என்னுடன் பயணித்த சகோதரிகள் அம்மாவாக, அக்காவாக, தங்கையாக எனக்குக் கிடைத்தது நான் பெற்ற பெரும்பேறு என்பேன். குழும வாழ்வு குதூகலிக்கும் சொர்க்கமாகவே இருந்தது. அன்பிலும், கனிவிலும், உழைப்பிலும் ஒன்றித்து வாழ்ந்ததை நினைத்து நெஞ்சம் நெகிழ்கிறது.

**இப்பணியில் நன்றியின் மகத்துவம்:**

✧ 25 ஆண்டுகள் என்னை இதமாய் பற்றிப் பிடித்து வழிநடத்திய இறைவா! உமக்கு நன்றி!

✧ பிறரன்பு, விட்டுக்கொடுத்தல், பெரியவர்களை மதித்தல், ஆழமான விசுவாசம், பார்வையால், வார்த்தையால் பிறர்மனம் நோகாமை, உண்மை பேசுதல், நேர்மையோடு நடத்தல், இவற்றைக் கற்றுத்தந்த என் பெற்றோரை நன்றியோடு நினைக்கின்றேன்.

✧ எனக்கு பாசக்கரம் காட்டி என்னோடு பயணித்த என் உடன் பிறப்புகளுக்கு நன்றி இறைவா!

✧ அறியாத வயதில் தெரியாதவைகளைப் பாங்குடன் கற்பித்து என்னை செதுக்கிய, துறவற பயிற்சி கொடுத்த அன்னையர்களாகிய சகோ. N.M. கிளாரா, சகோ. பென்சி, சகோ. டெரன்சியா, சகோ. தனசீலி என்னை ஊக்கப்படுத்திய முன்னாள் சபைத் தலைமை அன்னையர்களாகிய அன்னை ஜான் டி பிரிட்டோ, அன்னை பாத்திமா ராணி, அன்னை லூர்து மேரி அவர்களையும் நன்றியோடு நினைக்கின்றேன்.

✧ கடந்த 25 ஆண்டுகளில் இறைவன் அருளோடு இணைந்து ஒத்துழைக்க நல்ல மனதையும், திறனையும், உடல் உள்ள நலத்தையும் வழங்கியதற்காய் நன்றி இறைவா!

✧ என் வாழ்வில் மிஞ்சி இருக்கும் நாட்களையும் நல்லமுறையில் வழிநடத்தப் போவதற்காய் நன்றி இறைவா!

**என்னை முன் குறித்து உரு கொடுத்து உடன் நடந்த இறைவா! உமக்கு நன்றி! நன்றி!!**



# ஏனோ! அவசரம் ஏனோ!



நிரந்தர வார்த்தைப்பாடு கொடுப்பதற்கு முன்னே நிரந்தரமாய் நித்தியனிடம் சரணடைந்தது ஏனோ! ஆரோக்கியமேரி என்று நீ செல்லமாய் அழைக்கும் உன் தாய்க்கு மூன்றாவது குழந்தையாய், முதல் பெண் குழந்தையாய் கார்த்திகை மாதத்தில் பிறந்ததால் ஜோதிகா எனும் பெயர் பெற்றாய். ஒளியை பெயரில் தாங்கியதோடு நின்றுவிடாமல் பேரொளியாம் பரமனின் அழைப்பை ஏற்று **“உலகிற்கு ஒளியாக எழு!”** என்ற விருதுவாக்குடன் துறவறத்தில் நுழைந்தாய் இருப்பினும் ஏனோ! அவசரம் ஏனோ! உடன் பிறப்புகள் மீது அளவில்லாத பாசம் கொண்ட நீ அவர்களுக்கு ஒரு நல்லது நடக்கும் முன் நீ சென்றது ஏன்!

மூத்த அண்ணனின் திருமணத்தைக் காணாமல்

இரண்டாவது அண்ணனின் குருத்துவ அருட்பொழிவில் பங்கேற்காமல்

தங்கையின் திருமணத்தையும் பார்க்காமல்

பெற்றவளைத் தவிக்கவிட்டு நீ பிரிந்தது ஏனோ!

விண்ணிலிருந்து கண்டுகளிக்க விரும்பினாயோ!

எழுவராய் வார்த்தைப்பாடு கொடுத்து அறுவராய் இருந்த நம்மை ஐவராக்கிப் பார்ப்பதுதான் உன் வாஞ்சையோ!

இல்லை, உயரத்தில் எங்களில் முன்னிருந்த நீ விண்ணகம் உயரவும் முன்னிருக்க விளைந்தாயோ!

நாங்கள் காயப்பட்டுவிடக் கூடாதென்பதற்காக எல்லா காயங்களையும் உனக்குள் புதைத்துக் கொண்டாய்!

அதனால்தான் என்னவோ உன் வலிகளையும் உடல் வேதனைகளையும் கூட உனக்குள் மறைத்துக் கொண்டாயோ!

ஆனால் இன்று எங்களை வருந்த விட்டுவிட்டு நீ மகிழ்ந்திருக்கிறாய் இறைவனோடு புனிதையாக! ஏனோ! அவசரம் ஏனோ!

மருத்துவமனையில் இயலாமல் இருந்தபோது கூட எனது புத்தகத்தை எடுத்து வாருங்கள் நான் தேர்வு எழுத வேண்டும். என கடமையில் கருத்தாய் இருந்தாய்! இருந்தும் புத்தகத்தைத் திறப்பதற்குள் உன் கண்களை மூடிக் கொண்டதேன்! இனி உன் இனிய பேச்சினையும் இன்னிசைப் பாடலையும் நாங்கள் கேட்பது எப்போது! உன் குழந்தை சிரிப்பினையும், குடுகுடு நடையையும் நாங்கள் ரசிப்பது எப்போது!

உலகிற்கு ஒளியூட்டியது போதும் என்று உன் ஒளியை அணைத்துக் கொண்டது ஏனோ!ஒரு வேளை பேரின்ப ஒளியில் இணைந்து பிரகாசிக்க விருப்பம் கொண்டாயோ!

உனக்கு என்ன பிரச்சனை? உனது கவலை என்ன? உனது உடல் நலக் குறைவிற்கு காரணம் என்ன? உனது ஆசைகள் என்ன? உனது ஏக்கம் என்ன? என்பதை நாங்கள் அறிவதற்குள் நீ மறைந்தது ஏனோ? ஏனோ? ஏனோ? ஏனோ? என பல கேள்விகளுக்கு பதில் தெரியாமல் இன்று அடைக்கல அன்னை அவையே ஒரு இளம் சகோதரியை இழந்து கலங்கி நிற்கிறது.

எங்களது செபமும் தவமும் வீணாய் போனதோ என்ற கலக்கமும் மனதை இன்னும் கனமாக்குகிறது. இருப்பினும் இறைத்திருவுளம் என்று மனது கூறினாலும் இதயம் ஏற்க மறுக்கிறது. பேரின்ப வீட்டில் நீ என்றும் இளைப்பாற உனக்காக கண்ணீரோடு செபிக்கின்றோம்.



என்றும் உன் நினைவில் வாழும்
உடன் வார்த்தைப்பாட்டுச் சகோதரிகள்

# ஆசை ஆசையாய் பணியாற்றி ஓசையின்றி விண்ணகம் விரைந்த அருட்சகோதரி தமத்திருத்துவ பாத்திமா ராணி அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி!



நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை தரணியிலே, பல அருட்சகோதரிகளையும், அருட்பணியாளர்களையும் திருச்சபைக்கு வழங்கிக் கொண்டிருக்கும் தேன் மதுர திருக்கானூர்பட்டியிலே பிறந்தவர்தான் அருட்சகோதரி தமத்திருத்துவ பாத்திமா ராணி அவர்கள்.

அன்பு, அமைதி, கடின உழைப்பு ஆகிய நற்பண்புகளைக் கொண்ட திரு. அன்னா சாமி என்ற மரிய சூசை திருமதி. மரிய பாக்கியம் ஆகிய தம்பதிகளுக்கு முதல் முத்தாக அவதரித்தவர். இவருடன் பிறந்தவர்கள் இரு சகோதரிகள் ஒரு சகோதரன் ஆவர். தனது சித்தப்பா மறைந்த அருட்தந்தை அந்தோணிசாமி அவர்களின் ஆன்மீக வழிகாட்டுதலில் இளம் வயதில் இறைவனை சிக்கெனப் பிடித்து இல்லறம் மறந்து துறவறம் பூண்டு பெற்றோரின் முழுவிருப்பத்தோடும் தனக்கிருந்த ஆர்வத்தோடும் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தவர்.

**இறைவா! நீ என்னோடு இருந்தால் இமயம் என் வசம் பிரபஞ்சம் என் கைவசம்** என 1978 -ஆம் ஆண்டு தேர்வுநிலை பயிற்சியில் இணைந்து 1979 முதல் 1980 வரை புகுமுகத்துறவு பயிற்சி பெற்று 08.05.1982 அன்று முதல் வார்த்தைப்பாடு கொடுத்து அடைக்கல அன்னை சபைச் சகோதரியாக அடைக்கல அன்னை சபையில் முழுமனதோடு இணைந்தவர்கள். ஆறுவருட ஆண்டுகால பயிற்சிக்குப் பிறகு **"இறைவா நீர் மட்டும்தான் எனக்கு வேண்டும்"** என்று 09.05.1988 அன்று நிரந்தர வார்த்தைப்பாடு கொடுத்து சபையில் நிரந்தர உறுப்பினராக சேர்க்கப்பட்டவர்கள். முதல் வார்த்தைப்பாடு கொடுத்த நாள் முதல் தன் துறவு வாழ்வில் பொறுப்புணர்வோடும், எதையும் எடுத்துச் செய்யும் நல்ல குணத்தோடும், ஏழை மக்களுக்கு உதவும் நல்ல பண்பையும் பெற்று, தன் அன்பு வாழ்வால் இறைவனுக்கு சான்று பகர்ந்தவர்கள்.

ஓடிக் கொண்டிருப்பதுதான் நதி
உலவிக் கொண்டிருப்பதுதான் காற்று
செயல்பட்டுக் கொண்டிருப்பவன்தான் இளைஞன்
இளமைக்கு நீ வேலைக்காரனாக இருந்தால்
முதுமைக்கு நீ எஜமானனாக இருப்பாய்

என்ற வைரமுத்துவின் வரிகளை விருதுவாக்காக ஏற்று மதுரை கூடல்நகர், பாடலூர் தலங்களில் ஆங்கிலப்பள்ளி நிர்வாகியாக பணியாற்றியவர்கள். கதிரவன் மறையும் வேளையில், எல்லோரும் தங்களை பற்பல பிணிகளால் நலன்குன்றி இருந்தோரை இயேசுவிடம் கூட்டி வந்தார்கள். அவர் ஒவ்வொருவர் மேலும் தம் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினார் (லூாக் 4:40) என்ற விவிலிய வார்த்தைகளை சிரமேற்கொண்டு ஏழை எளியோரின் ஏணிப்படியாய், நோயுற்றோரின் மருத்துவராய், முதுமையடைந்தோர்க்கு ஆறுதலாய் 1984 முதல் 1988 வரை

செயின்ட் ஜான்ஸ் மெடிக்கல் கல்லூரியில் தாதியர் படிப்பை முடித்து மேட்டுப்பட்டி, மொளச்சூர், கோவளம், சதுராஸ், பாடலூர், சஞ்சாய்நகர், கூடல்நகர் இல்லங்களில் தாதியர் பணியாற்றியவர்கள். 1999 முதல் 2000 வரை கோவாவில் இறையியல் படிப்பை முடித்து மீண்டும் பாடலூர், தச்சன்குறிச்சி, வடகரை, வேளாங்கண்ணி, பெரும்பண்ணையூர், மொளச்சூர், சஞ்சாய்நகர் ஆகிய இடங்களில் தாதியர் பணியை மிகச் சிறப்பாகச் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள். 2007 முதல் 2013 வரை 6 ஆண்டுகள் தஞ்சை மாநிலத்தில் சமூக ஒருங்கிணைப்பாளராக திறம்பட பணியாற்றியவர்கள்.

இவர்களின் மருத்துவப்பணி மிகச் சிறப்பு வாய்ந்தது. மருந்தை மட்டும் மக்களுக்குக் கொடுக்காமல் நோயால் பாதிக்கப்பட்டு வருபவர்களை ஆற்றுப்படுத்தி அவர்களின் குடும்பப் பிரச்சனைகளைக் கேட்டறிந்து அவர்களின் இல்லங்களுக்குச் சென்று பிரச்சினைகளைத் தீர்த்துவைத்து குடும்பங்களில் நிம்மதியையும், மகிழ்ச்சியோடு வாழும் நிலையையும் உருவாக்கியவர்கள். வீரநடை, சுறுசுறுப்பு, பேசும் பேச்சில் வெற்றி, பிரச்சினைகளை சுலபமாக எடுத்துக்கொள்வதோடு, அதை சுலபமாக சமாளிக்கும் திறமையையும் படைத்தவர்கள். தான் செய்துவந்த மருத்துவப் பணியை விரும்பி செய்தவர்கள். சபையின் தனிவரத்தை தன் வாழ்வாக்கி எத்தனையோ ஏழை மக்களுக்கு வாழ்வளித்த வள்ளல் இவர்கள்.

வான்மழையும் மழைபெய்யாமல் ஓய்வெடுக்கும்
வயல்வெளியும் விளையாமல் ஓய்வெடுக்கும்
தேன் மலரும் இதழ் மூடி ஓய்வெடுக்கும்
கான மயில்கள் கானகத்தில் ஓய்வெடுக்கும் - ஆனால்
நோய்நொடியில் உடல் தளர்ந்தும்
மருத்துவப் பணியில் ஓய்வின்றி உழைத்த உத்தமியே!
பிறப்பு என்று ஒன்று உண்டு என்றால்
இறப்பும் நிச்சயம் உண்டு என்பதை எண்ணி
இறப்பிற்கு தன்னையே தயாரித்தவர் நீர்.

மருத்துவமனையில் தனக்குப்பேச முடியாத நிலையிலும் மனதில் தோன்றியதை எழுதிக் காண்பித்து பகிர்ந்து கொண்ட விதம் மனதை உருக வைக்கிறது.

வாழ வேண்டிய வயதில்
விண்ணகம் சென்ற வண்ணப் புறாவே!
திடீரென்று வந்த தீராத நோயை
தேவனின் சித்தமென ஏற்று
தெய்வத்திடம் சரணடைந்து விட்டீரோ!
பாசத்தை ஊட்டிய நேசக்கடலே!
பசுவைத் தேடும் கன்றைப் போல் - உம்மோடு
வார்த்தைப்பாடு ஏற்ற எட்டு சகோதரிகள் ஏக்கத்தோடு
பரிதவித்து நிற்கின்றோம்
கனத்த இதயத்துடன் துடிக்கும் மனதுடன்
கண்ணீர் மல்க செபிக்கின்றோம்
ஆண்டவனில் உன் ஆன்மா சாந்தி பெறட்டும்.

இப்படிக்கு
சக வார்த்தைப்பாட்டுச் சகோதரிகள்.

# “நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன” (சா.ஞா 3:1).



பணிகள் பல உங்களை சூழ்ந்ததால் மண்ணில் உறங்க நேரமில்லை என்று விண்ணில் உறங்கச் சென்று விட்டீர்களோ? சிவகங்கைச் சீமையிலே வேலு நாச்சியார் போல் எம் சபையில் வாழ்ந்த வேலு நாச்சியார் நீர். மதுரை மாவட்டம் கருமாத்தூர் பங்கில் சக்கிலியன் குளம் என்ற ஊரில் இந்துக்களாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறிய திரு.எ.சூசைராஜ் திருமதி.எ.தங்கம்மாள் (எ)மேரி புஷ்பம் இவர்களுக்கு ஏழு குழந்தைகளில் மூன்றாவது முத்தாக நம் சபையின் சொத்தாக 19.03.1955 -ஆம் ஆண்டு பிறந்தவர்கள்தான் சகோதரி V.S. பாத்திமா ராணி அவர்கள். ஏழு குழந்தைகளில் இருவரை அருட்தந்தையர்களாகவும் நம் அம்மாவை நம் சபைக்கும் அளித்திட்ட தியாக செம்மல்கள்தான் இவர்களது பெற்றோர்.

சபையில் 08.05.1977 -ஆம் ஆண்டு முதல் வார்த்தைப்பாடு கொடுத்து நிரந்தர வார்த்தைப்பாடு, வெள்ளிவிழா கண்டு மொத்தம் 46 ஆண்டுகள் நம் அடைக்கல அன்னை சபையில் பணிசெய்த வீரமங்கை நீர். கம்மங்குடிப்பட்டி, நடுவட்டம், தெற்குபொய்யூர், பாதிரக்குடி, விச்சூர், திருத்துறைப்பூண்டி, செங்குடி, மேட்டுப்பட்டி, இருதயபுரம், புதுக்கோட்டை மார்த்தாண்டபுரம், இந்த இல்லங்களில் இல்லத் தலைவியாகவும், பள்ளித் தலைமை ஆசிரியையாகவும் பணி ஓய்வு பெற்ற பிறகு, கருணைக்குடில் இல்ல கண்காணிப்பாளராகவும் முழு நேர நற்செய்திப் பணி மற்றும் சமூகப் பணியாளராகவும் திறம்பட பணியாற்றியவர் நீர்.

செபம் வேறு வாழ்க்கை வேறு என்று இல்லாமல் செப மனிதராகவே வாழ்ந்தவர் நீர். தொடர்ந்து நம் சபைக்கு செபிக்க விண்ணிற்கு பறந்து விட்டீரோ?

இரவை பகலாக்கி பகலை இரவாக்கி கொடுத்தப் பணியை கொடையெனச் செய்தவர் நீர்.

ஏழைகளுக்கு உதவி செய்வதில் அன்னை தெரேசா போன்றவர் நீர்.

30க்கும் மேற்பட்ட குடும்பங்களில் திருமணம் என்ற அருட்சாதனத்தால் வாழ்க்கையில் ஒளி ஏற்றிய ஒளி விளக்கு நீர்.

இருப்பவர்களிடமிருந்து பெற்று இல்லாதவர்களுக்குத் தானே முன்வந்து உதவி செய்தவர் நீர்.

ஏழை எளிய குழந்தைகளுக்கு கல்விக் கண் திறந்த தெய்வம் நீர்.

தன்னிடம் உள்ளதைத் தாராளமாகப் பிறருக்குக் கொடுத்து மகிழ்ந்து வாழ்ந்தவர் நீர்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கூற்றுக்கிணங்க வாழ்க்கையில் விரக்தி அடைந்தவர்களைச் சந்தித்து வாழ்க்கைப் போராட்டம் நிறைந்தது அதை எதிர்கொண்டு வாழ வேண்டும் என வாழவைத்த வழிகாட்டியே..

ஏழைகள் மட்டில் தணியாத தாகம்கொண்ட இவர்கள் நம் சபையில் அடைக்கலாக் கல்வி உதவித் தொகையை ஒரு சகோதரிக்கு ஒருவர் வீதம் என்றால் இவர்கள் மட்டும் ஒவ்வொரு வருடமும் மூன்று பேருக்கு சபையின் தலைமை அன்னையிடம் பெற்று தரக்கூடிய தாராளம் உள்ளம் கொண்டவர்.

மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற இயலாத ஏழை எளிய மக்களுக்குக் கை மருத்துவம் மூலம் மருந்துகள் செய்துகொடுத்தும் செய்யக் கற்றுக்கொடுத்தும் வாழ வைத்த மருத்துவர் நீர்.

அம்மா நீர் இருக்கும் இடத்தை மகிழ்ச்சியால் நிறைத்து சுற்றி இருப்பவர்களையும் மகிழ வைத்தவர் நீர்.

அம்மா நீர் சபைக்கும் சகோதரிகளுக்கும் ஏழைகளுக்கும் பள்ளி குழந்தைகளுக்கும் பங்கு மக்களுக்கும் செய்திட்ட பணிகளை, நீட்டிய உதவிக் கரங்களை சொல்வதற்கு நாட்கள் போதாது.

அம்மா உன் இதயத்தில் நிறைந்து இருக்கும் சபைக்கும், சபைச் சகோதரிகளுக்கும் நீர் விரும்பி, உதவி செய்த எல்லா எளிய மக்களுக்கும் தொடர்ந்து செபிக்க உம் ஆன்மாவை இறைவன் பாதத்தில் கணத்த இதயத்துடன் ஒப்படைக்கிறோம்.



# சகோதரி மேரி அல்போன்ஸா அவர்களுக்கு பிரியாவிடை



சகோதரியின் பெயர் : **சகோ. மேரி அல்போன்ஸா**
சபை எண் : 564
பிறந்த நாள் : 09.12.1947
இறந்த நாள் : 30.03.2023

அம்மா எங்கள் அம்மா! பட்டி தொட்டியெல்லாம் சுற்றிவிட்டு பாதம் நோகிறதென்று பவ்யமாய் படுத்திருக்கிறாயோ! சமூகப்பணி செய்து செய்து சோர்ந்துபோய் சத்தமில்லாமல் உறங்கிப்போனீரோ! சமுதாயக் கல்லூரியால் களைப்புற்று, சற்றே கண்ணயர நினைத்து முற்றிலும் உறங்கிப்போனீரோ! பல்லாவரம் குழுமத்தில் என்னதான் கண்டீரோ? இறுதி மூச்சுவரை உம் பாதம் துறுதுறுவெனத் துடிக்க கண்கள் பரபரவெனத் தேட, எண்ணமெல்லாம் பணியாய் இருக்க, நினைவெல்லாம் தேர்வாய் இருக்க, உம் இறுதி நாட்களில் உம் பேச்செல்லாம் பிள்ளைகளின் பெயராகவே இருக்க, அயர்ந்து போய் அசையாமல் இருக்கிறீரோ?.

- தூக்கமில்லா உம் இரவுகளின் தவிப்பு எங்களுக்குப் புரிந்தது.
- நித்திரையில்லா உம் நினைவலைகள் எங்களுக்குப் புரிந்தது.
- நீர் அதிர்ந்து பேசமாட்டீர்.
- நீர் சத்தமாய் பேசுகிறீர் என்றால் அதில் அர்த்தங்கள் ஆயிரம் இருக்கும்.
- குறையே பேச மாட்டீர். மற்றவர்களைக் குறைத்துப் பேசவும் மாட்டீர்.
- அடுத்தவரைப் பற்றி பேசவே மாட்டீர். நேரிலும், அவர்களின் நிழலிலும்.
- இதுதான் வேண்டும் என்று அடம்பிடிக்க மாட்டீர்.
- இருப்பதில் நிறைவு கண்டவர் நீர்.
- சாப்பாட்டில் ஒரு போதும் நீர் குறைகண்டதில்லை.

சுதந்திர இந்தியக் காற்றைச் சுவாசித்து 1947 -ஆம் ஆண்டு திருவாளர். ஜான் அந்தோணி - திருமதி. ஜோஸ்பின் அவர்களின் 8 பிள்ளைகளில் 7 -வது ஸ்வரமாய் பிறந்து 1969 -ல் சபைக்குள் நுழைந்து 1971 -ல் முதல் வார்த்தைப்பாடு, பெற்று 1977 -ல் நிரந்தர வார்த்தைப்பாடு ஏற்று, சபையின் தனிவரத்தை வாழ்வாக்குவது, ஏழைகளோடு ஏழையாக வாழ்வது என்ற இலட்சியத்தோடு 52 ஆண்டுகள் அடைக்கல அன்னை சபைக்காய் அயராது உழைத்தீர்.

- ஆங்கிலம், தமிழ், கன்னட மொழிகளில் பண்டிதர் நீர்
- எம் சபையின் முதல் M.S.W நீர்.

❖ பெண்கள் எழுச்சிக்காக லொயோலா கல்லூரியோடு இணைந்து உழைத்தீர்.
❖ வீதி நாடகங்கள் அமைத்து பெண்களுக்கு விழிப்புணர்வு கொடுப்பதில் வல்லவர் நீர்.
❖ இளம் குருக்களையெல்லாம் ''செல்லம்... தங்கம்....'' என்று அழைப்பீர்.
❖ சிறு பிள்ளைகளை உங்களுக்கு அவ்வளவு பிடிக்கும்.

எந்த சகோதரியைப் பார்த்தாலும் Hello வாங்க, எப்படி இருக்கீங்க? என்ற வினாவோடும், Bon Secours எனக்காக எல்லாம் செய்கிறது என்ற விடையோடும் உம் விசாரிப்பு இருக்கும். எளிய மனம் கொண்டு, இளகிய இதயம் கொண்டு நிறைய மனிதர்களின் இயத்தில் இடம் பிடித்தவர் நீர். உம்மால் பயன்பெற்ற இடங்கள் ஏராளம். நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் TMSS கைலாசபுரம், மைலாப்பூர், ஊட்டி, மைலாப்பூர் MSSS போரூர், மல்லிகாபுரம், மதுரை, மிக்கேல்பாளையம், ஆலந்தூர், மதனப்பள்ளி, மொளச்சூர், கோவளம் சமுதாயக் கல்லூரி, பல்லாவரம் எனப் பணித்தளங்கள் பலப்பல.

இசைக் குடும்பத்தில் பிறந்தவர் நீர். உமது முதல் வார்த்தைப்பாட்டிற்கும், நிரந்தர வார்த்தைப்பாட்டிற்கும் உம் குடும்பத்தினர் இசை அமைத்தார்கள். உமது வெள்ளி விழாவிற்கும் உம் குடும்பத்தினர் இசை அமைத்தனர். இப்போது நிரந்தர பிரிவிற்கும் இசைக்கின்றனர். இசை மீது உமக்கு ஆசை அதிகம். உம் பாடலும், இசையும் இங்கு பலருக்குப் பரிச்சயம். இரண்டு கைகளால் நீர் இசையமைப்பதை, இனிய குரலால் நீர் பாடுவதை உம் இதய அறுவைசிகிச்சை குறைத்துவிட்டதாமே!. ஆனாலும் ஒவ்வொரு பாடலுக்கும் தலை அசைவோடு தாளமிடுவீர். இசைக்குயிலே நீர் இடம் பெயர்ந்தாயோ! அதனால்தான் இன்று உமக்கு எக்காளம் ஊதி திருப்பலி நிறைவேற்றப்பட்டதோ.

குழுமச் சகோதரிகள் மட்டில் உமக்கு அலாதிப் பிரியம். ICU-க்கு உள்ளேயும் கூட அருட்சகோதரிகள் இருக்க வேண்டும் என அடம் பிடித்தீர். எப்போதும் உம் உதட்டில் உறைந்து நிற்கும் புன்னகை இப்போதும் உம் முகத்தில் அரும்பி இருப்பதைக் காணும் போது, கடவுளைக் கண்டுவிட்டீரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சாய்ந்து சாய்ந்து, மெதுவாய் எதிர்கொண்டோரிடம் பேசிக்கொண்டே வலம் வந்த உம் உருவம் எம் கண்களில் இருந்து மறைய பல நாட்களாகும். "I am ready to meet my funeral" என்ற இறுதிப் பேச்சோடு உற்றார் உறவினர் உம்மைச் சூழ்ந்து நிற்க அருட்சகோதரிகள் அருகிருக்க, நிம்மதியாய் நித்திரை கொண்ட உம் வாழ்க்கைப் பயணம் இறைவனின் இருப்பையும், இந்த உலகப் பொருட்களின் இல்லாமையையும் பாடமாக விட்டுச் செல்கின்றது.

அன்பு உள்ளங்களே! தன் ஆவியைக் கையளித்து, இறைவனின் இருப்பிடத்திற்கே சென்றிருக்கும் அம்மாவின் அன்பையும், பண்பையும் நமதாக்குவோம். இறைவனின் ஆசீர் நமக்கும் கிடைத்திட அருள் கேட்போம்.

கனத்த இதயமுடன்
இல்லத்தலைமைச் சகோதரி மற்றும்
குழுமச் சகோதரிகள்,
பல்லாவரம்.

# “நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன், என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.”



ஈரவிழிகளைத் திறந்து
ஈசனை இதயத்தில் நினைந்து
ஈரேழு உலகம் இன்புற்றுவாழ
ஈடில்லா பணியினை
எம் அடைக்கல அன்னை அவைக்கு மனதார அளித்த
எம் அன்னையே உமக்கு எம்மவரின் கண்ணீர் அஞ்சலி.

மனித மனங்களை மகிழ வைக்கும் மல்லியும், லில்லியும் விளையும் திண்டுக்கல் மறைமாவட்டத்தில் உள்ள அனந்தராயன் கோட்டையில் திரு லாசர், திருமதி இஞ்ஞாசியம்மாள் இவர்களுக்கு நான்காவது செல்ல மகளாக ஞானமணி என்ற திருமுழுக்குப் பெயரை பெற்று 2 அண்ணன்கள் ஒரு அக்கா, தம்பி, தங்கை ஆகியோரை உடன்பிறப்பாகக் கொண்டு 06.03.1924 அன்று பிறந்தவர்கள் நம் சகோதரி மேரி பிளாரன்ஸ் அவர்கள். **“இறைவா! நீ என்னுடன் இருக்கும்போது இமயத்தில் நான் இருப்பேன். நீ இல்லாது போனால் இமயம் என்மீது இருக்கும்”**. ஆம்! இகத்தினில் உன்னுடன் வாழ இதயத்தில் உம்மை ஏற்று, ‘இதோ நான் வருகிறேன்’ என்று 03.05.1948 அன்று சபைக்கு தன்னை அர்ப்பணித்து 05.01.1951 அன்று தனது முதல் வார்த்தைப்பாட்டினைக் கொடுத்தவர்கள் அம்மா அவர்கள். 05.01.1957 அன்று, **‘இறைவா! என்னை முழுவதும் உனக்குத் தருகிறேன்’** என்று நிரந்தரமாகத் தன்னை அடைக்கல அன்னை அவைக்கு அர்ப்பணித்தவர்கள்.

“ஆண்டவா! ஆகாத கல் நான். என்னை அடிக்கல் ஆக்கு. வேகாத சுண்ணம் நான், என்னை வெற்றிலையின் சிவப்பாக்கு. உன்னில் என்னை இணைத்துவிடு, உமதருள் பணியை உலகெங்கும் எடுத்துரைக்க என்னில் பயணித்திடு” என்று அன்புடன் மொழிந்து தன்னிகரில்லா தன் அன்பின் பணியை சின்னமலை, திருத்துறைப்பூண்டி, பெங்களூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, மானம்பூச்சாவடி, பூக்காரத்தெரு, பட்டுக்கோட்டை அணைக்காடு, திருவாரூர், கொரடாச்சேரி, செம்பருத்திவிளை, ஆதிச்சபுரம், தேவதானம், கைலாசபுரம், பெரும்பண்ணையூர், வேளாங்கண்ணி, திருவாரூர் ஆகிய இடங்களில் இன்முகத்தோடு பணிசெய்தவர்கள். அன்புப்பணியே அர்ப்பண வாழ்வு. ஆண்டவன் ஆசையே தன் அழைத்தல் வாழ்வு என்பதை நன்கு அறிந்து தெரிந்தவராய் இரவு, பகல், வெப்பம், குளிர், வெள்ளம், காடு, மேடு பாராது, தனது உடல் உழைப்பை நம் சபைக்காக நேர்ந்தளித்தவர்கள். கோவில்பணி, கருணைக்குடில் இல்லப்பணி, அப்பம் தயாரித்தல், முதியோர் இல்லப்பணி, குறிப்பாக நெற்றி வியர்வை நிலத்தில் விழ மக்களின் பசியைப் போக்கக்கூடிய விவசாயப் பணியை சீரும் சிறப்புமாகச் செய்தவர்கள். நம் பாசமிகு அன்னை

அவர்கள். இல்லத்தலைமைச் சகோதரியாக, தலைமயாசிரியராக பல இடங்களில் பணியாற்றியவர்கள். ‘இறைவா! உன் சந்நிதியே நிம்மதி’ என்று தன்னை சரணாகதியாக்கி, நற்கருணை ஆண்டவர் முன்னிலையில் தனது தள்ளாத வயதிலும் மண்டியிட்டு வேண்டுதல் செய்யும் அளவுக்கு பக்தி கொண்டவர்கள்.

1924 -ஆம் ஆண்டிலே மல்லிகை வாசத்தில் நேசமாய் பிறந்த எங்கள் அம்மா பிளாரன்சே! எங்கள் மனங்களில் வாசத்தைக் கொடுத்துவிட்டு, வாடா மலராய் இறைவனிடம் சென்றதேனோ! உம்மால் வாழ்ந்தவர்கள் பலர், வளர்ந்தவர்கள் பலர், வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் பலர். உனது 100 -ஆவது பிறந்தநாளை ஊரே மெச்ச கொண்டாட காத்திருந்த எங்களுக்கு உன் 100 -ஆவது பிறந்தநாளை விண்ணகத்தில் கொண்டாட சென்றதேனோ! உன் நடையைப் போன்று யாராலும் நடக்கமுடியாது. உன் அழகிய சிரிப்பை யாராலும் சிரிக்கமுடியாது. மீண்டும் ஒருமுறை உன் நடையை ரசிக்க, உன் சிரிப்பைக் காண ஏங்குகின்றோம். எங்களை ஏமாற்றி சென்றதேனோ? திண்டுக்கல்லில் உள்ள பட்டிகள் அனைத்தும் பட்டியல் போட்டு சொல்லும் உன் அறிவை, உன் தியாகத்தை, உன் உழைப்பை. மருத்துவமனையில் உனக்கு சிகிச்சை அளித்தவர்கள் சொன்னார்கள், சிகிச்சை அளிக்கும் போதுகூட நீ சிரித்த புன்சிரிப்பை. 99 வயதிலும் எந்த நோயும் அணுகாது உன் உடலைக் காத்துக்கொண்ட நீர், மருத்துவமனையே பிடிக்காத உனக்கு முதிர்வு காரணமாக உன் இறுதிமூச்சு மருத்துவமனையில் சென்றது என்று கேட்டவுடன் மனம் கனத்தது.

**‘வலுவூட்டுகிறவரின் துணைக்கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு’** என்ற இறைவார்த்தைக்கு இணங்க தனக்கு 99 வயது ஆனாலும் சிங்கத்தைப் போல சீறுநடைபோட்டு, மானைப் போல துள்ளிக்குதித்து, பேசுபவரின் மனதை புன்னகையாலே கவர்ந்து, சிறுபிள்ளையாய் அனைவரோடும் உரையாடி, பெத்தலகேம் இல்லத்தில் வலம் வந்தவர்கள். **‘உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனைச் சொல்லுவேன்’** என்ற திபா 32:8 மற்றும் **‘இனியும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அன்னை அடைக்கலத் தாயும் என்னை வழிநடத்துவார்கள்’** என்ற நம்பிக்கையில் என் பயணத்தைத் தொடர்கிறேன் என்று கூறிய உம்மை இறைபதம் வாழ்த்தி வழியனுப்புகிறோம். இறைவனில் நீவீர் இளைப்பாற நாங்கள் செபிக்கின்றோம்.



# அம்மா மேரி ஒஸ்வீனா



12.06.1947 -ஆம் ஆண்டு திரு, கண்ணைய ரெட்டி திருமதி. ரோசாலி என்னும் தம்பதியருக்கு இரண்டாவது குழந்தையாக பிறந்து, உடன் பிறப்புக்கள் நால்வருடன் பக்தியான குடும்பத்தில் வாழ்ந்து வளர்ந்தவர்கள். திருமுழுக்கு பெயராக ரெஜீனா லூசி என அழைக்கப்பட்டு, பின் 1964 -ஆம் ஆண்டில் எம் புனித அடைக்கல அன்னை சபையில் அழைப்புப் பெற்று, சகோதரி மேரி ஒஸ்வீனா எனும் பெயரை ஏற்றார். 1967 -ல் முதல் வார்த்தைப் பாட்டாலும், 1972 -ல் இறுதி வார்த்தைப்பாட்டாலும் இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்து 1992 -ஆம் ஆண்டில் வெள்ளி விழாவும் 2017 -ஆம் ஆண்டில் பொன் விழாவையும் கொண்டாடி இறைவனுக்கு நன்றி நிறை உள்ளத்தை காணிக்கையாக்கினார்கள்.

**பணிவாழ்வு:**

எனக்கு உறுதி ஊட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு என்னும் இறைவாக்கில் உறுதிக்கொண்டு மயிலாப்பூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திண்டுக்கல், பெங்களூர், காஞ்சிபுரம், மதனப்பள்ளி, பட்டுக்கோட்டை, பல்லாவரம், கூடல்நகர், கைலாசபுரம் மொளச்சூர், பாடலூர், மேட்டுப்பட்டி ஆகிய இடங்களில் இளநிலை ஆசிரியையாகவும், முதுகலை பட்டதாரியாகவும் இருந்து பல பள்ளிகளில் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியையாகவும், ஆசிரியப் பயிற்சி பள்ளியின் முதல்வராகவும் இருந்து சிறப்பான முறையில் கல்விப்பணியாற்றியும், இல்லத்தலைவியாகவும் இருந்து மாணவச் செல்வங்களையும் சகோதரிகளையும் உருவாக்கி சாதனை படைத்தவர்கள்.

**நுண் ஆர்வலர்:**

இறைவன் இவர்க்களித்த அருமையான குரல், இசைமூலம் வெளிப்பட, இவர்கள் கர்நாடக இசையிலும், வீணை மீட்டுவதிலும், மேற்கத்திய இசையிலும் தேர்ச்சி பெற்று தனது 70 -ஆவது வயதிலும் தானும் பாடி பிறரையும் ஊக்குவித்தவர்கள். படைப்பாற்றலுடன் ஆலயத்தையும் இல்லத்தையும் அருமையாக அலங்கரிப்பதிலும், சிறந்த வாழ்வுக்குரிய கருத்துக்களைப் பிறருக்கு வழங்குவதிலும், சகோதரிகளுக்கும் ஏழைகளுக்கும் உதவி செய்வதில் ஆர்வமுள்ளவர்கள். இயற்கையை நேசித்து தோட்டக்கலையில் சிறந்து, குறிப்பாக மலர்களை வளர்த்து மகிழ்வதில் அவர்களுக்கு நிகர் அவர்களே!

பொறுமையில் பூமியாக, பொறுப்பினிலே பரிதியாக, மன்னித்து மறப்பதில் தாயாக, குறையாத பக்தி, அன்போடும் பண்போடும் ஓய்வின்றி உழைத்து, உளமாற பணி செய்து இறுதிவரை இறையன்பில் உறுதியாய் நின்று, 1967 –ல் அன்று **“ஆண்டவரே நீர் என்னை அழைத்தீர். இதோ வருகிறேன்’’** என்று துறவுநிலைப் பூண்டு, 57 ஆண்டுகள் துறவு வாழ்வு வாழ்ந்து இன்றும், **“ஆண்டவரே நீரே என்னை அழைக்கின்றீர் இதோ வருகிறேன்’’** என எம்மை விட்டு இறைவனடியை சிக்கெனப்பற்றியிருக்கும் சகோதரியே! இறைவனிடம் நம் சபைக்காகவும் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்காகவும் பரிந்து பேச சென்று வாருங்கள். ஆண்டவரின் கரங்களில் உமக்குரிய மணிமுடியைப் பெற்றுக்கொள்ளுங்கள் எனக்கூறி நாங்கள் எல்லோரும் உங்களை வழியனுப்புகிறோம்.

# என்றும் எம் நினைவில் நிற்கும் அம்மா நம்பிக்கை மேரி அவர்களுக்கு எம் கண்ணீர் அஞ்சலி!



பூவாய் பூமியில் திருவாளர் கசை, திருமதி சவரியம்மாள் என்பவருக்கு 9 -வது மகளாக திண்டுக்கல் மறைமாவட்டத்தில் அனுமந்தராயன் கோட்டை என்ற ஊரிலே 1949 -இல் பிறந்து பூபாளம் பாடி மகிழ துறவு தோட்டத்திலே 1991 –ல் பூத்த மலரே! அம்மா! மலர்ந்து கனி கொடுத்த மலரே! இன்று நீர் இல்லாமல் உம்மைத் தேடுகின்றோம். நட்ட இடத்தில் பூத்து குழுங்கு என்பதற்கு ஏற்ப புதுக்கோட்டை, மயிலை, நடுவட்டம், ஊட்டி, பெரும்பண்ணையூர், ஆத்துக்குடி, சேலம், மானம்பூச்சாவடி, விளார் கல்லூரி, லெகோதே இல்லம், மொளச்சூர், விவேக்நகர், வேளாங்கண்ணி மன்னார்குடி, புகுமுகத்துறவு இல்லம் இறுதியாக பூவிருந்தவல்லியிலே வாழ்ந்து எம் மனதிலும், மக்களின் மனதிலும் நீங்கா இடம் பெற்ற தாயே! பட்டங்கள் பெறவில்லை எனினும் சட்டங்கள் பற்றி தெரிந்து சவால் நிறைந்த இடத்திலும் அசால்ட்டா சென்று பேச்சால், பாசத்தால் எல்லா உள்ளங்களையும் கவர்ந்து வியக்க வைத்தாயே அம்மா!

வாழ்க்கை என்பது வாழும் வரை அல்ல, மனித இதயங்களில் வாழும் வரை என்ற புனித அன்னைத் தெரசாவின் வார்த்தைக்கு உருகொடுத்து வாழ்ந்து, சிறையில் இருப்பவரையும் உம் இதயத்தில் சிறைப்பிடித்து வைத்தாய் அம்மா! நிலையான அன்புக்கு பிரிவில்லை. சொல்லாத சொல்லுக்கு அர்த்தமில்லை. உண்மையான அன்புக்கு மரணம் இல்லை. உங்களைப் போல அரவணைக்க யாருண்டு? முடியாமல் நீங்கள் இருந்தாலும் கடமை மறந்ததில்லை. முடியாது என்ற வார்த்தையே இல்லை உங்கள் அகராதியில். உயிர் தந்த உறவே, உங்கள் சேவையை ஒரு வரியில் சொல்ல இயலுமா? அன்பிற்கு இலக்கணமாய் இப்பூமியில் பிரபஞ்சத்தில் வாழ்ந்து பண்புடைமையைக் காத்து, பக்குவமாய் வழிநடந்தீர். ஈகை பல செய்து பிறரை ஏற்றமுடன் வாழச் செய்தீர். ஏனோ இறைவன் இடையில் பறித்து விட்டான்.

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும், எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும், மண்விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கி சென்றாலும், கண்விட்டு மறையாமல் இறையோடு என்றும் இருப்பீர். புனித பயணம் செல்ல வேண்டும் என்று விரும்பினீர்கள். ஆனால் குறும் சகோதரிகளாகிய எங்களை விட்டுவிட்டு விரைவாக புனிதப்பயணம் காண விடைபெற்று விண்ணுலகம் நீங்கள் சென்றீர்களோ? தாங்கள் வாழ்ந்த அறையையே கோவிலாக வைத்திருப்பீர்கள். கம்பீரமான தோற்றமும், கனீர் என்ற குரலும் கடைசிவரை குறையவில்லை. எப்போதும் இறைபாதம் சென்று செபம் செய்யும் நீங்கள் நிரந்தரமாய் இறைபாதம் செல்ல இருந்தீர்களோ!

நீங்கள் இதமாக பேசிய வார்த்தைகள், சிரிக்க வைத்த நேரங்கள், செய்த உதவிகள், புரிதலான பாசம், பிறந்த வீட்டிற்கும், அழைத்த துறவு வாழ்வுக்கும் நல்லவர்களாக வாழ்ந்த உம் அன்பைத் தோற்கடிக்கும் மற்றொரு அன்பை உலகில் யாரும் தரப்போவதில்லையே! மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்தாலும், உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் இருந்து ஒருபோதும் மறையாது, உங்களுக்காய் என்றும் நாங்கள் செபிக்கிறோம்.

# இறந்தவர்களுக்காகச் செபிப்போம்

| வ. எண் | சபை எண் | சகோதரியின் பெயர் | உறவு முறை | இறந்தவரின் பெயர் | தேதி |
|---|---|---|---|---|---|
| 01. | 0878 | சகோ. ஜான்சி ராணி | தங்கை | திருமதி நம்பிக்கை மேரி | 27.09.2022 |
| 02. | 0960 | சகோ. பௌலின் | அக்கா கணவர் | திரு. அருளானந்து சாமி | 07.10.2022 |
| 03. | 0702 | சகோ. நேச சௌந்தரம் | அத்தை | திருமதி.ஜெயமேரி | 11.10.2022 |
| 04. | 1228 | சகோ. சேவியர் லிட்டில் தெரஸ் | பெரியம்மா | சூசையம்மாள் | 14.10.2022 |
| 05. | 1301 | சகோ. ஜென்ம ராக்கின் | சித்தப்பா | திரு. ஆலெக்ஸ் | 14.10.2022 |
| 06. | 0766 | சகோ. சூசைமேரி | அக்கா மருமகன் | திரு. ஆல்பர்ட் | 16.10.2022 |
| 07. | 1090 | சகோ. பெர்னி | தங்கை கணவர் | திரு. இராபர்ட் | 22.10.2022 |
| 08. | 0787 | சகோ. ஜோஸ்பின்மேரி | அப்பா | திரு. அந்தோணி | 28.10.2022 |
| 09. | 0941 | சகோ. லியோனா அமலி | அத்தை | ஆஞ்லிக்கா மேரி | 28.10.2022 |
| 10. | 0602 | சகோ. லீமாரோஸ் ஜெயசீலி | தங்கை மகன | திரு. ஆண்ரு | 30.10.2022 |
| 11. | 0824 | சகோ. ஜோஸ்பின் தெரஸா ராணி | அக்கா கணவர் | திரு.அந்தோனி மைக்கிள் ஜெரோம் | 10.11.2022 |
| 12. | 1393 | சகோ. மைக்கேல் ஆரோக்கிய சபீனா | பெரியப்பா | திரு.அந்தோனி மைக்கிள் ஜெரோம் | 10.11.2022 |
| 13. | 0766 | சகோ. சூசைமேரி | அக்கா | மரிய ரோஸ் | 11.11.2022 |
| 14. | 1153 | சகோ. நம்பிக்கை மேரி | அம்மா | திருமதி.எலிசபெத்ராணி | 11.11.2022 |
| 15. | 1358 | சகோ. கரோலின் மேரி | அண்ணன் (பெரியப்பா மகன்) | திரு. சகாயராஜ் | 11.11.2022 |
| 16. | 0702 | சகோ. நேச சௌந்தரம் | அண்ணி | திருமதி.சகாய மேரி | 15.11.2022 |
| 17. | 0812 | சகோ. மார்கிரேட் எழிலரசி | அம்மா | திருமதி. மிக்கேளம்மாள் | 26.11.2022 |
| 18. | 1373 | சகோ. சாந்தி | மாமா | திரு.அடைக்கல தாஸ் | 29.11.2022 |
| 19. | 1383 | சகோ. பெனினா | சித்தப்பா | திரு.பீட்டர் | 08.12.2022 |
| 20. | 1122 | சகோ. புதுமை ஜீலியட் ராணி | பெரியம்மா | திருமதி.சின்னம்மாள் | 14.12.2022 |
| 21. | 1383 | சகோ. பெனினா | பெரியப்பா | பெரிய நாயக தாஸ் | 31.12.2022 |
| 22. | 0639 | சகோ. ஜெபமாலை | அக்கா கணவர் | திரு.ராயர் | 06.01.2023 |
| 23. | 1316 | சகோ. லில்லி புஷ்பம் மலர் | மாமா | சகோ.தோமினிக் சேவியர் | 10.01.2023 |
| 24. | 0985 | சகோ. ஜோஸ்பின் மகதலேன் | மாமா | திரு.இருதயராஜ் | 11.01.2023 |


# இறந்தவர்களுக்காகச் செபிப்போம்

| வ. எண் | சபை எண் | சகோதரியின் பெயர் | உறவு முறை | இறந்தவரின் பெயர் | தேதி |
|---|---|---|---|---|---|
| 24. | 0667 | சகோ. கரோலின் | தங்கை | திருமதி. ஜெசிந்தா | 13.01.2023 |
| 25. | 1240 | சகோ. டோமினிக்கா கரோலின் சான்டி | அம்மா | திருமதி. பிரான்சிஸ் மேரி | 14.01.2023 |
| 26. | 0611 | சகோ. தர்சில்லா | தங்கை கணவர் | திரு. ஜான் | 15.01.2023 |
| 27. | 0996 | சகோ. அல்போன்சா | தங்கை கணவர் | திரு. ஆபேல் | 16.01.2023 |
| 28. | 0399 | சகோ. நிக்கோலின் | தங்கை | மரகதமேரி | 16.01.2023 |
| 29. | 0986 | சகோ. குழந்தை | சித்தி | சின்னம்மாள் | 19.01.2023 |
| 30. | 0959 | சகோ. நிக்கோலின் ஸ்டெல்லா | தம்பி | திரு. ஆரோக்கிய ராஜ் | 20.01.2023 |
| 31. | 0991 | சகோ. சகாய மேரி | அண்ணன் மருமகன் | திரு. டெரன்ஸ் | 20.01.2023 |
| 32. | 0837 | சகோ. குழந்தை மேரி | அண்ணி | திருமதி. பாக்கிய மேரி | 21.01.2023 |
| 33. | 0845 | சகோ. இருதயமேரி | அத்தை | ஆரோக்கியமேரி | 31.01.2023 |
| 34. | 0377 | சகோ. ஜோக்கின்னா | அண்ணி | கேத்ரின் ஜூலியட் | 05.02.2023 |
| 35. | 1171 | சகோ. சகாய பிரேமா | மாமா | திரு. சலேத் | 06.02.2023 |
| 36. | 1009 | சகோ. ஆரோக்கிய மேரி | சித்தி | திருமதி. குழந்தையம்மாள் | 12.02.2023 |
| 37. | 0999 | சகோ. எலிசபெத் ராணி | அண்ணன் | அருட்பணி. அருளானந்து | 17.02.2023 |
| 38. | 0697 | சகோ. செலஸ்டின் | மாமா | திரு. சந்தனசாமி | 19.02.2023 |
| 39. | 0948 | சகோ. சகாயமேரி | அண்ணன் | திரு. ஆரோக்கியசாமி | 22.02.2023 |
| 40. | 1034 | சகோ. ஜோஸ்பின் மேரி (சாந்தி) | அண்ணி | திருமதி. விக்டோரியா | 22.02.2023 |
| 41. | 1302 | சகோ. ஞான ஆரோக்கிய செல்வி | சித்தப்பா | திரு. ரிவிஸ் ஆரோக்கியம் | 02.03.2023 |
| 42. | 0655 | சகோ. அடைக்கலமேரி | அண்ணி | திருமதி. சாந்தி | 12.03.2023 |
| 43. | 0859 | சகோ. ஜெரால்டு லூசியா ஜாக்குலின் | மாமா | திரு. இருதயராஜ் | 21.03.2023 |
| 44. | 1304 | சகோ. ஹெலன் விஜி | அண்ணன் | திரு. சகாயராஜ் | 26.03.2023 |
| 45. | 1316 | சகோ. லில்லி புஷ்பம் மலர் | மாமா | திரு. ஆல்பர்ட் | 29.03.2023 |
| 46. | 1310 | சகோ. ஜான்மேரி | அம்மாச்சி | திருமதி. ஜெயமேரி | 07.04.2023 |
| 47. | 607 | சகோ. அன்னை லூர்துமேரி | தங்கை கணவர் | திரு. பங்கராஸ் | 20.04.2023 |

# சகோதரிகளின் படைப்புகள்

## கவிதைகள்





# இறைவனைக் கண்டேன்!

இயற்கையின் படைப்பில்
இறைவனைக் கண்டேன்!
ஈடில்லா ஆனந்தம் மனதில் கொண்டேன்!
என்னில் நீ கலந்தாய் எனக்குள் நீ உறைந்தாய்!
உன்னில் என்னைக் கண்டேன்!
உன் விசித்திர அழகினால்
சரித்திரம் படைக்கிறாய்!
இரவிலும் நீ! பகலிலும் நீ!
நிழல் தருவதும் நீ! துயில் தருவதும் நீ!
பசி தீர்ப்பதும் நீ! பயமுறுத்துவதும் நீ!
எடுத்து எடுத்து அழிக்கின்றோம் உம்மை
அடுத்து அடுத்து மன்னிக்கின்றாய் எம்மை!
கடற்கரையில் நான் கலங்கி நின்றேன்
அலைகளைக் கைகளாக்கி ஆறுதல் சொன்னாய்!
நெடுமரங்களாக நின்று நீதிகளைச் சொன்னாய்!
தாயாகவும் மாறி தன்னம்பிக்கையும் தந்தாய்!
மண்ணில் வருகின்றது உன் மணம்
அதனால் மயங்கித் தெளிகிறது என் மனம்!
கடலிடம் சொல்லுகிறாய் ஓர் சேதி
அதைக் கொண்டு சேர்ப்பது உன்னில் பாதி!
பூங்காற்றிலும் உன்னைக் கண்டேன்
குழல் ஓசையிலும் உன்னைக் கண்டேன்!
எத்தனை எத்தனை இடர்வரினும்
உன்னைப் பார்க்கையில்
பறவையாய் பறக்கக் கண்டேன்!
கடலில் உப்பாய் உன்னைக் கண்டேன்
கலங்கரை விளக்காய் உன்னைக் கொண்டேன்!
துள்ளித் தாவுகிறது மான்குட்டி - அதை
தாங்கிக்கொள்வது உன் மன திருப்தி!
இயற்கையே! உன் சுவாசக் காற்றால்
என் வாழ்வு சுவாசம் பெற
உன் சேயான புவியோ
என்றென்றும் உன் மடி தவழ
வான் முகில் பொழிய
வயல்வெளி செழிக்க
நீயே வரம் தருவாயே
அண்டம் உள்ள வரை....

இயற்கையின் நட்பில்,
சகோ. சூசை மேரி (950).

# ஓ பிரபஞ்சமே!

உன்னை அறிந்துகொள்ள முடியாத
என் அறிவோ பஞ்ச அறிவு!
அதற்காக ஓடிவந்தேன்
உன்னை அறிய தஞ்சமாய்!
அருள் புரிவாயோ ஓ பிரபஞ்சமே!

சகோ. அக்ஸிலியா (1503).

# ஐம்பூதங்கள்

நிலம் என்னும் தோட்டத்திலே
நீர் ஊற்றும் செடிகளிலே
காற்று மெல்ல வீசுகையிலே
ஆகாயம் அசைவாடி அசைவாடி
நெருப்பு அதன்மேல் ஒளிவீசுகிறது

சகோ. பெமினா (1439).



# இயற்கை!

இயற்கையே உன் அருமை தெரிந்திடத்தானோ
உன் பெயரை எம் நாவினிலே உச்சரிக்க
பிரபஞ்ச பேரன்பாய் வந்தாயோ!
கண்முன்னே ஆறாய் ஓடிடும் ஆசிரியை நீ!
புல் பூண்டுகளில் மருத்துவம் தந்திடும் மருந்தாளன் நீ!
விதைக்குள் ஒளிந்திருக்கும் வீரியத்தைக்
கண்டுபிடிக்கும் காவல்துறை நீ!
வாழ்க்கையைக் குளிர்விக்கும் குளிர்சாதனம் நீ!
எல்லாப் பருவ காலங்களையும் பக்குவமாய்
பரிமாறும் அன்னை நீ!
மலைமீது என்னை அமரச் செய்து
மணிமகுடம் சூட்டிடும் நல் தந்தை நீ!
என்னை ஊஞ்சலில் ஆட்டிவிடும்
தோழியைப் போல காற்றினில் மிதக்க விடும்
மென்மையான உரசல் நீ!
கண்முன்னே இருக்கும் உன்னை - என்
கண்முன்னே இருக்கும் உன்னை
கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டேன்
சலனத்தோடு சலித்துக் கொண்டு
ஜன்னல் அருகே நின்றிடும் போதேல்லாம்
புத்துயிர் தந்து என்னைப் புதுப்படைப்பாக்கினாய்!
உன் ஆற்றலை எனக்குப் பரிசாய் அளித்து
எனக்குள் உன்னைப் புதைத்துக் கொண்டாய்
மிகப் பெரிய அதிசயங்கள் நிகழ்ந்திடும்
அற்புதம் உன்னில் இருந்த போதும்
சற்றும் அலட்டிக் கொள்ளாமல்
தான் என்ற கர்வம் இல்லாமல் தன்னடக்கத்தோடு
நீ நடந்துகொள்ளும் பக்குவத்தை எண்ணி
நான் வாயடைத்து நிற்கிறேன்!
உன்னிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய
பாடங்கள் ஏராளம் என்று உணர்ந்து கொண்டேன்!
இயற்கையே உனக்கு நன்றி! - ஏனென்றால்
எனக்கே தெரியாமல் என்னை
நீ இயக்கிக் கொண்டிருப்பதற்காய்!

சகோ. அ. தீபா (1326).

# பிரபஞ்சமே! பேரன்புதானே!

பிரபஞ்சமே! பேரன்புதானே! பிரபஞ்சமே! பேரன்புதானே!
பிரபஞ்சமே உனது பேரன்பை உணர ஓடினேன்... ஓடினேன்...
மலையின் உச்சிக்கே ஓடினேன்.
காடு மேடு பள்ளம் என்று சுற்றித் திரிந்தேன்
எங்கும் எதிலும் உன்னைக் காணாது சோர்வுற்றேன்
அப்போது... அப்போது.....
என் மேனியைத் தழுவும் காற்றாய் வந்தாய்
என் தாகத்தைத் தணிக்கும் மழையாய் வந்தாய்
என் உடல் பாரத்தைத் தாங்கும் நிலமாய் வந்தாய்
எனக்காக தனிப்பாதை அமைக்கும் வானவில்லாய் வந்தாய்
என் துணை நிற்கும் சந்திரனாய் வந்தாய்
எனக்கு வழிகாட்டும் விண்மீனாய் வந்தாய்
என் குளிர் போக்கும் சூரிய வெளிச்சமாய் வந்தாய்
என் பசியாற்றும் காயாய், கனியாய் வந்தாய்
இவ்வாறு என்னுள் இருக்கும்
உன்னைக் கண்டு என்னிலை உணர்ந்தேன்
நீங்கள்தான் பிரபஞ்சங்களோ
நீங்கள் காட்டும் அன்புதான் பேரன்போ என வியந்தேன்.
ஓ.... பிரபஞ்சமே... பிரபஞ்சமே...
இனி என்னைத் தேடி ஓட மாட்டேன்
என்னுள் இருக்கும் உன்னைக் கண்டு மகிழ்வேன்
ஆம்... என்னுள் இருக்கும் உன்னைக் கண்டு மகிழ்வேன்
இனி பிரபஞ்சமே நம்பிக்கை தானே....
இனி பிரபஞ்சமே நம்பிக்கை தானே....

சகோ. நம்பிக்கை மேரி (1372).

# வாழ வரம் தா...

கற்பனைக்கு எட்டாத பிரபஞ்சமே நான்
கற்பனை உலகில் வாழாமல்
நேர்மறையான எண்ணத்தோடு
வாழ வரம் தா!
கடந்த காலம் கடந்து
நிகழ்காலத்தில் வாழ வரம் தா!
என்னோடு பயணிக்கும் நீ
உன்னோடு உறவாட வரம் தா!
உன்னில் என்னையும்
என்னில் உன்னையும் காண வரம் தா!



சகோ. ஜெசிமலர் (1309).

# பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து வழி நடக்க...

அகிலத்தைப் படைத்த ஆண்டவா போற்றி!
பேரன்பில் இணைய எம்மை அழைத்தவா போற்றி!
உன்னில் நான் என்னில் நீ என்றாய் பேரன்பே!
அண்டத்தில் உள்ளது பிண்டம் என்றாய்!
பிண்டத்தில் உள்ளது அண்டம் என்றாய்!
பிண்டமாகிய நான் அண்டத்தை அழிக்கத் துடித்தேனே!
என்னை மன்னிப்பாயா பேரன்பே!
ஓ! பிரபஞ்சப் பேரன்பே!
உன்னுள் ஊன்றி வாழ ஊட்டிக்கு வந்தேனே!
டெலகிராமில் (telegram) தொடர்பு கொள்ள
இயலாமல் டெல்லிக்கு வந்தேனே!
உன் கொடை வள்ளலைக் காண கொடைக்கானல் வந்தேனே!
உன்னுள் கலந்துரையாட கல்கத்தா வந்தேனே!
ஓ! பிரபஞ்சப் பேரன்பே!
நீ என்னுள்ளே இருக்கின்றாய் என்றாயே!
என்னிடத்தில் உன்னைக் காண மறந்தேனே!
பேரன்பே! பேரன்பே! பேரன்பே!
உன்னில் நான் இணைய
என் உயிராய் வருவாய் பிரபஞ்சப் பேரன்பே!

சகோ. சிறிய புஷ்பம் சின்ன ராணி (1350).

# அழகிய பிரபஞ்சம்



இறையன்பின் வெளிப்பாடாம்
மானுடம் அனைத்தின் ஜீவ ஊற்றாம்
பிரம்மாண்டத்தின் உச்சநிலையாம்
ஞானத்தின் திறவுகோலாம்
நட்சத்திரங்களின் சங்கமமாம்
நிலவின் அதிசய அழகாம்
சூரியனின் தன்னிகரற்ற நிலையாம்
பூமியின் பொன் மகுடமாம்
அது என்ன? அது என்ன?
அதுதான் அழகிய பிரபஞ்சம்.

சகோ. அருள் ஜென்சி (1493).

# யாரிடம் கற்றுக்கொண்டாய் நீ!

சென்னை மாநிலத் தலைமையகம்
அரங்கிலும், அறையிலும்
எங்கு நோக்கினும் எதிரொலிக்கும்
ஒற்றைச் சொல் **பிரபஞ்சம்**
இது கணப்பொழுதிலோ
கண் அசைக்கும் நேரத்திலோ உருவானது அல்ல.
காலதேவனின் சரியான கணிப்பில் கட்டப்பட்டது.
பிரபஞ்சமே!
இறைவன் உன்னை உருவாக்கிய
முதல் நாளில் இருந்ததுபோல்
இன்று நீ இல்லை.
உன்னில் மாற்றத்தை வரவேற்றுக்கொண்டே இருக்கின்றாய்
உன் எல்லைக்கும் முடிவில்லை
உன் இயக்கத்திற்கும் ஓய்வில்லை.
ஓரறிவு ஈரறிவு என்று ஐந்தறிவு
உயிரினம் வரை தத்தம் வளர்ச்சியில்
தேர்ச்சி நிலையை எட்டியுள்ளது.
ஆறறிவு பெற்ற நான் மட்டும் இன்னும்
ஆத்திச்சூடியில் கூட தேர்ச்சி பெறவில்லை.
ஆக்க சக்தியில் நீ
உன்னை அழிக்கும் புத்தியில் நான்
இறைவனின் பேரன்பால் உருவான நீ
உன் இலட்சியப் போக்கில் பின்வாங்குவதில்லை - ஆனால்
என் அலட்சியத்தால் உன்னை திசைமாற்றி விடுகின்றேன்.
நீயும், நானும் ஒரே கரத்தினால் உருவாக்கப்பட்டோம - ஆனால்
உனக்கும் எனக்கும் எத்துணை மாறுபாடுகள்.....
சூரியனாக ஒளிர்ந்தாலும்
பூமியாக சுற்றினாலும்
உன் சுழலுதலில் மாற்றமில்லை - ஆனால்
ஒருமுறைக்கு மறுமுறை
என்னிடம் கேள்வி கேட்டால்
என் வார்த்தைகளில் மாற்றம் தென்படுகின்றது.
**யாரிடம் கற்றுக் கொண்டாய் நீ?**
**உன் இயக்கத்தில் மாறுபடாமல் இருக்க...**
காலையில் வெளிச்சமாய்
இரவில் குளிர்ச்சியாய்
மாறிமாறி வருகின்றாய்.
உன் மாற்றத்தில் கூடுதல் குறைவு ஏற்பட்டால்
வசைபாடும் மக்களின் வார்த்தைகளைக் கவனிக்காமல்
உன்னைப் படைத்ததன் நோக்கத்தை நிறைவேற்றுகின்றாய்.

ஆனால்.... நான்
என் செவியில்படும் வார்த்தைகளுக்கு முன்னுரிமை அளித்து
பார்வையிலே வேற்றுமை கொண்டு
பாகுபாட்டுடன் வாழ்கின்றேன்.....
**யாரிடம் கற்றுக் கொண்டாய் நீ!**
**செவ்வனே பணி செய்ய!**

விழும் அருவி நடக்கும் ஆறு
சேர்ந்திருக்கும் குளம்
தெளிவான உன்னை
களங்கப்படுத்தியது மனித இனம்.
சுத்தமான உன்னை அசுத்தப்படுத்திய போதும்
ஆத்திரம் கொள்ளாமல் இருக்கின்றாய்
**யாரிடம் கற்றுக்கொண்டாய் நீ!**
**எப்போதும் பொறுமையாய் இருக்க!**

மெல்லிய தென்றல், வீசும் காற்று,
சுழட்டும் சூறாவளி...
உயிர்மூச்சான உன்னை
கொளுத்திப் போட்டு மாசுபடுத்தியது மனிதக் கரங்கள்
ஓசோனில் ஓட்டை விழும் அளவிற்கு
உயிர்வளியான உன்னைக் காயப்படுத்தியபோதும்
கேட்காமலே கொடுத்துக்கொண்டிருக்கிறாய்
**யாரிடம் கற்றுக்கொண்டாய் நீ**
**தேவையறிந்து செயல்படுவதற்கு!**

உன்னிடம் இருந்து நானும் கற்றுக்கொண்டிருக்கின்றேன்
உன்னைப் போல் வாழ்வதற்கு
இறைவனின் பேரன்பை உணர்வதற்கு.....

**சகோ. பியூலா (1403).**

# பிரபஞ்சமே நீ யார்???

பிரபஞ்சமே நீ யார் எனக் கேட்டேன்
நீ சொன்னாய் நான்தான்
நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு
என்றாய் நீ!
அதற்கு மேலாய்
நிலம் சொன்னது நீ வாழும் இடம்தான் நான்!
நீர் - உன்னைக் குளிர்விப்பது நான்!
காற்று - உன்னில் சுவாசமாய் கலந்திருப்பது நான்!
ஆகாயம் - உனக்கு மேல் அகல விரிந்து உன்னைக் காப்பது நான்!
நெருப்பு - தீமையைச் சுட்டெரித்து உன்னை தூய்மையாக்குவது நான்!
ஆம்! நீயே நான்!
உன்னில் நான்! உனக்குள் நான்!!!

**சகோ. ஜீலி (1247),**
**கோவிலானூர்.**

# பிரபஞ்சமே நீ தந்த கொடை!

அன்பினை அகலமாக்க ஆகாயம் போல வந்தாய் நீ
என் பிரபஞ்சமே உன்னை என்னவென்று சொல்வது
நான் காலை கண் விழிப்பதும் உன் செயலே
நான் நடமாடும் இந்த பூமி நீ தந்த கொடை
நான் சுவாசிக்கும் காற்று நீ தந்த உன் உயிர் மூச்சு
நான் பார்க்கும் ஒவ்வொரு காட்சியும் நீ நிகழ்த்தும்
பல விந்தைகள் அப்பப்பா என்ன அதிசயம்...
காலையிலே உதிக்கும் சூரியன் போல நீ வந்தாய்
மொட்டாக நான் செடியில் அமர்ந்திருந்தாலும்
வாசம் தரும் மலராக நீ வந்தாயே
உன் மெல்லியக் குரலைக் கேட்டேன்
நான் என்னையே மறந்தேன் இப்பிரபஞ்சமே நீ தந்த கொடை
அதிலே நான் வாழும் சிறு பறவை
என்னை ஏற்பாயா உனதாக என்னை மாற்றுவாயா?

சகோ. அமலோற்பவ தீபலா (1260).

# பிரபஞ்சமே! பிரபஞ்சமே!

பிரபஞ்சமே நான் உன்னைப் பார்க்க நினைத்தேன்
என் ஊனக்கண்ணால் அல்ல.... அகக்கண்ணால்
அகக்கண்ணால் பார்த்த போது தான்
நீ என்னுள்ளேயே உரைகின்றாய் என்று உணர்ந்தேன்.
வானாக மண்ணாக! ஊனாக உடலாக!
மேகமாக மழையாக! காற்றாக கடலாக!
தென்றலாக புயலாக! கண்ணாக கண்ணீராக!
புன்னகையாக வெறுப்பாக!
பிறப்பாக இறப்பாக இறைவா!
நீ என்னில் உறைகிறாய் என்று அறிந்தேன்.
நான் நீ! நீதான் நான். அது தான் பிரபஞ்சம்.

சகோ. ஜெய மேரி (1246),
பூக்காரத்தெரு.

# பிரபஞ்சம் என்னும் பேரழகி!

இறைவன் அவளைப் படைத்த நாள் முதல் இன்றுவரை
ஓய்வெடுக்காத தியாகி...
இனம், மதம், மொழியென பாகுபாடின்றி
அனைத்து உயிர்வாழ் இனங்களும் வாழ - தம்
உயிர்மூச்சைத் தரும் உன்னதமானவள்...
எந்தவிதமான அழகு பொருட்களையும் உபயோகிக்காத
அவளின் அழகு பேரழகு....

# நீயாக நான்!

நிலம் போல வந்தாய் நீ!
நீர் அருவியாய் என் மனதில் குடிகொண்டாய் நீ!
உன் மெல்லிய காற்றின் அசைவில் எனை அணைத்தாய்
ஆகாயம் போல விரிந்த உன் அன்பை எனக்குத் தந்தாய்
என்னே அழகு உன் சுட்டெரிக்கும் நெருப்பின் அழகு
ஓ! பிரபஞ்சமே என் உயிர் மூச்சே
என்னே அழகு! உன் அழகு!
இயற்கை கொஞ்சும் உன் பேரழகை
நான் என்னவென்று சொல்வது
சொல்ல மொழி இல்லையே
வியக்க வைக்கும் உன் விந்தைகளை
உன் சலனமில்லா நிலைகண்டு நான் வியக்கின்றேன்.
விந்தைகள் புரியும் இவ்வுலகில் என்னையும்
நீ வேண்டும் என அழைத்தாயோ!
சற்றும் அலட்டிக் கொள்ளாத உன் நிலைக்கண்டு
என் மனம் நெகிழ்கின்றது.
நிலவு போல உன் முகம்
மௌனம் போல உன் சிரிப்பு!
எங்கு பார்த்தாலும் உன் இறை சக்தி! அடடடா.....
கடையெழு வள்ளல்கள் வாழ்ந்த உலகம்
பார் போற்றும் உன் பேரன்பு!
நீ இல்லை என்றால் நான் இல்லை
என் உயிரே என் பிரபஞ்சமே நீ வாழ்க!
என் தமிழ் மண்ணே உன்னை வணங்குகிறேன்.

சகோ. சுஜாதா மேரி (1290).

# பிரமாண்டத்தில் உருவான பிரபஞ்சமே!

பிரமாண்டத்தில் உருவான பிரபஞ்சமே
என்னிலே பிரமிப்பாய் அமைந்த பிரபஞ்சமே
உன்னைக் காணும் போது வியந்து நிற்பது ஏனோ!
நீ என்னிலே கற்றுத்தந்த பாடங்கள் ஏராளம்! ஏராளம்!
நன்றி கூறும் மனநிலையைக் கற்றுத் தந்தாய்!
பொறுமை என்னும் குணத்தைக் கற்றுத் தந்தாய்!
தூய்மை என்னும் பண்பைக் கற்றுத் தந்தாய்!
தீமைகளைச் சுட்டெரிக்கும் பகைவனாய் இருக்கின்றாய்!
என்னிலே கலந்த உன்னைப் போற்றுகின்றேன்.
உன்னோடு இயைந்து இணைந்து வாழக் கற்றுக்கொண்டேன்.
பரந்து விரிந்த பாரிலே அன்பு செய்யக் கற்றுக்கொண்டேன்.

கற்றுத் தந்த பாடங்களை வாழ்வாக்க அருள் புரிந்த பிரபஞ்சமே!
உமக்கு நன்றி! நன்றி!
எனது மூச்சிலும், பேச்சிலும் கலந்து நிற்கும்
உன்னை என்னவென்று பாராட்டுவது
இறைவார்த்தையை வாழ்வாக்கி வாழ அருள் புரிந்த பிரபஞ்சமே
பேரானந்தத்தைத் தந்தாயே நன்றி! நன்றி!
எல்லாமுமாகி என்னுள் கலந்து நின்றாயே
உன்னை நான் மறவேன்! மறவேன்!

**சகோ. மேரி அமலி (1402).**

# பிரபஞ்சமே! என் உடன்பிறப்பே!



சிறு தீப்பிழம்பாய் பிறப்பெடுத்து
பரிணாம வளர்ச்சி பெற்று
காணத் துடிப்போரின் கண்களில் படாது
கரை காணா தூரம் சென்று
எல்லைகள் அற்று
எண்ணில்லா அற்புதங்கள் கொண்டு
விஞ்ஞானிகளும், மெஞ்ஞானிகளும்
வியக்கும் வண்ணம் விந்தைக்குரியவளாய்
விரிவடைவதில் வீரியம் கொண்டு
புத்தம் புதிதாய் புதுப்பித்தவளாய்
சலிப்பில்லாமல் மாற்றம் கொணர்ந்தவளாய்
தன்னலம் அகற்றி பிறர் நலம் பேணுபவளாய்
பொறுமையின் சிகரமாய்
மானிடரின் கற்பனைக்கு எட்டாத
கொள்ளை அழகு கொண்ட நீ
படைத்தவனின் நோக்கம் அறிந்து
பரமனின் பேரன்பினை பகிர்ந்து
ஒருங்கிணைந்து ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு
என்றும் உயிரோட்டமாய் இருக்கும் பிரபஞ்சமே!
உன்னைக் காணும்போது
படைக்கப்பட்டதன் நோக்கம் மறந்த
என் நிலை உணர்ந்தேன்.
வழிகாட்டியமைக்கு நன்றி!
பிரபஞ்சமே! என் உடன்பிறப்பே!
உம்மைப் போல நானும் வாழ ஆசிக்கிறேன்.

**சகோ. அமல அனுசியா ராணி (1409).**

# பிரபஞ்சத்தின் வேண்டுகோள்

பிரபஞ்சமே என்னே உன் அதிசயம்!
கடவுளின் படைப்புகளில் மிகப்பெரிய நிகரற்ற படைப்பு நீ
உன்னை நினைத்து அற்ப மனிதனாகிய
நான் வியந்து நிற்கிறேன்!
பிரபஞ்சமே நீ யார்? நீ எங்கிருக்கிறாய் சொல்! நீ
உயர்ந்த மலையா? அல்லது அருவியாய் ஊற்றும் நீரா?
மென்மையாய் வீசும் தென்றலா?
அல்லது விண்மீன் தோன்றும் ஆகாயமா?
தீமையைச் சுட்டெரிக்கும் நெருப்பா?
சொல் பிரபஞ்சமே சொல்!
இதில் எது நீ? சொல் பிரபஞ்சமே சொல்!

மானிடா கேள்! மானிடா நீ சொன்ன அனைத்துமே
ஒருங்கிணைந்து செயல்படுவதுதான் பிரபஞ்சமே
ஆம்! ஐம்பூதங்களை உள்ளடக்கியதுதான் பிரபஞ்சம்
மானிடா! எனக்கு ஒரு உதவி செய்வாயா?
என்ன பிரபஞ்சமே சொல் செய்கிறேன்
நாங்கள் எவ்வாறு ஒருங்கிணைந்து
செயல்பட்டு வளமையாக்குகிறோமோ
அதே போன்று வேற்றுமை பாராமல்
ஒற்றுமையோடு வாழ முடியுமா?
ஆம்! பிரபஞ்சமே அடைக்கல அன்னை சபையில்
பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து
வழிநடப்போம் பிரபஞ்சமே... வழிநடப்போம் பிரபஞ்சமே...

**சகோ. சான்டிலா (1367).**

# இறைவனே பிரபஞ்சம்!

இயற்கையைப் படைத்த என் இறைவா!
என் இதயத்தில் குடிகொள்ள நீ வா!
பஞ்ச பூதத்தைப் படைத்த என் இறைவா!
என் வாழ்க்கைப் பயணத்தில்
துணையாய் நீ வா!
ஆகாயத்தைப் படைத்த என் இறைவா!
என் ஆன்மாவைக் காத்திட நீ வா!
நிலத்தினைப் படைத்த என் இறைவா!
என் நிலைதனை உயர்த்திட நீ வா!
நெருப்பினை உருவாக்கிய என் இறைவா!
என் நெஞ்சினில் தங்கிட நீ வா!
நீரினை ஊற்றெடுக்கச் செய்த என் இறைவா!
என் உயிர் ஊற்றாய் நீ வா!
காற்றினில் கலந்த என் இறைவா!
என் சுவாசத்தில் கலந்திட நீ வா!
எங்கும் வியப்பு! எதிலும் வியப்பு!
காணும் இடமெல்லாம் உன் படைப்பு!
கண்டறிய முடியா உன் சிறப்பு!
இதுவே பிரபஞ்சப் பேரன்பு!

**சகோ. மலர் (1316),**
**புதுப்பட்டினம்.**

# பிரபஞ்சப் பேரன்பில் இணைய...

அன்புக் கனலாய் அகிலம் ஆளும் பிரபஞ்சமே
அன்பின் வழியில் நடக்க சக்தி தரும் பேரின்ப இயக்கமே
அறிவைக் கடந்த ஞானமாய் விளங்கும் பிரபஞ்சமே
அதிசயங்கள் நிறைந்தது பேரின்ப இயக்கமே
ஆற்றலை உணர்த்தும் பிரபஞ்சமே
ஆளுமையோடு வழிநடத்துவது பேரின்ப இயக்கமே
இறைவனின் இருத்தலை உணர்த்தும் பிரபஞ்சமே
இயற்கையோடு இணைந்து வாழ்வது பேரின்ப இயக்கமே
ஈர்ப்பு விசையோடு பிண்டத்தை உயிர்ப்பிப்பது பிரபஞ்சமே
ஈகையோடு வாழச் செய்வது பேரின்ப இயக்கமே
உலகத்தை இயக்குவது பிரபஞ்சமே - அதில்
உயிரோட்டமாய் செயல்படுவது பேரின்ப இயக்கமே
ஊடுருவிச் சென்று மனதை மாற்றுவது பிரபஞ்சமே
ஊற்றாய் மாறி அருளை நிரப்புவதும் பேரின்ப இயக்கமே
எல்லையில்லா பேரன்பை உணர்த்தும் பிரபஞ்சமே
எதிர்மறை எண்ணங்களை மாற்றுவதும் பேரின்ப இயக்கமே
ஏணியாய் மாறி மானிடர்க்கு உதவுவதும் பிரபஞ்சமே
ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதும் பேரின்ப இயக்கமே
ஐம்பூதங்களை உள்ளடக்கியது பிரபஞ்சமே - அதில்
அண்டம் பிண்டத்திலும் பிண்டம் அண்டத்திலும்
இணைவது பேரின்ப இயக்கமே
ஒன்றாய் வாழச் செய்வது பிரபஞ்சமே - அதில்
ஓர் இயக்கமாய் செயல்படுவது பேரின்ப இயக்கமே
ஆம் இந்தப் பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து
வழிநடப்போம், பயணிப்போம்....

சகோ. சாந்தி (1373),
போரூர்.

# அழகு

**இறைவா!**
பார்க்கும் அனைத்திலும் உன் முகம் கண்டேன்
உன் அழகை புகழ வார்த்தையில்லை
மனித மனங்களின் ஆழத்தை அறிந்த உன்னை
இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த உன்னை
பறக்கும் பறவைக்கு உணவளிக்கும் உன்னை
ஐம்பூதங்களை உருவாக்கி வழிநடத்தும் உன்னை
விந்தைமிகு இயற்கையைப் படைத்த உன்னை
உன் அழகை எப்படி வாழ்த்துவது?
இறைவா! நான் எப்படி வாழ்த்துவது?

சகோ. அருள் பாரதி (1437).

# பூமிக்கு அப்பால்...

உன் மனக்கண்ணைத் திறந்து பார்
பூமிக்கு அப்பாலும் கடவுளின் கலைநயம் பரந்துள்ளது.
அண்ட சராசரத்தின் செயல்பாடுகளும்
கோள்களின் ஒழுங்குமுறையும்
பல வண்ணங்களில் மறைந்து கிடக்கும் விண் கற்களும்
மர்மங்களைத் தன்னகத்தே கொண்ட கருந்துகள்களும்
அறிவியலாளரையும் குழம்ப வைக்கும்
ஆற்றல் கொண்ட பேரண்டம்.
நம் சிந்தைக்கு எட்டா
இந்த விந்தையை என்னவென்று சொல்வது
ஒரு புல்லின் செல் கட்டமைப்பை
மைக்ரோஸ்கோப்பில் கண்டு வியந்ததுண்டா நீ!
எவ்வளவு நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டவை அவை
ஒழுங்கற்ற தன்மையிலும் அழகுண்டு என்பதை
இரு வண்ணங்களைக் கொண்ட பூவின் இதழில் காணலாம்.
இறைவனின் படைப்பு நம் நுண்ணறிவாலும்
கண்டுணர முடியா அளவுகடந்த ஞானம்
இதுவே இறைவனின் சிறப்பு
பூமிக்கு அப்பாலும் கலையுண்டு. இறைகரமுண்டு.

சகோ. ஆன்டோ மாதரசி (1232).

# பிரபஞ்சம்! இறைவனின் பேரன்பே!

பிரபஞ்சம் அனைத்து உயிரினங்களின் பிறப்பிடம்
பிரபஞ்சம் உயிரினங்களின் வாழ்விடம்
பிரபஞ்சம் அன்பின் இருப்பிடம்
பிரபஞ்சம் வாழ்வின் உயிர் மூச்சின் ஆதாரம்
பிரபஞ்சம் இல்லையேல் நம் வாழ்வு இல்லை
நம் வாழ்வு உயிரோட்டம் பெற
உரமூட்டுவது இறைவனின் பேரன்பே!
பிரபஞ்சத்தின் அங்கம்தான் மனிதம்
அணுவாய் உருவான உயிரினம் (மானுடம்)
ஆன்மீகத்தில் நிலைத்திருப்பதும் இறைவனின் பேரன்பே!
வானியல் அறிவை பெற்ற மானுடம்
மனதின் ஆழ்நிலையை அறிவதும் இறைவனின் பேரன்பே!
இயற்கை அனைத்தையும் இயல்பாக பார்க்கிறது.
படைப்பின் சிகரமாகிய மனிதன்
எல்லாவற்றையும் இயல்பாக பார்ப்பதும்
இயற்கையோடு இணைந்து வாழ்வதும்
இறைவனின் பேரன்பே!
எல்லாம் இறைவனின் பேரன்பே.

சகோ. அருள் மேரி (1266).

# அதுவே என் நோக்கம்...

அதிகாலைப் பனிப்பொழிவும் நீ!
ஆதவன் விரிக்கும் ஒளிக்கதிரும் நீ!
இயற்கை விரித்துப் பாடும் புல்லினம் நீ!
ஈரம் சொட்டும் மழைத்தூரலும் நீ!
உலகம் சுற்றிவரும் அந்த மையம் நீ!
ஊக்கம் தரும் பேராற்றல் நீ!
எல்லா திசையிலும், எரி நெருப்பிலும் நீ!
ஏறெடுக்கும் இடங்களிலும்
எல்லையறியா ஆழ்கடலிலும் நீ!
ஐம்புலன்களில் உள் வசிப்பது நீ!
ஐம்பூதங்களில் சுற்றி இருப்பதும் நீ!
ஒலி மீட்டும் நதி நீரிலும் நீ!
ஓடித் திரியும் மேகக் கூட்டத்திலும் நீ!
பரந்து விரிந்த பால்வெளியில்
பார்க்கும் இடமெல்லாம் நீ....
பார்க்கும் பொருளெல்லாம் நீ....
பார்க்கும் மனிதரிலும் நீ.... நீ.... நீ....
ஏன்? என்னிலும் நீ.... நீ.... நீ....
எங்கும் இருக்கும் உன்னைக் காண....
என்னிலிருக்கும் உன்னில் இணைய....
இதுவே என் ஏக்கம்! அதுவே என் நோக்கம்!
நோக்கம் அடைய ஆற்றல் பொழிவாய் இறைவா!
உன்னில் இணைய அருள் தாராய் தலைவா!!

**சகோ. ரகேஷ்னி,**
**மட்டுக்துவார், ஜார்க்கண்ட்.**

# இயற்கை அன்னையே வரம் தா...

தந்தை மகன் தூயஆவி என்ற
மூவொரு கடவுளோடு இணைந்து
வாழ்ந்திட வரம் கேட்கிறேன்...!
பிரபஞ்சத்தில் வாழும் உயிர்கள்
பஞ்சபூதங்களோடு ஒன்றாய் கலந்து
உறங்கிட வரம் கேட்கிறேன்...!
இயற்கையோடு கை கோர்த்து
வெந்து மடிந்து
உறங்கிட வரம் கேட்கிறேன்...!
இந்த பசுமை கொஞ்சும் இடத்தில்
லயித்து அடியோடு
உறங்கிட வரம் கேட்கிறேன்...!
வேற எந்த உலகும் வேண்டாம்!
பிரபஞ்சத்தில் இருக்கும்
இயற்கை தரும் மடியே
போதுமென நான் வேண்டுகிறேன்!
இயற்கை அன்னையே வரம் தா!
நீ தரும் உலகே
போதுமென வாழ்ந்திடுவேன்
உன் விழி கொண்டு கவிதைகளை
வீசி என் இதயம் திருடும்
இந்த பிரபஞ்சத்தின்
பேரழகி நீ.. நீ.. நீ...!!!

**சகோ. டிரினோ மேரி (1292).**

# ஹைக்கூ கவிதை

பணத்தை சேமிக்கத் தெரிந்தவனுக்கு
நீரை சேமிக்கத் தெரியவில்லை
நீருக்காக பணத்தைத் தண்ணீராக செலவழிக்கிறான்
என்னைச் சுற்றி ஆயிரம் சேமிப்புக் கிடங்குகள்
தேடி அலைகிறேன் தண்ணீர் சேமிப்புக் கிடங்கை
நான் மண்ணில் கண்டது விவசாயின் வேர்வைத்துளி
என்னும் உயர்ந்த நீர்த்துளியை.

**சகோ. அருள் பாரதி (1437).**

# பிரபஞ்சமே!
# என் உடன்பிறப்பே!

சிறு தீப்பிழம்பாய் பிறப்பெடுத்து
பரிணாம வளர்ச்சி பெற்று
காணத் துடிப்போரின் கண்களில் படாது
கரை காணா தூரம் சென்று
எல்லைகள் அற்று
எண்ணில்லா அற்புதங்கள் கொண்டு
விஞ்ஞானிகளும், மெஞ்ஞானிகளும்
வியக்கும் வண்ணம் விந்தைக்குரியவளாய்
விரிவடைவதில் வீரியம் கொண்டு
புத்தம் புதிதாய் புதுப்பித்தவளாய்
சலிப்பில்லாமல் மாற்றம் கொணர்ந்தவளாய்
தன்னலம் அகற்றி பிறர் நலம் பேணுபவளாய்
பொறுமையின் சிகரமாய்
மானிடரின் கற்பனைக்கு எட்டாத
கொள்ளை அழகு கொண்ட நீ
படைத்தவனின் நோக்கம் அறிந்து
பரமனின் பேரன்பினை பகிர்ந்து
ஒருங்கிணைந்து ஒன்றோடொன்று
தொடர்பு கொண்டு என்றும்
உயிரோட்டமாய் இருக்கும் பிரபஞ்சமே!
உன்னைக் காணும்போது
படைக்கப்பட்டதன் நோக்கம் மறந்த
என் நிலை உணர்ந்தேன்.
வழிகாட்டியமைக்கு நன்றி!
பிரபஞ்சமே! என் உடன்பிறப்பே!
உம்மைப் போல நானும் வாழ ஆசிக்கிறேன்.

**சகோ. அமல அனுசியா ராணி (1409).**

# அதிசயமே!
# அதிசயம்!

இயற்கையின் அதிசயம் - அது
இறைவனின் கலைநயம் - அது
ஆகாயத்தில் ஏற்படும் அதிசயம்
இறைவனின் பேரன்பு
மென்மையான காற்றின் அதிசயம்
இறைவனின் பிரசன்னம் அது
சுட்டெரிக்கும் சூரியனின்
ஒளி அதிசயம் - அது
ஆண்டவனின் ஒளிக்கீற்று
அகழ்வாரைத் தாங்கும்
நிலம் அதிசயம் - அது
ஆண்டவனின் பொறுமை
நீரின்றி அமையாத
இவ்வுலகம் அதிசயம் - அது
தூய்மையின் திருவுளம்
அதிசயமே அதிசயம்!
எங்கும் எதிலும் அதிசயம்!

**சகோ. பாப்பம்மாள் மேரி (1255).**

# அழகு

ஆகாயம் என்பது வானின் படைப்பு!
வானின் அழகு மேகம்
மேகத்தின் அழகு நட்சத்திரம்
நட்சத்திரங்களுக்கு அழகு கோள்கள்
கோள்களுக்கு அழகு படைப்புக்கள்
படைப்புக்களுக்கு அழகு அதில்
வாழும் ஒவ்வொரு உயிர்களும்
மனிதர்களுக்கு அழகு உடன்பிறப்பு
உடன்பிறப்புக்கு அழகு ஒருங்கிணைதல்
ஒருங்கிணைதலுக்கு அழகு பிரபஞ்சம்
பிரபஞ்சத்திற்கு அழகு ஐம்பூதங்கள்
ஐம்பூதங்களுக்கு அழகு
வாழும் வாழ்க்கை

**சகோ. சோபியா (1477),**
**விளார்.**

# ஆனந்தமே! என் பேரானந்தமே!

அகிலமே! ஆனந்தச் சுனையே!
ஆண்டவனின் இன்பக் களிப்பே!
நிலமே! நீரே! காற்றே! நெருப்பே! ஆகாயமே!
என்ன ஆனந்தம் உன் பேரழகு!
ஐம்பூதங்களாகிய ஐஸ்வரியங்கள்
நீங்கள் இல்லையேல் நாங்கள் இல்லை!
தீர்ந்துவிடாத பேராற்றல் உள்ள
நீங்கள் எடுப்பதில்லை ஓய்வு!
உயிர்மூச்சாக உள்மூச்சாக
உதிரத்தில் உசுப்பேத்தி
ஊக்கமளித்து என்றும் இளமையாக
இருக்கின்றீர் எங்களில் நீவீர்!
உன்னை அனுபவிக்கும் போது
பிறக்கின்றது உற்சாகம் எங்களில்!
அள்ள அள்ள குறையாத
அட்சயபாத்திரமான ஆகாயம் நீ!
நீளம் தாண்ட முடியாத
நீட்சி பெற்ற நிலம் நீ!
பாரபட்சம் இல்லாமல்
பாரினை காக்கும் நீர் நீ!
தீமையைச் சுட்டெரிக்கத்
தீராத தாகம் உள்ள தீ நீ!
மெல்லிய மென்மையான
உயிர்மூச்சான காற்று நீ!
ஆனந்தமே! பேரானந்தமே!
பிரபஞ்சமே! பேராற்றலே!
மெய்சிலிர்க்கிறது உன் பேரெழில் கண்டு!
உன்னை உன் பேராற்றலைக் கண்டு வியக்க
காலமும், நேரமும், ஞானமும்,
அறிவும் இல்லை எனக்கு
எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும்
இறை அன்பே இப்பிரபஞ்சம்
உன் பேரன்பில் மூழ்கி திளைத்திட
முன்னேறுகிறேன் முனைப்புடன்
இனி என்றும் ஆனந்தமே! என் பேரன்பே!
பேரானந்தமே இறைவா!

சகோ. அக்சிலீயம் கிரேசி (1267).

# யார் நீ?

பிரபஞ்சமே பிரபஞ்சமே நீ யார்?
நீ என்ன பஞ்சபாண்டர்களின் நண்பனா?
ஐவகை நிலங்களின் சொந்தக்காரனா?
யார் நீ? அண்டத்தை ஆள்வதற்கு?
உயிருக்கு உயிர்மூச்சுக் கொடுக்கவந்த
தென்றல் நான்
தணியாத தாகம் தீர்க்க வந்த
கடலலை நான்
அலைமோதும் உலகிற்கு அழகு சேர்க்கும்
ஆகாயம் நான்
சுட்டெரிக்கும் தீமையை அகற்றி
சுடர்வீசும் தீப ஒளி நான்
உன்னை இயங்கவைக்கும்
அண்டமே நான்தான்
என்னை பார்த்தா நீ யாரென்று கேட்கிறாய்?
நான் இல்லையேல் நீ இல்லை
நான் தென்றலாய் வந்ததால்
நீ உணவாய் மாற்றினாய்
நான் ஆற்றலாய் வந்ததால்
நீ அறிவாய் செயல்படுகிறாய்
நான் கடல் அலையாய் வந்ததால்
நீ கலங்கரை விளக்காய் ஒளிர்கிறாய்
நான் பட்டாம் பூச்சியாய் வந்ததால்
நீ பறக்கும் படலமாய் மிளிர்கிறாய்
என்னே உன் அழகு
என்னே உன் பேரன்பு
நான் நினைத்தேன்
இந்த உலகமே எனக்குள் என்று
ஆனால் நீ உன் கைக்குள்தான் நான் என்று
ஆ...ஆ... என்ன உன் அற்புதம்
என்ன உன் பேரன்பு!
என்னையும் அரவணைத்துக் கொள்
உன் பேரன்பு பிரபஞ்ச எல்லைக்குள்
என்றும் மறவாதே...

சகோ. செபஸ்தியம்மாள் (1224),
செல்லம்பட்டிடை.

# அதிசயம் அதிசயம் பேரதிசயம்!

பிரபஞ்சக் குழந்தை பிறந்தது எப்போது?
பிரபஞ்சம் பிரமாண்ட உருபெற்றது எப்போது?
அறிவியலாளர் உறுதியிட்டுக் கூறமுடியவில்லை
கற்பனைக் கண்ணால் எட்டிப்பார்க்க முடியவில்லை
எண்ண எண்ண வியப்பே மிச்சம்
அதிசயம் பேரதிசயம் இப்பிரபஞ்சமே பேரதிசயம்!



சூரியன் உதிப்பது அதிசயம்!
கோள்களின் இயக்கமும் அதிசயம்!
மின்னல் கீற்றின் வேகம் அதிசயம்!
மேகம் சுமக்கும் நீர்துளி அதிசயம்!

மண்ணை முத்தமிடும் மழைத்துளி அதிசயம்!
நீர் திரண்டு நிற்பது அதிசயம்!
கையளவு ஊற்று கரைபுரண்டோடுவது அதிசயம்!
விதைமுட்டி விண்ணோக்கி வளர்வது அதிசயம்!

மொட்டு மலர்வது அதிசயம்!
மனித உயிர் கருவில் உருவாவது அதிசயம்!
உடல் உறுப்புக்களின் இயக்கம் அதிசயம்!
அதிசயம்! அதிசயம்! இப்பிரபஞ்சமே பேரதிசயம்!

தோழியே! அன்புத் தோழியே! - இப்பிரபஞ்சம்
இயங்கிக் கொண்டிருக்கும் இறைவனின் இதயம்
நம்வாழ்வு இவ்விதயம் காக்கும் பெட்டகமாகட்டும்....

சகோ. தோமினிக்கா கரோலின் சாந்தி (1240).

# இயற்கையைப் போற்றுவோம்!

வெண்ணிலாவின் ஒளி வியக்கத்தக்கது.
மண்ணின் வாசம் மயக்கத்தக்கது.
மேகத்தின் மழைத்துளி வினோதமானது.
பூக்களின் நறுமணம் புதுமையானது.
பறவைகளின் பாட்டு இனிமையானது.
மலையின் மௌனம் அர்த்தமானது.
மரத்தின் தென்றல் மென்மையானது.
ஆழ்கடல் அமைதி அதிசயமானது.
அருவியின் அழகு ஆச்சரியமானது.

இருளின் பயம் விசித்திரமானது.
விண்ணின் தூரம் விசாலமானது.
நம் அடைக்கல அன்னை சபையாரின்
உறவு அழகானது.
இவை அனைத்தையும் உள்ளடக்கிய இயற்கை
புதிரானது மட்டும் அல்ல புனிதமானதும் கூட
போற்றுவோம் இயற்கையை தெய்வமாக
இப்புவியில் நாம் வாழும் வரை.

சகோ. கிளாரா மேரி (1270).


# வானம் கீழே...

வசந்தங்களை வரங்களாகக் கொண்ட
என் தாய் மண்ணே!
உள்ளங்களை அள்ளி மகிழும் பூக்களின் தேசமே!
குளிர் மேகங்களோடு கைகோர்த்து
விளையாடும் நெடுமலைகளே!
நேசிப்பவர்களின் கைகோர்த்து நடக்க வந்த
நல் தென்றல் காற்றே!
கண்களுக்குள் கவிபாடும் நீர்நிலைகளே!
திசைகள் எல்லாம் பரவி கிடக்கும்
கிழக்கின் வெளிச்சமே!
வியப்பாய் விடுகதையாய் பரந்து
கண்சிமிட்டும் அழகு வானமே!
சுகங்களும் உன்னில்! சுடுதலும் உன்னில்!
அக்னி சாட்சியாய், அடுப்பங்கறை உறவாய்,
ஆலயங்களில் ஒளியாய், ஆண்டவனுக்கு கற்பூரமாய,
கனலாக, அனலாக, என்னோடு இருப்பவனே!
நான் படைத்த நெருப்பே! ஒளியே! பிரபஞ்சத் தாயே!
உன்னில் பிறந்து உன்னில் வளரும் எங்களை
உன்னதமாக்கி அருள்புரிவாய்!
பிரபஞ்ச அன்பில் நாம் சிகரங்களைப் போல
என்றும் உயர்ந்து வாழ வசந்த வாழ்த்துக்கள்!



சகோ. இன்பெண்டா சுகந்தி பிரியா (1307),
தூத்துக்குடி.

# பிரபஞ்சத்தின் விந்தை



வளியோடு வழியாக, வலியோடு வாஞ்சையாக
வந்தமர்ந்து பெரு வெளியில் பெரும் வலியை
பால் வெளிதனில் சங்கமித்து பிரசவிக்கிறேன்!
பிரபஞ்சமாக!
ஓர் இரவு முழுவதும் இப்பிரபஞ்ச
பெருவெளியை பேரமைதியை இரவின் அழகினை
இனிமையை ஏகாந்தத்தை ரசிக்க வேண்டும்.
மொட்டை மாடியில் தலைக்கு மேலே
எவ்வளவுக்கு எவ்வளவு நட்சத்திரக் கூட்டம்?
கருமைப் போர்வை போர்த்தியபடி உறங்காமல்
விழித்துக் கொண்டே விடியலில் மட்டுமே உறக்கம்
என்னைப் போலவேதானோ? அவைகளும்...

சகோ. ஜோஸ்பின் டயானா (1314).

# இயற்கையின் மடியில்

இயற்கை எண்ணிடற்கரிய
அதிசயங்களையும் ஆச்சரியங்களையும்
தன்னகத்தே கொண்ட மாபெரும் ஆற்றல்!
இந்த நீண்ட நெடிய பிரபஞ்சம்
தன்னை உருவாக்கிய இறைவனைப் போன்று
எல்லையில்லாமல் விரிந்து கிடக்கின்றது.
தனக்கென வரைமுறை வகுத்துக் கொண்டு
ஏதுமறியா குழந்தை போன்று மௌனமாய்
இயங்கிக் கொண்டிருக்கிறது.
வான்வெளியில் விரிந்திடும்
வண்ணக் கோலங்களும்
பூமியில் நிறைந்திட்ட
மெல்லினமும், புல்லினமும்
தன்னிகரில்லா இறையொளியின் பேராற்றலை
எடுத்தியம்பும் கருவிகளே!
நிறைவாய் பரந்து உயிராற்றலைத்
தந்துகொண்டிருக்கும்
இயற்கையும், இயற்கையில் உறையும் அவன்
உடனிருப்பையும் நிதம் உணர்ந்திடுவோமே!
பிரபஞ்சம் என்பது கடவுளைப் போன்றே
நம் அறிவுக்கு எட்டாத பேராற்றல்
அறிவியலாலும் ஆராய்ந்து கண்டறிய
முடியாத சூட்சமமே இப்பிரபஞ்சம்.

சகோ. நம்பிக்கை மேரி (1254).

# பிரபஞ்சமே நீயாகி

அண்டத்தில் நிறைந்து
சூரியனாய் ஒளிர்ந்து
வெண்ணிலவாய் வெளிச்சம் தந்து
காற்றினிலே பவனி வந்து
விதையினுள் மரமாகி
மலர்களில் மணமாகி
குயிலில் குரலாகி
களிமண்ணில் உயிர்தந்து
மழையை கருணையென பொழிந்து
இப்பிரபஞ்சமே நீயான
இறைவா! போற்றி!

சகோ. ஜென்சியா (1497).

# பிரபஞ்சப் பாடல்

பிரபஞ்சமே! என் பேரின்பமே
உன்னை வாழ்த்துகிறேன்
நிலமாய் வந்தாய்
காற்றாய் வந்தாய்
நெருப்பாய் வந்தாய்
ஆகாயமாய் நின்றாய் -
உன்னை வாழ்த்துகிறேன்
உணர்கின்றேன் மகிழ்கின்றேன் வியக்கிறேன்

1

இரண்டற என்னில் நீ கலந்தாய்
இறையன்பை என்னில் நீ தந்தாய்
வாழ்வும் வளமும் நீ தந்தாய் -
நலமோடு வாழ
தந்தாய் எனக்கு உன்னை
உன்னை வாழ்த்துகிறேன்!

2

ஒரு சிறு புள்ளி நான்
உன்னில் இணைந்து
உன்னோடு பயணிக்கிறேன்
உன்னை வியக்கும் சக்தியால் - எம்மையும்
இயக்க சக்தியாய் தருவாய்
உன்னை வாழ்த்துகிறேன்.

சகோ. பிரகாசி (1160).

# பிரபஞ்ச பரமனே!

கரையில்லா கடலும்,
கணக்கில்லா நட்சத்திரங்களும்
தேனான தென்றலும், நிலையான நிலமும்
இனிமையான இடைவெளியும் - இவைகள்
சொற்களில் அடங்கா சுகராகம்
இவை அனைத்தும் நிறைவாக
அருளும் நேசனே, நிறையே
உன் அன்புக்கும், பாசத்திற்கும்
நன்றி! பிரபஞ்ச பரமனே!

சகோ. அருள் தெரசா (1494).

# பிரபஞ்சமே!

பிரபஞ்சமே இதுவரை கூறாத
கவிதை எதுவென்று மனம் கேட்க...
நீ ஒளித்துவைத்த அன்பென்றேன்
இதுக்கூட தெரியாத மக்கு என்றது
மனமோ மகிழ்ச்சியில் நீள்
கவிதையாய் மாறிப்போனது..

உன்னை விட பலமுள்ளவன்
இந்த அகிலத்தில் இருக்கலாம் ஆனால்
யாரிடமும் அன்பு இல்லாதவன்
இந்த பிரபஞ்சத்தில் இருக்கவே முடியாது.

இறைவா! உன் விழிக்கொண்டு
என்னைப் படைத்து உருவாக்கி
இப்பிரபஞ்சத்தில் வீசி என் இதயம் திருடும்
இந்தப் பிரபஞ்சத்தின் பேரழகி நீ...

**சகோ. அமலோற்ப சோபியா (1424),**
**கடவெண்டி.**

# பிரபஞ்சம்

நிலம் நீர் காற்று ஆகாயம் நெருப்பு
என அமைந்த பிரபஞ்சமே!
உண்மையை எடுத்துரைக்கும்
அண்ட சராசரமே!
நிலத்தை வளமாக்கும் மழையே!
நீரூற்றை உருவாக்கும் மேகமே!
பாதுகாப்பை அளிக்கும் வானமே!
எங்களை வாழவைக்கும் உனக்கு
என் பணிவான வணக்கமும் வாழ்த்தும்.
கடவுள் அன்பை அறியச் செய்கின்ற
உன்னை போற்றுவது தகுமே
உன்னை உணரச் செய்யும்
கடவுளை ஆராதிப்பது மெய்மையே.
மெய்மையே உருவான கடவுளே!
ஒழுங்குப்படுத்தும் இயேசுவே!
பேரன்பின் ஆவியே!
போற்றி! போற்றி! போற்றி! ஆமென்.

**சகோ. வில்லியம் ஜெசி (1425),**
**மிடாலம்.**

# பிரபஞ்சம்

அழகே எங்கள் பேரின்பத்திரளோ நீ!
அழகே அன்பின் பிறப்பே நீ!
எல்லையற்றவா எண்ணிலடங்காதவா
என் இறைவா! ஓ இறைவா!
பிரபஞ்சத்தின் தலைவா!
I love you I love you சொன்னேனே
என் காதலனே! இறையன்பே!
பேரின்பமே! பிரபஞ்சமே!
பார்ப்பதற்கு பைத்தியமாகத் தெரிந்தாலும்
கேட்பதற்கு கேனையாகப் பட்டாலும்
உன் காதல் ஆயுதத்தால்
என்னை வெற்றிகொண்டபிறகு
நான் உன்னை காதலிக்கவில்லையென்றால்
எனக்கு ஏன் இந்த பிறவி!

# ஓ! பிரபஞ்சமே! நானும் ஒரு துகள்!

உன் !
வெண்ணிலவின் ஒளி வியக்கத்தக்கது
மண்ணின் வாசம் மயக்கத்தக்கது
மேகத்தின் மழைத்துளி வினோதமானது
பூக்களின் நறுமணம் புதுமையானது

பறவைகளின் பாட்டு இனிமையானது
மலைகளின் தூரம் விசாலமானது
ஆழ்கடல் அமைதி அதிசயமானது
மரத்தின் தென்றல் மயக்கத்தக்கது

வானத்தின் வறையரை முடிவற்றது
அன்பின் ஆழம் அழகானது
பிரபஞ்சமே உன்னை நினைத்து
நான் வியக்கிறேன்.
உன்னில் நானும் ஒரு துகள் என்பதை
நினைத்து மகிழ்கிறேன்.

**சகோ. ஷாலின் (1500).**

# பிரபஞ்சமே என் பேரன்பே!

ஒன்றுமில்லாத என்னை உருவாக்கி உயிர்கொடுத்தாய்!
சூரியனாய் நின்று ஒளி கொடுத்தாய்!
நிலவாய் வந்து குளிர்ச்சியாக்கினாய்!
மண்ணாய் படர்ந்து என்னைத் தாங்கி நின்றாய்!
நீராய் ஓடி தாகம் தீர்த்தாய்!
நெருப்பாய் எரிந்து குறைகள் நீக்கினாய்!
வானவில்லாய் வளைந்து வாழ்வுக்கு வண்ணம் தந்தாய்!
விண்மீனாய் மின்னி வாழ்வுக்கு சுவாரஸ்யம் சேர்த்தாய்!
கோள்களாய் சுழன்று வாழ்க்கையின்
ஏற்ற இரக்கத்தை உணர்த்தினாய்!
பேரண்டமாய் உருவாகி எல்லையில்லா அன்பைக் காட்டினாய்!
இறைவா! நீ எங்கே எங்கே என்றபோது பிரபஞ்சமாய்
நான் உன்னுள்ளே இருக்கிறேன் என்றாய்.

**சகோ. நேச பிரதீபா (1506),**
**அரண்வாயல் குப்பம்.**

# எல்லாமுமானவனே!

பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க...
இறைவா! உன் படைப்புதான் என்னே!
எழில்மிக்க உன் படைப்பை எண்ணி மனம் வியக்கிறேன்
ஊனிலும் நீ! உயிரிலும் நீ!
வானிலும் நீ! மண்ணிலும் நீ!
காணும் படைப்பு அனைத்தும் உம் புகழினை எடுத்தியம்புகிறது
பிரபஞ்சம் என்ற இந்த உண்மையால்
உலகிற்கு உரு கொடுத்தவன் நீ!
காற்றும் கடலும் நீரும் நெருப்பும் கூறும் உம் கைவன்மையை
எல்லாமுமானவனே நின் தாள் பணிந்து உம்மை போற்றுகிறேன்
பிரபஞ்சனே நின் புகழ்பாடி உமதடி பணிகின்றேன்.

**சகோ. ஷீபா (1445).**

# GREAT MISSION

Bearing is the mission of land
Purifying is the mission of water
Life giving is the mission of air
Being high is the mission of ether
Testing is the mission of fire
Then what is my mission?
The most eminent and
great mission is to saving and caring
These five elements



SAVE THE UNIVERSE!
SAVE OUR MOTHER LAND!

# நீ பேரழகி

பச்சை புடவைக் கட்டிய பதஞ்சலியே
பார்ப்பவரின் கண்களை மயக்கும்
விந்தையை எங்கே கற்றாய்
நீ அணிந்திருக்கும் புடவை பச்சையப்பாவா
இல்லை சரவணா ஸ்டோரா
உன் சேலை அணிவகுப்பில்
மெய் மறந்து போனேன்
உன் அழகில் மயங்கிய கோள்கள்
தங்கள் பாதையில் வேகமாக சுழல்கின்றன
ஆகாயம் தன் அன்பை மேகத்தின் வழி
மழையாக பொழிகின்றான்
அவன் அன்பை மிஞ்சும் வகையில்
சூரியன் தன் ஒளியை உன்மீது வீசி
பிரகாசிக்கச் செய்கிறான்
நீ உன் அழகுக்கு எந்த
விளம்பரமும் கொடுக்கவில்லை
ஆனால்! பாரும் சந்திரனும் உன் அழகில்
போட்டி போட்டுக் கொண்டு
தன் தம்பி நிலாவையும்
தங்கை நட்சத்திரத்தையும் அனுப்பி
உன் அழகில் மயங்க வைக்கிறான்
உன் பசுமையில் மயங்கிய
தேனிசை தென்றலும்
உன் அரவணைப்பில் மகிழ்ந்த ஆகாயமும்
உன் அன்பில் நனைந்த நீரும்
உன் அழகில் பற்றியெறிந்த நெருப்பும்
உன்னை தன் மடியில் சுமக்கும் நிலமும்தான்
உன் பாதுகாப்பு வளையங்களோ!
அதனால் என்னவோ தெரியவில்லை
இன்றுவரை உன்னை யாராலும்
எதுவும் செய்யமுடியவில்லை
உன் வியப்பூட்டும் அடிக்கு போட்டி போட
யாராலும் முன்வர முடியவில்லை
உன் பிரபஞ்ச குடும்பம் என்ன
‘சூரியவம்சம்’ படம் பார்த்ததோ
இல்லை ‘ஆனந்தம்’ படம்
பார்த்தார்களோ தெரியவில்லை
இத்தனை ஒற்றுமையோடு இருக்கிறீர்கள்
அப்பப்பா மனித குலத்தை இறை
ஆற்றலோடு வாழவைக்கும்
உங்கள் பிரபஞ்ச சாரி... சாரி...
நம் பிரபஞ்ச குடும்பத்துக்கு
தலை வணங்குகிறேன்.

**சகோ. வெர்ஜின் ஜீலிசா (1452).**

# என்ன சொல்லி வாழ்த்துவேன்!

பிரபஞ்சமே...
அறிவுக்கு எட்டாத உன்னை
ஆக்கப்பூர்வமான உன்னை
இன்பத்தின் ஊற்றான உன்னை
ஈர்க்கும் சக்தி கொண்ட உன்னை
உயிர்களின் இயக்கமான உன்னை
ஊக்கம் அளிக்கும் உன்னை
எண்ணங்களுக்கு இனிமையான உன்னை
ஏழை மக்களின் ஏற்றமான உன்னை
ஐம்பூதங்களை உள்ளடக்கிய உன்னை
ஒற்றுமையால் மேலோங்கிய உன்னை
ஓராயிரம் நன்மைகளால் நிறைந்த
உன்னை ஔவை தந்த நெல்லிக்கனியான
உன்னை என்ன சொல்லி வாழ்த்துவேன்?
எப்படி போற்றுவேன்?
வரிகளுக்கும் சொந்தமான உன்னை
எவ்வகை வரிகளைக் கொண்டு
கவிதை எழுதுவேன்?
மொழிகள் அனைத்திற்கும் பிறப்பிடமான
உன்னை எவ்வகை
மொழியால் புகழ்ந்துரைப்பேன்?
இசையின் பிறப்பிடமான உன்னை
எவ்வகை சுரத்தால் தாளத்தால் பாடுவேன்?
எனவே வியந்து மகிழ்ந்து
வாழ்த்த வயதின்றி வார்த்தையின்றி
வணங்கி நிற்கிறேன் உன்னை.

**சகோ. ஆனா டெரன்சியா (1486).**

# பிரபஞ்சம்

ஒளியைக் கொண்டு உன்னைப் புகழ எண்ணி
சூரியனை நோக்கும் போது உணர்ந்தேன்
அது நெருப்பான நீயென்று
இசையால் உன்னை வாழ்த்த எண்ணி
புல்லாங்குழலை எடுக்கும் போது உணர்ந்தேன்
அதில் ஊடுருவும் காற்று நீயென்று
நிலாவைக் கொண்டு உன்னை வர்ணிக்க எண்ணி
மேல்நோக்கும் போது உணர்ந்தேன்
அது வீற்றிருக்கும் ஆகாயம் நீயென்று
அருவியைக் கொண்டு உன்னை அழகுப்படுத்த எண்ணி
நதியை உற்றுநோக்கும் போது உணர்ந்தேன்
அதில் ஓடும் நீர் நீயென்று
இயற்கையைக் கொண்டு உன்னை பெருமைப்படுத்த எண்ணி
மரத்தை நோக்கும் போது உணர்ந்தேன்
அதைத் தாங்கி நிற்கும் நிலம் நீயென்று
உன்னையன்றி உன்னை எதைக் கொண்டும்
வாழ்த்த இயலாதென்பதை பின்புதான் உணர்ந்தேன்
பிரபஞ்சமே நீ வாழ்க!

# பிரபஞ்சமே! என் அழகே!

பிரபஞ்சமே! என் இதய அழகே!
என்னில் உன்னைக் கண்டேன்
உணர்ந்தேன் மகிழ்ந்தேன் வியந்தேன்
நிலமாய் தாங்கினாய் என் உடலை
ஊற்றெடுத்தாய் நீராய் என் வியர்வைத் துளியாய்
காற்றாய் கலந்தாய் என் நுரையீரலில்
நெருப்பாய் எரிகின்றாய் என் இதயத்தில்
உன்னை வார்த்தையால் வர்ணிக்க இயலவில்லை
வாழ்க்கையால் உன்னை வர்ணிக்கிறேன்
என் இதய அழகே! பிரபஞ்சமே
என்னோடு இரு இணைவோம் இறையன்பில்
பெறுவோம் பேரன்பை
நீயும் நானும் இணைந்தால்
படைத்தவன் மகிழ்வான் பாரினில்
உன்னை இயக்கும் சக்தி என்னில் தங்கட்டும்.

சகோ. பிரகாசி (1160).

# மகிழ்வின் கணங்கள் எது?

கூரைவீடு குளுகுளுப்பாய் இருந்தது
மாட்டுவண்டி பயணம்...
மகிழ்ச்சியாய் அமைந்த தருணம்
மாற்றப்பட்ட உலகில் வாழ்கிறோம்
அதுவே மகிழ்ச்சி என நினைக்கிறோம்
நான்கு வழிச்சாலை இல்லை அன்று
நாற்புறமும் பசுமையாம்
விறகு அடுப்பில் சமைத்ததைத் தவிர
வேறு புகை இல்லையாம்
நீர்நிலைகள் இருந்ததாம்
பள்ளம் நிறைந்த இடமெல்லாம்
பகுத்தறிவு வந்ததால் அது பகைவனாய் ஆனதாம்
பரந்து விரிந்த உலகில் பல பால்வெளி அண்டமாம்
என்னை சுமக்கும் பூமிக்கு மட்டும் தொந்தரவு அதிகமாம்
சுத்தமான காற்றால் சுகமாக வாழ்ந்த மானிடம்
அடைக்கப்பட்ட ஆக்ஸிஜன் கூட கிடைக்காமல்
அல்லல்பட்டு மரணித்ததாம்
சிக்குமுக்கு கல்லால் உண்டான நெருப்பு
அணுகுண்டுக்குள் அடக்கமாம்
அழித்துக் கொண்டிருக்கிறதாம்
என் அன்னை பூமிக்கு எத்தனை எத்தனை தொல்லை
அப்பப்பா இது தப்பப்பா
சொல்லத் துடிக்குது உதடு
தேவசொல் கேட்டு விழித்தது கண்
கனவல்ல இது நனவே.
பிரபஞ்ச பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க
அடைக்கல அன்னை சபையின் ஆறாண்டு இலக்காம்
பேரன்பே! என் பிரபஞ்சமே!
உன்னில் கலக்க கொள்ளை ஆசை
ஓடும் நதியின் கொஞ்சலைக் கேட்பேன்
பாடும் பறவையோடு பரவசமாவேன்
சிரிக்கும் பூவில் சிந்தைத் துளிர்ப்பேன்
வானவில்லின் வண்ணமாவேன்
உயிர்த்துளி அது மழைத்துளி என்பேன்
அனைத்தையும் படைத்த இறையே
என் சின்ன அறிவில்
சிறையிட முடியா உன் படைப்பில்
நானும் ஒரு படைப்பே
உயிர் உள்ள மட்டும் உன் படைப்பில் மகிழ்ந்து
உன்னில் கலக்கும் காலம் கனியட்டும்.

சகோ. அருள் ஜெயகலா ராணி (1131).

# ஓ! என் பிரபஞ்சமே!

என் மானசீகக் காதலனின் படைப்பே!
ஓ என் பிரபஞ்சமே!
நிலமே என் மூதாதையரின் உடல்
தாங்கிய தாய்மடியே நீரே!
என் போராளிகளின் குருதியே!
காற்றே! எம்மவரின் உயிர் சுவாசமே!
நெருப்பே! தீமையைச் சுட்டெரிக்கும் என் ஆற்றலே!
வெற்றிடமே! என் கண்ணுக்குப் புலப்படாத
விந்தைகளின் சங்கமமே!
உம்மிடம் கற்றப் பாடம் ஏராளம்!
உம்மைக் காப்பதில் எம்மவர் தாகம்
தாராளம் ஏதோ ஒரு ஒப்பந்தம்
உமக்கும் எமக்கும் - நான் கொடுப்பதை
சரியாகக் கொடுத்தால் - என் பிரபஞ்சமே
நீ கொடையாய் தருவாய் தாராளமாய்
Give and take policy தானே உம் விதி
ஓ! என் பிரபஞ்சமே!
உம்மைக் காயப்படுத்திய காலங்கள் பல
அளவுக்கு மீறி உன்னை ஆழ்துளையிட்டேன்
மாசுக்களால் உன் அழகை மறைத்தேன்
மாறிவிடு! என என்னை எச்சரிக்கும்
உன் குரல் கேட்கிறது.
பிரபஞ்சப் பலனை சேமிக்க முயற்சி செய்வேனே!
பிரபஞ்சம் பஞ்சம் அடையாமல்
இருக்க வழி வகுப்பேனே!
இனி இந்த பிரபஞ்சம் என் போன்ற
இரசிகைகளின் கையிலே!
இன்று சிரிதாய் விரிந்த என் இதயம்
என்றும் விரியும் எல்லையில்லாமல்
அழகாய் அற்புதமாய் உன்னை அறிவேனடி
என் வாழ்வில் உன்னை உணர்வேனடி!
நீயும் நானும் ஒரு நாணயமடி!
இனி இணைபிரியாமல் வாழ்வோமடி!
மெய்யறிவை வளர்ப்பேனடி
வாழ்வாங்கு வளமாய் வாழ்வோமடி!
ஓ! என் பிரபஞ்சமே!
நீயும் நானும் ஒரு தாய் படைப்பேயடி!

சகோ. ஜோஸ்பின் (1168).

# பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைவோம் வழிநடப்போம்

எத்தனை யுகம் கடந்தாலும்
அழியா வரம் பெற்ற
அற்புதப் படைப்பே!
உன்னை ஆராதிக்கிறேன்
தினமும் எழும் சூரியனே!
எனக்காக உதிக்கிறாய்
துணையே இல்லாத நிலவே!
எனக்காகக் காத்திருக்கிறாய்
தினமும் மலரும் மலரே! நீ
முகஸ்துதிக்காக மலர்வதில்லை
முகம் பார்க்க மலர்கிறாய்
வாசமில்லா மனங்களில்
வாசம் வீசுகிறாய்
நேசமில்லா நெஞ்சங்களில்
அன்பை விதைக்கிறாய்
துயர் வரும் வேளைகளில்
துயர் தணிக்கிறாய்
சுணக்கமில்லாமல்
இணக்கம் காட்டுவதால்
சுகமே வாழ்கிறாய்
சுற்றம் சேர்க்கும்
பிரபஞ்சப் பேரன்பில் - உனக்கு
சொந்தங்கள் அதிகம்
எம் முன்னோர் தந்த ஞால வரம்
உழைப்பின் பரிசு
அப்பிரபஞ்சப் பேரன்பில்
ஒருங்கிணைவோம் வழிநடப்போம்.

சகோ. குழந்தை (1038).

# பிரபஞ்சம்


குங்குமப் பொட்டழகியே - உன்
மங்கலம் குறைய நான் காரணமடி
உன் வன் கோரப்பிடி தாங்க
மறுக்குதே என் இதயமடி
நான் போகும் போக்கு தவறென
என் அறிவுக்கு எட்டுதடி!
பழகிப்போன என் மனது ஏனோ
இதை ஏற்க மறுக்குதடி
நவீன வளர்ச்சியென பொய்யை
மெய்யாக்க முயற்சிக்கும் என் மதியீனம்
உன் அகோர பஞ்சம் காணும்போது
வழிதெரியாது துடிக்குதடி!
கண்கெட்ட பிறகு கண்ணாடியைத்
தேடும் அறியாமைக்கு
மெய்யறிவே சாவியென புரிவதெப்போதடி!
பிரபஞ்சப் பலனை சேமிக்க வழிதேடும்
என் உழைப்பு வீணடி
உன்னை மெருகூட்ட சலவை செய்வேன்
என் மூளையத்தாண்டி
கருத்தரித்த நாள் முதலாய் - உன்
மண்வாசனை இல்லையடி - நான்
கண்ட வாசனை ஜான்சன் சோப்புதானடி
என் காலடி உன் உறவை
நாட பழகவில்லையடி
சாக்ஸ் அணிந்து வேர்த்து போனதடி
நீ தந்த காய் கனி அமிர்தமான உணவடி
உண்ண மறுத்து உண்டேன் ஜங்குல்
உணவுதானடி இப்படியே வளர்ந்த எனக்கு
நாகரீகம் எது! நவீனம் எது? என புரியாத
காலமடி புரிந்தபோது காலம் கடந்து
போகுதடி அப்போது நீயே வந்து வந்து
தாங்குவாயடி என் மரணம் கூட அழகு
செய்யப்படுவது உன்னால்தானடி நீயும்
நானும் ஒருவனால் படைக்கப்பட்டோம்
என்ற பந்தமடி நானின்று நீயில்லை என
ஒன்றாய் பிணைக்கப்படுவோமடி
நம் சங்கமம் மெய்யறிவு என உணர்வோமடி!
அதை வாழ்வாக்குவோமடி!

சகோ. ஜோஸ்பின் (1168).

# நன்றி! இறைவா! நன்றி!

முப்பெரும் ஜோதியாய் மூன்று ஆட்களும்
ஒரே உருவமாய் வழிநடத்தும் கலங்கரை
விளக்கமாய் இருக்கும் எம் இறைவா!
இந்தப் பிரபஞ்சத்தைக் கொடையாகக்
கொடுத்ததற்கு நன்றிக்கரம் கூப்புகின்றேன்.
எம்மவரைத் தாங்கி நிற்கும் எம் பூமித்தாயே!
உமதடி பணிகின்றோம்.
விதைத்த விதையை விரிச்சமாக்குவதும்
நிலத்தின் அடியில் நீர் ஊற்று பொங்கி
எழுவதும் கடல் அலை துள்ளி எழுவதும்
கண்டு எம்மனம் பொங்கி எழுகிறது.
உம் நன்மைத் தனத்தை எண்ணி ஓடும்
வழியெல்லாம் தம் தடத்தை பதித்து பசுமை
கொழிக்கச் செய்யும் நீர் ஊற்றும் இவை
போன்று அயராது உழைக்க அருள் தாரும்.
தென்றலாய் வந்து எம் உயிர் தந்தவளே
என்னென்று சொல்வேன் உன் பணியை
பாரெங்கும் பரந்து கிடக்கும் எம் நீல வானமே
உம் பரந்த மனதை எண்ணி நன்றி கூறுகின்றேன்.
இருளை அகற்றி ஒளிகொடுக்கும் எம் ஒளியே!
உம்மை நினைத்து நன்றி கூறுகின்றேன்.

சகோ. லிசியா மேரி (1460).



# என்னே அழகு!

நிலா அது வானம் காற்று
மழை அது கவிதை ஊற்று
திசை அது முள்ளா மலரா
இவைகள் இயற்கையின் அதிசயம்
படைத்தவற்றைக் கண்டு மலைத்துப் போனேன்
தேடினேன் தேடினேன் தேடிக் கொண்டேயிருந்தேன்
மலைகளை நோக்கித் தேடினேன் அவன் இல்லை
கடலை நோக்கித் தேடினேன் அங்கும் அவன் இல்லை
அப்பொழுது சுற்றுலாவிற்காக
அடைக்கல அன்னை சபைக்குச் சென்றேன்
பிரபஞ்சத்தைக் கண்டேன். என்னே அதிசயம்!
அழகிய மனிதர்கள் வண்ணமிக்க பறவைகள்!
நீரினைக் கண்டேன். நிலத்தினைக் கண்டேன் என்னே அழகு!
பலவகையான உயிரினங்கள் வாழ உதவும் காற்றினைக் கண்டேன்
எல்லோரும் ஒளியில் வாழ அடிப்படையாக அமையும்
நெருப்பினைக் கண்டேன். ஆகாயத்தினைக் கண்டேன்
பலவகையான எண்ண முடியாத அழகு மிக்க காட்சிகள்.
அப்பொழுது அடைக்கல அன்னை சபை உணர்த்தியது
பிரபஞ்சமே இறைவனால் உருவாகியது
பின் எதைத் தேடி ஓடுகிறாய் மனமே.

**சகோ. கிரேசியா மேரி (1455).**

# வாழ்த்துகிறேன்!

நல்லவரையும் வல்லவரையும்
வளமோடு வாழ வைக்கும் நிலமே
உம்மை வாழ்த்துகிறேன்.
ஏரி குளம் குட்டை ஆறு இவை யாவற்றிலும் அல்லாது
உடல் தாகத்தையும் தணிக்கும் நீரே!
உம்மை வாழ்த்துகிறேன்.
அலை ஓயா கடல் அலைபோல என்றும்
மணம் வீசி மனிதனை நிரப்பும் காற்றே!
உம்மை வாழ்த்துகிறேன்.
உலகெங்கும் விரிந்த வெள்ளத் தாமரையாய் காட்சியளிக்கும்
ஆகாயமே உம்மை வாழ்த்துகிறேன்.
சற்றும் தயங்காமல் முற்றும் எரிந்திடும் நெருப்பே!
உம்மை வாழ்த்துகிறேன்.

**சகோ. ஜோஸ்பின் மேரி (1456).**

# போற்றுவோம் இயற்கையை

வெண்ணிலவின் ஒளி - வியக்கத்தக்கது
மண்ணின் வாசம் - மயக்கத்தக்கது
மேகத்தின் மழைத்துளி - வினோதமானது
பூக்களின் நறுமணம் - புதுமையானது
பறவைகளின் பாட்டு - இனிமையானது
மலையின் மௌனம் - அர்த்தமானது
மரத்தின் தென்றல் - மென்மையானது
ஆழ்கடல் அமைதி - அதிசயமானது
இருளின் பயம் - விசித்திரமானது
விண்ணின் தூரம் - விசாலமானது
அன்பின் உறவு - அழகானது
அவை அனைத்தும் உள்ளடக்கிய இயற்கை
புதிரானதுமட்டுமல்ல. புனிதமானதும் கூட
போற்றுவோம் இயற்கையை தெய்வமாக
இப்புவியில் வாழும் வரை.

**சகோ. ஆரோக்கிய செல்வி.**

# நிலா

வெண்மை நிற ஆடையிலே - தினம்
தேவதையாய் வருகைத் தந்து
வெண்மை நிற ஒளியால் - என்
கண்களை மயக்கி தினம்
குளிர்மையான தேகம் கொண்டு -
என்னை குளிரவைத்து சுகம் தந்து
மாலை மங்கும் வேலையில் - மனம்
மகிழ்ந்திட சுடர்விழியால் தீண்டி
அன்னைபோல் அணைத்துக் கொள்பவள்
என்றும் அன்பானவள்
என் நிலவுத் தாய்.

**சகோ. சாந்தா (1417).**

# இயற்கைத் தோழி!

இயற்கை உன் தோழி
இயற்கை உன் தாய்
இயற்கை உன் காதலி
அத்தகைய இயற்கையை அழிக்க நீ போராடுவது ஏன்?
இயற்கை அழிந்தால் நீயும் அழிவாய்
என்பது உனக்குத் தெரியாதா?
இயற்கை மேல் உனக்கு ஏன் அவ்வளவு பொறாமை
அது உன்னைவிட அழகாய் இருக்கிறது என்றா?
அல்லது தன்னை விட அழகான உயர்ந்த ஒன்று
இருக்கக் கூடாது என்ற எண்ணமா!
இயற்கை உன்னை நம்பி வாழ்வதாக
நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்.
ஆனால் நீ தான் அதை நம்பி
வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்பதை மறந்துவிட்டாய்!
நீ இன்றைக்கு அழிக்கும் இயற்கை
நாளை பிரபஞ்சத்தை மட்டும் பாதிக்கப் போவது இல்லை
உன் வருங்கால சந்ததியையும்தான் என்பதை
இன்னும் நீ உணராதது ஏன் மனிதா? திருந்தி விடு.
நாளைய சமூகத்தையும், பிரபஞ்சத்தையும் பாதுகாக்க.

**சகோ. அருள் பாரதி (1437).**

# பிரபஞ்சம்

காலை கண்
விழித்தேன் இறைவா!
உயிர்ப்பிக்கும் உமது
பேரன்பில் இணைந்திட
எங்கும் பரந்து விரிந்த
உமது படைப்புக்களை
புதுப்பிக்க அழைத்தாயோ
என்னை உமக்காய்
மூச்சுக்காற்றாய் நீராய்
நிலமாய் நெருப்பாய்
ஆகாயமாய் எனக்குள்
வாழும் உம் பிரபஞ்ச
அன்பைக் கண்டு
மெய் மறந்து நிற்கிறேன்.

**சகோ. ஜெசிந்தா (1423),**
**நல்லமநாயக்கன்பட்டி.**

# பிரபஞ்சமே உன்னை எப்படி அழைப்பது?




பிரபஞ்சமே உன்னை எப்படி அழைப்பது
அன்பா? அருளா? கருணையா? நீ
வியப்பாக உள்ளது எல்லாமே...
அன்பே உன்னை அறிவதே ஒரு சிறந்த கலை.
நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு
ஒவ்வொன்றோடும் ஒன்றாக ஒன்றிணைந்து மகிழ்வோடு வாழ
புறப்படுவோம் புத்துணர்ச்சியோடு பிரபஞ்சப் பேரன்பில்...

சகோ. அமலி (1501).

# பிரபஞ்சமே! மனித பிரபஞ்சமே!

உதிர்கின்ற இலைக்காக கிளைகள் அழுவதில்லை
முறிகின்ற கிளைக்காக மரங்கள் அழுவதில்லை
விழுகின்ற கனிக்காக மரங்கள் முகாரி இசைப்பதில்லை
மடிகின்ற விதைக்காக கனிகள் ஓலமிடுவதில்லை
ஏனென்றால், உதிர்கின்ற இலை உரமாகின்றது
முறிகின்ற கிளை புதுத்தளிர் ஆகின்றது
விழுகின்ற கனி விதையாகின்றது
மடிகின்ற விதை புது விருட்சமாகின்றது - இது
இயற்கையின் நியதி.
பிரபஞ்சமே! ஓ பிரபஞ்சமே! மனித பிரபஞ்சமே!
பரமாத்மாவோடு ஜீவ ஆத்மா இணைவதுதானே இயற்கை
உதிர்கின்ற உறவு மன உறுதியளிக்கின்றது
முறிகின்ற உறவு முன்னேற்றி விடுகின்றது
விழுகின்ற அடியால் மனம் வீறு கொள்கின்றது
மடிகின்ற "நான்" பொதுநலமாகின்றது - இது
துறவியின் நியதி.
துறவியே! ஓ பேரன்பு கொள் - துறவியே!
என்னே! வியப்பு உன் நியதியும்,
இயற்கையின் நியதியும்
ஏனென்றால் பிரபஞ்சமும் நீயும்
ஒடுக்கத்தின் விரிவு அதுவும்
இறைவனும் நீயும் தாயின் உதரத்தில்
உருவான குழந்தை போல.

சகோ. மேரி சுஜா பெனிட்டா (1219).

# எல்லாம் நீ!

இறைவா!
நீர், நிலம், காற்று நீ!
தூய்மை, மகிழ்ச்சி,
சந்தோஷம் நீ!
பூமி தாய் நீ!
பிரபஞ்சம் நீ!
ஆற்றல் நீ, அறிவு நீ!
தெளிவு நீ!
உயிரும் நீ, உணர்வும் நீ!
வாழ்க்கை நீ, தனிமை நீ!
நீயே இறைவா எல்லாம் நீ!

சகோ. எமல்டா மார்டீனா (1480).

# என்னை சற்று பாருங்களேன்...

பிரபஞ்சம் என்ற என் தாயே
உன்னை வாழ்த்தி வணங்குகிறேன்
உன் அழகைக் கண்டு வாஞ்சிக்கிறேன்
என்னைத் தழுவும் தென்றலே
என் இதயத்திற்கு இதம் தருபவளே!
சுட்டு எரிக்கும் சூரியனே என் அன்பனே!
உன் ஒளியின் விந்தை என்னே!
நிலத்தில் தளிர்க்கும் செடி கொடிகளே
அனைத்து வகையான உயிரினங்களே
உங்களின் வளர்ச்சியே விந்தை தானே!
பாரபட்சம் அறியாத நதிகளே,
நீ செல்லும் இடமெல்லாம் நலன்பயக்கும்
உன் விந்தை என்னே!
ஆகாய திரள்களே எங்கும் நிறைந்தவளே
உன் அற்புத திறமையைக் கண்டு பூலோகமே
தலை வணங்குகின்றது என்னே உன் விந்தை!
பிரபஞ்சப் பேரன்பில் மூழ்கி
சொர்க்கத்தை கண்டுகொள்ள சொந்தமாக்கிக்
கொள்ள பிரபஞ்ச பேரன்பில் மூழ்கி
முழு மனிதத்தைப் புரிந்துகொள்ள
விசாலமான பார்வையைப் பதிவாக்கிட
அவனியில் மனிதா நீ வலம் வா!
அனைத்தையும் நேசி
பேரன்பே இந்த பிரபஞ்சம்தான் என்பது
உனக்குப் புரியும்.

சகோ. சியாமளா செலின் ஜாய்ஸ் (1238),
வ.ஊ.சி. நகர்.

# வியந்து நிற்கின்றேன்

**வியந்து நிற்கின்றேன் இறைவா!**
**கண் அகல விரித்து நிற்கின்றேன்**
தன்னலமில்லா பிரபஞ்சத்தின்
தாராளத்தைக் கண்டு
தனக்கென எதையும் வைத்துக்கொள்ளா
தகைமையைக் கண்டு
தன்னை படைத்தவனை தினம் தினம்
போற்றுவதைக் கண்டு
தன் ஒடுக்கம் தூர
ஒழுங்கமைப்பைக் கண்டு
**வியந்து நிற்கின்றேன் இறைவா!**
**கண் அகல விரித்து நிற்கின்றேன்**
தற்பெருமைத் தேடா தன்மையைக்
கண்டு பாரபட்சம் பாரா பாங்கைக்கண்டு
பதவிக்காக ஏங்கா பக்குவம் கண்டு
பகிர்வதைக் கற்று தருவதைக் கண்டு
ஒற்றுமையை உலகிற்கு
உணர்த்துவதைக் கண்டு
இந்த பிரபஞ்சத்தில் உமது
பிரசன்னத்தைக் கண்டு
பிரபஞ்சத்தின் எல்லையில்லா
பேரன்பைக் கண்டு
**வியந்து நிற்கின்றேன் இறைவா!**
**கண் அகல விரித்து நிற்கின்றேன்.**

சகோ. மேரி கிறிஸ்டினா (1199).

# ஓ பிரபஞ்சமே!

பிறப்புகூட இரகசியமான எல்லையில்லா பிரபஞ்சமே!
பிரம்மிப்பூட்டுகிறது உன் பிரமாண்ட படைப்புகள்!
பிரம்மனின் முழுமையான பிம்பமே
சுவாசமானதும் இயல்பானதும் உன் பேரன்பே
மூவொரு இறைவனை முன்னிருத்தி
வேரூன்றி ஒன்றிணைய வேண்டும்
படைப்புகளின் குருவாகிய நீ வழி நடத்திடு
எம்மை வளமிக்க புதிய பரிமாணத்தை நோக்கி...

சகோ. பரலோக மேரி (1491).

# மானிடா! யோசி!

கானத்தில் எண்ணற்ற உயிரினங்கள் ஆயினும்
அங்கு ஏது கலகம்
ஆழ்கடலில் விசித்திரமான படைப்புகள் ஆயினும்
என் ஏரியா உன் ஏரியா என்ற இடப்பிரச்சினை ஏது?
நான்கு வழி சாலை எட்டு வழி சாலை ஆயினும்
தினம் தினம் எத்தனை விபத்துக்கள்
கோள்களின் நீள் வட்டப்பாதையில்
என்றேனும் விபத்து ஏற்பட்டதுண்டா?
அக்கினியில் நிறம் மாறும் தன்மை
என்றேனும் கண்டதுண்டா
நாள்தோறும் ஓயாமல் இயங்கும்
ஆதவனில் மாற்றம் உண்டோ?
ஓரிரு நாட்களில் மடிந்து விடும்
மலர்களில் எத்துணை மணம்
எத்துணை மகிழ்ச்சி அப்படியானால்
கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மனிதா!
உன்னிடம் மட்டும் ஏன் இத்துணை வேறுபாடு
பிரபஞ்சத்தைப் பார்த்துக் கற்றுக் கொள்!
வாழ பழகிக் கொள்! மானிடா யோசி!

சகோ. மெர்சி (1200).

# பிரபஞ்சப் பேரன்பு

பேரன்பின் பிறப்பிடம் பிரபஞ்சம் - அது
பரமனின் படைப்பாற்றல்!
அண்டத்திலும் பிண்டத்திலும் ஆண்டவன்!
மனித உடலிலும், மண்ணுலகிலும் பஞ்சபூதம்!
என் உணர்விலும் உள்ளத்திலும் உறையும்
உன்னதரிலும் பஞ்சபூதம்!
நிலமாய், நெருப்பாய், தென்றலாய், தேனருவியாய்
நீலவானமாய் எங்கும் எதிலும்
நிறைந்த பேரன்பே இறைவா!
சுற்றும் பூமியிலும் சுழலும் காற்றிலும்
பொழியும் மழைத்துளியிலும்
எரியும் நெருப்பிலும்
மின்னும் வானிலும் - உம் பேரன்பு என்னே!
இறைவா! என்னில் நீ! உன்னில் நான்!
நாம்தான் பிரபஞ்சம்

சகோ. கலைச்செல்வி (1315).

# இயற்கையை காப்போம்

இனியொரு உலகு செய்ய மனிதனே!
உன்னால் கூடுமோ!
இறைவன் தந்த இவ்வுலகம்
நம்மால் வாடுமோ
மரமெல்லாம் வெட்டியாச்சு
மாடி வீடுகள் கட்டியாச்சு!
நீர் தடாகங்கள் பல உண்டு
நீர் மட்டும் இல்லையோ!
நாற்றுகூட அசைந்தாட
காற்றும் இங்கு இல்லையே!
மலரைப் போல வாசம்
மகிழ வைக்கும் சுவாசம்!
காற்றெல்லாம் ஆனது விஷம்
என்ன செய்யப் போகுது
கலர் கலராய் நெகிழி
கண்ணைப் பறிக்குது பாரு!
கண்ணீர் வழங்குது பூமி
கதறி அழுவது சாமி!
நாகரீகம் நவீனம் நாடகமாடும்
தொழில்நுட்பம் இயற்கையெல்லாம்
அழிந்துபோச்சு, செயற்கைதான்
நிறைஞ்சு போச்சு
விஷமான பூமியிலே
விவசாயம் வாழுமோ!
நஞ்சாகப் பயிரெல்லாம்
நஞ்சாகிப் போயிடுமோ
காற்றையும் காசுக்குத்தான்
வாங்கணுமோ! தண்ணீரையும் தங்கம்
கொடுத்துதான் குடிக்கணுமோ!
உன்னை சுமக்கும் பூமியை
உன்னால் சுமக்க முடியாதோ!
ஒவ்வொரு மனிதனும் முயன்றுவிட்டால்
பூமியைக் காக்க முடியாதா!
முடியும் நண்பா முடியும் முயன்றிடு
பூமித்தாயின் புதுமைப்
புதல்வியாய் பாசத்தோடு
பிரபஞ்சத்தோடு இணைந்திடு
பேரன்பில் வாழ்ந்திடு

சகோ. உஷா கிரேஸி (1258),
கொரடாச்சேரி.

# பிரபஞ்சம்

உனக்கு யார் இந்த பெயர் சூட்டியது
நீ உன் சக்தியைக் காட்டிப்
பெற்றுக்கொண்ட பரிசு தானே அது
பிரபஞ்சமே இத்தனை ஆண்டுகள்
நான் உன்னை உணர்ந்தும்
பயன்படுத்தியும், அறிந்தும், அனுபவித்தும்
இன்னும் உன்னன்பை ஆழ உணராமல்
இருப்பது ஏன்? இருந்தது ஏன்?
உணர்ந்தேன் இன்று
உறைவேன் உன்னில்
உன்னை நேசிக்க மறந்ததை
யோசிக்க ஆரம்பித்தேன்
யோசிக்க ஆரம்பித்ததும்
வாசிக்க ஆரம்பித்தேன்
வாசிக்க ஆரம்பித்ததும்
சுவாசிக்க ஆரம்பித்தேன்
சுவாசித்தேன் சுவாசித்தேன்
உன்னில் என்னை
என்னில் உன்னை - பிரபஞ்சமே
வா கரம் கோர்ப்போம்
கஷ்டம் இல்லாத சுகமான சுலபமான
வாழ்வை கொண்டவன் நான்
(நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு)
என்னை இஷ்டப்பட்டு அன்பு செய்ய வா!
வா! என்னவளே வா!
என்னில் சங்கமிக்க!!!

சகோ. மரிய ஆண்டனி ரிபிஸ்டா (1390).



# நிரந்தரம் எது?

பாதைக்கு காலடிகளோ...
கரைக்கு அலைகளோ...
வானிற்கு மேகங்களோ...
மரத்திற்கு இலைகளோ...
வரப்பிற்கு வேலிகளோ...
மனிதனுக்கு சொந்தங்களோ...
வாழ்க்கைக்கு வலிகளோ...
புகழ்ச்சிக்கு அவமானங்களோ...
அநீதிக்கு துணைகளோ...
நல் உள்ளத்திற்கு காயங்களோ...
என்றும் சொந்தமில்லை!
எவையும் இங்கு நிரந்தரம் இல்லை!

சகோ. பிரிஜிட் லிபியா,
செய்துங்கநல்லூர்.

# யாரால்? யாரால்?

நிலமே! நிலமே!
உன்னை யாரால் கடக்க முடியும்
காற்றே! காற்றே!
உன்னை எதனால் நிரப்ப முடியும்
நீரே! நீரே!
உன்னை யாரால் மொல்ல முடியும்
வானமே! வானமே!
உன்னை யாரால் எட்டிப் பிடிக்க முடியும்
தீயே! தீயே! உன்னை யாரால்? எதனால்?
அணைக்க முடியும்
படைத்தவனே! பஞ்சபூதங்களை
படைத்தவனே! பஞ்ச மூலங்களை
என்னுள் அடக்கி ஆள்பவனே
என்னை உருவாக்கி படைத்த ஆண்டவனே!
நீர் போற்றி! நீர் வாழ்க! நீவிர் வாழ்க!

சகோ. ஹெலன் விஜி (1304),
ஆத்துக்குடி.

# என் பேரழகே!
# என் பேரன்பே!

நான் ஒளியைத் தேடினேன்
உள்ளொளியாய் என்னில் உதயமானாய்
உன்னை என்னென்று சொல்வேன் வியந்தேன்
நிலமாகிய உன்னைத் தோண்டிப் பார்த்தேன்
என்னைத் தாங்கி நின்றாய்
நீராகிய உன்னை அணைகட்டி
அடக்கிப் பார்த்தேன் வீருக்கொண்டு
சென்ற இடமெல்லாம் வளமாக்கினாய்
காற்றாகிய உன்னை தொழிற்சாலை
புகையால் மாசுபடுத்தினேன்
உன்னை அவ்வப்போது
தூய்மைப்படுத்திக் கொண்டாய்
ஆகாயமாகிய உன்னை கரியமில
வாயுவால் ஓட்டை போட்டேன்
மேகமாய் மூடி என்னை
பாதுகாத்துக் கொண்டாய்
நெருப்பாய் உன்னை எரித்துப் பார்த்தேன்
என்னில் சுடர்விடும் தீபமாய்
அக விளக்கேற்றினாய்
என் வாழ்வை மாற்றி நின்றாய்
அத்தனையும் நன்மையால் நிரப்பி
நன்மையே உருவாகி நின்றாய்
எங்கும், எதிலும், எவரிலும்
உன்னைக் காண வரம் தா!
என் பேரழகே! என் பேரன்பே!

சகோ. தஸ்நேவிஸ் மேரி (1291).

# வரமாய் வருவாய்

பொழிவாய் மழையாய்
எழுவாய் ஊற்றாய்
விழுவாய் வீழ்ச்சியாய்
தவழ்வாய் நதியாய்
ஓடுவாய் ஓடையாய்
நிற்பாய் குளமாய்
உறங்குவாய் அணையாய்
அலையாய் கடலாய்
வரமாய் வருவாய்
தண்ணீர் தாயே!

சகோ. ஆரோக்கிய மேரி (1441).

# பிரபஞ்சம்

தினமும் எழும் சூரியனே!
உன்னை யார் எழுப்புகிறார்?
துணையே இல்லாத நிலவே
யாருக்காக தினமும் காத்திருக்கிறாய்..!
மேகமே உனக்கு என்ன
அவ்வளவு சோகம்
மழையாய் பொழிகிறாய்..!
வானவில்லே ஏழு வண்ணத்தில்
யாருக்காகப் பாதை அமைக்கிறாய்..!
எல்லாம் மனிதனுக்காகவா? இல்லை
யாருக்காக உழைக்கிறாய்?..
உன் உழைப்புதான்
இப்பிரபஞ்சத்தின் வெளிப்பாடு
உழை உழைத்து கொண்டே இரு.
நிறுத்தாதே...

சகோ. விஜீ டென்னிஸ் (1433),
விளார் கல்லூரி.

# பேரதிசயம்

மரங்களின் அசைவே குயிலின் பாட்டுக்கு வீணையாகும்
மழையின் துளியே மயிலின் ஆட்டத்திற்கு கைத்தாளமாகும்
நீரின் அலையே கடலுக்கு கோலமாகும்
வீசும் காற்றே அசைவுறும் இலைக்கு புல்லாங்குழலாகும்
இவை அனைத்தும் பிரபஞ்சத்தின் பேரதிசயமாகும்.

சகோ. எழில் (1499).

# மகிழ்ச்சியாக வாழ...

பிரபஞ்சத்தில் மிதக்கும் துகள்களில்
ஏதோவொரு துகளாக
வாழ்ந்து விட்டுப் போய் விடலாம் என்று
நான் நினைத்தேன்
உன்னைப் பற்றி ஆழ்ந்து நினைக்கையில்
உன்னுள் ஆழ்ந்த விசயங்கள்
உள்ளதைப் பற்றி வியப்படைந்தேன்
இப்பிரபஞ்சத்தில் உன்னைத் தேட
என்னை உந்தித் தள்ளுகிறது
இவ்வுலகில் எதுவுமே நிரந்தரமில்லை
உன் திட்டமின்றி எதுவுமே நடக்காது
இன்பமும் துன்பமும் இல்லாமல்
என் வாழ்க்கை நகராது
எனக்காக நீ பல கோடி ஜீவராசிகளை
படைத்திருக்கின்றாய்
அன்பால் இணைந்து அனுபவத்தை
பெற்று உன்னில் நான் மகிழ்ந்து
இவ்வுலகை மகிழ்விக்க
ஆசீர் தந்திடுவாய் ஏனென்றால்
எல்லாமே இங்கு உன் ஆற்றல்
பரிமாற்றம் தான்

**சகோ. வெனான்ஸ் மேரி (1206),**
**செம்பருத்திவிளை.**

# பிரபஞ்சப் பேரன்பு

வெண்ணிலாவின் ஒளி வியக்கத்தக்கது
மண்ணின் வாசம் மயக்கத்தக்கது
பூக்களின் நறுமணம் புதுமையானது
மலையின் மௌனம் அர்த்தமானது
அன்பின் உறவு ஆழமானது
பறவைகளின் பாட்டு இனிமையானது
இவையனைத்தையும் உள்ளடக்கிய
கடவுளின் பேரன்பு
புதிரானது புனிதமானது
பிரபஞ்ச பேரன்பே நீர் வாழி!

சகோ. இசபெல்லா (1428).

# வியப்பில் பேரானந்தம்

உன் விழிகொண்டு கவிதைகளை வீசி என்
இதயம் திருடும் இப்பிரபஞ்சப் பேரன்பே!
நீ என் கண்களுக்கு தருவது வியப்பே!
பாதையைத் தவறவிட்டால் போகுமிடம்
எதுவென்று தெரியாது
பார்வையில் தெளிவு இருந்தால் இலக்கு
ஒன்றைத் தவிர வேறெதுவும் தெரியாது
ஒட்டுமொத்த உலகையும்
உள்ளடக்கிய முதல்வனே!
உம்மைப்போல் ஒருவரையும் காணவில்லையே!
உம் முகம் காண ஓடோடி வந்தேன்
உம் ஆசீர் தந்து உம்பதம் அமர்த்தினாய்
உமது ஐந்து விரலில்
இவ்வுலகை அடக்கினாய்
ஆனந்தமாய் வாழ வழியும் தந்தாய்
அணுவையும், ஆற்றலையும் ஆக்கவும்
அழிக்கவும் சொல்லித் தந்தாய்
எட்டவும் முடியாத விண்ணுக்குச் சென்று
ஆராய்ச்சி செய்து,
விஞ்ஞானம் முன்னேறச் செய்தாய்
உயிர்கள் வாழ உணவும் தந்தாய்
உள்ளம் மகிழ எழில் கொஞ்சும்
இயற்கையைப் படைத்தாய்
இன்பமாய் வாழ நல் உறவுகளைத் தந்தாய்
துறவு, குடும்பம் என்ற
உன்னத வாழ்வைத் தந்தாய்
பேரின்ப இறை ஆற்றலைத்
தந்த உம் அன்புக்கு
இப்பிரபஞ்ச பேராற்றலோடு இணைந்து
நன்றி கூறி மகிழ்கின்றேன்
உம்பதம் அமர்கின்றேன்
உம் ஆசீர் அருளாயோ!!!

**சகோ. ஷோபா அந்தோணியம்மாள் (1204),**
**பல்லாவரம்.**

# அன்பை அன்பு செய்கின்றேன்!

மண்ணிலே உருவாகி
உயிர்மூச்சால் உருக்கொடுத்து
உறவாட உலாவரும்
உன்னதப் படைப்பே

காற்றாய் கட்டித்தழுவி
மழையாய் முத்தமிட்டு
சூரியனாய் சுற்றிவந்து
சந்திரனாய் பின்தொடரும்

நிலமாய் தாங்கி
மலராய் புன்னகைத்து
தென்றலாய் தீண்டி
ஒளியாய் படர்ந்து

எல்லையில்லா உம் பேரன்பை
எண்ணி வியக்கின்றேன்
உம் பேரின்பம் எனும் ஆழியிலே
தினம் மூழ்கித் திளைக்கின்றேன்.

**சகோ. ஆரோக்கிய செல்வி (1265).**

# இயற்கை!

இயற்கையே அழகுதான்
எத்தனை யுகம் கடந்தாலும்
அழியா வரம் பெற்ற இறைவனின்
அதீதப் படைப்பு
நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச்
சென்ற பரிசு
இயற்கையைக் காப்போம்
நல்ல இயற்கையை விட்டுச் செல்வோம்
வரும் தலைமுறைக்குப் பரிசாக.

**சகோ. நான்சி டயானா (1448).**

# கருப்பொருளான இறைவா!

காணும் காட்சியெல்லாம் நீக்கமற நிறைந்தவா
நின் பேராற்றலே இப்பிரபஞ்சம்
வானும், மண்ணும், அதில் நிறையும் பூவினமும்
கடலும், மலையும் அதன் பிரமிப்பும்
அகன்று விரிந்த ஆகாயமும்
பரந்து பரவிடும் இயற்கையின் வனப்பும்
விந்தையாக இவ்வுலகைப் படைத்து
நாளும் எம் சிந்தையில் கலந்திட்ட
அற்புத இறைவா!
உம் திறத்தை எண்ணி எண்ணி
வியக்கச் செய்தவா!
கருத்தின் கரு பொருளே
காலத்தில் நிறைந்து நிற்கும் கலை வடிவே
ஆதியும் அந்தமுமாய் ஆனவா
நீயே பேரன்பு நீயே அனைத்தும்.

**சகோ. மரிய தேன்மொழி (1251).**

# என்ன அழகு?

இறைவா! நீ ஒரு அழகு
நீ உருவாக்கிய பிரபஞ்சம் ஒரு அழகு
பிரபஞ்சமே எம்மை அன்பு செய்யும்
உம் அன்பு ஒரு அழகு
இயற்கையே! எம்மைப் பாதுகாக்கும்
உம் பாசம் ஒரு அழகு
பூமியே எம்மை காக்கும், தாங்கும்
உம் பொறுமை ஒரு அழகு
தண்ணீரே! எம் தாகத்தை தீர்க்கும்
உம் தியாக உள்ளம் ஒரு அழகு
காற்றே! எம் உடலை இயங்கச் செய்த
உம் சுவாசம் ஒரு அழகு
மனிதனே! நீ ஒரு அழகு
நீ பாதுகாக்கும் பிரபஞ்சம் ஒரு அழகு
இனி சொல்வதற்கு ஒன்றுமில்லை
ஆம், அனைத்தும் அழகு உனக்குள்
எனக்காய் பிறந்த பிரபஞ்சமே.

**சகோ. கிறிஸ்டினா புளோசியா (1438),**
**பாலத்தடி.**

# பார்க்க விரும்புகிறேன்...

**நிலமே!**
சுற்றும் பூமியை சுற்றுவது யார் என்று
சுற்றிப் பார்க்க விரும்புகிறேன்

**நீரே!**
வடிவமற்ற நீ செல்லும் இடமெல்லாம்
வழியமைத்துக் கொள்கிறாய்
மலை உச்சியில் உயர்ந்த
இடத்தில் உருவாகும் நீ
தூய்மையான நீராக கீழிறங்கி வந்து
உப்பு நீராம் கடலோடு கலந்து
இறையின் தூய்மைக்குள் செல்ல
உனக்கு சொல்லித் தந்தது யார்?
உன்னைப் பார்க்க விரும்புகிறேன்

**காற்றே!**
எங்கும் நிறைந்திருக்கும் நீ
கையில் சிக்காத நீ
உன்னைப் பிடிக்க ஆசைப்படுகிறேன்
பார்க்க விரும்புகிறேன்

**ஆகாயமே!**
எங்கு சென்றாலும் என்னுடன் பயணிக்கிறாய்!
உன்னைத் தொட விரும்பினால்
தூர சென்றுகொண்டே இருக்கிறாய்
நிதம் காணும் உன்னில் மாற்றம் நிகழ்கிறதே!
அந்த தருணங்களைப் பார்க்க விரும்புகிறேன்.

**நெருப்பே!**
ஒளியே! உன்னை வணங்குகிறேன்
நீ என் வழியாகிறாய்
இருட்டில் சிறு ஒளி அதுதான் பேரொளி!
உன் வெப்பம் அதை நீ எங்கிருந்து பெறுகிறாய்!
உன்னைப் பார்க்க விரும்புகிறேன்.

இந்த பிரபஞ்சத்தின் வழி
உன்னை உணர்ந்து கொள்ள
நீ என்னைப் படைத்திருக்கிறாய்! நன்றி இறைவா!
உன்னை அறியும் அறிவையும்,
ஞானத்தையும் தந்து மற்றெல்லா உயிர்களைவிட
உயர்ந்த படைப்பாய் என்னை படைத்ததற்காய்
நன்றி இறைவா! நன்றி!

சகோ. ஆரோக்கிய ஜெயா,
மன்னார்குடி, ருக்மணிபாளையம்.

# இயற்கையை நேசி

ஒவ்வொரு படைப்பும் சொல்கிறது
பிரபஞ்சம் நம்மோடு இருப்பதை
பிரபஞ்சம் என்பது என்ன?
நம் வாழ்வில்
இயற்கை நம்மோடு பேசுவதே பிரபஞ்சம்
மனிதா! ஓ மனிதா! நீ உணர்ந்திடு
பிரபஞ்சம் உன்னோடு இருப்பதை
மனிதா! நீ ஒரு படைப்பாளி!
அதனால் நீ இயற்கையை உருவாக்கு!
இயற்கையை நேசி!
இயற்கையோடு வாழ்! அவ்வாறெனில்
பிரபஞ்சம் உன்னோடு
இருப்பதை உணர்ந்திடுவாய்.

சகோ. கல்பனா (1459)

# உம் அருள் கேட்கின்றேன்

நீர் தாகத்தைத் தணிக்கின்றது
காற்று உடலைத் தூய்மையாக்குகின்றது
நெருப்பு தீமையைச் சுட்டெரிக்கின்றது
நிலம் விளைச்சலைத் தருகின்றது
ஆகாயம் மழையைப் பொழிகின்றது
இவ்வாறு பிரபஞ்சம் தன் பணியை
சிறப்பாக ஆற்றுவது போல நானும்
உம் பணியை ஆற்ற
இறைவா! உம் அருள் கேட்கின்றேன்.

சகோ. டெல்சி சந்திரா (1422),
நாசரேத் இல்லம்.

# பிரபஞ்சத்தின் FORMULA

அன்பாகி அருளாகி உருவாக்கும் அறிவாகி
இருத்தலும் இயக்கமும் நீயாகி
உடன் வாழும் இறைவா போற்றி
வான் திசை எங்கனம் நீ பார்
விசித்திர ஆகாயமும் பஞ்சபூதங்களும்
அதன் அழகும் கலையும் ஆண்டவனின் பேரன்பே
பிரபஞ்சம் வேறு; நான் வேறல்ல
வானும் வசப்பட வைக்கும் அறிவு
மானுட நேர்மறை சக்தியாலே
அவன் இயல்புகளைக் கடந்து சென்று சிந்திப்பவன்
பிரபஞ்சத்தின் பாடம் இதுவே
இது அழகான இயல்பல்லவா?
அண்ணல் பிரான்ஸிசின் கொள்கை "மௌனமல்லவா"
மூவொரு தெய்வமே ஒருங்கிணைதல் சான்று
அதுவே நிதர்சனம் வெற்றி
காலத்தின் வேகம் எல்லைகளைக் கடந்தது
நம் அடைக்கல சபை
பிரபஞ்சத்தின் பேரன்பில் பயணிக்க இதுவே காலமானது
நம் சபையே திரு அவை
ஐம்பூத சக்தியின் வெளிப்பாடு
நம் வாழ்க்கையின் வளர்ச்சி, சாதனை
தன்னுடனும் தன்னை படைத்தவனுடனும் இணைவது
இது முதிர்ச்சியின் குன்று
பிரபஞ்சத்தின் formula நாம் அனுபவிக்கும் நற்செய்தியின் சாறல்
இதையே விஞ்ஞானம் மெய்ப்பிக்கும் அறிவு
மாற்றுக் கருத்தில்லையம்மா
பிரபஞ்சத்தின் முழுஉருவே அன்னை மரியாள்
வழிகாட்டலின் அன்புறவே சீடத்துவம்
பிரபஞ்சத்தின் பேரன்பின் வழி துறவு
அதுவே நாம் அளிக்கும் அர்ப்பணம்
மகிழ்வோடு பயணிப்போம் இப்பிரபஞ்சத்தில்.

சகோ. ருபினா ரொசாரியோ (872),
சின்னமலை.

# ஓ! படைப்பாளியே!

நான் ஆகாயத்தைப் பார்க்கிறேன்
இறைவா! நீர் எவ்வளவு பெரியவர்
என்று நான் கடலைப் பார்க்கிறேன்
இறைவா! நீர் எவ்வளவு ஆழமானவர்
என்று பூக்களின் வண்ணங்கள்
என்னை ஆச்சரியப்படுத்துகிறது
இயற்கையின் பசுமை இறைவா!
என்னை மயக்குகிறது
பறவைகள் விலங்குகளின் ஓசைகள்
இசையாய் எனக்கு கேட்கிறது
ஓ! படைப்பாளியே (படைத்தவரே)
இந்தப் பிரபஞ்சம் முழுவதையும்
பார்க்கும் போது
நீர் ஒரு ஓவியரோ அல்லது கலைஞரோ
என்று நினைக்கத் தோன்றுகிறது
ஆறு நாட்கள் இவ்வுலகை
அழகாக அற்புதமாக நீர் படைத்தீர்
ஓ! படைப்பாளியே!
புதிய மனிதர்களைப் படைத்தருளும்
எப்பொழுதும் அன்பு செய்யத் தெரிந்த
புதிய மனிதர்களைப் படைத்தருளும்.

**சகோ. இண்பன்ட் மேரி பிரிஜிட் (1273).**

# ஒருங்கிணைவோம்!

இது ஓர் கற்பனைக்கதை!...
இறைவன் சமையல் செய்யப் புறப்பட்டார்
பெரியதோர் பாத்திரம் செய்தார்
நேர்வினை, எதிர்வினைகளின் மூலம்
அதிலே சூரியக்குடும்பம் எனும் அரிசியிட்டு
கோள்கள் எனும் பருப்பிட்டு
பஞ்சபூதம் எனும் மசாலா போட்டு
மனிதன் எனும் உப்பிட்டு
அருமையாய் சமைத்தார் பிரபஞ்சத்தை!
பிரபஞ்சமே, பிரபஞ்சத்தை
சமைத்துப்பார்க்கத் தயாரா?
ஒருங்கிணைவோம்! வழிநடப்போம்!

**சகோ. மரிய ஷாம்லி (1446),**
**மௌளச்சூர்.**

# படைத்தாய் இறைவா!

அன்பாய் படைத்தாய்!
ஆசையாய் படைத்தாய்!
இசைவோடு படைத்தாய்!
ஈகையோடு படைத்தாய்!
உண்மையாய் படைத்தாய்!
ஊனுயிர்களைப் படைத்தாய்!
எண்ணிலடங்கா நன்மைகளை
ஏட்டிலடங்கா உண்மைகளை
ஐம்புலன்களில் உணர
ஒன்றித்து வாழ
ஓடிடும் உலகத்துடன்
படைத்தாய்! படைத்தாய்!
பஞ்ச பூதங்களைப் படைத்தாய்!
உருவமின்றி எங்குமிருந்து எவ்வித
ஏற்றத் தாழ்வின்றி உயிர் ஜீவராசிகளின்
சுவாசமான காற்றைப் படைத்தாய்
நீர் உண்டாக்கிய அனைத்தும்
வாழ நிலத்தைப் படைத்தாய்!
பல்வித நட்சத்திரக் கூட்டமும்
மேகப்பஞ்சும் சந்திரனோடு இணைந்த
ஆகாயத்தைப் படைத்தாய்!
தூய ஆவியின் அக்கினியாம்
நெருப்பைப் படைத்தாய்!
கடலாக நதியாக ஏரியாக ஓடையாக
குளமாக அனைத்திற்கும் தாகம் தீர்க்கும்
நீரைப் படைத்தாய்!
ஆக இவையனைத்தும்
இணைந்து இயங்கப் படைத்தாய்
என்னை உம் அன்பின் வெளிப்பாடாக.

**சகோ. மேரி மெட்டில்டா (1431),**
**முசாபர்பூர்.**

# பிரபஞ்சமே! நீ வாழ்க!

பிரபஞ்சத்தில் மிதக்கும் துகள்களில்
ஏதோவொரு துகளாக
வாழ்ந்து விட்டுப் போய் விடலாம் என்று
நான் நினைக்கிறேன்
ஆனால் எனது அருகில்
இருக்கும் துகளோ நீர்
ஆம். ஓர் அரிய துகள் நீர் இறைவா!

உன்னுள் ஆழ்ந்த விசயங்கள் உள்ளது
அதைத் தேடி இந்த பிரபஞ்சத்தில்
உலாவவிடு என்று உந்தித் தள்ளுகிறது
நானோ கேலியாக சிரிக்கிறேன்
அந்த துகளோ என்னை முறைக்கிறது
சொன்னதை செய்யென!

எதையும் தாங்கும் நிலமாய்
தாகம் தணிக்கும் நீராய்
கடந்து செல்லும் காற்றாய்
இருளைப் போக்கிடும் ஒளியாய்
ஆகாயம் போல் உயர்ந்த எண்ணம்
கொண்டு வாழ
கற்றுத் தரும் பிரபஞ்சமே!
ஓ பிரபஞ்சமே! நீர் வாழ்க!

சகோ. ரூத்து மேரி (1508).

# மறு உருவம்

ஆண்டவனின் மறு உருவம் மனிதன்
இருளின் மறு உருவம் ஒளி
காற்றின் மறு உருவம் சுவாசம்
வேரின் மறு உருவம் மரம்
நீரின் மறு உருவம் மழை
கடலின் மறு உருவம் அலை
தாயின் மறு உருவம் குழந்தை
மனிதனின் மறு உருவம் புனிதம்
இத்தகைய அனைத்தும் அடங்கிய
பிரபஞ்சத்தின் மறு உருவம்தான்
ஆண்டவன்.

சகோ. மெசியா மேரி (1474).

# பிரபஞ்சமே உன் ஆற்றல்

கடல் அலையும் ஓய்வதில்லை
காற்றும் திசை மாறி
அடிக்காமல் இருப்பதில்லை
நம் மூச்சும் சுவாசிக்காமல் இருப்பதில்லை
காற்று இல்லையென்றால்
நம் மூச்சும் இல்லை இறையே!
நின் படைப்பில் நான் ஒரு ஓவியம்!
நிரந்தரமில்லா உலகில் நிரந்தரமானவன் நீ
பிரபஞ்சமே உன் ஆற்றல்
பிரபஞ்சமே உன் கைவன்மை
நின் பேராற்றல் என் ஆற்றல்
நின் படைப்பால் உலகம் மகிழச்செய்பவனே
அண்ட சராசரமே நின் பாதம்
நாடிடச் செய்பவனே
நீ வாழ்க! வாழ்க! வாழ்க!

சகோ. மேரி பிரேமா (1442),
சதுராஸ்.

# அதிசய அன்னை

ஆதியும் அந்தமுமான ஆண்டவனின்
அழகிய படைப்பாய்...
நீரும் நெருப்பும் காற்றும் கழனியும்
ஆகாயமும் கொண்ட பஞ்சபூதமாய்
அறியக்கூடிய எண்ணிக்கையில்
உருவாகி அறியமுடியா
விந்தைகளைப் பிரசவிக்கும்
அதிசய அன்னையாய்...
உன் பிறப்பை அறிந்தே தீருவேன் என்று
அலை அலையாய் எழுந்த அறிஞர்களுக்கு
ஆச்சரியமூட்டும் உண்மைகளை
அள்ளித்தரும் ஆசானாய் திகழும் பிரபஞ்சமே!
நீ யாரோ நான் யாரோ என்று வாழ்ந்த எனக்கு
நீயும் நானும் ஒன்றுதான்...
என்பதை உணர வைத்தாய்...
உன் உடனிருப்பின் வழி...

சகோ. தெரசா.

# உன்னை கண்டு வியந்தேன்

விசித்திரதமான உலகிலே விந்தை
செய்யும் பிரபஞ்சத்தை என்னென்பேன்!
அழகாகக் காட்சி தரும் ஆகாயம்
ஆகாயத்தின் உள்ளே நடக்கும்
அதிசய அரங்கேற்றங்கள்
தினமும் நடக்கும் அரங்கேற்றத்தால்
நிகழும் அதிசயங்கள்
அந்த அதிசயம் தான் நிலம்
உயிர் மூச்சுக்காற்று
அன்பில் எரியும் நெருப்பு
பச்சை வண்ண இயற்கைச் சோலை
இதைக் கண்டு என்னென்பேன்
உன் இயற்கை அழகை!

**சகோ. ஆரோக்கி வென்சி (1504),**
**சபைத் தலைமையகம்.**

# பிரபஞ்சமே! எம் தஞ்சமே!

பிரபஞ்சமே எம் தஞ்சமே
படைப்பே எம் பேரன்பே
எம்மை வாழ வைத்த பிரமிப்பே
எமக்கு உயிர் உணவு தந்து காத்த சாமியே!
பிரபஞ்சமே எம் அருள்வளமே
உன்னை அழித்து கூர்படுத்தி
நிம்மதி பெருமூச்சு விட்டோம்
எம்மை பொறுத்தருளும் சாமியே
உலகே வாழ வழிவிட்டவளே
உம் கூறுகள் காற்று, நிலம், நீர்
இல்லாமல் வாழ முடியா அற்பங்கள் நாங்கள்
உம் இருப்பை, அன்பு செய்ய பாதுகாக்க
நல் மனம் தா சாமியே!

**சகோ. சேவியர் லிட்டில் திரேஸ் (1228),**
**பட்டுக்கோட்டை.**

# பிரபஞ்சம் என் சுவாசம்...

புதிரான இவ்வுலகம் தானே தோன்றி
தானே மறையும் விந்தை
அனைத்தும் அறிந்த வானுலக வேந்தன் நீ
வானையும் பூமியையும் அளந்து முடித்தவன் நீ
இவ்வுலக இயக்கங்களில்
உன் ஆட்சியே பிரதிபலிக்கிறது.
வெற்றி தோல்வி விவேகம் ஆற்றல்
இன்பம் துன்பம் வாழ்வு சாவு என
மாறி மாறி என் வாழ்வை பந்தாடுபவனே!
உன்னை உன் திட்டத்தை அறிய எண்ணியபோது
காற்றில் கலந்து என் சுவாசம் நுழைந்தாய்!
உலகமே உன் கையில் என்று
என் சுவாசத்தை உலகறியச் செய்தாய்!

**சகோ. ஜோஸ்பின் பிரியா (1279).**

# இயற்கையே!

உன் சுவாசக் காற்றால்
என் வாழ்வு சுவாசம் பெற
உன் சேயான புவியோ
என்றென்றும் உன் மடிதவழ
வான்முகில் பொழிய!
வயல்வெளி செழிக்க
நீயே வரம் தருவாயே!
அண்டம் உள்ளவரை...

**இயற்கையின் நட்பில்,**
**சகோ. சூசைமேரி (950),**
**அடைக்கல அன்னை இல்லம்,**
**மன்னார்குடி.**

# இயற்கையில் இன்பம்!



இயற்கையின் அழகைப் பாட
சிட்டுக்குருவியின் சிறகுகளைக் கேட்டேன்
சட்டென்று அடித்துவிட்டுச் சத்தமில்லாமல்
படுத்துக் கொண்டது.
மழைகளுக்கு நடுவில் மலர்களின்
வாசத்தோடு பயணித்தேன்,
மனித வாடை இல்லாத தேசம்
மரணம் இல்லை உனக்கு என்றது.
பொங்கிய நீருற்றுக்கள், புதுமைக்குரியவனே
போதாது உனக்கு நாட்கள் என்றது.
காரிருள் கடந்த போது காணாமல் போன விண்மீன்களை
கதிரவனின் கிரகணங்கள் காடுகளுக்கு
நடுவில் தேடிக் கொண்டிருந்தது.
புதிய விடியல் கண்ட பூமிக்கு பூக்களைத் தூவிய மரங்கள்
பிறந்த நாள் வாழ்த்துக் கூறி பெருமைப்பட்டுக் கொண்டது.
வறுமைக்கோடு என்பது வனங்களுக்கு தெரியாது.
வரைபடங்களுக்கு நடுவே வார்த்தைகளை வாசித்த எனக்கு
வனாந்திரத்தில் வளைய வந்த போது
வாழ்க்கையின் அர்த்தம் வசப்பட்டுக் கொண்டது.
விசப்பூச்சிகள் இங்கு இல்லை, வீண்விவாதங்கள் இல்லை
வெற்று உடம்பில் வீசிய தென்றல்
பற்றிக் கொண்ட மனதிற்கு பற்று போட்டுச் சென்றது.
கைகளைத் திறந்து கன்னங்களை ஒற்றிய போது
கவலையின் ரேகைகள் காணாமல் போனது.
ஈர்ப்பு விசை இதயத்திற்கு மட்டுமல்ல
எனக்கும் தான் என்றது பூமி
நட்புக் கொண்ட இந்த நன்மைகளை விட்டு
நாட்டுக்குள் செல்ல நான் தயாராயில்லை.
இதுதான் என் இறுதி இடம் என்றேன்,
இயற்கையை அணைத்துக் கொண்டு எழுந்து நின்றேன்,
எங்கும் சுகமாக இருந்தது.

**சகோ. ஜோதி,**
**அடைக்கல அன்னை இல்லம்,**
**மன்னார்குடி.**

# இயற்கை

இயற்கையின் படைப்பால் இறைவனைக் கண்டேன்!
ஈடில்லா ஆனந்தம் மனதில் கொண்டேன்!
என்னில் நீ கலந்தாய் எனக்குள் நீ உறைந்தாய்!
உன்னில் என்னில் கண்டேன்! என்னில் உன்னைக் கண்டேன்!
உன் விசித்திர அழகினால் சரித்திரம் படைக்கிறாய்!
இரவிலும் நீ! பகலிலும் நீ! நிழல் தருவதும் நீ!
துயில் தருவதும் நீ! பசி தீர்ப்பதும் நீ! பயமுறுத்துவதும் நீ!
எடுத்து எடுத்து அழிக்கின்றோம் உம்மை!
அடுத்து அடுத்து மன்னிக்கின்றாய் எம்மை!
கடற்கரையில் நான் கலங்கி நின்றேன்!



அலைகளைக் கைகளாக்கி ஆறுதல் சொன்னாய்!
நெடுமரங்களாக நின்று நீதிகளைச் சொன்னாய்!
தாயாகவும் மாறி தன்னம்பிக்கையும் தந்தாய்!
மண்ணில் வருகின்றது உன் மணம்
அதனால் மயங்கித் தெளிகிறது என் மனம்!
கடலிடம் சொல்லுகிறாய் ஓர் சேதி
அதைக் கொண்டு வந்து சேர்ப்பது உன்னில் பாதி!
பூங்காற்றிலும் உன்னைக் கண்டேன்
குழல் ஓசையிலும் உன்னைக் கண்டேன்!
எத்தனை எத்தனை இடர்வரினும்
உன்னைப் பார்க்கையில் பறவையாய் பறக்கக் கண்டேன்!
கடலில் உப்பாய் உன்னைக் கண்டேன்!
கலங்கரை விளக்காய் உன்னைக் கொண்டேன்!
துள்ளி தாவுகிறது மான்குட்டி அதை
தாங்கிக் கொள்வது உன் மன திருப்தி!

# சிந்தனை

இயற்கை உன் தோழி
இயற்கை உன் தாய்
இயற்கை உன் காதலி

அத்தகைய இயற்கையை அழிக்க நீ போராடுவது ஏன்? இயற்கை அழிந்தால் நீயும் அழிவாய் என்பது உனக்குத் தெரியாதா? இயற்கை மேல் உனக்கு ஏன் அவ்வளவு பொறாமை அது உன்னைவிட அழகாய் இருக்கிறது என்றா? அல்லது தன்னை விட அழகான உயர்ந்த ஒன்று இருக்கக் கூடாது என்ற எண்ணமா! இயற்கை உன்னை நம்பி வாழ்வதாக நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் நீ தான் அதை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்பதை மறந்துவிட்டாய்! நீ இன்றைக்கு அழிக்கும் இயற்கை நாளை பிரபஞ்சத்தை மட்டும் பாதிக்கப் போவது இல்லை உன் வருங்கால சந்ததியையும் தான் என்பதை இன்னும் நீ உணராதது ஏன் மனிதா? திருந்தி விடு. நாளைய சமூகத்தையும், பிரபஞ்சத்தையும் பாதுகாக்க.

# அவனுள் இணைந்திடு...
# புதிய படைப்பாய் மாறிடு...

பூமி பேசுகிறேன்....
ஜனனமும் என்னில்.
மரணமும் என்னில்,
ஊர்வன உலா வருவது,
பறப்பன பாடி மகிழ்வது,
அனைத்து ஜீவராசிகளும் பசியாறுவது.
கால்நடைகள், காட்டுமிருகங்கள்,
ஊர்வன, நீந்துவன, பறப்பன,
புல் பூண்டுகள், மரம் செடி கொடிகள்,
மலைகள், பள்ளத்தாக்குகள்,
கடல், ஆறு, குளம், ஓடை, சிற்றோடை,
பழம்தரும் மரங்கள், நிழல் தரும் மரங்கள்,
விதைதரும் மரங்கள், செடிகள்,
பூக்கள், பூவின் வாசம்
பூவைத் தேடிவரும் வண்டுகள், தேனீக்கள்,
தேனைத் தேடிவரும் வண்டுகள்,
தேன் அடைகள், எறும்பு, யானை....
என எல்லாம் என்னில்,
இவைகளையெல்லாம் என்னில்
படைத்தவனில் பரமனில்
இணைந்து மகிழ்கிறேன்.
நொடிப்பொழுதும் மறவாமல் புகழ்கிறேன்.
நீயும் அவனிள் இணைந்திடு,
மகிழ்ந்திடு, புகழ்ந்திடு.
என்னுள் இருக்கும்
அனைத்துத் திறனும் உன்னிலும்...
புதிய சக்தி... புதிய ஆற்றல்...
புதிய பார்வை... புதிய பயணம்.. என
புதிது புதிதாய் உன்னிலும்
பிறப்பெடுக்கட்டும்... பூபாளம் இசைக்கட்டும்...
அவனுள் இணைந்திடு,
புதிய படைப்பாய் மாறிடு.

சகோ. மா. ஷகிலா மேரி,
வேளை மருத்துவமனை குழுமம்.

# உறைந்து போனேன் அவனில்...

காவியம் படைக்கலாம் என விரும்பி
காடு, மேடு, பள்ளத்தாக்கு என அலைந்தேன்.
நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்
என பஞ்ச பூதங்களைச் சுற்றினேன்.
இறுதியாய் ஓய்ந்தேன் ஓரிடம்.
கண்டேன் கடுகுச் செடி ஒன்றை.
கையிலெடுத்தேன்
அதில் ஒரு கடுகு விதையை
லயித்துபோனேன்...
அந்த சிறிய விதையிலும்
புதிய படைப்பை உருவாக்கும் ஆற்றலா?
பூரித்துப்போனேன்...
இப்புவியின் தலைவனை எண்ணி...
ஆஹா!
இந்த மனிதன் (இறைவன்)
யாரையும் வெறுமையாகப் படைக்கவில்லை.
எல்லோருக்குல் ஏதோ ஒரு ஆற்றல்,
சக்தி, வளமை, வலிமை
என வைத்துதான் படைத்திருக்கிறான்
என உணர்ந்து
உறைந்து போனேன் அவனில்.

சகோ. மா. ஷகிலா மேரி,
வேளை மருத்துவமனை குழுமம்.

# AN UMBRELLA!

I sat under the universal umbrella
Stretched far and wide
Wondered what marvels it behold
Surprises are new everyday
An awesome creation of Father Almighty
Each tells us a simple message
The sky says widen your horizon
The sun says keep on shining
The moon says be chill and calm
The stars says be a twilight
The earth says be active
The rock says be firm
The mountain peaks says aim higher
The clouds say march forward.
The gentle breeze says be gentle
The thunder says be bold and courageous
The mighty storm says be strong
The cyclone says be vigilant and alert
The dawn says wakeup with new hopes
The morning says be cheerful
The dusk says rest early
The night says be silent
The land says nourish others
The forest says stand united
The trees says deeply rooted in faith
The birds says be swift in action.
The flowing water says be unstoppable
The swimming fishes say overcome
your hurdles
The swarming bees says be sweet
The blooming flower says be fragrant
Of all, the tiniest creature ant says work hard
Even the tiniest creation gives us the message
The highest from all creation
The pinnacle of all creation
The replica of GOD the creator
Oh! The human being
What message do I leave behind?
I sat deeply thinking under the
universal umbrella.
Where I am?
Who am I?
How I am?
What I am doing???
Do I have a role to play?
I ponder over and over
Seeing me confused
The universal umbrella above me said
Oh my dear! Take hold of me
Be under my loving care
Travel along with me...
The path ahead of you is marvelous....

**Sr. Annice Nancy (1329).**

# Lord! You are everything

Lord we search you everywhere
where you are?
In the temple, in the sky, in the hill
But we couldn't find you
Finally we thought that
It is impossible to find you
And still we search you
Now our strong belief is this
You are light in the fire
You are breath in the air
You are water in the river
You are life in the living
You are everything and
You are everywhere.

Sr. Jothika (1481).

# IF YOU

If you are Land
Be strong!
If you are Water
Be cool!
If you are Air
Be fresh!
If you are Fire
Be warm!
If you are Space
Be broad!
Be the Universe!
Be in the Universe!
Be for the Universe!

Sr. Micheal Saranya (1498).

# THE LOVE FOR THE UNIVERSE

Love forever! Love forever
Love is everywhere
Yes, Universe is that love
The Earth loves the Sun
The Sun loves the World
The Rain drop love the Earth
The Air loves the Flowers
The Rivers love its Edge
As the Universe loves us all
I love the Universe
Love forever! Love forever
Love is everywhere
Yes, Universe is that love.

Sr. Reshma Soreng (1466).

# COMPARED TO YOU

The Big Bang is soundless
The Galaxies dim
The Universe is contracts
Compared to you
Evolution has peaked
Humanity is low
Nature can be nature
Compared to you.
Life has no end
Death has no beginning
Compared to you.

Sr. Pratima Kerketta (1476).

# ASATOMA SATGAMAYA...

Om! Shanti! Shanti! Shanti!
The Beauty of the Universe
The Beauty of the Nature
The Beauty of the Baby smile
The Beauty of the Mankind
With the Beauty of the minds
When the right thing is done
The Beauty of the Universe!
The Beauty of every positive thing
The Beauty of all Spiritual paths;
Praying always for the peace
Of the Earth, Oh! My Mind!
I am who I am with my Identity
Born on Earth to carry on peace
To the World Trust!
The Beauty of true Love;
With Servitude and Attitude
With the Joy of the hearts
Having Positive Morals;
Going along with my mind
For Peace and Love
To bring Joy to all along with Universe
Om! Shanti! Shanti! Shanti!

Sr. Arockia Mary (1420),
Regional House - Patna.


SECOURS GENERALA




















25th ANNIVERSARY









